வாழ்வதற்கு வழி

* ஆண் - பெண் அனைவரும்
படிக்கவேண்டிய புத்தகம் *

எழுதியவர் :
எஸ். எஸ். அருணகிரிநாதர் :
" மனைவியின் கடமை " ஆசிரியர்.

வெளியிட்டோர் :
M. துரைசாமி முதலியார் & கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
1/1 மலையபெருமாள் தெரு, சென்னை-1.

 [விலை 2-8-0

முதற் பதிப்பு—1956

வள்ளுவர் வாய்மொழி

*

ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் ஒரு பொருளாக மதிக்கச் செய்வது பொருள்தான்; அதைத் தவிர அவரைப் பிறர் மதிக்கும்படி செய்யக் கூடியது வேறொன்று மில்லை.

*　　　　*　　　　*

ஒருவர், பொருள் இல்லாதவராய் இருந்து, வேறு எந்த நல்ல குணமுள்ளவராய் இருந்தாலும் அவரை எல்லோரும் இகழ்வர். பொருள் உள்ளவர் எல்லாத் தீமையும் உள்ளவராயினும் அவரை எல்லோரும் உயர்த்துவர்.

*　　　　*　　　　*

பொருள் என்னும் தூங்கா விளக்கு, தன்னை உடையவருக்கு, அவர் நினைத்த தேசத்திற்குச் சென்று அவருடைய பகையை அழித்து விடும்.

*　　　　*　　　　*

மலைமேல் ஏறி யானையும் யானையும் சண்டை இடுவதைப் பார்ப்பவர் யானைக்கு அஞ்ச மாட்டார். அதைப்போலவே கையில் பொருள் உள்ளவர், தாம் எடுத்துக் கொண்ட வேலையை, அஞ்சாமல் பிறரைக் கொண்டு முடித்துத் தாம் இன்பத்துடன் இருப்பார்.

*　　　　*　　　　*

ஒருவர் இந்த உலகத்தில் தமக்கென்று தேடிக் கொள்ள வேண்டியது பொருள்தான். அதை அவர் தேடிக் கொள்ளுவாராக. அவருடைய பகைவரை அடக்கக் கூடிய கூர்மையான ஆயுதம் அதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

*

இதையும் படியுங்கள்

*

அறம் - பொருள் - இன்பம் : ஆகிய மூன்றையும் அடைதல் மக்கள் கடமையாகும். இவற்றில், நடுவில் உள்ளதாகிய பொருளை ஒருவர் அடைந்துவிட்டால், அவர் விரும்பினால், மற்ற இரண்டும் அவரைத் தாமாகவே வந்தடையும். ஆகவே, மக்கள் ஒவ்வொருவரும் அறவழியில் பொருளைச் சேர்க்க முயலவேண்டும்.

பொருளைச் சேர்க்க விரும்பியவர் அந்தக் காலத்திலும் இருந்தனர்; விரும்புகிறவர் இந்தக் காலத்திலும் ஏராளமான பேர் இருக்கின்றனர். சரி; பொருளைச்சேர்க்க விரும்பியவர்களெல்லோரும் பொருளைச் சேர்த்தனரா? சிலர் சேர்த்தனர்; பலர் சேர்க்கவில்லை. பலர் ஏன் பொருளைச் சேர்க்கவில்லை? "வாழ்வதற்கு வழி" தெரிந்தவர்கள், அவர்கள் சென்ற வழிக்கு ஏற்றவாறு, பொருளைச் சேர்த்தார்கள்; "வாழ்வதற்கு வழி" தெரியாதவர்கள் பொருளைச் சேர்க்கவில்லை. "வாழ்வதற்கு வழி" எது? வாழ்வதற்குப் பல வழிகள் இருந்தபோதிலும் அவைகளில் பொருளைச் சேர்ப்பதுதான் முதன்மையானது.

பொருளைச் சேர்ப்பிக்கும் வழி எது? சரி; இனி நீங்கள் நேரே புத்தகத்தைப் படிக்கலாம்; உங்கள் கேள்விகளுக்கு ஏராளமான விடைகள் காத்துக் கொண்டிருக்கின்றன! வணக்கம்.

எஸ். எஸ். அருணகிரிநாதர்.

வாழ்வதற்கு வழி

* *

1

உலகத்தில் உள்ளவர்களிலே ஒவ்வொருவரும் தாம் நன்றாக வாழ வேண்டுமென்றுதான் நினைக்கின்றனர். ஆனால், அவர்களிலே நன்றாக வாழத் தெரிந்துகொண்டவர்கள் எத்தனை பேர்? ஆம்; உலகில் பிறந்த ஒவ்வொருவரும் நன்றாகத்தான் வாழ வேண்டும். நன்றாக வாழ வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருப்பதும் நினைத்துக் கொண்டிருப்பதும் போதுமா? இப்படி ஆயிரக்கணக்கான மக்கள் தாங்கள் நன்றாக வாழ வேண்டுமென்றுதான் சொல்லிக்கொண்டும், நினைத்துக்கொண்டும் இருக்கிறார்கள். ஆனால், அவர்களில் பெரும்பாலோர் வாழ்வதற்காக வேண்டிய வேலைகளைச் செய்யாமல், தங்கள் காலத்தையும் எண்ணத்தையும் நல்ல வழியில் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள். இவ்வுலகில் தாம் நன்றாக வாழ வேண்டுமென்று நினையாதவர் ஒருவருமில்லை. ஆனால் நன்றாக வாழ்வதற்கு வழி என்ன என்றுதான் பெரும்பாலோர் நினைப்பதே இல்லை. அதனால்தான் நமது நாட்டிலே பலரிடம் தரித்திரம் தலைதூக்குகின்றது. நமது முன்னோர்களிற் பலர் நன்றாக வாழக் கற்றிருந்தார்கள். அதனால்தான் அவர்கள் தாங்களும் நன்றாக வாழ்ந்து மற்றவர்களையும் நன்றாக வாழச் செய்தார்கள்.

வாழத் தெரிந்துகொண்டவர்களே, தாங்கள் ஏழைக் குடும்பத்திலே பிறந்தவர்களாய் இருந்தும் இன்று பெரும்

புகழும் பெற்ற பணக்காரர்களாய் விளங்குகின்றார்கள்: வாழத் தெரிந்தவர்களே, தாங்கள் குடிசையில் பிறந்தவர்களாய் இருந்தும் இன்று மாளிகைகளில் வாழ்கின்றார்கள்; வாழத் தெரிந்தவர்களே, தாங்கள் எளிய குடும்பத்திலே பிறந்தவர்களாய் இருந்தும் இன்று தலைவர்களாய் விளங்குகிறார்கள்; வாழத் தெரிந்தவர்களே, தாங்கள் நினைப்பதைச் செய்து முடிக்கிறார்கள்; வாழத் தெரிந்தவர்களே, உலகத்திலே எல்லா வழிகளிலும் முன்னேற்றமடைந்து விளங்குகிறார்கள். ஆனால் வாழத் தெரியாதவர்கள், பணக்காரர்களாகப் பிறந்தும் ஏழைகளாகத் திரிகிறார்கள்; வாழத் தெரியாதவர்களே, வாழ்கின்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார்கள்; வாழத் தெரியாதவர்களே, வாழ்கிறவர்களைக் கண்டு வயிற்றெரிச்சல் படுகிறார்கள். இவைகளால் ஒரு நன்மையும் உண்டாகாது.

நமது கண்ணெதிரில் கட்டிக்கொள்வதற்கு நல்ல துணி இல்லாமல் இருந்தவர்களில் சிலர் இப்போது செல்வத்தில் சிறந்தவர்களாய் வாழ்வதை நாம் பார்க்கின்றோம்; நமது கண்ணெதிரிலே செல்வத்தில் சிறந்த குடும்பத்திலே பிறந்த சிலர் இன்று ஏழைகளாய்த் திரிவதையும் நாம் பார்க்கவில்லையா? வாழத் தெரியாதவர் ஏழை ஆகின்றார்; வாழத் தெரிந்தவர் பணக்காரர் ஆகின்றார். என் நண்பர் ஒருவர் சொல்லுகின்றார்: "வாழத் தெரிந்தவர்; வாழத் தெரியாதவர் என்று நம்மால் சொல்லத்தக்கவர் ஒருவரும் இல்லை. செல்வம் சேர வேண்டிய காலத்தில் சேருகின்றது; போகவேண்டிய காலத்தில் போகின்றது."

இப்படிச் சொல்லுகின்ற நண்பர் தமக்குத் தம் தந்தையார் வைத்துவிட்டுச் சென்ற செல்வத்தை வாழத் தெரியாதபடியால் செலவழித்து விட்டவராவர்! இப்போது இவர் இனி என்ன செய்யலாமென்று எண்ணிஎண்ணி

ஏங்கிக்கொண்டிருக்கின்றூர்! ஆகவே, செலவாளிகளும், சோம்பேறிகளும், வாழத் தெரியாதவர்களும் தங்கள் குற்றத்தை மறைத்துக் கொள்ளுவதற்காக இப்படித்தான் காலத்தின்மீது பழி சுமத்துவார்கள். ஒவ்வொருவரும் நன்ருக வாழத் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும். இன்றேல் நாம் உலகத்தில் பிறந்ததும் வீண்தான்; வளர்ந்ததும் வீண்தான். "நல்லது; அப்படியாஞல் வாழத் தெரிந்துகொள்வது என்ருல் என்ன?" என்று பலர் கேட்கலாம். ஆகவே, அதைப்பற்றி இனி கவனிப்போம்:

நாம் வாழத் தெரிந்துகொள்வதற்கு அடிப்படையான காரணங்கள் பல இருக்கின்றன! அவைகளில் பணம் என்றும், செல்வமென்றும், பொருள் என்றும் சொல்லப் படும் ஒன்று நாம் நன்ருக வாழ்வதற்கு முதல் அடிப்படையாய் இருக்கின்றது.

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்"

என்ற வரிகளைக் கவனியுங்கள். "குற்றமற்ற உலகத்திலே அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றில் நடுவிலே சொல்லப்பட்ட பொருள் ஒருவரிடம் சேர்ந்துவிடுமாஞல் பிறகு அவரிடம் அதன் இருபக்கங்களிலும் குறிக்கப் பெற்றுள்ள அறமும், இன்பமும் தாமாகவே வந்து சேரும்" என்பது இதன் கருத்தாகும். உலகத்திலுள்ள அறிவாளர்களால் கொண்டாடப் பெறும் திருவள்ளுவ நாயஞரும்,

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டு மொருங்கு"

என்று கூறுகின்ருர். "நல்ல பொருளை மிகுதியாகச் சேர்த்தவர்களுக்கு மற்ற அறமும் இன்பமும் ஒன்ருகச் சேரும்" என்பதே இதன் கருத்து. இதுமட்டுமா? "செல் வத்தைச் சேருங்கள்; உங்கள் பகைவரை அடக்கு

வதற்கு அதைவிடச் சிறந்த ஆயுதம் வேறொன்றுமில்லை" என்றும் நாயனார் கூறுகின்றார்.

நாம் நன்றாக வாழ்வதற்கு அன்பு, அடக்கம், மரியாதை, நல்ல நடத்தை முதலியவைகளும் நமக்குத் தேவைதான்! ஆனாலும் பொருள் இல்லாதபோது இவைகளெல்லாம் ஒருவரிடத்தில் இருந்தாலும் இவைகள் சிறப்படைவதில்லை. கல்வி, அறிவு, ஆண்மை, அழகு, பேச்சு, குணம், அன்பு ஆகிய எல்லாம் பொருளுடையவரிடத்தில் தான் சிறப்படைகின்றன! ஏழையினிடத்திலே இந்தக் குணங்கள் பெரும்பாலும் பெருமை பெறுவதில்லை.

ஆகவே, ஒவ்வொருவரும் தாம் நல்வாழ்க்கை நடத்த வேண்டுமானால், புகழுடன் வாழவேண்டுமானால், அறம் செய்யவேண்டுமானால் முதலில் பொருள் சேர்க்கவேண்டும். நல்வாழ்க்லகைக்கு அடிப்படை பொருள்! பொருள் சேர்வதற்கு அடிப்படையாக ஒவ்வொருவரிடத்திலும் இருக்க வேண்டிய குணம் சிக்கனம்! சிக்கனம்! சிக்கனம்!

'சிக்கனம்' என்றால் என்ன? அநேகர் 'சிக்கனம்' என்னும் வார்த்தைக்குச் சரியான பொருளைத் தெரிந்து கொள்ளாமலே அடிக்கடி சிக்கனம் என்னும் வார்த்தையை உபயோகிக்கின்றனர். அதனால், அவர்கள் சிக்கனத்திற்கும் 'கருமி'த்தனத்திற்கும் உள்ள வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ளாமலே இரண்டையும் ஒரே கருத்துடன் உபயோகிக்கின்றனர். செல்வத்தைக் கையாள்கின்றவர்களைப் பொதுவாக மூன்று பிரிவினர்களாகப் பிரிக்கலாம்; கருமி, சிக்கனக்காரர், ஊதாரி என்று அவர்கள் மூவகைப்படுவர்.

கருமி என்பவர் எந்தக் காரணத்திற்காகவும் செலவு செய்யமாட்டார். காலணா செலவு செய்வதாய் இருந்தாலும் அவருடைய கண்கலங்கும். தம் அருமையான குழந்தைக்கு நோய் வந்தாலும் வைத்தியருக்குப் பணம் கொடுக்க அவருக்கு மனம் வராது.

ஊதாரி என்பவர் அவருக்கு நேர் விரோதமானவர். கிடைத்த பணத்தைச் செலவு செய்வதில் ஊதாரிக்கு ஈடாக எவரையும் சொல்ல முடியாது! 'அவசியமா? அவசியம் இல்லையா?' என்று கவனியாமலே கையில் பொருள் இருந்தால், ஊதாரி செலவு செய்யப் புறப்பட்டு விடுவார். 'இன்றைக்கு இவ்வளவு செலவு செய்தால் நாளைக்கு என்ன செய்வது?' என்று அவர் நினைக்கவே மாட்டார்! ஊதாரியின் நிலைமை இதுதான்!

சிக்கனக்காரர் என்பவர், தம் மனசாட்சிக்கு விரோதமில்லாமல், தமக்கு எது "சரி" என்று தோன்றுகிறதோ அதற்குமட்டும் செலவு செய்வார். "சரி" யென்று தோன்ருத எதற்கும் அவர் செலவு செய்யமாட்டார். வீண் ஆடம்பரத்திற்காக அவர் செலவு செய்யவே மாட்டார்! ஆனுல் பக்கத்து வீட்டுக் குழந்தையாய் இருந்தாலும் பத்து ரூபாய் செலவு செய்தால் அது நோய் நீங்கிப் பிழைக்கும் என்று தெரிந்தால் அதற்காக அவர் தாம் துன்பப்பட்டுச் சேர்த்துவைத்துள்ள ரூபாயில் பத்து ரூபாயை எடுத்துக் கொடுப்பதற்குத் தயங்கமாட்டார். ஆனுல், அதே பத்து ரூபாயை வீண் செலவு செய்வதற்குத் தம் சொந்தப் பிள்ளை கேட்டாலும் கொடுக்க மாட்டார். இப்படிப்பட்ட குணமுள்ளவர்களே சிறந்தவர்களாவார்கள். அநேகர் இவர்களைக் கருமிகளுடன், விவரந் தெரியாமையினுல், சேர்த்துப் பேசிவிடுகின்றனர்! அது தவருகும்.

கருமி, ஊதாரி, சிக்கனக்காரர் ஆகிய மூவரில் நாட்டுக்குத் தேவையானவர் சிக்கனக்காரரே! கருமியினிடம் பொருள் சேரலாம்! அது நாட்டுக்கும், வீட்டுக்கும் பயன்படாது. ஊதாரித்தனம் உள்ளவர், கிடைத்ததைச் செலவு செய்துவிட்டு எப்போதும் மற்றவர்களுக்குச் சுமையாய் இருப்பார். ஆனுல், சிக்கனக்காரர் பொருளைத் தேடு

வதிலும், அதை விருத்தி செய்வதிலும், விருத்தி செய்ததை நல்ல வழியில் செலவிடுவதிலும் வல்லவராய் இருப்பார். ஆகவே, சிக்கனக்காரரே நாட்டுக்கும் வீட்டுக்கும் வேண்டியவராவர்.

இப்போது நாம் எப்படிப்பட்டவர் சிக்கனக்காரர் ஆவார் என்பதை அறிந்தோம். ஆகவே, "நாம் அனைவரும் சிக்கனக்காரராகவே வாழ வேண்டும்" என்ற எண்ணம் நமக்குத் தோன்றுகிறதல்லவா?

'சிக்கனம்' என்றால் என்ன? சிக்கனக்காரர் தன்மை எப்படிப்பட்டது?' என்பனவற்றைப்பற்றி உணர்ந்த நாம் இனி சிக்கனக்காரர்களைப்பற்றியும், சிக்கனத் தன்மையைப் பற்றியும், சிக்கனத்தினால் உண்டாகும் நன்மையைப் பற்றியும் விரிவாக ஆராய்வோம்.

வாழ்வதற்கு வழி

2

நன்மைக்குக் காரணமாய் இருப்பதும் பொருள் தான்; தீமைக்குக் காரணமாய் இருப்பதும் பொருள்தான். பணம் பொதுவாக இந்த உலகத்திலே சர்வ வல்லமை உள்ளது. அந்த வல்லமையை நாம் எப்படிப் பயன் படுத்துகின்ருேமோ அப்படி அது நமக்குப் பயன்படு கிறது. நெருப்பைக் கொண்டு வீட்டைக் கொளுத்தலாம்; அதைச் சமையல் வேலைக்கும் பயன்படுத்தலாம். நாம் உபயோகிக்கும் வழியில் அது நமக்குப் பயன்படுகின்றது; அதைப் போலவே பொருளும் நமக்குப் பயன்படுகின்றது. நாம் ஒவ்வொருவரும் பொருளைத் தேடவும், அதைக் காப்பாற்றவும், செலவு செய்யவும் தெரிந்திருக்கவேண்டும். "பொருளை செலவு செய்யத்தான் எல்லோருக்கும் தெரியுமே! இனியும் அதைப்பற்றி என்ன தெரிந்து கொள்ள வேண்டும்?" என்று சிலராவது கேட்கலாம்! அப்படிக் கேட்பவர்கள், "பொருளைச் செலவழிப்பவர் களில் பலரைப் பொருளைச் செலவழிக்கத் தெரிந்தவர்க ளென்று சொல்ல முடியாது" என்பதை அறிய வேண்டும். நம்மைவிட்டுப் பொருள் செல்வதற்குச் செலவு என்று பெயர். நல்ல வழியில் நம்முடைய பொருள் நம்மை விட்டுச் செல்லுமானல், அதைத்தான் செலவு என்று நாம் சொல்லலாம்; பயனற்ற வழியிலோ, தியவழியிலோ நம் முடைய பொருள் நம்மைவிட்டுச் செல்லுமானல் அதை நாம் செலவு என்று சொல்ல முடியாது. ஆகவே, பணத்தை வகை யறிந்து செலவிடுவதும் ஒரு கலைதான்! இதை எல்லோரும் நன்ருய் நினைத்துப் பார்க்கவேண்டும்.

இதுவரையில் பலர் தங்கள் பொருளைப் பலவிதமான வீண் வழிகளில் செலவிட்டிருக்கலாம்! ஏன்? சிக்கனக்கலை தெரியாமையினுல்தான்! 'எ த ற் கு ச் செலவழிக்கலாம், எதற்குச் செலவழிக்கக் கூடாது' என்று நாம் நினைக்கப் பழகுவதும் ஒரு கலைதான்! இந்தக் கலையில் தேர்ந்தவர்களே பெரும்பாலும் சிக்கனக்காரர்களாய் விளங்குவார்கள். சிக்கனக்காரர்களே நாட்டுக்கும், வீட்டுக்கும் தேவையானவர்கள்!

வாழ்வதற்கு வழி

❋ ❋

3

சிக்கனம் என்ற சொல் மிகவும் உயர்ந்தது; அருமையானது. பொருள் சிக்கனம், வார்த்தை சிக்கனம், உடை சிக்கனம், உணவுச் சிக்கனம், இடம் சிக்கனம் என்று சிக்கனம் பலவகைப்படும். பணத்தைப் பாழாக்காமல் சேர்ப்பதற்காகத்தான் எல்லாவகைச் சிக்கனமும், சொல்லப் படுகின்றது. ஆகவே, பணச் சிக்கனத்தைப் பற்றியே முதலில் ஆராய்வோம். உலகமே பெரும்பாலும் பணத்தை விரும்பித்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகையால் அதைப்பற்றியே முதலில் ஆராய்வது நல்லதல்லவா ?

தங்கள் மக்கள் நன்ருய் வாழவேண்டுமென்று நினைக்கின்ற தாய் தந்தையர்கள் தங்கள் மக்களின் இளம்பருவம் முதற்கொண்டே அவர்களுக்குச் சிக்கனத் தன்மையுடன் வாழவேண்டிய வழியைப்பற்றியும், பணத்தைக் கையாள வேண்டிய விதத்தைப்பற்றியும் கற்பித்து வருகிருர்கள். ஆனல், பெரும்பாலார் தம் மக்களுக்குச் சிக்கனக் கலையைப் பற்றிய எதையும் போதிப்பதே இல்லை; பணம் சேருவதனல் தங்கள் குடும்பத்தின் சக்தி வளருமென்பதையும் தாய் தந்தையர்களில் பலர் கவனிப்பதில்லை. ஆண் மக்களிலும் சரி, பெண்மக்களிலும் சரி; சிக்கனக்கலையைப் பற்றிப் பலர் சிந்திப்பதே இல்லை.

மன உறுதி, முயற்சி, உடல் உறுதி ஆகிய இவைகள் சிக்கனத்திற்கு முதல் அடிப்படைகளாகும். உடல் உறுதி இல்லாதவர்களால் உழைத்துப் பொருளைச்

சேர்க்கமுடியுமா? உடல் உறுதி இருந்தாலும், அந்த உறுதி, முயற்சி இல்லாவிட்டால் பயன்படுமா? உடல் உறுதி, முயற்சி ஆகிய இரண்டும் இருந்தாலும், கூடவே பொருளைச் சேர்த்துப் பிடிக்கவேண்டும் என்னும் மன உறுதியும் இருக்கவேண்டுமே! ஆகவே, சிக்கனத்திற்கு அடிப்படையானவை உடல் உறுதி, முயற்சி, மன உறுதி ஆகிய மூன்றுமாகும். இவைகளுக்கு மேலாக மற்றென்று மிருக்கின்றது! அது "நாம் மேலும் மேலும் பொருளைத் தேடி வாழ்க்கையில் உயரவேண்டும்" என்ற எண்ணமாகும்!

"வேலையைச் செய்; பயனைக் கருதாதே" என்று பலர் வாய் வேதாந்தம் பேசுவார்கள். இரண்டு பிரிவினர்கள் இப்படிப் பேசுவார்கள்! பிறர் நன்மையைக் கவனியாமல் தங்கள் நன்மையைமட்டும் கவனிப்பவர்கள் பிறரை ஏமாற்றுவதற்காக இவ்வாறு கூறுவார்கள். அல்லது உண்மையான உலகப்பற்றற்ற ஞானிகள் இவ்வாறு கூறுவார்கள். ஞானிகளுக்கும், வாழ்க்கையில் பிறரை ஏமாற்ற வேண்டுமென்று நினைப்பவர்களுக்கும் வேண்டுமானால் இந்த உபதேசம் பயன் படலாம். இல்லறத்திலிருந்து பொருளைத் தேடி நல்வாழ்க்கை நடத்த விரும்புகிறவர்கள் எப்போதும் இந்த உபதேசத்தை மறந்திருப்பது நல்லது. பயனைக் கருதமுடியாத உழைப்பில் ஊக்கம் தோன்ருது. வாழ்க்கையில் இது பலர் கண்ட அனுபவமாகும். நிற்க. உலகத்திலுள்ள மக்களை இரண்டு பிரிவுகளில் அடக்கிவிடலாம்! வாழத் தெரிந்தவர்கள் ஒரு பிரிவினர்; வாழத் தெரியாதவர்கள் மற்ருெரு பிரிவினர்! வாழ்வதற்கு உலகத்தில் பல வழிகள் இருக்கின்றன! அவைகளில் தங்களுக்கேற்ற ஏதாவது ஒரு நல்ல வழியை ஒவ்வொருவரும் மன உறுதியுடனும், விடாப்பிடியுடனும் பின்பற்றி அவ்வழியில் உழைத்து வந்தால் நிச்சயமாக

நல்வாழ்வு பெறலாம். ஆனால், நாம் எந்த வேலையைச் செய்தாலும் அந்த வேலையை நன்றாகச் செய்து அதில் நாம் சிறந்து விளங்கவேண்டும். செய்யும் வேலையில் போதுமான முயற்சி இல்லாத பலரில் நாமும் ஒருவராய் இருந்து ஒரு வேலையைச் செய்தால் அதனால் நாம் சிறப்படைய மாட்டோம். ஒருவர் நல்வாழ்வு பெறுவதற்கும், பேரும் புகழும் அடைவதற்கும் அவர் கல்வி அறிவில் மிகமிகச் சிறந்தவராய் இருக்கவேண்டுமென்று பலர் நினைக்கின்றார்கள். ஒவ்வொருவரும் சிறந்த கல்வி அறிவுள்ளவராய் இருப்பது நல்லதுதான்! அதனால் சிறந்த கல்வி அறிவு இல்லாதவர்களால் பொருளைச் சேர்த்து நல் வாழ்வு வாழ முடியாதென்று சொல்ல முடியுமா? உலகத்திலே செல்வத்தினால் சிறந்திருப்பவர்களிற் பலர் கல்வியிலே சிறந்தவர்கள் அல்லர் என்பது எல்லோருக்கும் தெரியுமே!

எண்ணத்தின் அடிப்படையிலே நாம் நம்முடைய பேச்சினாலும் எழுத்தினாலும் ஒருதவற்றை அடிக்கடி நெடுங்காலமாகச் செய்து வருகின்றோம். பலர், ஏட்டுக் கல்வியைத்தான் கல்வி என்றும், அதை மிகுதியாகக் கற்றவரே சிறந்தவரென்றும் நெடுங்காலந் தொட்டுக் கருதி வந்தனர்; சிலர் இன்றும் கருதி வருகின்றனர். ஆனால், அது தவறு என்பதை இப்போது பலர் உணர்ந்து விட்டனர்.

ஏட்டுக் கல்வியைப் போலவே தொழிற் கல்வியும் ஒரு சிறந்த கல்விதான்! ஏட்டுக் கல்வியை ஓரளவுக்குக் கற்ற எத்தனையோ பேர் தொழிற்கல்வியை நன்றாகக் கற்றுப் பெரும் பொருளைத் தேடிக் குவித்திருக்கின்றனர். இதனால் ஏட்டுக் கல்வி வேண்டாமென்று நான் கூறுவதாக நினைக்க வேண்டாம். ஏட்டுக் கல்வி ஒன்றேதான் முக்கியமானது என்பதைமட்டும் இக்காலத்தில் எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்! அவ்வளவுதான்!

"உலகத்தில் உள்ளவர்களுக்கு ஊழியம் செய்து கொண்டிருக்கும் இயற்கை இருவகையாய் இருக்கின்றது. அவற்றில் ஒருவகை இயற்கை ஒருவரைத் தெளிந்த அறிவுள்ளவராகச் செய்கின்றது; மற்றொருவகையான இயற்கை ஒருவரைச் செல்வமுள்ளவராகச் செய்கின்றது" என்ற கருத்தில், திருவள்ளுவப் பெருமானார்,

"இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்று கூறியுள்ளார். இதனால் ஒருவரின் தெளிந்த அறிவுக்குத் துணையாய் இருக்கும் இயற்கை வேறு; மற்றொருவரின் செல்வம் வளர்வதற்குத் துணையாய் இருக்கும் இயற்கை வேறு எனத் தோன்றவில்லையா? இதனால் ஏதோ ஒரு வழியைப் பின்பற்றி முயற்சியையும் மன உறுதியையும் துணையாகக்கொண்டு ஒருவர் செல்வத்தைச் சேர்த்து விடலாம் என்று தோன்றுகிறதே!

உலகத்தில் செல்வத்தையும், கல்வியையும் தரக்கூடிய இரண்டுவகையான இயற்கைகளும் அபூர்வமாக எங்கோ ஆயிரம்பேரிலே ஒருவரிடத்தில்தான் இருக்கலாம். ஆனால் பெரும்பாலும் ஒவ்வொருவகையான இயற்கைதான் ஒவ்வொருவரிடத்தில் காணப்படும். ஆனால் இந்த இரண்டு வகையான இயற்கைகளில் ஒன்றுகூட சிலரிடம் இருப்பதில்லை. அவர்களே வாழ வகையற்றவர்களாய்த் திரிகின்றார்கள்.

கல்வி, செல்வம் ஆகிய இரண்டையும் தங்களிடம் சேர்க்கக்கூடிய இரண்டு இயற்கைகளையும் பெற்றுள்ளவர்களை நாம் போற்றுகின்றோம். ஆனால், ஏட்டுக் கல்வியை ஏராளமாகக் கற்றவர்களால் மட்டும்தான் பொருளைத் தேடிக் குவிக்க முடியும் என்பதை எவராலும் ஒப்புக்கொள்ள முடியாது. உதாரணத்திற்காக நம் காலத்திலே வாழ்ந்திருந்த இருவரைக் கவனிப்போம்:

காலஞ் சென்ற திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் ஏட்டுக் கல்வியிலே சிறந்திருந்தார்! அதனால், பணம் அவரிடத்தில் குவிந்திருந்ததா? இல்லை. வேலூருக்குப் பக்கத்திலே விஷாரம் என்னும் ஊரைச்சார்ந்த 'நவாப் அப்துல் அக்கீம்சாகிப்' அவர்கள் கற்ற ஏட்டுகல்வி கொஞ்சந்தான். ஆனால், அவர் தொழிற் கல்வியிலே தலைசிறந்து விளங்கினார்; அதனால் பலலட்சம் ரூபாய்களைக் குவித்தார்; பலப்பல அறப்பணிகளைச் செய்தார். சென்னையில் அவர் பெயரால் ஓர் உயர்நிலைப் பள்ளியும் நடைபெறுகின்றது!

ஆகவே, ஏதோ ஒரு தொழிலில் இறங்கிப் பொருளைத் தேடுவதற்கு மிகவும் அதிகமான ஏட்டுக் கல்வி வேண்டுமென்பதில்லை. ஏட்டுக் கல்வியை ஏராளமாகக் கற்பவர்கள் கற்கட்டும். ஆயிரவரில் ஒருவரைத் தவிர, மற்றவர்கள் எல்லோருக்கும் ஏட்டுக் கல்வி ஒன்றே ஏராளமாகப் பொருளைச் சேர்க்கத் துணை செய்து விடாது!

சிறிதளவு ஏட்டுக் கல்வியைக் கற்ற சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர்களிலும் எத்தனையோபேர் தலைவர்களாகவும், செல்வர்களாகவும் உயர்ந்ததை நாம் பார்க்கவில்லையா? இதற்குக் காரணம் எவை? முயற்சி, பொது அறிவு என்பவைகளே காரணங்களாம். நாம் உழைக்க வேண்டும் என்னும் எண்ணத்தினால் தோன்றுவது முயற்சி! பழக்கத்தினால் தோன்றுவது பொது அறிவு! பொது அறிவு கடல்போல் அகன்றது; மலைபோல் உயர்ந்தது. ஆகவே ஒருவர் தம்முடைய ஆயுள்காலம் முழுவதும் பொது அறிவைப் பெற்றுக் கொண்டே இருக்கலாம்! இந்தப் பொதுவாகிய உலகானுபவத்தையும், முயற்சியையும் உடையவர் சிறிதளவு ஏட்டுக் கல்வியைக் கற்றிருந்தாலும் மேன்மைபெறுவர்.

ஏட்டுக்கல்வி சிறப்புள்ளதுதான்! ஆனால், 'அதிலே தேர்ந்தவர்களால் மட்டுந்தான் பொருளைத் தேடமுடியும்

என்பதை மட்டும் நம்ப வேண்டாம். சிறிதளவு ஏட்டுக் கல்வியைக் கற்றவர்களும் பெரும் பொருளைச் சேர்த்திருக்கின்றார்களென்பதற்கு எத்தனையோ உதாரணங்களை காட்டலாம். 'ஏட்டு கல்வியிலே தமக்கு நிகரில்லை' என்று பேர் பெற்றவர் பொருளைத் தேடாவிட்டால் அவரை உலகம் மதிக்காது! பொருளைத் தேடிக் குவித்தவர் சிறிதளவு கற்றிருந்தாலும் போதும்! அவரை உலகம் போற்றிப் புகழும்!

இதை மனத்திலே கொண்டு கற்றவர்களும் கல்லாதவர்களும் பொருளைச் சேர்க்க வழிதேட வேண்டும். பொருளைச் சேர்ப்பதற்கு அடிப்படையாய் இருப்பது சிக்கனம்! சிக்கனம்!

கையில் உள்ள சிறு தொகையை, "இது இருந்தால் என்ன, இல்லாவிடில் என்ன!" என்று அலட்சியமாக எண்ணிச் செலவு செய்துவிடக் கூடாது. பல சிறு தொகைகள் கொஞ்சங் கொஞ்சமாக ஒன்றுகச் சேர்ந்து பெருந் தொகையாகும். ஒரு பெரிய குளத்தின் நிறைய இருக்கும் தண்ணீரும் பலப்பல சிறு சிறு மழைத்துளிகளால் சேர்ந்ததுதானே!

மக்களிலே பெரும்பான்மையோர் அடிக்கடி செலவுக்குப் பொருள் இல்லாமையினுல் துன்பப்படுகிறுர்கள்! இவர்களில் பலபேர் கிடைத்ததை 'நாளைக்கு வேண்டுமே' என்று சேர்த்து வைக்காதவர்களே!

சாதாரண வரும்படி உள்ள பலரை நீங்கள் பார்த்திருக்கலாம். அவர்களில் சிலர் மகிழ்ச்சியுடன் வாழ்வதையும் நீங்கள் கண்டிருக்கலாம். அவர்களுக்கு, அவர்களுடைய முன்னேர்களால் பொருள் தேடிவைக்கப்படவில்லை என்பதும் தெரிந்திருக்கலாம். ஆனாலும், அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்குக் காரணம் என்ன? அவர்கள் தங்கள் வரும்படிக் கேற்றபடி வாழத் தெரிந்துகொண்டிருக்கிறுர்கள்! அவ்வளவுதான்!

வருமானம் எவ்வளவு குறைவா யிருந்தாலும் அதிலிருந்து சிறிதளவேனும் எடுத்து சேர்த்துவைக்க வேண்டும். முடியவில்லை யென்றால் வருமானத்தை மீறிச் செல்லாதபடி செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

"பொருள் வரும்வழி சிறிதாய் இருந்தாலும் அது செலவாகும் வழி அதிகமாய் இல்லாவிட்டால் துன்பம் உண்டாகாது" என்னும் கருத்துடன்,

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

என்று கூறப்பெற்றுள்ள வள்ளுவனாரின் வாய்மொழியைக் கவனியுங்கள்.

"எவ்வளவு சிக்கனமாகக் கவனித்தாலும் எங்கள் வருமானத்தை மீறித்தான் எங்கள் செலவு செல்கின்றது" என்று சிலர் சொல்லுகிறார்கள். அந்தச் சிலரால் தங்கள் வருமானத்திற்குள் தங்கள் செலவையடக்க முடியாவிட்டால் அவர்கள் கட்டாயமாகத் தங்கள் செலவுக்கேற்றபடி தங்கள் வருமானம் அதிகப்படுவதற்கேற்ற வழியைத் தேடவேண்டும். அதைச் செய்யாமல் கிடைக்கக்கூடிய இடங்களிலெல்லாம் கடன் வாங்குவதையே தொழிலாகக் கொள்ளக்கூடாது. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காவது அல்லது அதை வேறு வழியினால் ஈடு செய்வதற்காவது முடியாதவர்கள் கடன் வாங்கிக் கொண்டே போவது பிறர் பொருளைக் கடன் என்னும் பெயரால் கொள்ளையடித்துக் கொண்டே போவது போலாகும்! செலவு செய்யப் பழகியவர்கள் சம்பாதிக்கவும் பழக வேண்டும். மேலும் மேலும் சம்பாதிக்கப் பழகாதவர்கள் மேலும் மேலும் செலவு செய்யவும் பழகக்கூடாது!

வாழ்வதற்கு வழி

* *

4

"அவருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வருமானம் வருகின்றது"

"இவருக்கு மாதா மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வருகின்றது"

"ஆனாலும் இவர்கள் இரண்டு பேரும் கடன்காரர்களாய் இருக்கின்றார்கள்."

இப்படிப் பலர் சொல்வதை நாம் கேட்டிருக்கின்றோம். நாமும் அப்படிப் பட்டவர்களைப் பார்த்திருக்கின்றோம்.

இவ்வளவு வருமானம் வரும்போதே, கடன்காரர்களாய் இருக்கின்றவர்கள் வருமானம் திடீரென்று நின்றுவிட்டால் என்ன செய்வார்கள்? அப்போது அவர்களின் நிலை என்ன ஆகும்? 'ஆன முதலில் அதிகம் செலவானால் மான மழிந்து மதிகெட்டு'த்தானே போகவேண்டும்! அவர்கள் நிலைமை இப்படி இருக்கும்போது அவர்களால் நிலைமை தெரியாமல் ஆடம்பரத்துடன் வளர்க்கப்பட்ட அவர்களுடைய குழந்தைகளின் நிலைமை, அவைகளின் பிற்காலத்தில் என்னவாகும்? இவற்றையெல்லாம் செலவாளிகள் கவனிக்க வேண்டாமா?

"சென்ற பத்துஆண்டு காலமாகத்தான் இவருக்கு மாதம் முந்நூறு ரூபாய் சம்பளம் ஏற்பட்டது. வாடகை வீட்டிலிருந்த இவர் இப்போது எப்படியோ ஒரு வீட்டை விலைக்கு வாங்கி அதில் வசிக்கின்றார்."

"அவர் பத்து ஆண்டுகளுக்கு முன்னால்தான் ஒரு கடை வைத்தார்; எதை எதையோ வாங்கி விற்றுக் கொண்டிருந்தார்.

இப்போது அவருக்கு இரண்டு வீடுகள் சொந்தமாய் இருக்கின்றன. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு வாடகை வீட்டில் ஓர் அறையில் அவர் குடித்தனம் இருந்தார்."

இவ்விதம் எல்லாம் சிலர் பேசுவதையும் நாம் கேட்டிருக்கின்றோம்.

கிடைத்த பணத்தைச் சேர்த்துப் பிடித்து அதை மேலும் மேலும் வளர்க்கத் தெரிந்தவர்கள் சொந்த வீட்டுக்காரர்களானார்கள்; வளர்க்கத் தெரியாதவர்களோ கடன்காரர்களானார்கள்.

கிடைத்த பொருளைச் செலவு செய்துவிடுவதென்பது ஒரு கெட்ட பழக்கம். கிடைத்த பொருளைச் சேர்த்துப் பிடிப்பதென்பது ஒரு நல்ல பழக்கம். கிடைத்த பொருளைக் கண்டபடி செலவு செய்துவிடுகின்ற பழக்கம் ஒருவரிடம் ஊறிவிட்டால் பிறகு அந்தப் பழக்கம் எளிதில் அவரை விட்டு நீங்கிவிடாது. அது மட்டுமா? அந்தப் பழக்கம் அவரைப் பாழ்படுத்திவிடும். ஆகவே, ஒவ்வொருவரும் கையில் கிடைத்த பொருளை அடியோடு செலவழித்து விடும் பழக்கத்தில் ஊறிவிடாமல் இருக்க வேண்டும்; சிக்கனத்துடன் வாழ்வதற்கு எல்லோருக்கும் முயற்சி வேண்டும். அதற்கு ஏற்ற திறமையும், தளரா மன உறுதியும் தேவை! சிக்கனமாக வாழ வேண்டும் என்னும் மனஉறுதி நமக்கு இல்லாவிட்டால் நம் முயற்சியைக் கெடுக்கும் சூழ்நிலைகளில் நாம் சிக்கி விடுவோம். அப்போது நமது சிக்கனத்தன்மை சீரழிந்து விடும்.

'பொருளைச் சேர்க்க வேண்டும்' என்னும் மன உறுதியுடன் கூடிய எண்ணமே பொருள் சேர்வதற்கு முதற்படி ஆகும்.

உலகத்திலே பணத்தை விரும்பாதவர்களும், தாங்கள் செல்வர்களாய் விளங்க வேண்டு மென்று நினையாதவர்களும் ஒருவருமில்லை. ஆனால், தங்கள் எண்ணத்தை

நிறைவேற்றிக் கொள்ளத் தெரிந்தவர்கள் சிலரே ஆவர். வேறு சிலர் எந்த வழியினுலாவது தங்களுக்குத் திடீரென்று பெரும்பொருள் கிடைக்காதா என்று நினைக்கின்றனர். கிடைக்கலாம். ஆனுல், செல்வம் வேண்டுமென்று நினைக்கின்றவர் எல்லோருக்கும் செல்வம் குறுக்கு வழியில் வந்து சேர்ந்து விடுமா ? சேராதே! ஆனுல் சிக்கனத் தன்மையுடன் வாழ்ந்து கையில் கிடைத்த பொருளில் சேர்க்கக்கூடிய அளவுக்குக் கொஞ்சம்கொஞ்சமாகச் சேர்க்கின்றவர்களிடம் செல்வம் சேரும் என்பது நிச்சயம். சிலரிடம் பொருளைச் சேர்க்கவேண்டும் என்னும் எண்ணம் சிலகாலமிருந்து பிறகு மறைந்துவிடுகின்றது. மனஉறுதியும் சலியாத உழைப்புமே ஒருவரிடம் செல்வத்தைச் சேர்ப்பிக்கும்.

"சோர்வடையாத ஊக்கமுள்ளவர் இருக்கும் இடத்தில் வழிகேட்டுக் கொண்டு சென்று, செல்வம் தங்கும்" என்ற கருத்தை வள்ளுவப் பெருந்தகையார்,

> "ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா
> ஊக்கம் உடையான் உழை"

என்று சிறப்புத் தோன்றக்கூறி இருக்கின்றுர். பொருள் சேர்க்க விருப்பமுள்ளவர்கள் இதைக் கவனிக்கவேண்டும்.

சிக்கனத் தன்மை உள்ளவர் பொருளைச் சேர்ப்பது மட்டும் போதாது. பொருளை வகை அறிந்து செலவிடத் தெரிந்திருப்பதும் சிக்கனக்காரரின் கடைமையாகும். சிக்கனக்காரர் ஒரு ரூபாயைச் செலவிட்டால் அதனுல் அவர் பெறுகின்ற நன்மை ஒரு ரூபாய் மதிப்புள்ளதாகவே இருக்கும். பணத்திற்கேற்ற பலனைப் பெறப் பழகுவதும் சிக்கனக்காரரின் செயலாகும். இந்தச் செயலைப் பெறுவதற்கு நல்ல பழக்கம் வேண்டும்.

சிலர், பொருளைச் செலவு செய்யும் போது, 'செய்யப் போகும் செலவு நியாயமானதுதானு?' என்று நினைக்காமலே

பொருளைச் செலவு செய்கின்றார்கள். பத்து ரூபாயானாலும், அதையும் நாம் கவனித்தே செலவு செய்ய வேண்டும். நாம் செய்யும் செலவு நியாயமானதுதானா என்று நினைத்துப் பார்க்க வேண்டும். நினைத்துப் பார்த்துச் செலவு செய்யப் பழகியவர்கள் நிச்சயமாகத் தங்கள் செலவுக் கேற்ற நல்ல பலனை அடைவார்கள். நினைத்துப் பார்க்காமல் செலவு செய்கிறவர்கள் பத்து ரூபாய்க்கு நான்கு ரூபாய் பலனைக் கூடச் சில சமயங்களில் அடைய மாட்டார்கள்! துன்பப் பட்டுத் தேடிய பொருளை எவரும் சிந்திக்காமல் செலவு செய்வது கொடுமை யாகும். நினைத்துப் பார்க்காமல் செலவு செய்கிறவர்கள் துன்பப்பட நேரலாம்! எத்தனையோ பேர் சிறிதளவு பொருளை வைத்துக் கொண்டு பெரிய பெரிய விவகாரங்களில் தலையிட்டு இருந்த பொருளையும் இழந்து துன்பப் படுவதை நாம் பார்க்கவில்லையா? ஆடம்பரத்தில் ஆசைகொண்டதனால் இருக்கும் பொருளை இழந்து துன்பப் படுகிறவர்களையும் நாம் பார்க்கின்றோம்.

எப்போதாவது நமது குடும்பத்தில் பெருஞ் செலவுக்குக் காரணமாயுள்ள கலியாணம் முதலிய நிகழ்ச்சிகள் தோன்றுமானால் அப்போதும் நாம் நம் நிலைமைக்கு மேற்படாதபடி செலவு செய்ய வேண்டும். கலியாணம், வீடு கட்டுதல் முதலிய வேலைகளில் அதிகமாகச் செலவுசெய்து விட்டுப் பிறகு துன்பப் படுகிறவர்களையும் நாம் பார்க்கின்றோம். நம் வருமானம் முழுவதையும் நம்முடைய செலவு சாப்பிட்டுக் கொண்டே இருக்குமானால் நாம் ஒருபோதும் பொருளைச் சேர்க்க மாட்டோம்; பணக்காரராக மாட்டோம்; மகிழ்ச்சி உள்ளவர்களாயும் இருக்க மாட்டோம்.

எத்தனையோ பேர் பணத்தைச் சம்பாதிக்கிறார்கள்; சேர்த்தும் வைக்கின்றார்கள். ஆனால், அவர்கள் அதை விருத்தி செய்யத் தெரியாதவர்களாய் இருக்கின்றார்கள். அவர்கள் எச்சரிக்கை இல்லாதவர்களாய் இருந்தால்

மேலும் பணம் வருமென்று சொல்லி அவர்களுக்கு ஆசை காட்டிப் பலர் அவர்களிடம் உள்ள பொருளைப் பாழாக்கி விட்டுப் போய் விடுவார்கள். பொருளைச் சேர்க்க வேண்டும். ஆனுல், பேராசை கூடாது. பேராசை உள்ளவர்கள் அந்த ஆசை காரணமாகவே ஏமாந்து போவதும் உண்டு!

ஊரில் பணப் புழக்கம் அதிகமாய் இருக்கும் போது நிலம், வீடு இன்னும் பல பொருள்கள் ஆகிய இவை களின் விலை உயர்ந்து இருக்கும். அப்போது அவைகளை வாங்காமல் பணத்தை பணமாகவே அரசாங்கக் கடன் பத்திரங்களிலும், பாங்குகளிலும் சேர்த்து வைக்க வேண்டும். ஊரில் பணப் புழக்கம் குறைந்து விட்டால், அப்போது நிலம், வீடு இன்னும் இவைபோன்ற பல வற்றின் விலை குறைந்து விடும். அப்போது நாம் சேர்த்து வைத்த பொருளைக்கொண்டு நிலம், வீடு முதலியவைகளைக் குறைந்த விலைக்கு வாங்குவதே பணத்தை வளர்க்கும் வழியாகும். நாட்டில் பணப்புழக்கம் அதிகமாய் இருக்கும் போது பெரும்பாலும் எல்லோர் கையிலும் பணம் நடமாடலாம். அப்போது பணத்தைச் சேர்த்துப் பிடிக் காதவர்கள் பணப் புழக்கம் குறைந்த போது துன்பப் படுவார்கள் என்பது திண்ணம்!

சென்ற இரண்டாவது உலகயுத்தம் நடைபெற்ற போது பெரும்பாலும் எல்லோர் கையிலும், பணம் நட மாடியது. அப்போது சேர்த்துப் பிடித்த வியாபாரிகளும் பிறரும் பிறகு துன்பமில்லாமல் காலந்தள்ளத் தொடங்கி ஞர்கள். அப்போது சேர்த்துப் பிடிக்காமல் செலவழித்த வர்கள் பிறகு துன்பத்தில் சிக்கிஞர்கள்.

உலகத்தில் பொருளாதார நிலை பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை உயர்வதும் தாழ் வதுமாய் இருக்கின்றது. அதற்குஏற்றபடி வாழத் தெரிந்த

வர்களிடத்தில்தான் பொருள் சேரும். உலகப் பொருளாதார நிலைக்கும் தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கை நிலைக்கும் தொடர்பு உண்டு என்பதைப் பலர் கவனிப்பதே இல்லை. சிக்கனத் தன்மையுடன் வாழத் தெரிந்தவர்கள் இவைகளையெல்லாம் கவனிக்கின்றார்கள்!

குடும்பத்திலுள்ள கணவன் மனைவி ஆகிய இருவருமே சிக்கனத்துடன் வாழத் தெரிந்திருக்க வேண்டும். ஆனால், பெண்களிடத்தில், பெரும்பாலும், சிக்கனக் குணம் அதிகமாய் இருக்கின்றது! அவர்கள் தங்கள் கையில் கிடைத்த பணத்தை எளிதில் விட்டுவிடமாட்டார்கள். ஆகவே, பொருளைச் சேர்க்கும் வகையில் ஆண்மக்கள் பெண்மக்களின் ஆலோசனையைக் கேட்பதும் நல்லதே!

வாழ்வதற்கு வழி

5

'சிக்கனம்' என்பது ஒரு கலை—ஒரு குணம்! ஒருவித வாழ்க்கையையுடையது. அந்த வாழ்க்கையை நடத்துவதற்கு ஏற்ற பண்பாடு சிலரிடம், அவர்களுடைய இயற்கையாய் இருக்கின்றது; சிலரிடம் அந்தப் பண்பாடு இயற்கையாகவும் இல்லை; செயற்கையாகவும் இல்லை. அவர்கள் பிறர் சொன்னாலும் கேட்கமாட்டார்கள்.

"சொன்னாலும் செய்யமாட்டான்; தானும் அறியமாட்டான்; அவன் இறக்கும்வரையில் ஒரு நோய் போன்றவனாவான்" என்னும் கருத்துள்ள,

"ஏவவுஞ் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்"

என்று திருவள்ளுவ தேவர் கூறியிருப்பது இவர்களுக்கே பொருந்தும். இவர்களைப்பற்றி இங்கு நம்மால் என்ன சொல்ல முடியும்! திருவள்ளுவரே "அவர்கள் ஒருநோய்" என்று அவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டாரே! நிற்க.

சிக்கன வாழ்க்கையைத் தங்களிடம் இயற்கையாகக் கொண்டுள்ள எத்தனையோ பெருமக்கள் நமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்தார்கள்; இப்போதும் இருக்கின்றார்கள். அவர்களைப்பற்றி நம்மில் பலருக்குத் தெரியாது. தெரிந்தாலும் அவர்களின் வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோளைப்பற்றி நாம் நினைப்பதே இல்லை.

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னால் திருச்சியிலே சின்னையபிள்ளை என்பவரொருவர் வாழ்ந்திருந்தார். அவர் எளிய குடும்பத்தில் பிறந்தவர். அவர் பிறந்தபோது அவர் குடும்பத்தில் பெரும் பொருள் குவிந்திருக்கவில்லை.

அவர் பள்ளிக்கூடப் படிப்பிலும் தேர்ந்தவரல்லர்! அவர் முதல் முதலாகத் தம் தாயார் கொடுத்த ஒரு ரூபாயைக் கொண்டுஒரு பெரிய வாழை இலைக்கட்டை விலைக்கு வாங்கி அதைச் சில்லரையாக விற்ருர்! அன்றே ஒரு ரூபாய்க்கு ஒரு ரூபாய் அவருக்கு இலாபம் கிடைத்தது. இதுதான் அவருடைய தொழிலின் ஆரம்பம்! அந்தத் தொழிலை அவர் தொடர்ந்து நடத்தினர்! சிக்கனத்துடனும், எச்சரிக்கையுடனும் அவர் தம் தொழிலை நடத்தினர்: தொழில் விரிவடைந்தது; நிறையப் பொருள் சேர்ந்தது. திருச்சி ஜில்லாவிலுள்ள பேர்பெற்ற வாழைத் தோட்டங்களில் அவருடைய பணம் போய்ப் புகுந்தது. அந்தத் தோட்டங்களிலிருந்து அவரைத் தவிர வேறு எவருக்கும் வாழைப்பூவோ, காயோ, பழமோ, இலையோ கிடைக்காது! சின்னையபிள்ளை வைத்ததுதான் சட்டம்! இப்படியாகப் பிள்ளை அவர்கள் பெரும்பொருளைக் குவித்தார்கள்! அவர்கள் பெயரால் இன்றைக்கும் திருச்சியில் பெரிய சத்திரமொன்று விளங்குகின்றது.

சென்னையிலே - ஏன்! சென்னை மாகாணம் முழுவதிலும் - இன்னும் பல விடங்களிலும் பிரசித்தி பெற்ற பாரிஸ்டராக விளங்கும் ஸ்ரீ வி. எல். எதிராஜ் அவர்கள் பலரும் புகழத் தகுந்த சிறந்த நோக்கத்துடன் தமது வக்கீல் தொழிலை நடத்தினர்! நடத்துகிருர். பெரும் பொருளைச் சேர்த்தார்; பத்து இலட்சம் ரூபாய்களை அள்ளிக் கொடுத்து ஒரு 'மகளிர் கல்லூரியைச்' சென்னையில் தோன்றச் செய்தார். இன்று அது "எத்திராஜ் காலேஜ்" என்னும் பெயருடன் விளங்குகின்றது. அவர் நிலைமைக்கேற்றவாறு அவர் சிக்கனத்துடன் வாழ்கின்ருர்! அதனுல் அவர் பெரும் பொருளைக் குவித்தார்; நல்லதொரு பணிக்கு அதைப் பயன்படுத்தினர். சிலரைப்போல அவர் வீண்செலவு செய்யக் கூடியவராய் இருந்தால் அவரால் இத்தகைய

நல்லதொரு செயலைச் செய்திருக்க முடியுமா? சிக்கனக் காரர்களே நாட்டுக்கும் வீட்டுக்கும் வேண்டியவர்கள்!

தமிழ் நாட்டிலே, அண்ணுமலை நகரிலே, உள்ள தமிழ் மக்களின் தனிப்பெருஞ் செல்வமாக விளங்கும் "அண்ணுமலைப் பல்கலைக் கழக"த்தை அறியாதவர் ஒருவருமில்லை. அதைத் தோற்றுவித்த கொடை வள்ளல் இராஜா. சர். அண்ணுமலைச் செட்டியாரவர்களை அறியாதவர்களுமில்லை. இராஜா சர். அவர்கள் செல்வம் நிறைந்த குடும்பத்திலே பிறந்தவர்கள் என்பது உண்மைதான். இராஜா. சர். அவர்கள் தம் தந்தையாரிடமிருந்து தமக்குரிய செல்வத்தைப் பெற்ருரென்பதும் உண்மைதான். ஆனல், அவர்கள் தாமே முயன்று தேடிய பொருள், தம் தந்தையாரிடமிருந்து தாம் பெற்ற செல்வத்தைப் பார்க்கிலும், பன்மடங்கு அதிகம் என்பதில் ஐயமில்லை. தேடிய பொருளைக் கொண்டு இராஜா. சர். அண்ணுமலைச் செட்டியாரவர்கள் பற்பல அறப்பணிகளை செய்தார்கள். அவற்றில் தலை சிறந்தது அண்ணுமலைப் பல்கலைக் கழகமாகும். தமிழ் இசை இயக்கம் வளர்ந்து தழைப்பதற்குச் செட்டியாரவர்களே தலை சிறந்த காரண கர்த்தர்களாய் இருந்தார்கள். தமிழிசையைத் தாங்கி நிற்பது போல சென்னையில் இன்று பெரியதொரு கட்டடம் தோன்றி நிற்கிறது. அதன் பெயர் **அண்ணமலை மன்றம்**! என்பர்.

செட்டியாரவர்கள் தம் நிலைமைக் கேற்றபடி வாழ்ந்தார்கள்; வாணிகத் தொழிலைச் சிக்கனத்துடன் நடத்திஞர்கள்; பொருளைச் சேர்த்தார்கள்; சேர்த்த பொருளை நல்ல வழியில் பங்கிட்டுச் செலவு செய்தார்கள். இவற்றை அவர்கள் எழுதிய பின்வரும் ஒரு கடிதத்திலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

"ஸ்ரீ. நடராஜப் பெருமானைத் தினந்தோறும் வணங்குவேன். அண்ணமலைச் சர்வகலாசாலையின் வளர்ச்சியை ஒவ்வொருநாளும் சிந்

திப்பேன். தமிழ்நாடெங்கும் தமிழிசை முழங்கவேண்டுமென்பது எனது ஆவல். ஈட்டலும், காத்தலும், வகுத்தலும் என் வாழ்க்கையின் கொள்கை" என்று செட்டியாரவர்கள் எழுதியிருப்பதைக் கவனியுங்கள். சிக்கனத் தன்மையுடன் எதையும் நடத்தத் தெரிந்தவர்களால்தான் இவ்வாறு எழுதவும் எழுதியபடி நடக்கவும் முடியும்.

"பொருள் வருவதற்கு ஏற்ற வழிகளை உண்டாக்கிக் கொள்ளுவதும், வரும் பொருளைச் சிதற விடாமல் சேர்ப்பதும், சேர்த்த பொருளைக் காப்பதும், பாதுகாக்கப் பெற்ற பொருளைத் தக்கவழியில் செலவிடுவதும் ஆகிய தொழிலைச் சிறப்புடன் செய்யவல்லவரே அரசர்" என்னும் கருத்துடன்

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

என்று திருவள்ளுவ தேவரவர்கள் கூறிய திருக்குறளையே செட்டியாரவர்கள் வார்த்தைக்கு வார்த்தை பின்பற்றி நடந்திருக்கின்றார்கள் என்று தோன்றுகிறதே! சிக்கனத்துடன் வாழத் தெரிந்தவர்களால்தான் செட்டியாரவர்கள் எழுதியதைப்போல எழுதமுடியும்.

கோயம்புத்தூரிலே மோட்டார் மன்னரெனப் பெயர் பெற்ற ஜி. டி. நாயுடு என்பவர் செல்வத்தால் சிறந்த குடும்பத்திலே பிறக்கவில்லை; கல்லூரியில் சென்று படிக்கவில்லை; மற்றவர்களின் உதவிபெற்று அவர் உயர்ந்து விடவில்லை; அவர் தமது சொந்த முயற்சியினுலேயே முன்னேற்றமடைந்தவராவர். இன்றைக்கு அவர் நமது நாட்டிலே தலைசிறந்த இயந்திர நிபுணராக விளங்குகின்றார். சர். சி. வி. இராமன் போன்ற விஞ்ஞான மேதாவிகளும் நாயுடு அவர்களின் திறமையைக்கண்டு வியப்படைகின்றார்கள்! நாயுடு அவர்களின் அறிவின்திறன் ஒருபுறமிருக்கட்டும். ஆரம்பமுதற்கொண்டே அவர்கள் வாழ்ந்து வந்த சிக்கன வாழ்க்கையே அவர்களின் அறிவு பிரகாசிப்

பதற்குத் துணையாய் இருந்தது. நாயுடு அவர்களை நான் சென்னையிலும் பிற இடங்களிலும் பார்த்திருக்கின்றேன். அவர்களை நான் எப்போதும் ஆடம்பரத்துடன் கண்டதே இல்லை. அவர் வாழ்க்கைச் சரிதம் எளியவர்களுக்கு எடுத்துக் காட்டாகும்; பணக்காரர்களுக்குப் படிப்பினை யாகும்; சிக்கனத்திற்குத் திறவுகோலாகும்; வாலிபர் களுக்கு ஒரு வழிகாட்டியாகும். சிக்கனத்துடன் சேர்த்த செல்வத்தைக் கொண்டு இன்று நாயுடு அவர்கள் பலவிதத் தொழிற் கல்வியை நம்நாட்டு வாலிபர்கள் கற்க வழி செய்திருக்கின்றார்கள்!

இன்றைக்குச் சென்னையிலும், காஞ்சிபுரத்திலும் பச்சையப்பன் என்ற அருள் நிறைந்த ஒருவருடைய பெயரால் கல்லூரிகளும், உயர்நிலைப் பள்ளிக்கூடங்களும் நடைபெறுகின்றன! சிதம்பரத்திலும் அவர் பெயரால் ஓர் உயர் நிலைப்பள்ளி நடைபெறுகின்றது. சிதம்பரத்தி லுள்ள நடராசப் பெருமானுடைய ஆலயத்தின் கோபுரம் ஒன்று அவருடைய பொருளுதவியினால் கட்டி முடிக்கப் பெற்றுள்ளது. பச்சையப்ப முதலியாரின் தருமம் நடை பெறாத தென்னாட்டுக் கோயில்களே இல்லை என்று கூறி விடலாம்!

இத்தகைய அறச் செயல்கள் பலவற்றிற்கும் பச்சை யப்ப முதலியாரவர்கள் தேடிய பெரும் பொருளே காரண மாய் இருக்கின்றது.

பச்சையப்ப முதலியாரவர்கள் மிகவும் எளிய குடும்பத் திலேதான் பிறந்தார். அவர் பிறப்பதற்கு மூன்று மாதங்க ளுக்கு முன்னரே அவர் தகப்பனார் இறந்தார். முதலியாரவர் கள் பிறந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர் தாயார் இப் போது சென்னையில் "பார்க்டவுன்" என்னுமிடத்திலுள்ள சாமிமேஸ்திரி தெருவில் ஒரு சிறியவீட்டில் குடி இருந்தார். நம் நாட்டில் "ஏழைக் கைம்பெண்கள் என்ன தொழில்

செய்வார்கள் '' என்பதுதான் நமக்குத் தெரியுமே! அவ்வழக்கப்படி பச்சையப்பர் தாயார் பூச்சி அம்மாள் தோசை, இட்டிலி முதலியவற்றைச் செய்து விற்றுத் தம் ஒரு மகனையும், இரு பெண்களையும் ஒருவாறு மானத்துடன் காப்பாற்றி வந்தார். இப்படிச் சில ஆண்டுகள் சென்றன!

இந்த சில ஆண்டுகளுக் கிடையில் பச்சையப்பர் கல்வி கற்ற சிலரை அடுத்துத் தமிழும் தெலுங்கும் ஒருவாறு எழுதக் கற்றுக்கொண்டார்; ஆங்கில மொழியில் ஓரளவுக்குப் பேசப் பழகினர். பௌனி நாராயணப் பிள்ளை என்னும் யாதவகுல திலகரொருவர் பச்சையப்பருக்கு ஆதரவளித்து அவரைத் தம்முடைய 'துவிபாஷித்' தொழிலில் பழக்கினர். துவிபாஷித் தொழிலென்பது அக்காலத்தில் ஆங்கில மொழியை அறியாத நமது நாட்டு வர்த்தகர்களுக்கும் நமது நாட்டு மொழியை அறியாத ஆங்கிலேயர்களுக்கும் இடையிலிருந்து ஒருவர் கருத்தை மற்றொருவருக்கு அறிவிப்பதாகும். இத் தொழிலில் பச்சையப்பருக்கு ஆரம்ப காலத்திலேயே நாள் ஒன்றுக்குப் பத்து ரூபாய்க்குக் குறையாமல் வரும்படி வந்தது. பச்சையப்பர் ஆரம்ப காலத்தில் மிக மிகச் சிக்கனத்துடன் வாழ்ந்தார்; பொருளைச் சேர்த்தார். சிக்கன வாழ்க்கை காரணமாக அவரிடம் பொருள் குவிந்தது. குவிந்த பொருளைக் கொண்டு பலவிதத் தொழில் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு அவற்றால் மாதந் தோறும் பத்தாயிரம் இருபதினாயிரம் ரூபாய்களுக்கு மேலும் சம்பாதித்தார்! பல இலட்சம் ரூபாய்களைச் சேர்த்த பிறகு அவர் பலவித அறச் செயல்களைச் செய்துவரலானார்! ஆரம்ப காலத்திலேயே, வருமானம் வரத் தொடங்கிய போதே, அவர் ஊதாரியாய் இருந்து தம்மனம் போனபடி செலவு செய்திருப்பாரானால் அவர் செல்வத்தினால் சிறந்

திருப்பாரா? பலப்பல அறங்களைத்தான் அவரால் செய்திருக்க முடியுமா?

சிக்கனத்தன்மை இல்லாதவர்களால் தங்களையும் தங்களைச் சார்ந்தவர்களையும் உயர்த்திக் கொள்ளவோ உயர்த்தவோ முடியாது. அவர்களால் உலகத்திற்கும் நன்மை உண்டாகாது. அவர்கள் வாழ்கின்றவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுகின்றவர்களாய், கடன்காரர்களாய், பிறர் பொருளை வஞ்சக வழியில் அபகரிக்கக்கூடியவர்களாய் இருப்பார்கள்.

இக்காலத்தில் மட்டுமல்ல; மிகப் பழங்காலத்திலே கூடச் சிக்கனத்துடன் வாழ்க்கை நடத்தியவர்களே மிகச்சிறந்தவர்களாய் விளங்கி இருக்கின்றார்கள்.

பெருங் கொடையாளரென்று பெயர்பெற்ற சடையப்ப வள்ளல் அவர்களைப் பொருள் கருதி ஒரு புலவர் பார்க்கச் சென்றார்! வள்ளல், நெல் ஒப்பனை செய்யப்படும் களத்தில் இருப்பதாகப் புலவர் அறிந்து அங்குச் சென்றார்! அப்போது சடையப்பர் களத்தில் சிந்திக்கிடந்த நெல்லைப் பொறுக்கிக் கொண்டிருந்தார். "கேவலம்! சிந்திய சில நெற்களையும் விடாமல் பொறுக்கும் இவரா வள்ளல்! இவரையா வள்ளல் என்று சொன்னார்கள்! நமக்கு இவரென்ன தரப்போகின்றார்" என்று புலவர் நினைத்தார். தமது வேலை முடிந்தவுடன் சடையப்பர் புலவரைத் தம்முடன் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று உபசரித்துப் பெரும் பொருள் கொடுத்து உதவி செய்தார்! அப்போது புலவர்தாம் தவறாக அவரைப்பற்றி எண்ணியதைக்குறித்து அவரிடம்கூறி வருத்தப்பட்டார். உடனே சடையப்பர், "தங்கள் தொழிலைச் சிக்கனத்துடன் நடத்துகிறவர்களால்தான் பிறருக்கு உதவி செய்யமுடியும். தங்கள் தொழிலில் கருத்தில்லாதவர்களால் எவருக்கும் நன்மை செய்ய முடியாது" என்று கூறினார். இது கர்ண பரம்பரைச்

செய்தி. எந்தப் பரம்பரைச் செய்தியானாலும் கருத்துச் சரிதானே!

வாழ விருப்ப முள்ளவர்கள் இவைகளை யெல்லாம் கவனிக்க வேண்டும்!

வாழ்வதற்கு வழி

6

தனிப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல; அரசாங்கத்திற்கும் சிக்கனம் தேவை. முதலாளிகளின் அரசாங்கமானாலும் சரி; தொழிலாளிகளின் அரசாங்கமானாலும் சரி; இரண்டுக்கும் சிக்கனம் தேவை. ஒரு நகரத்திற்கு 'நாடகசாலை வேண்டும்; ஆஸ்பத்திரி வேண்டும்' என்றால் அரசாங்கம் முதலில் ஆஸ்பத்திரியைத்தான் கட்டவேண்டும். எது முதலில் தேவையோ அதை முதலில் செய்வதும் சிக்கனமாகும். கிராமங்களில் விவசாயத் தொழிலை வளர்ப்பதற்கும் சீர்திருத்த வேலைகளைச் செய்வதற்கும் அங்குக் கூட்டங் கூட்டமாக ஆட்களை அனுப்புவதற்கு முன்னால் அங்கே ஆஸ்பத்திரி, படிப்பு, விவசாயத்திற்கு அடிப்படையான தண்ணீர் ஆகிய வசதிகளைப் பெருக்குவது நல்லது. இப்படியாக எங்கெங்கெங்கு எது எது அவசரமாகத் தேவைப்படுகிறதோ அங்கங்கு அதை அதை முன்னால் பெருக்குவது சிக்கனமாகும். அன்றியும் அரசாங்கத்தினரால் செலவிடப்படுகின்ற பணம், செலவாகும்போது, களவாடப்படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் கவனித்து நடத்தப்பெறும் அரசாங்கத்தினால்தான் சிறந்த வழியில் சிக்கனத்துடன் மக்களுக்கு நன்மை செய்யமுடியும். சொந்த வாழ்க்கையில் சிக்கனத் தன்மையுடன் வாழத் தெரிந்தவர்களே அரசாங்கத்தை நடத்துகிறவர்களாய் இருக்கவேண்டும். அமெரிக்காவின் பிரசித்திபெற்ற தலைவராகிய ஆபிரகாம் லிங்கன் தம் சொந்த வாழ்க்கையில் சிக்கனத்தன்மை

யுள்ளவர்! அதனால் அவர் தலைமையில் அக்காலத்தில் அமெரிக்க நாடு மேன்மை பெற்றது. இங்கிலாந்தின் முதல் மந்திரிகளில் மிகவும் பிரசித்தி பெற்றவர் 'கிளாஸ்டன்' என்பவர். அவர் ஒரு சிக்கனக்காரர். அதனால், அவர் காலத்தில் இங்கிலாந்து நன்றாகத் தலைதூக்கியது! இங்கிலாந்தை ஆண்ட ராணிகளில் 'விக்டோரியா' என்பவர், அவர் நிலைமைக்கேற்றபடி, சிக்கனத்துடன் தான் வாழ்ந்தார்! அதனால் அவர் அரசாங்கம் அவர் காலத்தில் மிகவும் சிறந்துவிளங்கியது. ஆளுகிறவர்களைத் தான் மக்களில் பலர் பின்பற்றி நடப்பார்கள். "அரசன் எவ்வழி; குடிகள் அவ்வழி" என்பது உண்மைதானே! இராணி விக்டோரியா அற்பமான பொருளைக்கூட அலட்சியம் செய்யமாட்டார். தாம் கழித்துவிட்ட ஆடைகளையெல்லாம் வீணாக்காமல் ஏழை எளியவர்களுக்குக் கொடுத்து உதவுவார். அதனால் ஆடை வாங்குவதற்காகச் செலவாகும் பொருள் அந்த ஏழை மக்களுக்கு மிச்சந் தானே என்பது இராணியின் கருத்து! செய்த குற்றத்திற்காகச் சுட்டுக் கொல்லப்படவேண்டிய தம் நாட்டுப் போர் வீரர்களைச் சுட்டுக் கொல்ல இராணி விக்டோரியா சம்மதிக்கமாட்டார்! போர் வீரர்களை அவர்களுடைய குற்றத்திற்காகச் சுட்டுக் கொன்றால் அதுவரையில் அவர்களுக்காகச் செலவிடப்பட்ட பணம் நஷ்டமாகுமே என்று அவர் நினைப்பார். 'கொல்வதற்குப் பதிலாக அவர்களை நன்றாக உழைக்கச் செய்யவேண்டு' மென்று அவர் கூறுவார். அதுவே நல்ல தண்டனையும் சிக்கனமும் ஆகும் என்பது அவர் கருத்து.

நமது தமிழ் நாட்டிலே அரசாட்சி நடத்திய இராணி மங்கம்மாள் ஆடம்பரமில்லாதவர்; சிக்கன வாழ்க்கையை மேற் கொண்டவர். அதனால்தான் அவர் காலத்தில் மக்களின் போக்குவரத்துக்காகப் பலசாலைகள் அமைக்கப்

பட்டன; குளிப்பதற்காகக் குளங்கள் வெட்டப்பட்டன; தங்குவதற்காகச் சத்திரங்கள் கட்டப்பட்டன; நோயைப் போக்கிக் கொள்ள மருத்துவச் சாலைகள் ஏற்படுத்தப் பட்டன! நமது பழங்காலத் தமிழ் அரசர்களிலும் பலர் தங்கள் வரையில் ஆடம்பரம் இல்லாமல் வாழ்ந்து மக்களுக்குப் பலவிதமான நன்மைகளைச் செய்திருக்கின்றார்கள்.

மிகமிகப் பழங்காலத்திலே வடநாட்டிலே இருந்த அரசர்களிலும் பலர் சிக்கன வாழ்க்கையை மேற்கொண்டு மக்களுக்கு உதவி செய்திருக்கின்றார்கள். அவர்களில் மிகவும் சிறந்தவர் ஜனகர்! ஆடம்பரம் இல்லாமையினால்தான் அவர் 'இராஜ ரிஷி' என்று பெயர் பெற்றார்!

உலகத்திலே எந்த நாட்டைக் கவனித்தாலும் அந்த நாட்டிலே சிக்கன வாழ்க்கையை மேற்கொண்டவர்களே சிறந்து விளங்குகிறார்கள்; விளங்கினார்கள்!

நமது இந்திய நாட்டிலே இருந்த சிவாஜி மன்னரைக் கவனியுங்கள். அவர், அக்காலத்திலே இருந்த மொகலாய பேரரசை எதிர்த்து வெற்றிமேல் வெற்றி கண்டார். அவர் வெற்றிக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அக் காரணங்களில் சிக்கனமும் ஒன்று! வெற்றிமட்டும் அவர் எண்ணமல்ல. அந்த வெற்றிக்கு வழி சிக்கனமுள்ளதாய் இருக்கவேண்டும் என்பது அவர் கருத்து! அவர் கட்டிய கோட்டைகள் ஒவ்வொன்றும் ஆடம்பரத்திற்காகக் கட்டப்பட்டவைகள் அல்ல; அவசியத்திற்காகக் கட்டப் பட்டவைகள்! ஆகவே, அந்தக் கோட்டைகளில் உபயோகத்திற்குரிய இடங்களைத் தவிரத் தேவை இல்லாத இடங்களைக் காணமுடியாது. சிவாஜி மன்னரின் சேனைகளில் உபயோகமற்றவர்கள் இருந்ததில்லை. சிக்கனக்காரர்கள் எப்போதும் எந்த வேலையையும் நன்றாக நினைத்து நல்லதென்று தோன்றினால்தான் அதைச் செய்யத் தொடங்குவார்கள்; தொடங்கிய வேலையை இடையிலே விட்டு

விடமாட்டார்கள். விட்டுவிட்டால் அதுவரையில் செய்த செலவு வீண்தானே என்று எண்ணி அவர்கள் வருந்துவார்கள்! அன்றியும் சிக்கனக்காரர்கள் நல்லதொரு பெரிய வேலையில் ஈடுபட்டிருக்கும்போது அதைக் கெடுக்கக் கூடிய வேறு எந்தச் செயலிலும் ஈடுபடமாட்டார்கள்; கேவலமான வழிகளில் அவர்கள் அறிவு செல்லாது.

போர்க்களத்திலே ஒரு கூடாரத்திலே சிவாஜி மன்னர் தங்கி இருந்தார். இரவு நேரம். சிவாஜி மன்னர் விழித்துக் கொண்டுதான் இருந்தார். அப்போது அழகிய பெண்ணொருத்தியை ஒரு போர் வீரன் அவரெதிரில் கொண்டு வந்து நிறுத்தி, "தங்களுக்கு விருப்பமானால் இவளை இப்போது நீங்கள் ஏற்றுக் கொள்ளலாம்" என்றான். உடனே சிவாஜி மன்னர் மனத்தில் கோபம் பொங்கி எழுந்தது. "என்னுடைய நல்ல நடத்தையையும், நாளையதினம் நாம் வெற்றி பெறுவதற்காக நான் போடும் திட்டத்தையும் கெடுப்பதற்காக நீ இவளை இங்கே கொண்டுவந்தாயா? என்னுடைய சைனியத்தில் இப்படி ஒருவன் இருக்கக்கூடாது" என்று கூறி அவனைத் துரத்திவிட்டு அந்தப் பெண்ணைப் பாதுகாப்புடன் "தாயே சென்றுவா" என்று கூறி அவள் இருப்பிடத்திற்கு சிவாஜிமன்னர் அனுப்பிவிட்டார்.

ஏன் இப்படிச் சிவாஜி செய்தார்! "அவர் நல்ல நடத்தை உள்ளவர். அதனால் அவர் அப்படிச் செய்தார்" என்று சரித்திரம் எழுதியவர்களில் சிலர் கூறுகின்றனர். அவ்வளவுதானா! "இவளை ஏற்றுக்கொண்டு இவளுடன் நேரத்தைக் கழித்துக்கொண்டிருந்தால் நாளையதினம் நடைபெறவேண்டிய யுத்தத்திற்கு யார் திட்டம் போடுவது?" என்றும் சிவாஜி அரசர் நினைத்திருக்கமாட்டாரா? நினைத்துப் பாருங்கள். எப்போதும் சிக்கனக்காரர்கள் எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதிலேயே கருத்தைச் செலுத்துவார்களே யன்றி அதைக் கெடுக்கக்கூடிய வழியிலே,

கருத்தைச் செலுத்தமாட்டார்கள். அமெரிக்காவின் சிறந்த தலைவராய் இருந்த ஏபரகாம்லிங்கன் என்பவர் ஒரு பெரிய அரசாங்க யுத்தத்திலே ஈடுபட்டிருந்தார்; அவருடைய சேனைத் தலைவர்களில் ஒருவர் அவருக்கு வெற்றிமேல் வெற்றியைத் தேடிக்கொடுத்துக் கொண்டிருந்தார். அந்தச் சேனைத் தலைவர்மீது பொருமை கொண்ட ஒருவர் அவர் சாராயம் குடிப்பதாக லிங்கனிடம் கோள் சொன்னார். உடனே லிங்கன் அவரைப் பார்த்து, "அப்படியா, அவர் எந்த அடையாளமுள்ள சாராயப்புட்டியை வாங்குகின்றார்? சொல்லுங்கள். அந்த அடையாளமுள்ள சாராயப் புட்டிகளை வாங்கி நம்முடைய சேனைகளுக்கெல்லாம் கொடுக்கலாமென்று எண்ணுகிறேன். என் சேனைத் தலைவர் வெற்றிமேல் வெற்றி பெறுவதற்கு அந்தச் சாராயப் புட்டிகளே காரணம் என்று நினைக்கின்றேன்," என்று சொன்னார்.

ஏபரகாம்லிங்கன் இப்படிச் சொல்லியதற்குக் காரணம் என்ன? எலலோரும் சாராயம் குடிக்கவேண்டும் என்பதா அவர் எண்ணம்? அல்லவே அல்ல! வெற்றி அடைய வேண்டுமென்பதே அவருடைய நோக்கம்! அதைத் தேடிக் கொடுப்பவர் மீது சொல்லப்படும் இழி சொற்களைக் கேட்கக்கூடாது என்பதுதான் அவர்கருத்து! வியாபாரத் துறையிலோ வேறு எந்தத் தொழிலிலோ ஒருவரால் தமக்கு நன்மைக்குமேல் நன்மை வருகிறதென்றால் எந்த முதலாளியும் அவருடைய தனிப்பட்ட நடத்தையில் அதிகமாகக் கவனம் செலுத்தமாட்டார். சிக்கனக்காரர்கள் அனுசரிக்க வேண்டியவழி இதுதான்! 'வக்கீல் வழக்கை ஜெயித்துக் கொடுப்பாரா, டாக்டர் நோயைப் போக்குவாரா?" என்பதுதான் சிக்கனக்காரர்களின் வேலையாய் இருக்கவேண்டும். அதற்குமேல் அவர்களைப்பற்றிக் கவனிப்பது சிக்கனக்காரர்களுக்குத் தேவை இல்லாத வேலையாகும்!

வாழ்வதற்கு வழி

* *

7

நாட்டுக்கும் சரி; வீட்டிற்கும் சரி; எது மிகமிகத் தேவையோ அதைச் செய்வதே சிக்கனக்காரர் செய்ய வேண்டிய முதல் வேலையாகும். காவிரிக்கு அணைகட்டிய சோழ மன்னரைப் பார்க்கிலும் 'டாஜ்மகால்' கட்டிய மொகலாய மன்னர் நாட்டு மக்களுக்கு நன்மை செய்தவ ராகமாட்டார். காவிரிக்கு அணைகட்டியது அவசியமான செயல்; 'டாஜ்மகால்' கட்டியது ஆடம்பரச் செயல்; வேண்டியது எது? ஆடம்பரமா? அவசியமா? தேவைக்கு மேல் இடத்தை வீணுகும்படி விட்டுவைத்து இடையில் சிறு மாளிகையைக் கட்டிக்கொண்டு வாழ்கிறவர்களைச் சிக்கனக்காரர்களென்று சொல்லமுடியுமா? ஓட்டல் களிலும் வீட்டிலும் உணவுப் பொருளைச் சேதமாக்கு கின்றவர்களைச் சிக்கனக்காரர்களென்று கூறமுடியுமா? குஜராத்திகளும் மார்வாரிகளும் பொதுவாகச் சிக்கனத் துடன் வாழ்கின்றார்களென்றே சொல்லவேண்டும். தமிழ் நாட்டிலே சிக்கனக்காரர்களின் தொகை மிகவும் குறை வாகவே காணப்படுகின்றது. ஆகவே, சிக்கனக் கலையைத் தமிழ் நாட்டார் திறமையுடன் கற்றால்தான் தமிழ்நாடு சிறப்படையும். சிலர் தங்களுக்கு வரும் கொஞ்ச வரு மானத்தைக் கொண்டு கடன்படாமல் சிக்கனத்துடன் வாழ்கின்றார்கள். அது நல்லதுதான்! இருந்தாலும் பொருளை அதிகமாகத் தேடவேண்டும்; மிகவும் சிக்கனத் துடன் வாழவேண்டும். இதுதான் சிறந்த வழி. இந்த வழி தான் பெரும் பொருள் சேர்வதற்குத் துணை செய்யும்.

அன்றியும் ஒரு தொழிலைச் செய்யும்போது அந்தத் தொழிலுக்குச் சம்பந்தமுள்ள வேறு தொழிலையும் செய்து சிக்கனக்காரர்கள் பொருளைத் தேடுவார்கள். பத்திரிகை நடத்துகிறவர்களிலும், அரசியல்வாதிகளிலும் இத்தகைய திறமை உள்ளவர்களைக் காணலாம்.

"செய்கின்ற தொழிலைக்கொண்டு மற்றொரு தொழிலையும் முடித்துக்கொள்வது யானையைக்கொண்டு யானையைப் பிடிப்பது போல ஆகும்" என்னும் கருத்துடன்,

"வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று"

என்று நாயனுர் சொல்லி இருப்பதைக் கவனியுங்கள். இத்தகைய திறமை சிலரிடம் இருக்கின்றது.

சென்னையில் வீரங்கவேடு முருகேச முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார்! அவர் ஹைதராபாத் நைஜாம் மன்னர் ஒருவருக்கு ஆலோசனை கூறுகிறவராய் இருந்த இராஜா கந்தசாமி முதலியாரென்பவருக்கு உறவினராவர். இவர் - முருகேச முதலியார் – ஏழையாகவே தம் கிராமத்திலிருந்து சென்னைக்கு வந்தார். ஆரம்பத்தில் சில கடைகளில் சிற்றாளாக வேலை செய்தார். கிடைத்த பொருளைச் சிக்கனத்துடன் சேர்த்தார். தாமே ஒரு தொழிலைச் செய்வதற்கு வேண்டிய அளவுக்கு அவரிடம் பொருள் சேர்ந்தது. சேர்ந்த பொருளைக்கொண்டு யானையால் யானையைப் பிடிப்பதுபோலப் பல தொழில்களை நடத்தினுர். சில கிராமங்களையும் விலைக்கு வாங்கினுர். கடைசிகாலம் வரையில் நடையாலும் உடையாலும் அவர் சிக்கனக்காரராகவே வாழ்ந்தார். அதனுல், கல்விக்காகத் தாம் தேடிய பொருளில் ஒரு பகுதியைச் செலவு செய்ய அவரால் முடிந்தது.

மயிலை - துரைசாமி முதலியார் என்னும் பெரியவர் ஒருவர் தம் காலத்தின் பெரும் பகுதியைச் சென்னையி

லுள்ள புத்தகத் தொழிலகமொன்றில் செலவழித்தார். பிறகு அந்தத் தொழிலகத்தை விட்டு வெளிவந்தார். அவர் தம் தைரியத்தை விட்டுவிடவில்லை; தமக்குப் பழக்கமான புத்தகத் தொழிலை ஆரம்பித்தார்; சிக்கனத்துடன் வாழ்ந்தார்; வாழ்க்கைக்கு வேண்டிய அளவு பொருளைச் சேர்த்தார்; அதனால் தம்மால் முடிந்த அளவில் பிறருக்கு உதவி செய்ய அவரால் முடிந்தது.

இன்னும் இவ்வாறு எத்தனையோ பேர் தங்கள் உழைப்பினாலும் சிக்கனத் தன்மையினாலும் தங்கள் தங்கள் தொழிலுக்கு ஏற்றபடி சிறப்படைந்திருக் கின்றார்கள்!

வாழ்வதற்கு வழி

8

"பணம் இல்லாதவன் பிணம்"
"ஈட்டி எட்டுகிறவரையில் பாயும்;
பணம் பாதாளம் வரையில் பாயும்"
"இல்லாதவனே பொல்லாதவனே"
"இல்லானை இல்லாளும் வேண்டாள்;
ஈன்றெடுத்த தாய் வேண்டாள்"

என்ற பழமொழிகளெல்லாம் பணத்தின் பெருமையைத் தானே கூறுகின்றன! மற்றவர்கள் சொல்வது இருக்கட்டும்.

"பொருள் இல்லாதவர்களுக்கு இந்த உலகத்தில் இன்பம் இல்லாததைப்போல" "கடவுளின் அருளைப் பெருதவர்களுக்கு மேல் உலகத்தில் இன்பமில்லை" என்ற கருத்துடன் திருவள்ளுவர்,

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை; பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு"

என்றுகூறி இருப்பதையாவது நாம் கவனிக்கவேண்டாமா? "பொருளில்லாதவர்க்கு இவ்வுலகம் இல்லை" என்ருல் "கையில் பொருள் இல்லாதவர்களுக்கு இந்த உலகத்தில் இருக்கும் எவ்வித இன்பமும் கிடைக்காது" என்பது கருத்தாகும். பொருள்களின் நிலையாமையைப் பற்றிக்கூறும் திருவள்ளுவ தேவரே இந்த உலகத்தில் இல்லறத்தில் இருந்து நன்ருக வாழ விரும்புகிறவர் பொருளைத் தேடவேண்டுமென்று கூறுகின்ருர்!

சோம்பேறிகளும், கையில் பணம் இல்லாமல் பணக்காரர்களைப் பார்த்துப் பொருமைப்படுகிறவர்களும்,

"செத்தால் பணம் கூடவருமா"
"காதற்ற ஊசியும் கூடவராது"
என்று பட்டினத்தார் சொன்னரே"

என்றெல்லாம் சொல்லுவார்கள். பட்டினத்தார் பொருளை ஏராளமாகத் தேடிக் குவித்த பிறகுதான் இப்படிச் சொன்ஞர். சோம்பேறியாய் இருந்து கொண்டு அவர் இவ்வாறு கூறவில்லை. பட்டினத்தார் "காதற்ற ஊசியும் வாராது காண் நும் கடைவழிக்கே" என்று சொன்ஞலும் மறு உலகத்தில் நன்ருக வாழ்வதற்கு வேண்டிய வழியைத் தேடிஞர். பட்டினத்தார் வாழ்ந்த வரையில் இந்த உலகத்தில் நன்ருகத்தான் வாழ்ந்தார். மறு உலகத்திலும் வாழ்வதற்கு வேண்டிய வழியைத் தேடிஞர். இதையெல்லாம் கவனியாத சோம்பேறிகள் சோம்பேறி வேதாந்தம் பேசுவதஞல் அவர்களுக்கும் அவர்களால் நாட்டுக்கும் தீமைதான் விளையும்! இந்த உலகத்திலும் வாழத்தெரியாமல் மறு உலகத்திலும் வாழ வழிதேடாமல் இருப்பவர்கள் "பட்டினத்தார் இப்படிச் சொன்ஞர்; தாயுமானவர் அப்படிச் சொன்ஞர்" என்பது எதற்காக? தங்கள் சோம்பேறித்தனத்தை மறைத்துக் கொள்ளுவதற்காகத்தானே?

"பணம் மந்திர சக்தியை உடையது. அதைக் கொண்டு பல அற்புதங்களைச் செய்யலாம்" என்று 'பைரன்' என்னும் ஆங்கிலக் கவி கூறுகின்ருர்.

"பணமும் பணத்தின் தேவையும் இல்லாவிட்டால் இந்த உலகத்தில் உள்ளவர்களில் பாதிப்பேருக்கு மேற்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் நண்பர்களாய் இருக்க மாட்டார்கள். பணத்தை நல்ல வழியில் உபயோகப்படுத்திஞல் அதைவிட சக்தியுள்ளது வேறென்றுமில்லை" என்று 'ஜார்ஜ் மெக்டஞல்டு' என்பவர் கூறுகின்ருர்.

"நீங்கள் எவ்வளவுதான் புத்திசாலிகளாய் இருந்தாலும், நீங்கள் எவ்வளவுதான் உயர்ந்த

நிலையில் இருந்தாலும், அவசியமான தேவைக்காக வைத்திருக்கும் பணத்தை, பணம் நிச்சயமாக வரும் என்னும் நம்பிக்கை இல்லாதவழியில் செலவு செய்யாதீர்கள்" என்று "பல்வர்" என்பவர் கூறுகின்றார்.

கையில் பணத்தை வைத்துக் கொண்டிருப்பவர்களின் மனத்தில் எவ்வளவுதான் துன்பம் இருந்தபோதிலும் அந்தத் துன்பம் தரித்திரத்தைப் பார்க்கிலும் மிகக் கொடியதாக இருக்க முடியாது. "தரித்திரத்தைப் போலக் கொடியது எது என்றால் தரித்திரமே கொடியது" என்று வள்ளுவர் கூறுகின்றார். "நெருப்பின்மீது இருந்து ஒருவர் தூங்கினாலும் தூங்கலாம்; தரித்திரத்தில் ஒருவர் தங்கி வாழமுடியாது" என்றும் அவரே கூறுகின்றார். பணத்தின் பெருமை அப்படி இருக்கின்றது! கற்றவர்கள் சொல்வதை எல்லோரும் கேட்கின்றார்கள் என்பது ஓரளவுக்கு உண்மைதான். ஆனாலும் கையில் பொருளிருப்பவர் சொல்வதைத்தான் உலகம் அதிகமாகக் கேட்கின்றது. ஆகவே, பொருளைச் சேர்க்க ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும். காலணாவாக இருந்தாலும் அதையும் கருத்துடன் சேர்க்கவேண்டும். "காலணாவைக் கொண்டு நம்மால் என்ன செய்யமுடியும்" என்று பலர் நினைக்கலாம். 0-15-9 அணாவுடன் காலணா சேர்ந்தால் அது ஒரு ரூபாயாகின்றது! 999-15-9 உடன் காலணா சேர்ந்தால் அது 1000 ரூபாய் ஆகின்றது! காலணா செய்யும் வேலையைப் பாருங்கள்! "ஒரு பாதங் கொட்டையைக் கொண்டு ஒரு பையை நிரப்பமுடியாது. ஆனால் அந்த ஒரு பையை நிரப்புவதற்கு அந்தப் பாதங்கொட்டையும் தேவைதான்" என்பது ஒரு அரேபிய நாட்டுப் பழமொழி. ஆகவே, சிக்கனக்காரர்கள் எதையும் அற்பமென்று ஒதுக்கிவிடமாட்டார்கள்.

"நான் என்னுடைய வாழ்க்கையில் பலவிதத் துன்பங்களை அனுபவித் திருக்கின்றேன். இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குக் கூலியாட்கள் செல்லும் கப்பலில் சென்றேன். அப்போது எனக்குப் பதினைந்து வயது இருக்கும். "நியூயார்க்" நகரத்தில் அங்குமிங்குமாக வேலை தேடி அலைந்தேன். எவ்வளவோ சிக்கனமாகச் செலவு செய்தும் கையில் இருந்த பணம் கரைந்துவிட்டது. 'நியூயார்க்' நகரத்திலிருந்து வேலை தேடி 'பிலடல்பியா' என்னும் நகரத்திற்கு நடந்தே சென்றேன். அங்கே "ஜேம்ஸ் அமில்டன்" என்னும் பெயருள்ள ஓர் ஓவியக் காரரிடம் எனக்கு வேலை கிடைத்தது. என்னுடைய மேன்மைக்குக் காரணகர்த்தராய் இருந்த அவருக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவருக்கு என் துன்ப நிலை தெரியாது. என்னுடைய வெளித் தோற்றத்தைக்கண்டு நான் நல்ல நிலையில் இருப்பதாக அவர் நினைத்துக் கொண்டார். எனக்குப் பொருள் முடை எவ்வளவு இருந்தபோதிலும் நான் என்னுடைய தோற்றத்தை உடையாலும் நடையாலும், ஆடம்பரம் இல்லாமல், நன்ருகக் கவனித்துவந்தேன். நான் ஒரு சிறிய வீட்டில் ஒருசிறு அறையில் தங்கி இருந்தேன். அந்த அறையில் ஒரு நாற்காலி; ஒரு சிறிய பெட்டி; ஒரு பத்திரிகை இவைகளைத்தான் காணலாம். இவைகளை ஒருநாள் .'ஜேம்ஸ் அமில்டன்' கண்டார்.

"இந்த அறையில் வசதிக்கு வேண்டிய பொருள்கள் இல்லாமல் நீ எப்படித் தங்கி இருக்கின்ருய்?" என்று அவர் என்னைக் கேட்டார்.

"காலையில் வாங்கிய பத்திரிகையைப் படித்துவிட்டு இரவில் அதையே விரித்து அதன்மீது படுத்துக் கொள்ளுகிறேன். பகலில் உட்கார்ந்து கொள்வதற்கு இந்த நாற்காலி இருக்கின்றது" இவைகள் என் தேவைக்குப்

போதுமானவை என்று நான் சொன்னேன்.”

இவ்விதமாக “எட்வர்டு மொரான்” என்னும் ஓர் ஓவியர் தம் வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடுகின்றார்.

இது மிகவும் கடுமையான வாழ்க்கைதான்! இருந்தாலும் அறியாமை, தரித்திரம் ஆகிய சூழ்நிலையின் நடுவில் இருந்து முன்னேற்றம் அடைந்த பலர் இப்படித்தான் சிக்கனத்துடன் வாழ்ந்தார்கள். உலகமெல்லாம் புகழும் பேர்பெற்ற ‘புக்கர் வாஷிங்டன்’ என்பவர் நீக்ரோவர், அடிமையின் பிள்ளை: கல்வி அறிவற்றவர்களின் நடுவில் தோன்றியவர்; உழைப்பு - சிக்கனம் இவைகளால் முன்னேற்றமடைந்தார். ‘கல்விமான்’ என்று பேர்பெற்றார்; தாம் கற்றது மட்டுமன்றித் தம் இனத்தார் பலரைக் கல்வியிலே தேர்ச்சியடையச் செய்தார். அவர் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர் சிக்கனத்துடன் வாழ்ந்தார். அவர் பிறருக்குத் துணை செய்வதற்கும் அந்தச் சிக்கனமே அவருக்குத் துணையாயிருந்தது.

மகாத்மா காந்தியடிகள் இரயிலில் எங்குச் சென்றாலும் மூன்றாவது வகுப்பு வண்டியிலேயே பிரயாணம் செய்தார்! இதற்குக் காரணமென்ன? பொதுமக்களுக்குச் சிக்கன வாழ்க்கையைப் போதிக்க வேண்டுமென்பதே அவர் எண்ணம்! இது, அவருடைய வாழ்க்கையை ஊன்றிக் கவனித்தவர்களுக்கு விளங்காமற் போகாது. இந்திய மக்களுக்கு ஆடம்பரமான உடைகளில் இருந்த விருப்பத்தை மாற்றியவரும் அவரே!

சிக்கனத்துடன் வாழ்ந்தமையினால்தான் நாம் முன் கூறிய ‘எட்வர்டு மோரான்’ என்னும் ஓவியர் பொருளைச் சேர்த்துப் பல அரிய பெரிய ஓவியங்கள் எழுதி உலகத்தில் புகழ்பெற்றார். லண்டன், பாரிஸ் முதலிய நகரங்களிலும் பிறநாடுகளிலும் ஓவிய நிபுணரெனப் பெயர்பெற்றார். ஒருவருக்கு எவ்வளவுதான் திறமை இருந்தபோதிலும் அவரிடம்

போதுமான பொருள் இல்லாதபோது, அந்தத் திறமை சிறப்படையாது. தங்கள் திறமை வெளிப்பட வேண்டுமென்று நினைக்கின்றவர்கள் பொருளைச் சேர்க்க வேண்டும்.

தேசபந்து சித்தரஞ்சன்தாஸ் அவர்களை நமது நாட்டினரில் பலர் அறிவார்கள். அவர் சிறந்த தேசாபிமானி. வடநாட்டில் அவர் நினைவுக்காக 'சித்தரஞ்சன் நகர்' என்று ஓரிடத்திற்குப் பெயரிட்டிருக்கின்றார்கள். அங்கே 'இரயில்வே இஞ்சின்கள்' செய்யப்படுகின்றன. சித்தரஞ்சன்தாஸ் அவர்களை 'ஸி. ஆர். தாஸ்' என்று சுருக்கமாகக் குறிப்பிடுவது வழக்கம்!

தாஸ் அவர்களின் தந்தையார் வக்கீல் தொழில் செய்து வந்தார். பிறருக்கு அளவுகடந்து உதவிசெய்தும், கடன் வாங்குகிறவர்களுக்குக் கூட்டுக் கையெழுத்துப் போட்டும் அவர் கடன்காரரானார். வட்டியும் அசலுமாகச் சேர்ந்து கடன் இலட்சம் ரூபாய்க்கு மேல் வளர்ந்து விட்டது. அவரைத் துணையாகக் கொண்டு கடன் வாங்கியவர்கள் கையை விரித்து விட்டார்கள். அவ்வளவு கடனும் தாஸ் அவர்களின் தந்தையார் தலையில் வந்து உட்கார்ந்தது. அதை அவரால் தீர்க்க முடியவில்லை. அவர் "இன்ஸ்ஸால்வென்ட்" ஆனார்; பலர் அவரை இகழ்ந்தார்கள். தாஸ் வளர்ந்து வாலிபரான பிறகு தம்மைச் சிலர் "'இன்ஸ்ஸால்வென்ட்' கொடுத்தவன் மகன்" என்று சொல்வதைக் கேட்டார். அந்த வார்த்தையை அவரால் சகிக்க முடியவில்லை. தம்முடைய தந்தையார் பட்ட கடனைத் தாம் தீர்க்கவேண்டுமென்று அவர் உறுதி கொண்டார்! கல்வியிலே தேர்ந்திருந்த அவர் சிலர் உதவி பெற்று இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீட்சையிலே தேர்ச்சி பெற்றுத் திரும்பிவந்து கல்கத்தா உயர்நீதி மன்றத்திலே வக்கீல் தொழிலை நடத்தினார்; பொருளைச் சிக்கனத்துடன் சேர்த்தார். பொருள் குவிந்தது. காலமும் பாக்கி

இல்லாதபடி தம் தகப்பனுர்பட்ட கடனைத் தீர்த்தார்; தம் தகப்பனுர் 'இன்ஸ்ஸால்வென்ட் அல்ல' என்று தம் செயலால் எல்லோரும் அறியும்படி செய்தார். தம் தகப்பனுர் பட்ட கடனைத் தீர்க்கவேண்டும் என்ற கொள்கைதான் தாஸ் அவர்களைச் சிக்கனத்துடன் பொருளைச் சேர்க்கச் செய்தது. ஆகவே, சிக்கனத்துடன் பொருளைச் சேர்ப்பதற்கும் ஒரு கொள்கை இருக்க வேண்டும். "பொருளைச் சேர்த்து வீட்டைக் கட்ட வேண்டும்; நிலத்தை வாங்க வேண்டும்" என்னும் இவை போன்ற ஏதாவதொரு நல்ல கொள்கையே பலரைச் சிக்கனத்துடன் வாழச் செய்கின்றது.

இராஜா சர். அண்ணுமலை அரசர் சிதம்பரத்திலே ஒரு தமிழர் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தவேண்டு மென்று நினைத்தார்; தமிழ் மொழியிலே இசைக்கலையைப் பரவச் செய்யவேண்டு மென்று கருதினுர். அதற்கு வேண்டிய பொருளைச் சிக்கனத்துடன் சேர்த்தார்; எண்ணியதை நிறைவேற்றினுர்!

அமெரிக்காவிலே மனிதர்களை மனிதர்கள் ஆடுமாடுகளைப்போல விற்பதையும் வாங்குவதையும் ஏபரகாம் லிங்கன் கண்டார்; "இந்தக்கொடுமையை ஒழிக்க வேண்டும்" என்று அவர் எண்ணினுர். தாம் அமெரிக்க நாட்டின் தலைவரானுல்தான் தம் எண்ணம் நிறைவேறலாம் என்று அவருக்குத் தோன்றியது; வக்கீல் தொழிலை மேற்கொண்டார்; பொருளைச் சிக்கனத்துடன் சேர்த்தார்; 'தேர்தல்' மூலமாக அமெரிக்காவின் ஜனுதிபதியானுர்; பிறகு, முதலில் தாம் எண்ணிய காரியத்தைச் செய்து முடித்தார். யார் எந்த வேலையை நிறைவேற்ற நினைத்தாலும் அதற்குப் பொருள் வேண்டும். அந்தப் பொருளைச் சேர்க்க உழைப்பும் சிக்கனமும் வேண்டும்! அவரவர்கள் நிலைமைக்கு ஏற்றபடி பொருளைச் சேர்க்க

வேண்டும். நூறுரூபாய் சம்பாதிப்பவர் இருபது ரூபாய் மிச்சப்படுத்தினுல் அதே விகிதத்தில் ஆயிரம் ரூபாய் சம்பாசிப்பவர் இருநூறு ரூபாய் மிச்சப்படுத்துவது போதாது. வருமானம் உயர உயரச் செலவும் உயர வேண்டுமென்பது கட்டாயம் இல்லையே! சிக்கனம் என்பதற்கு அடிப்படையே வருமானத்தைப் பார்க்கிலும் செலவு குறைந்திருக்கவேண்டும் என்பதுதான். காலணு, அரையணு, ஓர் அணு மிச்சப்படுத்து வதற்குச் சந்தர்ப்பம் நேர்ந்து மிச்சப்படுத்தினுலும் அதுவும் சிக்கனத்தில்தான் அடங்கும்.

வழியில் சென்று கொண்டிருந்த நடராசன் என்பவர் தம் எதிரே வந்த ஒரு பள்ளிக்கூடத்தலைமை ஆசிரியரைப் பார்த்து, "நீங்கள் உங்கள் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில், பள்ளிக் கூடத்திற்காக, மற்றொரு புதிய கட்டடமொன்றைக் கட்டப் போவதாகக் கேள்விப்பட்டேன். பணம் சேர்ப்பதற்காக நீங்கள் அலைகிறீர்கள் என்றும் அறிந்தேன். நான் ஓர் ஐம்பது ரூபாய் அதற்காக உங்களுக்கு அனுப்ப விரும்புகிறேன். நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளுகிறீர்களா?" என்று கேட்டார்.

"ஐம்பது ரூபாய் அல்ல; ஐந்து ரூபாய் அனுப்பினுலும் பெற்றுக் கொள்ளுகிறேன். பணம் அவ்வளவு தேவையாய் இருக்கின்றது. உங்கள் நல்லெண்ணத்திற்கு நன்றி" என்று சொல்லிக்கொண்டே தலைமை ஆசிரியர் செல்லப் புறப்பட்டார். அப்போது எதையோ நினைத்துக் கொண்ட நடராசன் தலைமை ஆசிரியரை நிறுத்தி, "இப்போது என்னிடம் ஐம்பது ரூபாய் இருக்கின்றது. அதை இப்போதே தங்களிடம் கொடுத்து விடுகிறேன். நேரில் கொடுத்துவிடுவதால் எனக்கு 'மணியார்டர் கமிஷன்' தொகை மிச்சந்தானே!" என்று சொல்லிக் கொண்டே ஐம்பது ரூபாய்களைத் தலைமை ஆசிரியரிடம் எடுத்துக் கொடுத்தார்.

அந்தத் தலைமை ஆசிரியர் ரூபாய்களைப் பெற்றுக் கொண்டு, "இதற்கு இரசீது இப்போதே கொடுத்துவிடுகிறேன். பிறகு இரண்டணு செலவு செய்து இதைத் தபால் மூலம் அனுப்ப வேண்டாமே!" என்று சொல்லிக் கொண்டே இரசீதை எழுதி நடராசனிடம் கொடுத்து விட்டுச் சென்முர்!

இவர்கள் இருவரின் சிக்கனத்தையும் கவனியுங்கள். இப்படிப்பட்டவர்களால்தான் பொருளைச் சேர்க்கவும் நற் செயல்களைச் செய்யவும் முடியும்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னுல் இரண்டு பெண்மணிகள், குழந்தைகளின் ஆஸ்பத்திரி நிதிக்காக, ஒரு பணக்காரக் கிழவரிடம் பொருள் கேட்கச் சென்ருர்கள். அவர்கள் சென்றபோது அந்தக்கிழவர் இரண்டு மெழுகு வர்த்தி விளக்குகளின் நடுவில் இருந்து எதைப் பற்றியோ எழுதிக் கொண்டிருந்தார். வந்த பெண்மணிகளைக் கண்டவுடன் அவர் எரிந்து கொண்டிருந்த விளக்குகளில் ஒன்றை அணைத்து விட்டு மற்ருெரு விளக்கின் வெளிச்சத்தில் அவர்களுடன் பேசத்தொடங்கினுர். அந்தப்பெண்மணிகளில் இளையவள், "அந்த மெழுகு வர்த்தியும் எரிந்தாலென்ன! அது எரிவதால் என்ன குறைந்து விடப்போகிறது? இவ்வளவு சிக்கனக்காரராகிய இவர் காலணுவும் தரமாட்டார்," என்று நினைத்தாள்.

ஆனுல் அந்தக்கிழவர், அவர்கள் வந்த வரலாற்றை அறிந்து கொண்டு, அவர்கள் ஆஸ்பத்திரி கட்டுவதற்காக நிதி திரட்ட வந்தவர்கள்தாம் என்பதற்குரிய அடையாளத்தையும் பார்த்துக் கொண்டு, ஒரு நூறு ருபாயை எடுத்து அவர்களிடம் கொடுத்தார்.

அதைக் கண்ட இளையவள் ஆச்சரிய மடைந்து, "நீங்கள் இவ்வளவு உதவி செய்வீர்களென்று நான் நினைக்கவில்லை" என்ருள். "நீ அப்படி நினைத்ததற்குக் காரணம்

என்ன ?" என்று கேட்டார் கிழவர்.

உடனே குமரி காரணத்தைக் கூறினள். அப்போது கிழவர், "நான் இப்படியெல்லாம் ஒவ்வொரு காரியத்திலும் சிக்கனத்துடன் நடந்து கொண்டமையினுல்தான் இப்போது என்னுல் இந்த நூறு ரூபாய்களை உங்களுக்குக் கொடுக்க முடிந்தது. பேசும்போது ஒரு விளக்கு எரிந்தால் போதாதா !" என்ருர்.

வந்த பெண்மணிகள் அன்று அவரிடமிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டு சென்ருர்கள்.

'மெர்ஸன்' என்னும் ஒரு கல்விமான் சிக்கனத்திற்காகச் சொல்லும் ஒரு நிகழ்ச்சியைக் கவனியுங்கள்.

மாணவர்கள் 'தங்குமிடம்' கட்டுவதற்குப் பொருள் சேர்ப்பதற்காக ஒருவர் ஒரு பேர் பெற்ற வியாபாரியைப் பார்க்கச் சென்ருர். அந்த வியாபாரி அப்போது ஒரு காகிதத்திற்கு மேல் மற்றுமொரு காகிதத்தை உபயோகித்து ஒரு "பார்சலை"க் கட்டிய தம் வேலைக்காரனைப் பார்த்து, "நீ செய்த அந்த வேலைக்கு ஒரு காகிதமே அதிகம். மேலும் ஏன் ஒரு காகிதத்தை வீணுக உபயோகித்தாய்! இப்படியெல்லாம் செய்தால் பொருள் அழிவு எனக்குத் தானே ?" என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். இதைக் கண்டவுடன் பொருள் கேட்கச் சென்றவர், 'நாம் வந்த நேரம் நல்ல நேரமல்ல! ஒரு காகிதம் அதிகமாகச் செல விட்டதற்காக இவ்வளவு கூச்சலிடும் இவர் நமக்குப் பொருள் கொடுப்பாரா ?" என்று நினைத்தார். ஆனுலும் அவர் வந்த காரணத்தைத் தெரிந்துகொண்ட வியாபாரி அவரிடம் ஐந்நூறு ரூபாய்களை நன்கொடையாகக் கொடுத்தார். பிறகு வந்தவர் தாம் எண்ணியதை அந்த வியாபாரியினிடம் கூறினுர்.

உடனே அந்த வியாபாரி, "ஐயோ, நீங்கள் அப்படியா நினைத்துவிட்டீர்கள்! இப்படித் தேவைக்குமேல் ஒரு

காகிதம் செலவானுல் எனக்கு ஆண்டு ஒன்றுக்குச் சராசரி ஐந்நூறு ரூபா அதிக செலவாகுமே!" என்ருர்!

சிக்கனக்காரர்கள் எங்கெங்குத் தங்கள் கருத்தைச் செலுத்துகிருர்கள் என்பதைக் கவனியுங்கள்!

வாழ்வதற்கு வழி

* *

9

உழைப்பும் சிக்கனமும் ஒன்றை ஒன்று பின்னிக் கொண்டிருக்கின்றன. சிக்கனத்துடன் வாழவேண்டு மென்று எண்ணிவிட்டால் போதுமா? பொருள் சேர்ந்து விடுமா? உழைத்தால் தானே பொருள் வரும்! வந்த பொருளைச் சேர்த்துப்பிடிக்கச் சிக்கனத் தன்மை வேண்டும். சிக்கனத் தன்மை இல்லாவிடில் உழைப்பினால் சேர்ந்த பொருள் பாழாகும். பாலைக் கறந்து மணலில் ஊற்றலாமா?

"நியூ இங்கிலாந்து" என்பது வட அமெரிக்காவிலுள்ள ஒரு குடியேற்ற நாடு. அதன் மண்வளம் மிகவும் சிறந்ததென்று சொல்ல முடியாது. ஆனாலும், அங்கே வாழ்க்கைக்கு வேண்டிய இயற்கை வசதிகள் இருந்தன. இருப்பினும் அவைகள் உழைப்பவர்களுக்குத்தான் பலன்தரும். இது அங்கே பிறந்த ஒவ்வொருவருக்கும் நன்ருய்த் தெரியும். அங்கே உள்ள பணக்காரர்கள் எல்லோரும் தங்கள் உழைப்பினால் வந்த பொருளைச் சிக்கனத்துடன் சேர்த்தவர்கள் என்பதை எல்லோரும் அறிவர். ஆண்டுதோறும் ஐம்பது டாலர்களையாவது அங்கே உள்ள ஏழைகளும் மிச்சம் பிடித்து வைப்பார்கள். அங்கே இவ்வாறு சேர்த்துப் பணக்காரர்களானவர்கள் பலர்!

"இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா மாகாணத்தின் மேற்குப் பகுதியிலிருக்கும் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்து பிழைப்பதற்காக ஓர் வாலிபன் தன்மனைவியுடன் சென்ருன். அவனுக்கு எழுதவும் படிக்கவும் தெரியாது. அவன் மனைவி மிகவும்

சிக்கனக்காரி! எழுதவும் படிக்கவும் தெரியாவிட்டாலும் கணவனும் மனைவியும் எல்லோரிடத்திலும் பக்குவமாகப் பழகத் தெரிந்தவர்கள். அவர்கள் ஒரு சிறிய வீட்டையும் அதைச் சுற்றிலுமுள்ள பண்படுத்தப்படாத நிலத்தையும் குத்தகைக்கு ஏற்றுக்கொண்டார்கள். நிலக்கரிச்சுரங்கத்தில் வேலை இல்லாத போது கணவனும் மனைவியும் தங்கள் வீட்டைச் சுற்றிலுமிருக்கும் நிலத்தைத் தோட்டமாக்கி அதில் உருளைக்கிழங்கு முதலிய, எல்லாமக்களும் விரும்பி வாங்கக்கூடிய, பலவிதக் கிழங்கு வகைகளையும், காய்கறி வகைகளையும் பயிர் செய்தார்கள். மனைவியைப் போலவே கணவனும் சிக்கனக்காரன்தான்! அவன் பணத்தையும் காலத்தையும் வீண் வழிகளில் செலவழிக்கமாட்டான். சுரங்கத்தில் ஏற்பட்ட ஒரு விபத்தினல் வேலை செய்வதற்கு உதவாதபடி அவனுடைய கைகளில் ஒன்று முறிந்து விட்டது. காயம் ஆறியது. ஆனாலும் அதிகாரிகள் சுரங்கவேலைக்குத்தகுதி அற்றவன் என்று அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார்கள். அதற்காக அவன் கவலைப்படவில்லை. இருந்த ஒரு கையுடன் அவன் வயல்களில் சென்று வைக்கோலைச் சேர்ப்பது, ஆடுமாடுகளை மேய்ப்பது ஆகிய பலவித வேலைகளைக் கூலிக்குச் செய்து வந்தான். கூலி அதிகமாகக் கிடைத்தபோது அதில் கொஞ்சம் சேர்த்து வைத்தான். கொஞ்சமாகக் கிடைத்த போது, கிடைத்ததைக் கொண்டு வாழ்ந்து வந்தான். கிழங்கு, காய்கறி முதலியவைகளை விற்பதால் வரும் பணத்தை அவனுவது, அவன் மனைவியாவது செலவு செய்வதே இல்லை. இவ்வாறு கணவனும் மனைவியும் பல ஆண்டுகாலம் சிக்கனத்துடன் வாழ்ந்து வந்தார்கள். நிறைய பொருள் சேர்ந்தது. அதைக்கொண்டு தாங்கள் இருந்த வீட்டையும் பத்து ஏக்கர் நிலத்தையும் அவர்கள் விலைக்கு வாங்கினார்கள். வீட்டைத்தங்கள் விருப்பப்படி

மாற்றி அமைத்துக் கொண்டார்கள். அவர்களுடைய சிக்கனத்தன்மையையும் நல்ல தன்மையையும் அறிந்தவர்கள் எல்லோரும் அவர்களைப் புகழ்ந்தார்கள். வெறுங் கையுடன் வந்த வாலிபன் இப்படிப் பொருளைச் சேர்த்தான். வேலை கிடைத்த போது அதைச் செய்யாமல் அவன் காலத்தை வீணாக்கியதில்லை. 'கூலி அதிகமில்லை' என்று அவன் கிடைக்கும் வேலையை விட்டு விட மாட்டான். 'சும்மா இருப்பதைவிட இது இலாபந்தானே' என்பது அவன் கருத்து! இப்படியெல்லாம் ஓயாமல் அவன் வேலை செய்வதைக் கண்டு 'இவன் ஏன் இப்படி அலைகிறான்' என்று அவனைக் கேலி செய்தவர்களும் உண்டு! சோம்பேறிகளாய் இருந்து வீண்செலவு செய்து அவனைக் கேலி செய்தவர்கள் பிற்காலத்தில் அவன் நல்ல நிலையில் இருப்பதைக் கண்டு தங்கள் அறியாமையை நினைத்து வெட்கப் பட்டார்கள்" என்று ஏ. எம். கோவ் என்பவர் கூறுகிறார்.

மிகமிக எளிய குடும்பத்திலே பிறந்து உழைப்பினாலும் சிக்கனத்தினாலும் மிகமிக உயர்நிலையை அடைந்த 'ஆன்ரூ கார்னகி' என்பவர் கூறுவதைப் பாருங்கள்; "ஒரு மனிதன் முதல் முதல் கற்றுக்கொள்ள வேண்டியது பணத்தைச் சேர்ப்பது எப்படி என்பதுதான். சிக்கனத்தன்மை வளர வளரப் பணம் சேருகின்றது. சிக்கனப்பழக்கமே எல்லாப் பழக்கங்களிலும் மேலானது. சிக்கனம் செல்வத்தை வளர்க்கும் தாய். சிக்கனம் மிருகத் தன்மையிலிருந்து மனிதத்தன்மைக்கு ஒருவரை உயர்த்துகின்றது. சிக்கனம் செல்வத்தை வளர்ப்பதுடன் மனிதனுடைய நல்ல நடத்தையையும் வளர்க்கின்றது" இப்படி ஆன்ரூகார்னகி கூறுவதை எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்?

சில்லரையாகக் கிடைக்கும் பொருளைப் பலர் அவ்வப் போது வீண் வழிகளில் செலவு செய்து விடுகிறார்கள்.

சில்லரை சில்லரையாகக் கிடைக்கும் பொருள்தானே பெரும்பொருள் சேருவதற்கு அடிப்படை! இன்று பணக் காரர்களாய் இருக்கின்றவர்களில் பெரும்பாலோர் கொஞ்சம் கொஞ்சமாகப் பொருளைச் சேர்த்தவர்களே! 'மோட்டார்' மன்னர் என்று பேர்பெற்ற கோவை ஜி. டி. நாயுடு அவர் கள் முதல் முதல் ஒரு "மோட்டார் சைக்கிளை" விலைக்கு வாங்கி தாமே அதன் பல பாகங்களைப் பிரிக்கவும் சேர்க் கவும் கற்றுக்கொண்டார். அதுவே அவர் இயந்திர நிபுண ராவதற்கு முதற்படியாய் இருந்தது. அந்தக் காலத்தில் நாயுடு அவர்கள் செல்வத்தால் சிறந்திருக்கவில்லை. ஆகவே அவர் கிடைத்த வேலையைச் செய்து கொஞ்சம் கொஞ்ச மாகச் சிக்கனத்துடன் பொருளைச் சேர்த்து நாம் குறிப் பிட்ட "மோட்டார் சைகிளை" விலைக்கு வாங்கினார். சில்லரையாக கிடைத்த பொருளைச் சேர்த்தமையினால்தான் அவரால் தாம் நினைத்ததைச் செய்ய முடிந்தது! ஒரு வருடைய மானத்தைக் காப்பாற்றுவதும், துன்பத்தை ஒழிப்பதும் பணந்தான். பணம் நெருப்பைப் போன்றது! நெருப்பை அடக்கி ஆளத்தெரிந்தவர்களுக்கு அது நன்மை செய்யும்; அடக்கி ஆளத் தெரியாதவர்களுக்குத் தீமை செய்யும். பணமும் அப்படித்தான்! அதை அடக்கி ஆளத் தெரிந்தவர்களுக்கு அது நன்மை செய்யும்; அடக்கி ஆளத் தெரியாதவர்களுக்கு அது தீமை செய்யும். சிக்கனக்காரர் களுக்குப் பணத்தை அடக்கி ஆளத் தெரியும்; ஊதாரி களுக்குப் பணத்தை அடக்கி ஆளத் தெரியாது.

"பல துளி பெருவெள்ளம்" ஆகின்றது. இதை நாம் தலைமுறை தலைமுறையாகக் கண்டு வருகிறோம். ஆகவே, சிறு பொருளையும் சிக்கனத்துடன் சேர்க்கத் தெரிந்தவர் களே பணக்காரர்களாகச் சிறந்து விளங்குகின்றார்கள். ஆகவே, சிறியவை என்று எதையும் அலட்சியம் செய்யக் கூடாது.

ஒரு காரியாலயத்தில் ஒரே விதமான தொழில் செய்கிறவர்கள் பலரில், ஒருவர் பணக்காரராய் இருந்தால், அவர் மற்றவர்களால் கொஞ்சம் அதிகமாக மதிக்கப்படு கின்ருர். பணத்தின் பெருமை அப்படிப்பட்டது!

நமது இந்திய நாட்டில் இப்போது சற்றேறத்தாழ நாற்பது கோடி மக்கள் இருக்கின்ருர்கள்! அவர்களில் ஒருவிதச் சக்தியும் இல்லாதவர்களென்று, குழந்தைகள், வயோதிகர்கள் என்று பாதிப்பேரை ஒதுக்கிவிட்டாலும் பாக்கியுள்ள பாதிப்பேர் ஆளுக்கு ஒரு ரூபாய் என்று சேர்த்தாலும் மாதத்தில் இருபது கோடி ரூபாய் சேருமே! ஆண்டு ஒன்றுக்கு இருநூற்று நாற்பது கோடி ரூபாய் ஆகுமே! அதை அரசாங்கத்தினரிடம் கொடுத்தால் அதைக் கொண்டு அவர்கள் எவ்வளவோ நல்ல வேலைகளைச் செய்யலாமே!

பள்ளிக்கூடங்களில் படிக்கும்போதே சிக்கனத்துடன் பொருளைச் சேர்க்கும் பழக்கத்தைச் சிறுவர் சிறுமியர்களிடம் உண்டாக்க வேண்டும். சிக்கனத் தன்மை சிறுவர்களிடம் படிந்துவிட்டால் அவர்கள் பொருளைச் சேர்ப்பது மட்டுமல்ல! வீண் வழிகளிலும் செல்லமாட்டார்கள்! தபாலாபீஸ்களில் உள்ள 'சேவிங்ஸ் பாங்' குகளில் பணத்தைச் சேர்க்கும் பழக்கத்தைச் சிறுவர்களுக்கும் வாலிபர்களுக்கும் உண்டாக்க வேண்டும்.

ஜர்மன்தேசத்திலே ஒரு முதலாளி, தம் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகள் தாங்கள் வாங்கும் சம்பளத்தைச் சிறிதும் மிச்சம் வைக்காமல் செலவு செய்வதைக் கண்டார். அவர், சிக்கனத்தின் மேன்மையைப் பற்றி எழுதி அதை அச்சடித்து அச்சடிக்கப்பெற்ற கடிதங்களில் ஒவ்வொன்றைச் சம்பளத்துடன் சேர்த்துத் தொழிலாளிகளுக்குக் கொடுத்து வந்தார். அன்றியும்

"பணத்தை வீணுக்காதீர்கள்" என்று அவர் தம் தொழிற் சாலைகளில் பல இடங்களில் எழுதிவைத்தார். இந்தச் செயல்கள் தொழிலாளர்களுக்கு நல்ல பலனைக் கொடுத்து வந்தது.

"நாம் மற்றவர்களிடம் பல்லைக்காட்டாமலும், துன்பப்படாமலும், பொருள் தேவைப்படும்போது அலையாமலும் இருக்கவேண்டுமானுல் நாம் அவ்வப்போது வரவு செலவுகளை எழுதிவைக்கவேண்டும். எழுதாமல் செலவு செய்கிறவர்களைப் பார்க்கிலும் எழுதிச் செலவு செய்கிறவர்களே சிக்கனக்காரர்களாய் இருக்கின்றுர்கள். எழுதும்போது நமது செலவு நம் கண்ணெதிரில் நிற்கின்றது. எழுதாதபோது அது மறைந்துவிடுகிறது. அதனுல் செலவு அதிகப்படுகின்றது. மாதந்தோறும் சிறு தொகையை வீணுகச் செலவுசெய்தாலும் வருடக் கடைசியில் அது பெருந்தொகையாய் விடுகின்றதே! "அதிகச் செலவு துன்பத்திற்கு வழி" என்பது ஓர் ஆங்கிலப் பழமொழியாகும். அது என்றைக்கும் உண்மை தானே! இதைக் கவனிக்கின்றவர்கள் நன்மை அடை கிறுர்கள்; கவனியாதவர்கள் துன்பமடைகின்றுர்கள்: அற்பமென்று எதையும் ஒதுக்கிவிடாமல் கவனிக் கின்றவர்களே சிறப்படைகின்றுர்கள்" என்று 'வில்லியம் மாத்தியூஸ்' என்பவர் உரைக்கின்றுர்.

"சென்னை உயர்தர நீதிமன்றத்திலே நீதிபதியாய் இருந்து பேர் பெற்றவரான திருவாரூர் சர். முத்துசாமி ஐய ரவர்கள் தாம் நீதிபதியாய் இருந்து பெரும் பொருள் சம்பள மாகப் பெற்றபோதும் சிக்கனக்காரராகவே வாழ்ந்து வந்தார். அதனுல், அவரை அண்டியவர்களுக்கு அவரால் எப்போதும் உதவிசெய்ய முடிந்தது" என்று பரமேஸ்வரன் பிள்ளை என்பவர் கூறுகின்றுர். சிக்கனக் காரர்கள் எந்தச் செலவையும் கவனித்தே செய்வார்கள். சர். பி. எஸ்.

சிவசாமிஐயர் என்பவர் சிறந்த பேரறிஞர். அவர் பெயரால் திருக்காட்டுப் பள்ளியில் ஓர் உயர்நிலைப் பள்ளி நடை பெறுகின்றது. ஒருசமயம் ஐயரவர்களிடம் ஆறும் படி வத்தில் படிக்கும் மாணவன் ஒருவன் சென்று, "நான் எளியவன்; படிப்பதற்குக் கையில் பொருள் இல்லை. தாங்கள் உதவி செய்ய வேண்டும்" என்று கேட்டான். உடனே ஐயரவர்கள், "படித்து விட்டு நீ என்ன செய்யப் போகிறாய?" என்று கேட்டார். அதற்கு அந்த மாணவன் "இன்னும் அதைப்பற்றி நான் ஒன்றும் நினைக்க வில்லை" என்றான். உடனே அவர், "அதைப் பற்றி நினைத்துக் கொண்டு வா. பிறகு பொருளுதவி செய்கிறேன்" என்றார். மாணவன் சென்று விட்டான்.

மேற் கூறியவாறு ஐயரவர்கள் சொல்லியதற்குக் காரணம் என்ன? யார் எதைச் செய்தாலும் அதற்கு ஒரு நோக்கம் இருக்கவேண்டும். ஒரு நோக்கமும் இல்லாமல் செய்யப்படும் வேலைக்கு உதவப்படும் பொருள் பெரும் பாலும் வீணாகும் என்பதுதான் ஐயரவர்களின் கருத்தாகும்.

"பணக்காரர்களானவர்களில் பலர் இப்படித்தான் நினைத்துநினைத்து எதையும் செய்திருக்கிறார்கள். அவர்க ளிடத்தில்தான் பொருள் சேரும். வருமானத்தில் சிறி தேனும் மிச்சம் வைக்காதவர்கள் ஒருபோதும் சிறப் படைய மாட்டார்கள். பணம் கும்பல் கும்பலாக ஆகாயத் தில் இருந்து குதித்துவிடாது. சிறுகச் சிறுகச் சேர்க்கப்படு கின்ற பணந்தான் பெருந்தொகை ஆகின்றது. ஊதாரி களால் வீணாக்கப்படும் இந்தச் சிறு தொகை சிக்கனக்காரர் களால் சேர்த்து வைக்கப்படுகின்றது. அவசியமான செல வில்லாதபோது சேர்த்து வைக்க வேண்டிய பணத்தை ஊதாரிகள், "இதனால் என்ன பயன்?" என்று அவசிய மில்லாத வழிகளில் செலவு செய்து விடுகிறார்கள். "இதனால் என்ன நன்மை உண்டாகப் போகின்றது" என்று நாம்

அலட்சியமாக நினைக்கும் சிறு தொகையைச் சேர்த்து வைத்தால் அது பெருந்தொகை ஆகுமே! ஒவ்வொரு கல்லாக அடுக்கி வைத்துதானே பெரிய பெரிய மாளிகைகள் கட்டப்படுகின்றன!

மழைக் காலத்திற்கு வேண்டுமே என்று எறும்புகள் வெயிற்காலத்திலே உணவுப் பொருளைத் தேடிவைக்கின்றன. மனிதர்களில் பலர் 'ஆபத்துவந்தால் பொருள் வேண்டுமே' யென்றுகூடப் பொருளைச் சேர்த்து வைப்பதில்லையே! நமது கையில் பொருள் இருக்க வேண்டும். நமது கையில் பொருள் இல்லாதபோது நமக்கு ஓர் ஆபத்தான நிலை ஏற்பட்டால், நமக்குக் கொடுக்கக் கடமைபட்டவர்கூட நமக்குப் பணம் கொடுக்கமாட்டார். அனுபவம் உள்ளவர்களுக்கு இது தெரியும்.

கப்பல்வந்து தங்கும் துறைமுகத்தில் நாள் ஒன்றுக்கு நான்கு ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்கும் வண்டிக்காரன் ஒருவன், "இரண்டு நாளாக ஒரு கப்பலும் வரவில்லை; வேலை இல்லை; கையில் காசு இல்லை" என்று சொல்லியதை நான் கேட்டிருக்கின்றேன். நாள் ஒன்றுக்கு நான்கு ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிப்பவன் இரண்டு நாட்கள் வேலை இல்லாத காரணத்தால், 'கையில் பணம் இல்லை' என்று சொன்னால் அவனை 'ஊதாரி' என்றுதானே சொல்லவேண்டும்! அவனுக்கு நல் வாழ்க்கை வாழ வழி கிடைக்குமா? சேர்த்து வைக்கும் வழக்கம் அவனிடம் சிறிதும் இல்லையே!

'மார்ஷால் பீல்டு' என்னும் இளைஞர் ஒருவர் அமெரிக்காவிலுள்ள நியூ இங்கிலாந்திலிருந்து 'சிகாகோ' நகரத்துக்குப் பிழைக்கச் சென்றார். அங்கே "கோலி பார்வெல் அண்டு கம்பெனி"யில் அவருக்கு வேலை கிடைத்தது. அவர் படிப்படியாக வேலையில் உயர்த்தப்பட்டார். அவருக்கு முன்னால் இருந்தவர்களெல்லோரும் அவருக்

குப் பின்னுல் தள்ளப்பட்டார்கள். காரணம் கேட்ட போது, "அவர் சிக்கனக்காரர். ஒருவருக்கும் கெடுதல் செய்யாமலே கம்பெனிக்கு இலாபம் காட்ட அவரால் முடிகிறது. அதுவரையில் யாரும் கண்டறியாத கம்பெனியின் வீண் செலவுகளை யெல்லாம் அவர் கண்டறிந்து கம்பெனிக்கு நன்மை செய்கிருர். அவர் பேராசை இல்லாதவர். தாம் சம்பாதித்த பொருளைச் சிக்கனத்துடன் சேர்த்து வைத்திருக்கிருர். அவருக்குப் பணமுடை என்பதே இல்லை. பணமுடையும், பேராசையும் இல்லாதவர்களைப் பெரும்பாலும் பொறுப்புள்ள வேலைகளில் நம்பி வைக்கலாம். இவைகளே மார்ஷல் பீல்டு உயர்த்தபட்டமைக்குக் காரணம்" என்று கம்பெனியின் தலைவர் கூறினுர்.

பத்திரிகை ஆசிரியர், அரசியல் நிபுணர், விஞ்ஞானி, கல்விமான் என்றெல்லாம் புகழப் பெறும் "பெஞ்சமின் பிராங்க்ளின்" என்பவர் கூறுவதைக் கவனியுங்கள்: "நீங்கள் சம்பாதிப்பதைவிடக் குறைவாகச் செலவு செய்வீர்களானுல் பிறகு நீங்கள் நினைத்ததைச் செய்யக் கூடிய சக்தி உங்களுக்கு உண்டாகும். சம்பாதிப்பதற்கு உழைப்பு வேண்டும்; ஒழுங்கும் வேண்டும். நாலணு வருமானத்தில் காலணு மிச்சப்படுத்துவதானுலும் அதுவும் மிச்சந்தான். அந்தப் பழக்கம் உள்ளவர்களின் பணப் பை நிறைந்து கொண்டே இருக்கும். அவர்களைக் கடன்காரர்களால் அவமானப் படுத்தமுடியாது. பசி அவர்களைத் துன்பப் படுத்தாது. அவர்கள் அழுக்கடைந்த ஆடைகளுடன் இருக்க மாட்டார்கள்"

பார்த்தீர்களா பெஞ்சமின் பிராங்க்ளின் சொல்வதை!

பெஞ்சமின் பிராங்க்ளின் ஒரு சாதாரணக் குடும்பத்தில் தம் தாயாருக்குப் பதினேந்தாவது பிள்ளையாகப் பிறந்தவர். தம் வாழ்க்கையைச் சாதாரண நிலையில்தான் தொடங்கினுர். அச்சுக்கூடத்தில் வேலை செய்தார்; புத்தகக் கடை

வைத்தார்; பத்திரிகை நடத்தினார்; தம்முடைய சொந்த முயற்சியினால் விஞ்ஞானி என்று பேர்பெற்றார்; எல்லோராலும் கல்விமான் என்று மதிக்கப்பட்டார்; அரசாங்கத் தூதராக அயல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டார். அவர் தம் காலமெல்லாம் சிக்கனத்துடன் வாழ்ந்தார். அவர், தம் பொருளைமட்டுமல்ல; காலத்தையும் சிக்கனத்துடன் கழித்தார். "அவரைத் தங்களுக்குத் தெரியும்'' என்ற காரணத்தினாலேயே பலர் பெருமை பெற்றனர். பிற்காலத்தில் அவர் தாம் சிக்கனத்துடன் சேர்த்த பொருளைப் பல நல்ல வழிகளில் செலவு செய்தார். அவருடைய சிக்கன வாழ்க்கை மக்களுக்கு ஒரு முன்மாதிரியாய் விளங்குகின்றது. சிக்கனத்துடன் வாழ்க்கையை நடத்திய பெஞ்சமின் பிராங்க்ளினை ஆரம்பத்தில் பலர் கேலி செய்தார்கள்; அவர் உயர்வடைந்த பிறகு அவர்களே அவரைப் புகழ்ந்தார்கள். இப்போதும் சிக்கனக்காரர்கள் கேலி செய்யப்படலாம். சிக்கனக்காரர்களிடம் பொருள் சேர்ந்த பிறகு கேலிசெய்தவர்களே அவர்களிடம் கடன் கேட்க வருவார்கள். இதுதான் சாதாரண மனிதர்களின் தன்மை!

கையில் பொருள் இல்லாதவர்கள் ஒருவேலையைச் செய்ய வேண்டுமானால் பொருள் உள்ளவர்களைத்தான் நாட வேண்டும். பொருள் உள்ளவர்கள் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டாலும் நடந்து கொள்ளலாம்; வேறு விதமாக நடந்தாலும் நடக்கலாம். பெரும்பாலும் கையில் பொருள் இல்லாதவர்கள் சில சமயங்களில் தாங்கள் நினைப்பதைச் சொல்ல முடியாதவர்களாயும் சுதந்திரமற்றவர்களாயும் இருக்கின்றார்கள். ஆகவே. ஒவ்வொருவரும் பொருளைச் சேர்க்க முயற்சிக்க வேண்டும். கல்வி கற்றவர்களைப் பார்க்கிலும் கல்லாதவர்களே முக்கியமாகப் பொருளைச் சேர்க்க வேண்டும். பொருளில்லா விட்டால்

அவர்களால் என்ன செய்ய முடியும்! பணம் ஒன்றினு லேயே மதிக்கப் படுகின்றவர்கள் பணம் இல்லா விட்டால் என்ன செய்வார்கள் ? ஆகையால் கல்வி கற்ற வர்களைப் பார்க்கிலும் கல்லாதவர்களே மேலும் மேலும் பொருளைத் தேடவேண்டும். இதுவரையில் பொருளைப் பற்றிக் கவனியாதவர்கள் இனியாவது பொருளைத் தேட முயற்சிக்கவேண்டும். வயதானவர்கள் இந்த உபதேசத்தை ஏற்றுக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் வாலிபர்கள் இந்த உபதேசத்தைக் கட்டாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

'வில்லியம் எச். மேகர்' என்பவர் சொல்லுகிருர்: "ஒரு வாலிபன் ஆண்டு ஒன்றுக்கு தொள்ளாயிரம், டாலர் சம்பளமாகப் பெற்றுவந்தான். ஆனுலும் வருஷக் கடைசியில் அவன் கடன்காரனுகவே இருந்தான். ஒரு முறை வருஷக் கடைசியில் அவனுக்குத் திடீரென்று நல்லுணர்ச்சி தோன்றியது! அதன் பயனுக, "இந்த வருடம் வந்த பணத்தையெல்லாம் நாம் எப்படி எப்படிச் செலவு செய்தோம்" என்று அவன் சிந்தித்தான். பிறகு அவன் தன் வாழ்நாளிலேயே முதல் தடவையாகத் தான் செலவழித்த விதத்தையும், பணத்தையும் எழுதியும் கணக் குப்போட்டும் பார்த்தான். தான் தன் தாயாருக்கு அனுப்பியது, தன் சாப்பாட்டுக்காகவும் தங்குமிடத்திற் காகவும் கொடுத்தது, உடைகள் வாங்கியது ஆக எல்லாம் சேர்ந்து அறுநூறு டாலர்கள் அவன் கணக்கில் வந்தன. நினைத்து நினைத்துப் பார்த்தும் முந்நூறு டாலர்கள் கணக்கில் வரவில்லை. முக்கியமான செலவாய் இருந்தால்தானே நினைவில்வந்து கணக்கிலும் வரும்! எழுதாமல் மனம் போனபடி செய்த செலவாயிற்றே! எப்படி நினைவுக்கு வரும்! அந்த வாலிபனுக்கு மின்சாரம் தாக்கியது போன்ற ஓர் உணர்ச்சி தோன்றியது. உடனே அவன், "அடுத்த

ஆண்டு சம்பளத்தில் நூறு டாலர் அதிகமாகும்; ஆயிரம் டாலர் சம்பளம் பெறுவேன். இனி எப்படியாவது ஐந் நூறு டாலர் ஆண்டுதோறும் மிச்சம் பிடிப்பேன்" என்று தீர்மானித்தான். அப்பொழுதே அவன் பாங்கிக்குச் சென்று சேமிப்புக் கணக்கில் பத்து டாலரைத் தன் பெயரில் சேர்த்து அதற்காகக் கொடுக்கப்படும் புத்தகத்தை வாங்கிக் கொண்டு வந்தான். அன்றுமுதல் அவன் அடிக்கடி பாங்கியில் டணத்தைச் சேர்ப்பதைத் தவிர எடுப்பதே இல்லை. தன் பெயரில் பாங்கியில் பணம் வளர்ந்து கொண்டே வருவதைக்கண்டு அவன் மகிழ்ந்தான். வருஷக் கடைசியில் அவன் தீர்மானித்தபடியே பாங்கியில் ஐந்நூறு டாலர் அவன் கணக்கில் சேர்ந்திருந்தது. அவன் முன்போல் அடிக்கடி நாடகங்களுக்கோ, சினிமாக் களுக்கோ செல்வதில்லை. பணம் செலவாகக்கூடிய வழி களை அவன் நினைப்பதும் இல்லை. அதனால் அவன் மனத் தில் மகிழ்ச்சி பொங்கியது. பொதுப் புத்தகசாலைகளுக்குச் சென்று ஓய்வு நேரத்தில் பல புத்தகங்களைச் செலவில்லாமல் படித்தான். அதனால் அவன் அறிவு வளர்ந்தது; சம்பளம் உயர்ந்தது; பாங்கியில் பணம் பெருகியது; உடம்பும் நன்றாய் இருந்தது. தன்னிடம் பணம் வளர வளரத் தன்னைச் சுற்றிலும் இருப்பவர்கள் தன்னிடம் அதிக மரியாதையுடன் நடப்பதை அவன் கவனித்தான்!"

இவ்வாறு வில்லியம் எச். மேகர் என்பவர் சொல்வதை வாலிபர்கள் கவனித்து நடந்தால் அவர் களுக்கும் நாட்டுக்கும் நன்மை உண்டாகும்.

பொருளாதாரத்தைப்பற்றி எழுதுகிற ஒருவர் எழுதும் உயர்ந்த செய்தியைக் கவனியுங்கள். "பணத்தைச்சேர்க்க முடியாத காலத்திலும் சிக்கனக்காரர்கள் பணத்தைச் சேர்க்கிறார்கள். ஊதாரிகளோ எல்லோரும் பணத்தைச் சேர்க்கும்போதும் தாங்கள் அவர்களைப் பார்த்துக்

கொண்டே தங்கள் கையில் இருப்பதையும் செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். சிக்கனக்காரர்களால்தான் அவர்கள் இருக்கும் வீடும் நாடும் நன்மைபெறும்''

இந்த வார்த்தைகளைப் பாருங்கள்! எவ்வளவு சிறந்த கருத்து உள்ளவைகளாய் இருக்கின்றன!

இந்தியாவில் கவர்னர்ஜெனரல் பதவியிலிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவரைப்பற்றிப் பள்ளிக்கூடத்தில் படித்த எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம். அவருடைய முன்னோர்கள் ஜமீன்தாரர்களாய் இருந்தார்கள். இருந்தாலும் அளவு கடந்து செலவுசெய்த காரணத்தினால், ஹேஸ்டிங்ஸ் பிறந்தபோது, அவர் குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்தது. ஹேஸ்டிங்ஸ் பள்ளியில் படித்தபோது அவருடைய உபாத்தியாயர் அவரையும் வேறுசில சிறுவர்களையும் அழைத்துக்கொண்டு ஒரு கிராமத்திற்கு உல்லாசப் பிரயாணம் சென்றார். அந்தக் கிராமத்தில் உலவியபடியே அந்தக் கிராமத்தின் அற்புதமான இயற்கைக் காட்சிகளை ஆசிரியரும் மாணவரும் கண்டு களித்துக்கொண்டிருந்தனர். "இந்தக் கிராமம் சிறந்த அழகுடன் விளங்குகின்றது" என்றார் ஹேஸ்டிங்ஸ். உடனே ஆசிரியர் அவரை நோக்கி, "ஒருகாலத்தில் இந்தக் கிராமம் உன்னுடைய முன்னோர்களுடையதாய் இருந்தது. அதிக செலவு காரணமாகக் கடன்பட்ட உன் பாட்டனார் இதைத் தமக்குக் கடன் கொடுத்தவருக்கு விற்றுவிட்டார்!" என்று சொன்னார்.

"என் பாட்டனார் விற்றுவிட்ட இந்தக் கிராமத்தை நான் வாங்கினால் நன்றாய் இருக்கும்," என்று உறுதியுடன் கூறினார் ஹேஸ்டிங்ஸ்.

அவர் உறுதியைக் கண்ட ஆசிரியர் அவரை நோக்கி, "நீ நன்றாய் படித்து, உறுதியுடன், உழைத்துச் சிக்கனத்துடன் பொருளைச் சேர்த்தால் இதை

வாங்கலாம். இதை உன் பாட்டனுரிடமிருந்து வாங்கியவர் இறந்துவிட்டார். அவருடைய பிள்ளை செலவாளியாய் இருக்கின்ருன். ஆகவே, நீ நன்ருகப் படித்துப் பெரிய உத்தியோகத்தைப் பெற்றுப் பொருளைச் சேர்த்தால் இந்தக் கிராமத்தை வாங்குவதற்கு உனக்குச் சந்தர்ப்பங் கிடைக்கலாம்" என்ருர்.

ஹேஸ்டிங்கிஸ் அந்தக் கிராமத்தை வாங்கியே தீர வேண்டுமென்று தீர்மானித்தார்; இரவும் பகலும் படித்தார்; ஒவ்வொரு பரீட்சையிலும் தேறினுர். பிறகு வாழ்க்கையில் படிப்படியாக உயர்ந்து கடைசியில் இந்தியாவின் கவர்னர் ஜெனரலானுர்! கிடைத்த பொருளை யெல்லாம் சிக்கனமாகச் சேர்த்தார்; தாம் எண்ணியபடியே தம்முன்னேர் விற்ற கிராமத்தை விலைக்கு வாங்கினுர்; பிறகு அவர் வாழ்க்கை பலவிதமாக மாறுகிறது. அது நமக்குத் தேவை இல்லை. சிக்கனத்துடன் பொருளைச் சேர்த்து ஹேஸ்டிங்ஸ் தாம் நினைத்ததைச் செய்து முடித்தார் என்பதே நமக்குத் தேவை!

".யூத்ஸ் கம்பானியன்" என்னும் பத்திரிகையில் ஒருவர் பின்வருமாறு எழுதுகிருர்:

"எனக்கு ஒரு கைக்கடிகாரம் தேவையாய் இருந்தது. அதற்காகத் தனியே பணத்தை எடுத்துச் செலவிட எனக்கு மனம் வரவில்லை. என்னுடைய தொழிற்சாலைக்கு வாடகை வண்டியில் போய் வருவதை நிறுத்தினேன்; நடந்து சென்றேன்; நடந்து வந்தேன்; ஹோட்டலில் சாப்பிடுவதை நிறுத்தினேன். ஒரு வருடத்தில் வேண்டிய பணம் சேர்ந்தது. கடிகாரம் வாங்கிவிட்டேன். கட்டாயத்தின்மீது ஏற்பட்ட சிக்கனம் இப்போது பழக்கமாய் விட்டது! மேலும் பொருள் சேருகின்றது."

இதைப் படிப்பவர்களுக்கு இப்படி நடப்பது கடினமாகத் தோன்றும்; எனக்கும் அப்படித்தான் தோன்றியது.

ஆனால், 'நம்மால் முடியாதது' என்று நாம் நினைப்பதைப் பலர் செய்கின்றார்கள் என்பதை மட்டுமாவது நாம் கவனிக்க வேண்டும்.

வாழ்வதற்கு வழி

10

மழைக்காலத்திற்கு வேண்டுமே என்று எறும்புகள் வெயிற் காலத்திலேயே இரையைத்தேடி வைக்கின்றன; ஆனால், வெட்டுக்கிளிகள் வெயிற்காலத்தில் ஆடி ஓடித் திரிந்துவிட்டு மழைக்காலத்தில் உணவின்றி மடிகின்றன!

மக்களில் பலர் இப்படித்தான் இருக்கின்றனர். இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஒவ்வொருவர் கையிலும் பணம் நடமாடியது. அதைச் சிலர் சேர்த்துப் பிடித்தனர். பலர் அதை மனம்போன வழியில் செல வழித்துவிட்டுச் சேர்த்து வைத்திருப்பவர்களைப் பார்த்து இப்போது பொருமைப்படுகின்றனர். பயன் என்ன? செலவாளி தனக்கு உதவி செய்கிறவனிடம் உள்ள செல்வத்தைப் பார்த்தாலும் பொருமைப்படுவான். சிக்கனக்காரன் பெரும்பாலும் பிறரைப் பார்த்துப் பொருமைப் படுவதில்லை. எந்தவிஷயத்திலும் செலவாளியை நம்புவதைவிடச் சிக்கனக்காரரை நாம் நம்பலாம். சிக்கனக்காரரால் தம் வார்த்தையைக் காப்பாற்றமுடியும். செலவாளியினால் பெரும்பாலும் தன் வார்த்தையைக் காப்பாற்ற முடிவதில்லை. செலவாளி பெரும்பாலும் பிறர் பொருளினால் வாழ்கின்றான்; ஆகவே, அவனால், தன் வாக்குறுதியைக் காப்பாற்றிக்கொள்ள முடிவதில்லை.

நமது நாட்டில், இன்று, நூறுபேரில் எழுபத்தைந்து பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் பெரும்பாலாரிடத்தில் பொருள் இல்லை. பொருளும் இல்லை; கல்வியும் இல்லை; என்றால் அவர்களிடம் மிச்சமாய் இருக்கக்கூடியது தரித்திரந்தானே!

இத்தகைய மக்கள் வாழும் நாட்டின் நிலை எப்படி இருக்கும்? எப்படி இருக்கும்! கையில் பொருள்உள்ளவர்களுக்குத்தான் மதிப்பு இருக்கும்! எழுபத்தைந்துபேர் கல்லாதவர்களென்றால், அவர்களால், கற்றவர்களுக்குப் பெருமை உண்டாகுமா? ஆகவே, மற்ற நாடுகளைப் பார்க்கிலும் நமது நாட்டில்தான் படித்தவர்களைப் பார்க்கிலும் பொருள் உள்ளவர்களுக்கே அதிக பெருமை கிடைக்கின்றது. "பணக்காரன் ஒழிக!" என்று சொல்லுகிறவர்களும் அந்தப் பணத்தைக் கொண்டுதான் வாழவேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். முதலாளிக்கும் தொழிலாளிக்கும் தேவையானது பணந்தான்! அந்தப் பணத்திற்காகத்தான் போராட்டம்! பணத்தின் சக்தி அப்படிப் பட்டது.

எத்தனையோ ஊதாரிகள் எதிர்காலத்தைக் கவனியாமலே பொருளைச் செலவழிக்கின்றார்கள்; பின்னால் துன்பப்படுகிறார்கள். ஊதாரிகள் செலவழிக்கும் பணத்தில் பெரும்பகுதி வீணான வழிகளிலேயே செலவாகின்றது.

> "அநாவசியமான வழிகளில் பொருளைச் செலவழிக்கின்றவர்கள் அவசியமான செலவுக்குப் பொருளில்லாமல் விழிக்கின்றார்கள்" என்று 'பிராங்க்ளின்' கூறுகின்றார்.

> "ஆடம்பரத்தை அடிப்படையாகக் கொண்ட உடைகளை அதிகமாக வாங்குகின்ற பழக்கம் உள்ளவர்கள் படிப்படியாகத் தங்களுடைய மகிழ்ச்சியையும் சுகத்தையும் இழந்துவிடுவார்கள். அவர்கள் பெட்டியில் பணம் குறைந்துவிடும். அவர்களுடைய உணவுப் பொருள் எப்போதும் குறைந்தே இருக்கும். அவர்கள் வீட்டில் அடுப்பு எரிய வேண்டியபோது எரியாது. உபசரிப்பும் அமைதியும் நிறைந்திருந்த அவர்கள்

வீட்டில் துன்பம் நிறைந்துவிடும்" என்று 'கௌப்பர்' என்பவர் கூறுகின்றார்.

எவ்வளவு உண்மையான உபதேசம் பாருங்கள்!

"உடைந்த அழகிய நிறமுள்ள கண்ணாடித் துண்டு ஒன்றைக் கண்டெடுத்த மாணவன் ஒருவன் அதை வீசி எறிந்துவிடாமல் அதைப்போன்ற அழகிய உடைந்த வேறு பல கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கி எடுத்து, அவைகளை எப்படி அமைத்தால் அவைகள் அழகுடன் தோன்றுமோ அப்படி அவைகளை அமைத்து, அவைகளால் ஒரு கண்ணாடி ஜன்னலைச் செய்து அதைத் தன் ஊரில் இருந்த ஒரு மாதாக் கோயிலில் வைத்தான். சிக்கனக் காரர்களின் தன்மை இப்படித்தான் இருக்கும்! ஊதாரி களோ நல்ல பொருளையும் வீணாக்கி விடுவார்கள்" என்று 'என். டி. இல்லிஸ்' என்பவர் கூறுகின்றார்.

சென்னையிலே, பல பணக்காரர்களிலே, ஒரு பணக் காரரைப்பற்றி இங்கே கவனிப்போம்: அவர் தம் முன் னோர் வைத்த பணத்தை முதலாகக் கொண்டு ஆறு இலட் சம் ரூபாய்கள் வரை சம்பாதித்தார். அவருக்கு ஒரே பிள்ளை; அருமையாகப் பிறந்தவன்! ஆகவே, ஆடம்பரமான வளர்ப்பு! தகப்பனார் இறந்தபோது பையனுக்கு வயது இருபது இருக்கும்! நண்பர்கள் சேர்ந்தார்கள்; புகழ்ந்தார் கள்; பணக்காரப் பையன் பணத்தை வாரி இறைத்தான்; புதுப்புது மாதிரியில், ஆறு மாதத்திற் கொருமுறை, ஒவ் வொரு "மோட்டார் கார்" வாங்குவான்; முன்னே இருந் ததைப் பாதி விலைக்கு விற்பான்! எவ்வளவோ அட்டகாசம். ஊரில் புது நாடகமென்றால் முதல் வரிசை யில் இவனும் இவன் நண்பர்களும் நிறைந்திருப்பார்கள். எல்லாம் இவன் பணந்தான்! வீட்டு வாடகைமட்டும் இவனுக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் வந்தது! இருந்தும் பயன் என்ன? ஓட்டைக் குடம்;

நிறைய தண்ணீர் ஊற்றினலும் எவ்வளவு நேரம் நிற்கும்! பணம் கரைந்தது; நண்பர்கள் மறைந்தார்கள். கடைசியில் கடன் பெருகியது. குடி இருந்த வீடும் போயிற்று! இப்போது அவன் இருக்கும் இடமே தெரிய வில்லை. ஆறு இலட்சம் ரூபாய்கள் ஏழு ஆண்டுகளில் இருந்த இடம் தெரியாதபடி மறைந்தன!

எவ்வளவுதான் செல்வம் இருந்தபோதிலும் சிக்கனத் துடன் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். சிக்கனத் துடன் செலவு செய்தால்கூட அந்தச் செலவும் வரவுக்கு மேற்பட்டதாய் இருந்தால் பெரும் பணக்காரர் குடும்பம் கூட வெகுகாலம் நிலைத்து நிற்காது.

'பவேரியா' நாட்டில் ஒரு பைத்தியக்கார அரசன் இருந்தான்! அவன் பைத்தியக்காரனே அல்லன்! ஆனல், அவன் செயல்கள் அவனைப் பைத்தியக்காரன் என்று சொல் லும்படி செய்தன! பணத்தின் அருமை தெரியாதபடி அவன் வளர்க்கப்பட்டவன்! "நான் சொல்லியதை நீ செய்; நீ கேட்பதை நான் கொடுத்து விடுகிறேன்" என்பது அவனுடைய சொந்த வாக்கியம். ஆபரணங் களைச் செய்கிறவருக்கும், அரண்மனையைக் கட்டுகிற வருக்கும், நந்தவனத்தை அமைப்பவருக்கும், இன்னும் தன் விருப்பப்படி நடப்பவருக்கும் ஒன்றுக்கு நூருகப் பொருளை அள்ளிக் கொடுப்பான்! அதனல் அவசியமான அரசாங்கச் செலவுக்குப் பொருள் குறைந்தது! மக்கள் அரசனை வெறுத்தார்கள்! 'பைத்தியக் காரன்' என்று அவனுக்குப் பெயரும் வைத்தார்கள்!

உலக மகா வீரர்களில் ஒருவர் என்று சொல்லப்படும் நெப்போலியன் என்பவர் அழகிலே சிறந்தவளாகிய 'ஜோஸபின்' என்பவளை மணந்து கொண்டார். நெப்போலியன் சிக்கனத்தில் கருத்துள்ளவர். அவர் மனைவி மகா செலவாளி! தன் தலைமயிரை வாரி ஒழுங்குபடுத்து

வதற்கு மட்டும் ஆண்டொன்றுக்குப் பதினுயிரம் ரூபாய் அளவுள்ள தன் நாட்டு நாணயங்களைச் செலவழித்து வந்தாள்! அவளுடைய மற்ற வீண் ஆடம்பரங்களுக்காக ஆண்டுதோறும் இலட்சக் கணக்கான ரூபாய்களை அவள் செலவிட்டாள். பிரான்ஸ் தேசத்திலிருந்த உயர்குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் அவள் ஆடம்பரத்தை உணர்ந்து அவளை வெறுத்தார்கள். நெப்போலியனுலும் இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே, அவர் 1810-ஆம் ஆண்டு, கலியாணம் செய்துகொண்ட நான்காம் ஆண்டின் முடிவில், அவளை விவாகரத்து செய்துவிட்டார். ஊதாரித்தனம் காரணமாக ஜோஸபின் ஒரு சிறந்த வீரரை இழந்தாள்! பெற்ற தாயும் செலவாளிகளை விரும்பமாட்டாளே!

"செலவு செய்தால் அந்தச் செலவு ஏழைகளின் பசியைப் போக்குவதற்காக, அறிவை வளர்ப்பதற்காக, நோயைநீக்குவதற்காகச்செய்யப்பட வேண்டும். பசித்தவர்களுக்கு உதவாமல் தான்மட்டும் அவர்களின் நடுவில் ஆடம்பரமாக வாழ்கின்றவன் பிசாசு போன்றவன்" என்பது ஆங்கில நூல் ஒன்றில் யான் கண்ட வாக்கியம்.

ஏழைகளை அடிமைகளாகக்கொண்டு அவர்களை மிருகங்களைப்போல நடத்தி அவர்கள் நடுவில் தாங்கள் மட்டும் ஆடம்பரமாக வாழ்ந்த பணக்காரர்களே ஐரோப்பிய நாடு முழுவதையும் அடக்கி ஆண்ட உரோமாபுரி அழிந்தமைக்குக் காரணம்! ஒரு காலத்தில் உரோமாபுரியில் ஏழைகளின் ஆகாரமாய் இருந்தது சோளம். அது பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்து தான் வரவேண்டும். வரவேண்டிய கப்பல் ஒருமுறை வரவில்லை. அதனுல் உணவுக்குச் சோளம் கிடைக்காமல் மக்கள் வாடினுர்கள்! அதே சமயத்தில் பணக்காரர்கள் பதினுயிரக் கணக்கில் பொருளைச் செலவிட்டு விருந்து

சாப்பிட்டுக் களித்தார்கள்! ஒரு பணக்காரன் தன் மகளின் கலியாண உடையை, வைரங்களைப் பதித்து, இருபது இலட்சம் ரூபாய்களைச் செலவிட்டுத் தயாரித்தானும்! கலியாண வைபவத்தில் வைரங்கள் பதிக்கப்பெற்ற பொன் பாத்திரங்களில் பலவகையான பானங்கள் வழங்கப் பட்டன! இப்படி ரோமர்கள் வாழ்ந்த ஊதாரி வாழ்க்கை யைப் பற்றிமட்டும் எழுதுவதென்ருல் அதுவே ஒரு புத்தகமாகும்.

இக்காலத்தில்கூடச் சில பணக்காரர்கள் தங்கள் வீட்டுக் கலியாணங்களில் செலவு செய்யும் பணத்தைக் கொண்டு பல ஏழைக் குடும்பங்களை, ஆயுள்வரையில், காப்பாற்றலாம்.

சில பணக்காரக் குடும்பங்களில் ஒரு குழந்தையின் ஆடம்பரத்திற்காகச் செலவிடப்படும் பொருளைக்கொண்டு நான்கு எளிய குடும்பங்களைக் காப்பாற்றலாம்!

ஒரு பொருளாதார நிபுணர் கூறுகின்ருர்: "பொருளைச் சேர்த்துவைப்பதைவிட ஊதாரிகளுக்குப் பொருளைச் செலவழிப்பதே சுலபமாய் இருக்கின்றது. ஆனுல், நாம் நமது சம்பாதனையில் சிறிதளவேனும் சேர்த்து வைப்ப தால்தான் நமக்கு மகிழ்ச்சி உண்டாகின்றது. எதிர் காலத்தைப்பற்றி நினையாமையாலும், தங்கள் தேவையைக் குறைத்துக் கொள்ளாமையினுலும், மனம்போன வழிகளி லெல்லாம் செலவிடுவதாலும் நல்ல வருமானமுள்ள வர்களிடத்திலும் வருடக் கடைசியில் பொருள் மிச்சமாய் இருப்பதில்லை. நிரந்தரமான வருமானம் இல்லாதவர்கள் வருமானம் வரும்போது 'நாளைக்கு வேண்டுமே' என்று சேர்த்து வைக்க வேண்டும். மாதா மாதம் சம்பளம் வாங்குகிறவர்களில்கூடப் பலர் வாங்கிய சம்பளத்தை, உடனே, அல்லது சில தினங்களுக்குள் செலவழித்து விட்டுக் குடும்பத்தைத் திண்டாடவிடுகின்றனர். மக்கள்

தொகையில் பாதிப்பேர் இப்படித்தான் நடக்கின்றனர். மக்களில் சிறு தொகையினரே வருமானத்திற் கேற்றபடி வாழ்க்கையை நடத்துகின்றார்கள். அவர்களே பணத்தைச் செலவழிக்கத் தெரிந்தவர்கள். வருமானத்திற்கு ஏற்றபடி செலவிடத் தெரிந்தவர்களுக்கே வருமானத்தில் மிச்சம் பிடிக்கவும் தெரியும். இவர்களால் திடீரென்று ஏற்படக் கூடிய பணமுடையையும் சமாளிக்கமுடியும். இப்படிப் பட்டவர்களுக்குத்தான் அவசியமான செலவிலிருந்து அநாவசியமான செலவைப் பிரித்துத் தள்ளத் தெரியும்.''

இவ்வாறு அந்தப் பொருளாதார நிபுணர் கூறுவதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும். ''மக்களில் பெரும்பகுதியினர் தாங்கள் நினைத்த வழியில் பணத்தைச் செலவிடப் பழகி இருக்கின்றனர். ஒரு சிறிய வீட்டில் வாழக்கூடியவர்கள் ஆடம்பரத்திற்காக ஒரு பெரிய வீட்டில் சென்று வசிப்பதும், பணம் இருப்பதால், பிறகு அங்கிருந்து ஒரு ''பங்களா''வுக்குச் சென்று வாழ்வதும் வீண் செலவுக்கு இடமாகும். அவசிய முள்ளவர்கள் பெரிய வீடுகளிலோ பங்களாக்களிலோவாழட்டும். அவசிய மில்லாதவர்கள் பங்களாக்களில் வாழ்ந்து பணத்தை எதற்காக வீணுக்க வேண்டும்! அந்தப் பணத்தைச் சிறிய வீடுகளில் வாழ்ந்து சேர்த்துப்பிடித்தால் எவ்வளவோ நன்மை உண்டாகுமே! இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதம் உபயோகப்படக்கூடிய சட்டையையும் வேஷ்டியையும் அதற்குள் எதற்காக வீசி எறிந்துவிட வேண்டும்? மாலை நேரத்தில் ஒரு மைல் அல்லது இரண்டுமைல் தூரம் நடந்தால் உடம்புக்கு நல்லதாயிற்றே! ஏன் வண்டிகளில் சென்று காசைச் செலவு செய்யவேண்டும்? மாலை நேரத்தில் வீட்டில் உள்ளவர்களுடன் பேசி மகிழ்வதாலும், குழந்தைகளிருந்தால் அவைகளுடன் விளையாடுவதாலும், படிப்பதாலும், நல்ல காற்றில் உலவுவதாலும் நன்மை

உண்டாகுமே! இதை விடுத்து அந்த நேரத்தில் சினிமா முதலிய காட்சிகளில் தங்கிப் பொருளை இழந்து தொற்று நோயையும் சம்பாதித்துக் கொண்டு ஏன் வர வேண்டும்? இதையெல்லாம் கவனிக்கின்றவர்களால்தான் பணத்தை மிச்சப்படுத்த முடியும்! இவற்றையெல்லாம் கவனியாமையினால்தான் இலட்சக்கணக்கில் மக்கள் ஏழைகளாய் இருக்கின்றனர். ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கின்ற ஊதாரிகளைப் பார்க்கிலும் நூற்றுக் கணக்கில் சம்பாதிக்கின்ற சிக்கனக்காரர்களே மகிழ்ச்சி உள்ளவர்களாய் இருக்கின்றனர். பணம் குறையும்போது நாம் எவ்வளவு எச்சரிக்கையுடன் இருக்கின்றோமோ அதைப் பார்க்கிலும் அதிக எச்சரிக்கையுடன் பணம் வரும்போது இருக்கவேண்டும். அவிழ்த்து விடப் பெற்ற நாயின் மனம்போல பணம் வரும்போது நமது மனம் பலவிதமாகச் செல்லும். அதிலும் திடீரென்று பணம் வந்தால் பலருக்கு மனம் ஒருவழியில் நில்லாது. எப்படி எப்படியோ பொருளைச் செலவழிக்கத் தோன்றும். அப்போதெல்லாம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பணம் வந்த வழியே சென்றுவிடும். இதற்கு உதாரணமாக எனக்குத் தெரிந்த ஒரு பணக்காரர் கெட்டுப்போன விதத்தைக் கேளுங்கள்: அவர் தமக்குச் சொந்தமான ஒரு சிறு வீட்டில் வாழ்ந்து வந்தார். உறவினர் ஒருவர் வீட்டில் இருந்ததைப் போன்ற உயர்தரமான "சோபா" ஒன்றைத் தம் மனைவியின் விருப்பப்படி வாங்கித் தம் வீட்டின் முன்புறத்திலிருந்த நண்பர்களை வரவேற்குமிடத்தில் அமைத்தார். அந்தச் சோபாவில் பல பேர் உட்கார இடமில்லை. ஆதலால் அதற்குப் பொருத்தமான நாற்காலிகளை வாங்கி அதற்கு முன்னால் அமைத்தார். இவைகளுக்கிடையில் ஒரு மேஜையும் தேவையாய் இருந்தது. ஆகவே, உயர்தரமான நாற்காலிகள், சோபா: இவை

களுக்கேற்ற உயர்தரமான மேஜை ஒன்றையும் அவர் வாங்கினார். இவைகள் எல்லாம் அந்தப் பழைய சிறிய வீட்டில் இருப்பது இவைகளின் பெருமைக்கு ஏற்றதாக இல்லை. ஆகவே அவர், தம் மனைவியின் விருப்பப்படி, பக்கத்தில் இருந்த ஒரு நிலத்தை விலைக்குவாங்கி அதைச் சுற்றிச் சுவர் அமைத்து இடையிலே ஒரு சிறிய "பங்களா" வைக் கட்டினார்; தோட்டம் அமைத்தார்; பல மின்சார விளக்குகளைப் பொருந்தச் செய்தார். தோட்டக்காரன் ஏற் பட்டான்! தோட்டத்திற்குத் தண்ணீர் வேண்டுமே! அதற்காக ஒரு கிணறு வெட்டப்பட்டது! பலவிதச் செடி கொடிகள் மரங்கள் தோட்டத்தில் வளர்ந்தன! பிறகு, "ஒரு மோட்டார்கார் இருந்தால் நன்றாய் இருக் குமே" என்ற எண்ணம் ஏற்பட்டது! 'கார்' வாங்கி ஆயிற்று! அது இருப்பதற்காக ஒரு கட்டடமும் கட்டப் பட்டது! இந்த நிலையில் அந்த நண்பர் கையிலிருந்த "ரொக்க"ப் பணம் முழுவதும் கரைந்துவிட்டது. அப் போது அந்த நண்பர், தம்முடைய பெண்ணுக்குக் கலியா ணம் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர் மனைவிக்கு அவர்கள் நிலைமை மிகமிக உயர்ந்துவிட்டதாக எண்ணம். ஆகவே, அவர்களின் உயர்ந்த நிலைக்கு ஏற்றபடி மாப்பிள்ளை தேடினார்கள்! பிள்ளை கிடைத்தான். அவன் டாக்டர் பரீட்சையில் தேறியவன். எம்.பி.,பி.எஸ்! அவன் தனக்கு ரொக்கமாக ஐயாயிரம் ரூபா வேண்டு மென்று சொன்னான்; வெள்ளிப் பாத்திரங்கள் நிரம்ப வேண்டுமென்றான்! 'மேற்கொண்டு உங்கள் விருப்பம் போல் உங்கள் மகளுக்கு நகைபோட்டுக் கலியாணத்தை நடத்தலாம்' என்றான். 'இந்த மாப்பிள்ளையை விடக் கூடாது! பணத்தைப் பார்க்காதீர்கள்' என்று தம்முடைய மனைவி சொல்லிய வார்த்தையை என் நண்பரால் தள்ள முடியவில்லை. கடன் வாங்கப் பெற்று எல்லாம் நடை

பெற்றது. பதினையாயிரம் ரூபாய் கடனுடன் கலியாணம் நிறைவேறியது! இப்போது வாங்கிய கடனைக் கொடுக்க அவர்களால் முடியவில்லை. "அவசியமில்லாத "சோபா" தங்களை இந்த நிலையில் கொண்டுவந்து நிறுத்திவிட்டது!" என்பதை இப்போதுதான் அந்த நண்பரும் அவர் மனைவியும் நினைத்து நினைத்து வருத்தப்படுகிறார்கள். ஏன் வருத்தப் படுகிறார்கள்! நண்பரின் வியாபாரம் கெட்டுவிட்டது! அதில் நஷ்டம்! கடன்! எல்லாக் கடன்களும் சேர்ந்து புது வீடு, பழைய வீடு இரண்டையும் விழுங்கிவிட்டன! இப்போது நண்பர் வாடகை வீட்டில் குடி இருக்கின்றார்! அந்த வீட்டுக்குச் செல்வது தன் பெருமைக்குக் குறை வாகும் என்று மருமகன் வருவதே இல்லை! இவ்வள வுக்கும் காரணம் அந்தச் "சோபா"தான்!

ஒரு குடிசையில் வாழ்ந்த சங்யாசியின் கோவணத்தை எலி கடித்தது! அதைப் பிடிப்பதற்குச் சங்யாசி ஒரு பூனையைவளர்த்தார். பூனைக்குப் பால்வேண்டுமே! அதற் காக அவர் ஒரு பசுவை வாங்கினார்! அதை மேய்க்க ஒரு வாலிபனை அமர்த்தினார். அவன் கலியாணம் செய்து கொண்டான்! பூனை, பசு, வாலிபன், அவன் மனைவி ஆகியவர்களைச் சங்நியாசி காப்பாற்ற வேண்டியவரானார். உலகத்தை வெறுத்துக் குடிசையில் இருந்த சங்யாசிக்குக் கோவணத்தினால் கவலை வளர்ந்தது! இது கதை! ஆனால் நான் மேலே கூறிய "சோபா" செய்தி உண்மையானது! கதையல்ல!

எப்போதும் சிக்கனக்காரர்களும் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். கொஞ்சம் ஏமாந்தால் மனம் பல வீண் வழிகளில் இழுத்துச் சென்று கெடுத்து விடும்.

பணத்தின் சக்தி எத்தகையதென்பதை ஒவ்வொரு வரும் உணர்ந்து காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும். காற்று, தூற்றுவதற்கு ஏற்றபடி, எப்போதும்

அடித்துக் கொண்டிருக்காது. ஆனால், நம்மிடத்தில் வருகின்ற பணம் கூடியவரையில் நல்லவழியில் வந்ததாக இருக்கவேண்டும். நல்லவழியில் சம்பாதிக்கப் பெற்ற பணத்தினால் மனத்திற்கு இன்பம் உண்டாகும். பெரும்பாலும் சிக்கனக்காரர்கள் நல்ல வழியிலேயே பொருளைத் தேட முயற்சிக்கின்றனர்! ஊதாரிகள் தங்கள் செலவுக்கு எந்த வழியிலாவது பணம் வந்தால் போதும் என்று நினைக்கிறார்கள்!

பெரும்பாலும் ஆடம்பரத்தின்மீது ஏற்படும் ஆசையே மக்களைச் செலவாளிகளாக்குகின்றன! தற்கால நமது ஆடம்பர வாழ்க்கைக்கு, 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14 ஆம் தேதி வரையில், நம் நாட்டை ஆண்டு கொண்டிருந்த ஆங்கிலேயர்களே ஓர் அளவுக்குக் காரண கர்த்தர்களாவர் என்று சொல்லலாம்! ஆங்கிலேயர் அயல் நாட்டார். ஆடம்பரத்துடன் வாழ்ந்தால்தான் இங்குத் தங்களுக்கு மதிப்பேற்படுமென்று அவர்கள் இங்கே ஆடம்பரத்துடன் வாழ்ந்தார்கள்! அன்றியும் அவர்கள் செலவழித்த பணம் அவர்களுடையதன்று; நம்முடையது! தாங்கள் வருந்தி உழைத்துத் தேடிய பணமாய் இருந்தால்தானே அவர்களுக்குத் துன்பம் தெரியும்! அந்த ஆங்கிலேயரின் ஆடம்பர வாழ்க்கைமுறை இன்று கூட நம்மில் பலரிடம் இருக்கின்றது! அதே ஆங்கிலேயர்கள் தங்கள் சொந்த நாட்டில் சிக்கனத்துடன்தான் வாழ்கின்றார்கள்! இது நம்மில் பலருக்குத் தெரியாது.

நமது நாட்டில் கையில் பணம் இருந்தால் போதும். உடனே ஆடம்பரம் தலைதூக்கும். சென்னையில் ஒரு தொழிலகச் சொந்தக்காரர் இருக்கின்றார்! அவர் வீட்டிற்கும் அச்சுக்கூடத்திற்கும் சிறிது தூரமே இருக்கும். ஆனாலும், அவர், வீட்டிலிருந்து அச்சுக்கூடத் திற்கும், அச்சுக்கூடத்திலிருந்து வீட்டிற்கும் மோட்டார்

வண்டியில்தான் செல்வார்! இவர் கிழவரா? அல்லர், வாலிபர்! இவர் செய்கையை ஆடம்பரமானதென்று சொல்வதா? அவசியமானதென்று சொல்வதா? இது நிற்கட்டும். இனி வேறு ஒன்றைக் கவனிப்போம்:

"அவனிடத்தில் போதுமான கல்வி அறிவில்லை. ஆனால், பணம் அகப்பட்டால் காலணாவும் செலவு செய்யாமல் முடிந்துகொள்ளுவான்" என்றார் ஒருவர்!

"போதுமே! பணம் சேர்ந்தவுடன் கல்வி அறிவுள்ளவனும் அவனைச் சுற்றுவானே!" என்றார் வேறொருவர்!

இந்த வார்த்தை உண்மைதானே?

பேர்பெற்ற ஆங்கில எழுத்தாளராகிய தாமஸ் கார்லைல் என்பவர் மிகவும் சிக்கனத்துடன் வாழ்ந்தவராவர். அவர் மனைவியாரும் சிக்கனத் தன்மையில் அவரைப் போன்றவரே! கார்லைல் எந்தக் காகிதம் விலை குறைவாகக் கிடைக்கின்றதோ, அந்தக் காகிதத்தைத்தான் வாங்கி அதில் எழுதுவார். சட்டைத்துணி அழகுடன் இருக்க வேண்டுமென்பதில்லை. உறுதியுடன் விலை குறைந்திருந்தால் போதும்! சட்டை, அழகு பொருந்தத் தைக்கப்பட வேண்டுமென்று அவர் நினைப்பதே இல்லை! தையல் உறுதியாகவும் கூலி குறைவாகவும் இருந்தால் போதும்! இப்படி ஒவ்வொரு வகையிலும் அவர் சிக்கனத்துடன் நடந்து தம்பிமார்கள் எல்லோரையும்காப்பாற்றிக் கல்விகற்பித்து அவர்களை மனிதர்களாக்கினார்! அவர் மனைவி ஒரு பசுவை வளர்த்து அதன் பாலைவிற்று அதனால் தமக்கு வேண்டிய செலவைக் கவனித்துக் கொண்டார்; அதில் மிச்சமும் வைத்தார். ஏழைக் கல்தச்சரின் மகனாகப் பிறந்த கார்லைல் கல்வி கற்றுச் சிறந்த எழுத்தாளரென்று பேர்பெற்றாலும் தம்முடைய சிக்கனம் காரணமாகவே அவர் பிறர் தயையை எதிர்பாராமல் வாழ்ந்தார்! பிறர் தயையை எதிர்பாராமல் வாழ்வதற்குப் பெரும்பாலும் சிக்கனக்காரர்களால்தான் முடியும்.

வாழ்வதற்கு வழி

11

"உலகத்திலுள்ள பொருளை யெல்லாம் திரட்டி அவற்றை எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டுக்கொடுத்து விட்டால் உலகத்தில் துன்பமே இராது; எல்லோரும் இன்பத்துடன் வாழ்வார்கள்" என்று ஒரு ஊதாரி சொன்னான்.

அதைக்கேட்ட ஒருவர் அவனைப்பார்த்து, "அப்படிச் செய்யலாம். ஆனால், மறுபடியும் உன்னைப்போன்ற செல வாளிகள் காலணாவும் கையில் மிச்சமில்லாதபடி செலவு செய்துவிடுவார்களே!" என்றார்.

உடனே அந்த ஊதாரி, "செலவு செய்துவிட்டால் என்ன! மறுபடியும் எல்லோருக்கும் சமமாகப் பணத் தைப் பிரித்துவிடலாமே!" என்றான்.

இப்படித்தான் அநேகர் பணம் ஏற்பட்டதற்குரிய காரணம் தெரியாமலே பேசுகிறார்கள். ஒரு காலத்தில் மக்கள் வேலை செய்தோ தங்களிடமுள்ள பொருளைக் கொடுத்தோ அதற்கு ஈடாக மற்றவர்களிடம் இருக்கும், தங்களுக்குத் தேவையான, பண்டங்களைப் பெற்று வாழ்ந்து வந்தார்கள். இந்த முறை ஒருவகையில் துன்ப மாய்த்தான் இருந்தது! பிறகு நாட்டில் அறிவாளர்கள் பணப் புழக்கத்தை ஏற்படுத்தினார்கள்! அப்போதே அவர் களில் பலர், "கையில் பொருளிருக்கும் காரணத்தினால், அதைக்கொண்டு, தங்களுக்கு வேண்டிய பொருள்களை, அவசியமான தேவைக்குமேல், ஒருவரும் வாங்கக்கூடாது. அப்படிப் பலபேர் வாங்கினால் பொருளின் விலை உயரும்; அதனால் கைநிறையப் பொருள் இல்லாதவர்கள் துன்பப்

படுவார்கள்" என்று கூறி இருக்கின்றார்கள். இதனால், சிக்கனக்காரர்களிடம் பொருள் சேரும் என்பதுமட்டுமல்ல; அவர்களால் பொருள்களின் விலை உயர வழி உண்டாகாது என்றும் தெரிகிறதே! பணப் புழக்கம் குறையும்போது பொருள்களின் விலை குறையத்தானே வேண்டும்!

கையில் மருந்து இருந்தால் அதை நினைத்தபோதெல்லாம் குடித்துக் கொண்டிருக்கலாமா? கூடாது. அதைப் போலவே கையில் பணம் இருந்தால் நினைத்தபோதெல்லாம் அதைச் செலவழித்துக் கொண்டிருக்கக் கூடாது. "பணம் நாம் செலவு செய்வதற்காகத்தானே இருக்கிறது? செலவு செய்யப்படாமல் இருந்தால் பணம் ஒரே இடத்தில் குவிந்துவிடுமே! அதனால் அதிகமாகப் பணப்புழக்கம் குறைந்துவிடலாம். குறைந்து விட்டால் பணம் கிடைக்காமல் ஏழைகள் துன்பப்படுவார்களே!" என்று ஒருவர் சொல்லுகிறார்! உண்மை! கருமிகளால் தான் நாட்டில் பணப்புழக்கம் குறையும். அவர்களே கையில் கிடைத்த பணத்தில் காலணாவும் செலவு செய்யமாட்டார்கள். அதனால் நாட்டில் தேவைக்கு அதிகமாகப் பணப்புழக்கம் குறைந்துவிடும்; ஏழைகள், பண்டங்கள் கிடைத்தாலும் அதை வாங்கப் போதுமான பொருள் கிடைக்காமல் துன்பப்படுவார்கள். ஊதாரிகளாலும் நாட்டில் ஏழைகளுக்குத் துன்பம் உண்டாகும். ஊதாரிகள் தங்களிடம் இருக்கும் பணத்தை வாரி வாரிச் செலவு செய்வார்கள். அதனால் நாட்டில் பணப்புழக்கம் தேவைக்குமேல் அதிகமாகிவிடும். அப்பொழுது மக்களிடம் பண்டங்களை வாங்கும் சக்தி அதிகமாகும். ஆகவே, பண்டங்கள், பணம் அதிகமாக வைத்துள்ள சிலரிடம் சென்று குவிந்துவிடும். அப்போது பண்டங்களின் விலை உயர்ந்துவிடும். அதனால் ஏழைகள் துன்பப்படுவார்கள்.

ஆகவே, ஊதாரிகளாலும் கருமிகளாலும் நாட்டில் உள்ள பெரும்பாலான மக்களுக்குத் துன்பம் உண்டாகின்றது.

சிக்கனக்காரர்களால் நாட்டில் நன்மையே தோன்றும். அவர்கள் கருமிகளைப் போலச் செலவு செய்யாமலும் இருக்கமாட்டார்கள்; ஊதாரிகளைப்போல கையில் இருக்கும் பொருளை வாரி இறைத்து விடவும் மாட்டார்கள்! ஆகவே அவர்களால் பணவீக்கமோ சுருக்கமோ நாட்டில் ஏற்படுவதுமில்லை; அவர்களால் எளிய மக்கள் துன்பப் படுவதுமில்லை. அவர்கள் வாழ்க்கையினுல் செல்வம் நாட்டில் சமநிலையில் இருக்கும். இதனுல் சிக்கனக்கா ரர்களே நாட்டுக்குத் தேவையானவர்கள் என்று தோன்ற வில்லையா?

சிக்கனக்காரர்களால் அவர்களுக்கும் நன்மை; நாட்டுக்கும் நன்மை! சிக்கனக்காரர்களிடம் பொருளிருப்பதால் அவர்கள் "கிழத்தன்மை வந்துவிட்டதே" என்று கவலைப் படமாட்டார்கள்.

"கிழப் பருவத்தில் ஏழையாய் இருப்பதைப் போன்ற கொடுமை வேறென்றுமில்லை" என்று 'பிளாட்டோ' என்பவர் கூறுகின்றுர். இதனுல் பணமுள்ளவர்கள் கிழப்பருவத்தை நினைத்து நினைத்து நடுங்க வேண்டிய தில்லையே!

சிக்கனத்துடன் வாழ வேண்டுமென்றுதான் எல்லோரும் சில சமயங்களிலாவது நினைக்கின்றுர்கள்; சமயம் வரும்போது அவர்கள் அதை மறந்து விடுகிறுர்கள்; அல்லது செயல் படுத்த மன உறுதி இல்லாதவர்களாய் இருக்கின்றுர்கள். பொடி போடும் வழக்கத்தை - வெற்றிலை போடும் வழக்கத்தை - விட்டுவிட வேண்டுமென்று எத்தனையோ பேர் விட்டுப் பிறகு தொட்டுக் கொள்ளுகிறுர்கள்! காரணமென்ன? மனஉறுதி இல்லாமை தான் காரணம். எதற்கும் மன உறுதி வேண்டும்.

சிக்கனத்துடன் வாழ விரும்புகிறவர்கள் மிகவும் மன உறுதி உள்ளவர்களாய் இருக்க வேண்டும். சிக்கனத் துடன் வாழ வேண்டும் என்னும் எண்ணத்தைக் கெடுப் பதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

''சிக்கனத்துடன் வாழ வேண்டும் என்னும் எண்ணத்தைக் கெடுக்கக் கூடிய சந்தர்ப்பம் வரும்போது 'முடியாது' என்று சொல்லக் கூடிய மன உறுதி வேண்டும். மனத்தை மாற்றக் கூடிய, மனத்தை இழுக்கக் கூடிய, சந்தர்ப்பங்களும் நேரலாம். அப்போதெல்லாம் அவற்றை எதிர்க்கக்கூடிய மன உறுதி இருந்தால்தான் ஒருவரால் சிக்கனக்காரராய் வாழமுடியும்'' என்று ''சாமுவல் ஸ்மைல்ஸ்' என்பவர் கூறுகின்றார்.

மன உறுதி இல்லாதவர்கள், தேவைதானா? தேவை இல்லையா என்ற எண்ணமே இல்லாமல் தங்கள் விருப் பத்தை, தங்கள் ஆசையை, நினைத்தபோது நிறைவேற்றிக் கொள்ள விரும்புகிறார்கள் என்பது உறுதி! சிக்கனத் தன்மையுடன் வாழவேண்டு மென்னும் எண்ணத்தைக் காற்றில் பறக்க விட்டுத் தங்கள் வீணான விருப்பத்தை யெல்லாம் நிறை வேற்றிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறவர்களின் கதி முடிவில் என்னவாகும்? நாணயம் இல்லாமை, மோசம், அழிவு இவைகளே அவர்களிடம் காணப்படும். அப்போது உலகத்தினர் அவர்களைப் பற்றி என்ன சொல்லுவார்கள்? ''கையில் பணம் இருந்தபோது தலைகால் தெரியாமல் ஆடினான்; இப்போது காலணா வுக்கும் வழி இன்றி வாடுகிறான்'' என்று இழித்துப் பேசுவார்கள். அவனுக்காக இரக்கப்படக் கூடியவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள். எங்குச் சென்றாலும் அவனுக்கு உதவி கிடைக்காது.

பணத்தைத் தன் நிலைமைக்கு அதிகமாகச் செலவு செய்கிறவன், சில சமயங்களில், சிலருக்கு நண்பனாய்

இருக்கலாம் ; சிலர் அவனைப் புகழலாம் ! அதனுலென்ன ! தன் நிலைமையைத் தாண்டிச் செலவு செய்கின்றவன் தனக்கும் தன் சந்ததியாருக்கும் விரோதியாகின்ருன். தன் எதிர்காலத்தைப்பற்றியோ, பணத்தைப்பற்றியோ ஒருவன் கவலைப்படாத செலவாளியாய் இருந்தால் வஞ்சனை உள்ள நண்பர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு தாங்கள் எழுதிக் கொடுக்கும் கடன் பத்திரத்தில் அவன் கை எழுத்தையும் துணையாகச் சேர்த்து விடுவார்கள் ; கடனுகவோ இனு மாகவோ பணத்தைப் பெற்றுக்கொண்டு போவார்கள்; வாங்கிய கடனைக் கொடுக்கவே மாட்டார்கள்.

சென்னை, பெத்த நாயகர் பேட்டையிலே ஒரு நண்பர் இருந்தார். அவரை அறிந்தவர்கள் எல்லோருக்கும் அவர் நண்பர்! "தாராள மனம்!" அந்த மனத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவரை ஏமாற்றியவர்கள் பலர்! அவர் இரயில்வே செயலக மொன்றில் முப்பது ஆண்டுகாலம் எழுத்தாளராய் இருந்தார்! வேலையை விட்டு விலகும்போது அவருக்காகச் சேர்ந்திருந்த அவர் பிடிப்புப் பணம் பத்தாயிரம் அவர் கையில் சேர்ந்தது! அந்தத் தாராள நண்பருக்கு ஒரு நெருங்கிய நண்பர் இருந்தார்! அவர் இவரிடம் வந்து, "நான் ஒரு வீட்டை வாங்கத் தீர்மானித்து அதைப் பற்றிப் பேசி முடித்திருக்கின்றேன். அது இருபதினுயிரம் பெறும்! பதினையாயிரத்திற்கு வருகிறது. இரகசியமாக முடித்து விடவேண்டும். என் கையில் ஐயாயிரம் இருக்கிறது. நீ உன்கையில் இருக்கும் பத்தாயிரத்தையும் போடு; வீட்டை வாங்கி விடலாம். பிறகு நீ ஐயாயிரத்தை உன் விருப்பம் போலக் கிடைத்தபோது எனக்குக் கொடு. அந்திய காலத்தில் நீ வாங்கி வந்த பணத்தை ஒழுங்கு செய்வதற்கு இது நல்ல வழி" என்ருர்!

உடனே அந்தத் "தாராள மனிதர்" "இவ்வளவு உதவியை நமக்கு யார் செய்யப் போகிருர்கள்" என்

றெண்ணிப் பத்தாயிரத்தையும் எடுத்து அந்த நண்பரிடம் கொடுத்தார்! அந்த நண்பர் எப்படியோ அன்றிரவு திடீரென்று மாரடைப்பினுல் மரணமடைந்தார்! அவருடைய பிள்ளைகள் அந்தப் பத்தாயிரத்தைப் பற்றித் தங்களுக்கொன்றும் தெரியா தென்று சொல்லி விட்டார்கள்! "தாராள" நண்பர் அதே கவலையினுல் ஆறுமாதத்திற்குள் இறந்து போனுர். நிலைமைக்கு மிஞ்சிய நம்பிக்கையும், தாராள குணமும் ஒருவரை என்ன செய்துவிட்டன என்பதைக் கவனியுங்கள்! தாராளக்காரர் எல்லோருக்கும் நல்ல மனிதராக இருக்க விரும்புவார்! பிறர் கேட்பதைக் கொடுத்துக் கொண்டே இருப்பார்! அவர் பணம் வற்றிப் போகுமட்டும் அவருக்கு நண்பர்கள் வளர்ந்துகொண்டே இருப்பார்கள். தாராளக்காரர் யார் எங்கே கடன் வாங்கினுலும் தாம் அவருக்குத் துணையாய் இருப்பார். கடைசியில் அந்தக் கடன் சுமை இவர் தலையிலே வந்துவிடும். பேரறிவாளர் தேசபந்து சித்தரஞ்சன்தாஸ் அவர்களுடைய தகப்பனுர் இப்படித்தான் "தாராள" குணத்தினுல் கடன் காரரானுர்.

சிக்கனக்காரர்களாக வாழ விரும்புகிறவர்கள் முறை தவறிய ஒழுங்கற்ற செயல்களை "முடியாது" என்று ஒதுக்கித் தள்ளிவிடுவார்கள்; அத்தகையவர்களிடம் செல்வம் நிச்சயமாகச் சேரும்.

இதை விடுத்துப் பணத்தைப் பழிப்பவர்கள் திறமை இல்லாதவர்களே! "வீடு நமக்குண்டு திருவாலங்காடு; விமலர் தந்த ஓடு நமக்குண்டு வற்ருத பாத்திரம்" என்ற பட்டினத்தாரைப் போன்ற துறவிகள் வேண்டுமானுல் பணத்தை வெறுக்கலாம். இல்லறத்தி லிருந்துகொண்டு "காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா" என்று பாடுவது பாடுகிறவரையும் அவர் குடும்பத்தையும் கெடுத்துவிடும். உலகத்தை வெறுத்த பட்டினத்தாரும்

"நாடு நமக்குண்டு கேட்டதெல்லாம் தரும்" என்று பசி வந்தபோது அதைப் போக்கிக் கொள்வதற்காக நாட்டில் உள்ளவர்களைத்தான் நம்பி இருந்தார்.

ஆகவே, பணம் எவ்வளவு முக்கியமானதென்பதை உணருங்கள். பணமிருந்தால் ஒருவனுல் எதையும் சாதிக்க முடியும். அது மிகவும் வல்லமை வாய்ந்தது.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சிறுவன் தன் கிராமத்திலிருந்து சென்னையிலுள்ள தன் உறவினர் ஒருவர் வீட்டிற்கு வந்தான். அவன் எளிய நிலையைக் கண்ட அவன் உறவினர் அவமதிப்புக்கொண்டு தங்கள் வீட்டின் கடைப்புறத்தில் அவனை உட்காரவைத்து அவனுக்கு உணவளித்தனர்! மறுநாள் அந்த உறவினர் அந்தச் சிறுவனை ஒரு கடையில் வேலைக்கு அமர்த்தி "எங்கேயாவது தங்கிச் சாப்பிட்டுக் கொள்" என்ருர்கள். அந்தச் சிறுவன் வேலை செய்து, இரவில், கோயில் வாயிற்படிகளில் படுத்து உறங்கிக் காலத்தைக் கழித்தான்; சம்பளமாகக் கிடைத்த பணத்தைத் தன் முதலாளியிடமே சேர்த்து வந்தான். பணம் வளர்ந்தது! பிறகு முதலாளியின் வீடே அவனுக்குத் தங்கும் இடமாயிற்று. முதலாளி இல்லாமலே முதலாளியின் கடையை அந்தச் சிறுவன், இப்போது வாலிபன், கவனித்து வரலானுன். பிறகு அந்த வாலிபன் முதலாளியின் தொழிலில் முதலாளியுடன் தான்கூட்டாளியானுன்! பிறகு நாளடைவில் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் அவனுக்குச் சொந்தமாயிற்று! வீட்டின் கடைப்புறத்தில் அவனை வைத்து அவனுக்குச் சோறு போட்டவர்களே இப்போது அவனுக்குத் தங்கள் பெண்ணைக் கலியாணம் செய்து கொடுத்து அவனைத் தங்கள் மருமகனுக்கிக் கொண்டார்கள்! காரணம் என்ன? பணம்! இதைப் படிப்பவர்களாகிய நீங்களே இத்தகைய சில நிகழ்ச்சிகளைக்கண்டு இருப்பீர்கள்! பணத்தின் மகிமை

அப்படி இருக்கின்றது! தண்ணீர் இல்லாத ஆற்றை மக்கள் மிதித்துச் செல்கிறார்கள்! அவ்விதமாகவே பணமில்லாதவர்களையும் அவர்கள் அலட்சியத்துடன் நடத்துகிறார்கள்! இருள் நிறைந்த வானத்தைச் சந்திரன் பிரகாசப்படுத்துவதுபோல் துன்பம் நிறைந்த வாழ்க்கையைப் பணம் இன்பமுள்ளதாக்குகின்றது. இறந்தவர்களை எழுப்புவது, கடவுளைக் காண்பது ஆகிய இந்த இரண்டு வேலைகளைத் தவிரப் பெரும்பாலும் மற்ற எல்லாக் காரியங்களையும் செய்யப் பணத்தினால் ஆகும்! நீதிகூடச் சில சமயங்களிலாவது பணக்காரர் பக்கம் திரும்பக்கூடும்! பணம் படைத்தவரே எங்கெங்கும் சிறந்தவராய் விளங்குகின்றார்! அவர் ஒன்றும் கொடுக்காவிட்டாலும் 'கொடுப்பார்' என்று பலர் அவரைச் சுற்றித் திரிகின்றார்கள்!

ஆடம்பரம் காரணமாகவும், பிறர் புகழ வேண்டுமென்பதற்காகவும் சிக்கனத்தை மறந்து பணத்தை வாரி இறைப்பவர்கள் இதைக் கவனிக்கட்டும்: "பிறர் நம்மை மதிக்கவேண்டுமென்றே நாம் நம்மைக் கெடுத்துக் கொள்ளுகிறோம்" என்று அறிவாளராகிய பெஞ்சமின் பிராங்க்ளின் கூறுகின்றார். "கெட்ட மனிதர்களால் நமக்கு ஏற்படும் துன்பத்தைப் பார்க்கிலும் ஆடம்பரத்தினால் நமக்கு ஏற்படும் துன்பமே அதிகமாகும்" என்று ஷேக்ஸ்பியர் கூறுகின்றார்!

செல்வத்தினால் சிறந்தவர்களில் சிலர் வாழ்வதைப் போலத் தாங்களும் வாழவேண்டுமென்று செல்வச் சிறப்பற்ற சிலர் நினைத்து, நினைத்தபடியே நடந்து, தங்களைப் பாழ்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

ஒரு ஜவுளிக் கடைக்காரர், அருணாசலம் என்பவர், தமது நண்பரைப்பார்த்து, "குமாரசாமி முதலியார் இப்போதெல்லாம் நம்மைக் கண்டாலும் காணாதவரைப் போலப் போய்விடுகிறார்! நானும் அவரும் ஒன்றாகத்தான் ஜவுளிக்

கடை வைத்தோம். என்னவோ அதிர்ஷ்டம் அவரைப் பிடித்துக்கொண்டது! மாதந்தோறும் ஐயாயிரம் ரூபாய்க்கு மேலும் அவர் சம்பாதிக்கின்றார். மோட்டார்காரும், பங்களாவும், பலவீடுகளும், ஐம்பது ஏக்கர் நிலமும் அவருக்குச் சொந்தமாய் இருக்கின்றன. ஆகவே, அவருக்கு இப்போது, முந்நாள் பழகியவர்களைக் கண்டாலே கண் தெரிவதில்லை. எனக்கும் பத்து ஏக்கர் நிலம் இருக்கின்றது. இரண்டு வீடுகள் இருக்கின்றன! என்னால் முடியாதா? நாளைக்கே நானும் ஒரு 'கார்' வாங்கிவிடுகிறேன். அவருக்கு முன்னால் நானும் இந்தத் தெருவில் காரில் போகின்றேன். இது முடியாதா?" என்றார். உடனே அவர் நண்பர் அவரைப் பார்த்து, "ஏன் முடியாது! முடியும். ஆனால், நீங்கள் ஒரு விஷயத்தைமட்டும் மறந்துவிட்டீர்கள். குமாரசாமி முதலியாருக்கு மாதந்தோறும் ஐயாயிரம் ரூபாய்க்கு மேலும் வருமானம் வருகிறதென்று நீங்களே கூறுகிறீர்கள். உங்கள் வருமானமோ வருடத்தில் பத்தாயிரத்தைக்கூட எட்டுவதில்லை என்று முன்னர் ஒரு முறை என்னிடம் நீங்களே சொல்லி இருக்கின்றீர்கள். நீங்கள் குமாரசாமி முதலியாருடன் போட்டிபோட நினைக்கலாமா? கார் வாங்கிவிட்டால் போதுமா? கார் வாங்குவதைப் போலவே நீங்கள் ஒவ்வொரு விஷயத்திலும் அவருடன் போட்டி இட முடியுமா? இட்டால் உங்கள் நிலை என்னவாகும்? இப்போது இருக்கும் பொருள் கரைந்து உங்கள் நிலைமை மாறி நீங்கள் ஏழையாய்விடமாட்டீர்களா! அப்போது உங்கள் மனைவிமக்களின் கதி என்னவாகும்? நீங்கள் குமாரசாமி முதலியாருடன் போட்டியிட நினைத்து, உங்கள் மனைவிமக்கள் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கும் நல்ல வாழ்க்கையைக் கெடுத்து விடாதீர்கள்" என்று கூறினார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் குமாரசாமி முதலியாருடன் போட்டியிட வேண்டுமென்ற

அருணசலத்தின் மனத்தில் உண்டான எண்ணம் மறைந்தது.

காந்திமதி அம்மாள் ஒரு நாள் ஒரு மாமி அம்மாளைப் பார்த்து, "அகிலாம்பாளைப் பாருங்கள் மாமி; அவள் என்னோடுதான் படித்தவள். அவள் கணவர் ஐந்நூறு ரூபாய்தான் சம்பாதிக்கின்றார்! அவள் நகைகள் எல்லாம் வைர நகைகள்! உயர்ந்த பட்டுப் புடைவைகளைத்தான் அவள் எப்போதும் கட்டுகின்றாள். அன்று ஒரு பாட்டுக் கச்சேரியில் அவளைப் பார்த்தேன்! ஏதோ பேசத்தகாதவளோடு பேசுவதைப் போல அவள் என்னிடம் பேசினாள். என்னுடைய சாதாரணப் பட்டுப்புடைவையும் கெம்புக் கல் நகைகளும் அவளுக்கு என்னிடத்தில் அலட்சியத்தை உண்டாக்கிவிட்டன! எவ்விதத்திலாவது முயற்சி செய்து ஒரு வைரத்தோடும், ஒரு வைர அட்டிகையும் வாங்கி விடவேண்டுமென்பது என் எண்ணம்! புடவைக்கென்ன! சொந்த வீட்டுக்காரர்களை நம்பிக் கடன் கொடுக்க எத்தனையோ பேர் காத்துக் கொண்டிருக்கின்றனர். நாளைக்கே நாலு உயர்ந்த பட்டுப்புடவைகளை வாங்கினால் என்ன! என்னைப் பார்த்தால் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறவர் மனைவி மாதிரியா தோன்றுகிறது? இல்லையே. அதனால்தான் எல்லோரும் என்னைத் தாழ்ந்தவளென்று நினைக்கின்றார்கள். ஆடம்பரத்தைக் கண்டுதான் உலகம் மதிக்கிறது" என்றாள்.

அவள் கூறியவைகளைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தமாமி அவளைப்பார்த்து, "காந்தி, நான் சொல்வதைக் கேள்; புடவையும் நகையும் தேவைதான்! அதற்காக ஆடம்பரம் தேவை என்று நான் சொல்ல மாட்டேன். ஆடம்பரத்தை அறிவற்றவர்களே மதிப்பார்கள்; அவர்களில் அகிலாம்பாளும் ஒருத்தி என்று எண்ணிக்கொள்! அறிவற்றவர்கள் நம்மை மதிப்பதும்

மதிக்காததும் ஒன்றுதான். ஆடம்பரத்தை அறிவாளிகள் விரும்பமாட்டார்கள்! உன்னைப்பார்ப்பவர்கள் எல்லோரும் உன்னை மதிக்கவில்லை என்று நீ எண்ணி விடாதே! நீ நல்ல ஒரு குடும்பப் பெண்மணி மாதிரி இருக்கின்றாய்! அகிலாம்பாளின் உடையும், நடையும், நகையும் அவளை ஒரு பகல் வேஷக்காரிபோலக் காட்டுகின்றன. அன்றியும் அவளோடு நீ எதற்காக உன்னை வைத்துப் பார்க்கின்றாய்! அவளுக்குக் குழந்தைகளே இல்லை; இனி பிறக்காது என்றும் டாக்டர் அம்மா கூறிவிட்டாராம்! அதனால் அவள் தன்மனம் போனபடி நடக்கின்றாளாம். நீ அவளை கவனிக்கக் கூடாது. உனக்கு நான்கு குழந்தைகள் இருக்கின்றன; இனியும் பிறக்கலாம். அவைகளையெல்லாம் வளர்த்து வாழவைக்க வேண்டிய பொறுப்பு உனக்கு இருக்கின்றதே! இவைகளைப் பற்றி அல்லவா நீ கவனிக்க வேண்டும். உன் தாயார் சிக்கனத்துடன் வாழ்ந்து பொருளைச் சேர்த்து உனக்கு ஒரு நல்ல கணவரைத் தேடினார். நீயும் அப்படி நடந்தால்தானே நாளைக்கு உன் பெண்ணுக்கும் ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைப்பான்! அசடு மாதிரி அகிலாம்பாளை நினைப்பதை இன்றோடு விட்டு விடு" என்று சொன்னாள்.

இவ்வாறு மாமி சொல்லியவார்த்தைகள் காந்திமதியின் மனத்தில் நன்றாகப் பதிந்தன!

எப்போதும் மனிதர்கள் அவரவர்கள் நிலைமைக்கு ஏற்றபடி நடந்துகொண்டால்தான் வாழ்க்கை இன்பமாய் இருக்கும். இன்றேல் துன்பந்தான்! இதைப்பலர் கவனிப்பதே இல்லை. பிறர் மதிக்கவேண்டுமென்பதற்காகத் தங்கள் நிலைமையை மீறிச்செலவு செய்கின்றவர்கள் இருக்கின்ற மதிப்பையும் இழந்து விடுவார்கள். நிற்க.

நமது நாட்டிலே, கிராமங்களில் இருந்து, ஆண்டு தோறும் சுக வாழ்க்கை வாழலாமென்றே பிழைப்பதற்

காகவோ பல வாலிபர்கள் பட்டணங்களுக்குச் செல்லு கின்றனர். கிராமத்தில் நன்ருக வாழ்வதற்கு வசதி உள்ள வாலிபர்கள்கூடப் பட்டினத்தில் வியாபாரம் செய்யவோ அல்லது உத்தியோகம் செய்யவோ செல்கின்றனர். இந்த வாலிபர்களில் பலருக்கு, போதுமான அனுபவம் இல்லாமை யினுல், வியாபாரத்தில் அதிக இலாபம் கிடைப்பதில்லே. உத்தியோகம் செய்கின்றவர்களில் பலர் கிடைக்கும் சம்பளத்தைக்கொண்டு வாழத்தெரியாமல் விழிக்கின்றனர்! அப்போதுதான் இவர்களுக்கு நகரவாழ்க்கை "தனி இன்பம் உள்ளதல்ல" என்று தெரிகிறது. இவர்களில் சிலரே கிடைக்கும் வரும்படியைக் கொண்டு சிக்கனத் துடன் வாழக் கற்றுக் கொள்ளுகின்றனர். பலர் வந்த வழியே திரும்பிச் செல்லுகின்றனர்.

கிராமத்திலிருந்து பட்டினத்திற்குப் பிழைக்கச் சென்று வெற்றிபெற்ற ஒருவர் சொல்வதைக் கவனி யுங்கள் : "கிடைத்த பணத்தை எப்படிச் செலவழிப்பது என்ற பாடத்தைத்தான் நான் முதலில் கற்றுக் கொண்டேன். முதன் முதல் எனக்குச் சிறிதளவு வருமானந்தான் கிடைத்தது. அதைக்கொண்டே நான் தங்க இடமும், உண்ண உணவும், கட்டத் துணியும் தேடிக்கொண்டேன். என்னே அறிந்தவர்கள் 'இவர் எவ்வாறு சொற்ப வருவாயைக் கொண்டு வாழ்கின்ருர்' என்று ஆச்சரியப்பட்டார்கள். என்னைப் போன்ற குறைந்த வருமான முள்ளவர்கள் பலர் கடன் பட்டார்கள்; நாணயத்தை இழந்தார்கள்; அவமானம் அடைந்தார்கள்; அதனுல் வெற்றி பெறவேண்டிய இடங் களிலெல்லாம் தோல்வியே அடைந்தார்கள்; 'பிரயோசன மற்றவர்கள்' என்று பிறரால் சொல்லப்பட்டார்கள். இது நகரத்தில் வாழ்கின்றவர்களில் பலர்படும்பாடு! வாழ்க்கை கெட்டு இனி நகரத்தில் வாழலாமென்று வருகின்ற வய

தானவர்களை விட்டுவிடுங்கள். இதுவரையில் வாழத் தெரியாத அவர்கள் இனி எப்படி வாழக் கற்றுக்கொள்ளப் போகிறார்கள்! நகரத்திற்கு நாட்டுப்புறத்திலிருந்து வந்த அல்லது வரப்போகும் வாலிபர்களுக்குத்தான் சொல்லு கின்றேன்: முதலாவது: சிறு தொகையைக்கொண்டே அவர்கள் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். வருமானம் எவ்வளவு கொஞ்சமாய் இருந்தாலுஞ் சரிதான்! பணம் தேடக் கற்றுக்கொள்ளுவதற்கு முன்னால் வாழக்கற்றுக் கொள்ளவேண்டும். வாழக் கற்றுக்கொள்ளாமல் எவ்வளவு பணத்தைத் தேடினாலும் அது கையில் நிற்காது. பொருளின் அருமை தெரியாதவர்களிடம் பொருள் ஒருபோதும் நில்லாது. ஏழைகளாய் இருந்து பணக்காரர்களானவர்களிற் பலர் பொருளின் அருமை தெரிந்தவர்களே! அதனால்தான் கிடைத்த செல்வம் அவர்க ளிடம் நிலைத்து வளர்ந்து நிற்கின்றது. 'ஆனந்த விகடன்' சொந்தக்காரரும் ஜெமினி ஸ்டூடியோவின் அதிபருமாகிய எஸ். எஸ். வாஸன் பொருளின் அருமை தெரிந்தவர். அதனால்தான் அவர் கிடைத்த பொருளைச் சேர்த்துப் பிடித்து, வகை யறிந்து செலவுசெய்து, மேலும் மேலும் பணத்தைத் தேடுகிறார்! ஏன் பணத்தின் அருமை அவருக்கு நன்றாய்த் தெரியும். ஓர் ஆயிரம் ரூபாய் ஒரு பெரிய தொகை என்று அவர் நினைத்த காலமும் உண்டு! இவ்வாறு பொருளருமை தெரிந்தவர்களிடம் பொருள் சேர்ந்தால் அது வளரும். பொருளருமை தெரியாதவர்க ளிடம் பொருள்வந்தால் அது வந்தபோதே மறைந்துவிடும்.

சிறு தொகையாய் இருந்தாலும் அதைச் சேர்த்துப் பிடிக்கத் தெரிந்தவர்களுக்கே பெருந் தொகையையும் சேர்த்துப் பிடிக்கத் தெரியும்.'' இவ்வாறு வாழ்க்கையில் வெற்றி கண்டவர் சொல்வது சரிதானே!

வாழ்வதற்கு வழி

* *

12

" கடன் படாதவன் கலக்கமடையாதவன் "

" கஞ்சி குடிக்க நேர்ந்தாலும் கடன்படக்கூடாது "

" கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினன் "

என்பன முன்னோர் மொழிகள். அவைகள் பொன்னே போலப் போற்றத்தக்கவை! நூறுரூபாய் வருமானம்! ஐந்து ரூபாய் மிச்சம்! மகிழ்ச்சி! நூறு ரூபாய் வருமானம் நூறு ரூபாய் செலவு-சரி! துன்பம் இல்லை. நூறு ரூபாய் வருமானம் நூற்றுப்பத்துருபாய் செலவு-மிச்சம் கடன்! இந்த வாழ்க்கை எவருக்கும் கூடாது. மாதம் பத்துருபாய் கடன்! வருடத்தில் நூற்று இருபது ரூபாய்கடன்! எப்படிக் கொடுப்பது? இதையெல்லாம் ஊதாரிகள் கவனிக்க மாட்டார்கள். சிக்கனக்காரர்கள் கவனிப்பார்கள்.

> "எவரொருவர் தம்முடைய இளமைப் பருவத்திலேயே சிக்கனக்காரராய் இருக்கின்ருரோ அவர் தம் வாழ்க்கையில் பாதி வெற்றியை அடைந்துவிட்டார் என்று சொல்லலாம்."

என்று ஆங்கிலமொழியிலுள்ள பாட்டொன்று கூறுகிறது.

> "சிக்கனம் என்னும் அடிப்படையின்மீது தான் செல்வம் என்னும் கட்டடம் கட்டப்படுகின்றது" என்று ஜே. ஜி. ஆலண்டு என்ற நல்லவர் கூறுகின்ருர்.

> "கடன் என்பது எலிப் பொறியைப் போன்றது. ஒருமுறை கடனில் சிக்கியவன், பொறியில் சிக்கிய எலியைப்போல, மீளுவதில்லை."

என்று எச். டப்ள்யூ. ஷா என்பவர் கூறுகின்ருர்.

"நல்ல ஓய்வுபெற விரும்புகிற ஒருவர் ஒரு நாளின் பெரும்பாகத்தை உழைப்பில் செலவிட வேண்டும். ஒரு செயலின் நன்மைக்காகவே உலகில் மற்றொரு செயல் ஏற்பட்டிருக்கின்றது. அது படைப்பின் இரகசியம். நமக்குள்ள காலத்தில் மூன்றில் ஒரு பகுதி தூக்கத்தில் செல்கின்றது.

அப்படிச் செல்கின்ற காலம் மிச்சமுள்ள இரண்டு பங்குக் காலத்தின் நன்மைக்காகத்தான் ! அப்படியே பதினாறு மணிநேர உழைப்பு எட்டு மணிநேர ஓய்வுக்காகத்தான்"

என்று 'பீச்சர்' என்பவர் கூறுகின்றார்! ஆனால், எல்லா நேரத்தையும் வீண் வழியில் போக்குகிறவர்களைப் பற்றி என்ன கூறுவது? நல்ல வழியில் கடன் படாமல் வாழ வேண்டுமென்று நினைக்கிறவர்கள் உழைப்பைக் கண்டு அஞ்சமாட்டார்கள். கடன் படாமல் வாழ்வது மட்டுமல்ல! கடன் படாமல் வாழ்கின்றவர்கள் பிறர் செலவினால் இனமாக எதையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அது கடன் படுவதைவிடக் கீழ்த்தரமானது!

அமெரிக்க ஐக்கியமாகாணத்தின் பாராளுமன்றத்தின் அங்கத்தினராய் இருந்த 'ஜான்ரண்டால்ப்' என்பவர் 'பணத்தைக் கொடுத்து உனக்கு வேண்டியதைப்பெற்றுக் கொள்; பணத்தைக் கொடுக்க முடியாதபோது உனக்கு வேண்டியதை மறந்து விடு'' என்று கூறுகின்றார். எவ்வளவு நல்ல உபதேசம் பாருங்கள்! கொடுப்பதற்கு ஆள் இருக்கும் வரையில் கடன் வாங்கிக் கொண்டே போகின்றவர்கள் இதைக் கவனிப்பார்களா?

கடன் காரர்கள் சிக்கனக்காரர்களாக முடியாது. சிக்கனத்தன்மை இல்லாதவர்களிடம் பொருள் சேராது!

சிறந்த போர்வீரரும்சேனாதிபதியுமாகியநெப்போலியன் என்பவர் பல நாடுகளை வென்றவர். ஒருமுறை அவர்

ஆஸ்த்திரியா நாட்டின் மீது படை எடுத்துச் சென்ற போது ஓரிடத்தில் கூடாரம் அடித்துத் தங்கினார். இரவு மணி பன்னிரண்டு இருக்கும். எங்கும் அமைதி நிலவி இருந்தது. போர் வீரர்கள் அனைவரும் தங்கள் தங்கள் இடத்தில் உறங்கிக்கொண்டிருந்தார்கள். காவலாளிகள் மட்டும் கையில் துப்பாக்கியுடன் பாதுகாப்புக்காக அங்கு மிங்கும் உலவிக் கொண்டிருந்தார்கள். மறுநாள் நடக்க வேண்டியவைகளைப் பற்றி நெடுநேரம் வரையில் சிந்தித் துக் கொண்டிருந்த நெப்போலியன் தம் சிந்தனைக்கு ஒரு முடிவு ஏற்பட்டவுடன் திடீரென்று எழுந்து போர்வீரர் களிருந்த கூடாரத்தைச் சுற்றிவரலானார். எங்கும் அமைதி நிலவி இருந்தது. ஆனால், ஒரு தனிக்கூடாரத்தில் யாரோ ஒருவன் பாடிக்கொண்டிருந்தான். நெப்போலியன் அங்குச் சென்று எரியும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்த ஒரு இளைஞனைப் பார்த்தார். அவன் நெப்போலியனுடைய இரகசிய செயலாளர்களில் ஒருவன். அவன் நெப்போலியனைக் கண்டவுடன் திடுக்கிட் டெழுந்து வணங்கினான்.

உடனே நெப்போலியன் அவனைப்பார்த்து " நீ மகிழ்ச் சியுடன் பாடிக்கொண்டிருப்பது நல்லதுதான். என்னிடம் இருப்பவர்கள் இப்படி இருப்பது எனக்கு விருப்பமே. உன்னுடைய சம்பளம் என்ன ? " என்றார்.

" ஆறாயிரம் பிராங்க் " என்றான் அந்த வாலிபன்.

உடனே நெப்போலியன், " உன் வயதையும் அனுபவத்தையும் நோக்கும்போது அது நல்ல சம்பளந் தான். சாப்பாடுவேறு இனாமாகக் கிடைக்கின்றது அல்லவா ? " என்றார்.

" ஆம் " என்றான் அந்த வாலிபன்.

" அதனால்தான் நீ மகிழ்ச்சியுடன் பாடிக்கொண் டிருக்கின்றாய்! " என்றார் நெப்போலியன்.

"இல்லை, என் துன்பத்தை மறப்பதற்காகவே நான் பாடிக்கொண்டிருக்கிறேன்'' என்றான் அந்த இளைஞன்.

உடனே நெப்போலியன், "துன்பத்திற்குக் காரணம் என்னவோ?'' என்று கேட்டார்.

"பணமுடைதான்!'' என்றான் வாலிபன்.

நெப்போலியன் திடுக்கிட்டு, "இவ்வளவு நல்ல சம்பளம் பெறுகின்ற உனக்குப் பணமுடை வரக் காரணம் இருக்க முடியாதே'' என்றார்.

உடனே வாலிபன் அவரை நோக்கி, "காரணம் இருக்கிறது. நான் கண் தெரியாத என் தகப்பனாரைக் காப்பாற்ற வேண்டும். என் சகோதரி ஒருத்தி இருக்கின்றாள். அவளுக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை, அவளையும் நான்தான் காப்பாற்ற வேண்டும்'' என்றான்

"நல்ல மகன் செய்ய வேண்டிய வேலையைத்தான் நீ செய்கின்றாய். இதனாலும் உனக்குப் பணமுடை வருவதற்குக் காரணம் இல்லையே!'' என்றார் நெப்போலியன்.

"நீங்கள் சொல்வது சரிதான்! இருந்தாலும் எனக்குக் கடன் இருக்கின்றது'' என்றான் வாலிபன்.

உடனே நெப்போலியன் சற்றுக் கோபத்துடன், "இங்கே உனக்கு ஒரு செலவும் இல்லை. நீ வாங்கும் சம்பளத்தில், உன் தகப்பனாருக்கும் சகோதரிக்கும் அனுப்புவது போக மிச்சம் உள்ளதை நீ சேர்த்து வைக்கலாமே!'' என்றார்.

"சேர்த்து வைத்திருக்கலாம். ஆனால் பட்டாளத்தில் எப்படியோ செலவழிந்து விடுகிறது! பத்தாயிரம் பிராங்க் கடனும் ஏற்பட்டுவிட்டது'' என்றான் அந்த வாலிபன்.

வாலிபன் அவ்வாறு கூறியவுடன், "போதும், நிறுத்து. உன்னைத் தெரிகிறது எனக்கு! நீ கடன்காரன் என்று வெட்கம் இல்லாமல் சொல்லுகின்றாய். இவ்வளவு

சம்பளம் வாங்குகின்ற நீ கடன்காரன்! இதை எவரேனும் அறிந்தால் உன்னை மதிக்கவே மாட்டார்கள். நானும் உன்னை மதிக்க வில்லை. கடன்காரனாகிய உன்னால்-கடன் துன்பத்தை மறப்பதற்காகப் பாடிக் கொண்டிருக்கின்ற உன்னால்-உன் வேலையைக் கவனிக்க முடியுமா? ஆகவே, நான் உன்னை இந்த நேர முதல் உன் வேலையிலிருந்து நீக்குகிறேன், போய் வருகிறேன்" என்று நெப்போலியன் சொல்லி விட்டுப் போனார்.

அந்த வாலிபன், அப்படியே, ஒன்றுந் தோன்றாமல் அசைவற்று உட்கார்ந்துவிட்டான். சிறிது நேரம் சென்றது. அப்போது ஒரு போர்வீரன் அங்கே வந்து அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதன்மேல் "நெப்போலியனிடமிருந்து" என்று எழுதப்பட்டிருந்தது.

"நான் உன்னை உன்னுடைய வேலையிலிருந்து நீக்கி விடத் தீர்மானித்தேன். உனக்கு அதுவேண்டும். ஆனால், கண் தெரியாத உன் தந்தையைப்பற்றி நான் நினைத்தேன். கலியாணமாகாத உன் சகோதரியைப்பற்றியும் கருதினேன். அவர்கள் நிலையை எண்ணி நான் உன்னை மன்னிக் கின்றேன். உன்னுடைய தவறுள்ள நடத்தைக்காக அவர்கள் துன்பப்படக்கூடாதல்லவா? நான் உனக்கு ஒருநாள் ஓய்வு கொடுக்கின்றேன். இப்போது பத்தாயிரம் 'பிராங்க்' இக்கடிதத்துடன் அனுப்பி இருக்கிறேன். உடனே நீ உன் கடன்காரர் ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டிய தொகையை அனுப்பிவிடு. நான் அனுப்பியுள்ள பெருந்தொகை உன் கடன் துன்பத்தை யெல்லாம் நீக்கிவிடுமென்று நினைக்கின்றேன். இனி வீண் செலவும் கடன் வாங்கும் பழக்கமும் உன்னிடத்தில் இருக்கக்கூடாது. இருந்தால் அப்போது நான் உனக்கு நிரந்தரமாகவே விடுதலை அளித்து உன்னை உன் வீட்டிற்கு அனுப்பிவிடுவேன்."

இக்கடிதத்தை அந்தவாலிபன் படித்தவுடன், அதைக் கொண்டுவந்த வீரன் வாலிபனிடம் தன் கையிலிருந்த பெட்டியிலிருந்து எடுத்துப் பத்தாயிரம் 'பிராங்க்' குகளைக் கொடுத்தான்.

பிறகு அந்த வாலிபன் அறிவு வரப்பெற்று ஒழுங்குள்ளவனாய் இருந்தான் என்று சொல்லப்படுகின்றது. நெப்போலியன் என்னும் அந்த மகாவீரன் அந்த உதவியைச் செய்திராவிடில் அந்த வாலிபனுடைய கதி என்ன ஆகும்? அதோகதிதான்! கடன் வாங்கும் பழக்கமுள்ள பலர் முடிவில் தங்கள் உத்தியோகத்தையும் இழந்து தவிப்பதை நான் பார்த்திருக்கின்றேன்.

கடன் வாங்கும் பழக்கமுள்ள எல்லோருக்கும் இப்படி ஒரு நெப்போலியன் கிடைக்க முடியாதே! ஆகவே, கடன் வாங்கும் பழக்கம் உள்ளவர்கள் அப்பழக்கத்தை ஒழிக்க முயல்வது நல்லது! "கடன் வாங்கிக் கடன் கொடுத்தவர்களும் மரத்தின் மீது ஏறிக் கையை விட்டவர்களும்" பிழைக்க மாட்டாதவர்களே!

'கடன் வாங்கியாவது செய்ய வேண்டிய வேலையை செய்யவேண்டும் என்ற பொருளில்' 'கடன் கொண்டும் செய்வன செய்தல் இனிதே' என்று இனியவை நாற்பது என்னும் நூலில் கூறப்பட்டிருக்கின்றதே! நீங்கள் கடனே வாங்கக்கூடாது என்று சொல்லுகிறீர்களே!" என்று சிலர் கேட்கலாம். உண்மைதான். அவசியம் செய்தே தீரவேண்டும் என்ற வேலையைத்தான் கடன் வாங்கியாவது செய்ய வேண்டுமென்று இனியவை நாற்பது கூறுகின்றது! ஆனல் நாம் வாங்கும் கடனில் பத்துக்கு எட்டு அவசியமானதாய் இல்லையே! எவரோ ஏமாந்தவர் கொடுத்துக் கொண்டிருக்கின்ருர் என்ற காரணத்தினுல்தானே பலர் கடன் வாங்குகின்ருர்கள்! இதையும் நாம் கவனிக்க

வேண்டுமே! திருப்பிக் கொடுப்பதற்கு வழி இருந்தால் அல்லது கடன் வாங்குவது நல்லது அல்ல!

இங்கிலாந்தை ஆண்ட விக்டோரியா மகாராணியார் சிறுமியாய் இருந்தபோது அவருக்கு வாரம் ஒன்றுக்கு ஒரு பவுன் வீதம், அவர் விருப்பப்படி, அவர் எதையாவது வாங்கிக் கொள்ளுவதற்காகக் கொடுத்து வந்தார்கள். அந்த அம்மையார் வாரந்தோறும் கடைக்குச் சென்று தமக்குத் தேவையானவற்றைப் பதினைந்து ஷில்லிங்குக்குள் அடங்கும்படி வாங்கிக்கொண்டு மீதியுள்ள ஐந்து ஷில்லிங்குகளைப் பிச்சைக்காரர்களுக்குக் கொடுத்து விடுவார்! ஒரு முறை அவர் வாங்கிய பொருள்கள் சரியாக ஒரு பவுன் ஆயிற்று! 'பிச்சைக்காரர்களுக்குப் பொருள் கொடுக்கவேண்டுமே' என்று இராணியார் நினைத்தார். உடனே அவர் கடைக்காரரைப் பார்த்து "நான் வாங்கிய பொருள்களில் சற்றேறத்தாழ ஐந்து ஷில்லிங்கு மதிப்புள்ள பொருளை எடுத்துக்கொண்டு ஐந்து ஷில்லிங்கை என்னிடம் கொடுங்கள்" என்றார்.

அப்போது கடைக்காரர், "அம்மா, நீங்கள் அப்படிச் செய்யவேண்டாம். வாங்கியவைகளை எடுத்துக்கொண்டு போகலாம்! பதினைந்து ஷில்லிங்கு இப்போது கொடுங்கள். ஐந்து ஷில்லிங்கை நீங்கள் அடுத்தவாரம் கொடுத்தால் போதும்" என்றார்.

இந்த இடத்தில்தான் தெரிந்தோ தெரியாமலோ கடைக்காரர் விக்டோரியாவுக்குக் கடன் வாங்கும் பழக்கத்தை உண்டாக்கப் பார்த்தார். அந்தப் பழக்கம் ஒட்டிக் கொள்ளுவதற்கேற்ற மனம் விக்டோரியாவினிடம் இல்லை. ஆகவே, விக்டோரியா கடைக்காரரைப் பார்த்து, "அடுத்த வாரம் வரையில் நான் உமக்குக் கடன்காரியாய் இருக்க மாட்டேன்" என்று உரைத்தார்.

சின்னஞ் சிறு பெண்ணாகிய விக்டோரியாவினிடம்

இருந்த 'கடன் படக்கூடாது' என்ற எண்ணத்தை அறிந்த எல்லோரும் ஆச்சரிய மடைந்தனர். அன்று முதல் அந்தக் கடைக்காரர் தம்மிடம் கடன் கேட்பவர்களுக்கு விக்டோரியாவை உதாரணமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்!

ஒரு வாலிபனுடைய நடவடிக்கையைக் கவனிக்க வேண்டுமானால், அவனிடம் கொஞ்சம் பொருளைக் கொடுத்து, அதை அவன் செலவழிக்கும் விதத்தினால், அவன் குணத்தை அளந்துவிடலாம். இதே கருத்துள்ள பழங்கதையும் ஒன்று இருக்கின்றது:

ஒரு பணக்காரர், தமக்கு வேறு வேறு தெருக்களில் இருந்த வீடுகளில் தெருப்பக்கத்திலிருந்த ஒவ்வோர் அறையை தமது இரண்டு பிள்ளைகளுக்கும் ஆளுக்கு ஒன்றாகக்கொடுத்து, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரூபாயையும் கொடுத்து, அவர்களைப்பார்த்து, "இந்த ஒரு ரூபாயைக்கொண்டு வாங்கக்கூடிய எந்தப் பொருளினாலாவது நான் உங்களுக்கு அளித்துள்ள அறைகளை நீங்கள் நிரப்பவேண்டும்" என்று சொன்னார்.

அந்தப் பிள்ளைகளில் மணி என்பவன் ஒரு ரூபாய்க்கு வைக்கோலை வாங்கி அறையில் அடைத்து வைத்துத்தன் தந்தையின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தான். மற்றொருவனாகிய ஆனந்தன் என்பவன் பத்தணாவுக்கு ஒரு விளக்கை வாங்கி அதை, ஓரணாவைக் கொண்டு வாங்கப்பெற்ற எண்ணெயை ஊற்றி எரியச்செய்து வெற்றிலை, பாக்கு, பூ, சந்தனம்: இவைகளை நான்கு அணாவைக்கொண்டு வாங்கி மிச்சமுள்ள இரண்டணாவைத் தன் கையில் வைத்துக்கொண்டு தன் தந்தையின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தான்.

தந்தையார் தமது நண்பர் ஒருவருடன் முதலில் மணியைப் பார்க்கச்சென்றார். அவரை அவன் வரவேற்று,

"நீங்கள் கொடுத்த ஒரு ரூபாயைக் கொண்டு இதற்குமேல் இந்த அறையை நிரப்ப ஒருவராலும் முடியாது" என்று சொன்னான்.

"சரி" என்று சொல்லிவிட்டுத் தந்தையார் தம் நண்பருடன் மாதவனைப் பார்க்கச் சென்றார். மாதவன் தன் தந்தையாரையும் அவர் நண்பரையும் வரவேற்று அவர்களுக்குச் சந்தனம், பூ, பாக்கு, வெற்றிலை ஆகியவைகளைக் கொடுத்து உபசரித்தான். பிறகு, "விளக்கின் வெளிச்சத்தினால் வீடு முழுவதும் நிறைந்து இருக்கிறது" என்று மரியாதையுடன் கூறினான்.

தந்தையும் அவர் நண்பரும் "மாதவனே மதி உள்ளவன்" என்று எண்ணி மகிழ்ந்தார்கள்.

இது ஒரு பழங்கதையாய் இருந்தாலும் "அவரவர்களின் அறிவுக்குத் தக்கபடி பணம் பயன்படுகிறது" என்பதை விளக்குவதற்காகவே நமது முன்னோர்களில் ஒருவர் இதைக் கற்பித்திருக்கின்றார்.

ஆகாயத்திலிருந்துவரும் மழைத் தண்ணீர், சேரும் இடத்திற்கு ஏற்றபடி, சாக்கடை நீராகவும், நல்ல நீராகவும் மாறுவதுபோல, செல்வமும் சேரும் இடத்திற்கு ஏற்றபடி மதிப்பைப் பெறுகின்றது. சிலரிடம் பணம் அழிவு வேலைக்கும் வேறு சிலரிடம் ஆக்கவேலைக்கும் பயன் படுகின்றது.

ஒருவன் தன் கையில் இருக்கும் பணத்தைச் செலவிடும் மாதிரியிலிருந்தே அவன் ஆளப்பிறந்தவனா அல்லது அடிமையாய் இருக்கப் பிறந்தவனா என்பதைத் தெரிந்து கொள்ளலாம். சிக்கனக்காரர் ஆளப்பிறந்தவர் என்றும், செலவாளி பிறருக்கு அடிமையாய் இருக்கப் பிறந்தவர் என்றும் சொல்லலாம்.

ஊதாரித்தனமே பெரும்பாலும் ஒருவனைக் கடன் காரனாக்குகின்றது. தங்கள் நிலைமையை மீறிக் கடன்

படுகிறவர்கள் அதனால் உண்டாகக்கூடிய துன்பத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். அதை அடிக்கடி நினைக்காத வர்கள் கடன் வாங்குவதற்கு அஞ்சமாட்டார்கள். மகிழ்ச்சியும் உயர்வும் சுதந்திர வாழ்க்கை உள்ளவர்களுக்கே கிடைக்கும். சுதந்திர வாழ்க்கையோ கடன்படாதவர்களுக்கே கிடைக்கும். கடன், பாம்பைப் போன்றது. மனிதன் பறவையைப் போன்றவன். பாம்பினுடைய கண் பார்வையில் மயங்கிப் பறவை அதனிடம் சிக்கிக் கொள்ளுகின்றது. கடன் கொடுப்பவர்களின் வார்த்தையினால் மயங்கி, சில சமயங்களில், கடன் வாங்குகிறவர்கள் அவர்களிடம் கடன்பட்டுத் துன்பத்தில் சிக்கிக்கொள்ளுகின்றார்கள். பாம்பின் உதாரணத்தைக் கண்டு கடன் வாங்குகிறவர்கள் சிரிக்கலாம். "அப்படியானால் உங்கள் விருப்பம்போல் நீங்கள் நடக்கலாம்" என்றுதான் என்னால் சொல்ல முடியும். "நான் சொல்வது சரிதான்" என்று உங்களுக்குத் தோன்றுமானால் கடன்படாதீர்கள். கடன் பட்டிருந்தால் அதைத் தீர்க்க முயற்சி செய்யுங்கள். மேலும் கடன் வாங்க முயற்சி செய்யாதீர்கள். வருகின்ற வரும்படியைக் கொண்டே காலந்தள்ளக் கற்றுக்கொள்ளுங்கள். எப்படி எப்படி நடந்துகொண்டால் செல்வம் சேரும்; எப்படி எப்படி நடந்துகொண்டால் செல்வம் அழியும் என்பதை வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் நினைத்துப் பாருங்கள். இவ்வாறு நீங்கள் நடக்க முயற்சி செய்தால் உங்களிடத்தில் செல்வமும் புகழும் போட்டி போட்டுக்கொண்டு வந்துசேரும்.

ஊதாரிகளிடத்தில், மனம்போனபடி செலவு செய்யக் கூடியவர்களிடத்தில், வந்து சேரக்கூடியவை என்ன தெரியுமா? கேவலம், பழிச்சொல், மரியாதைக் குறைவு ஆகிய எல்லாம் வந்து சேரும். சில ஆண்டுகளுக்கு முன்னால் பணக்காரர், மேன்மையுள்ளவர், மரியாதைக் குரியவர்

என்று நீங்கள் நினைத்தவர்களிற் சிலர், இப்போது இருக்கும் இடமே தெரியவில்லையே! அவர்களிற் சிலர் தங்கள் ஊதாரித்தனத்தினால் இருப்பதை ஒழித்துவிட்டு இருக்குமிடந் தெரியாதபடி இருக்கலாம்; சிலர் நல்ல நடத்தையை இழந்து நீதிமன்றத்தின் நடவடிக்கைக்கு உள்பட்டிருக்கலாம்; சிலர் சிறைச்சாலையில் கூட இருக்கலாம்! சில ஆண்டுகளுக்கு முன்னால் இலட்சக் கணக்கில் பொருளைக்கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டிருந்த 'பாங்கர்' களில் பலரை இன்றைக்குக் காணேமே! ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்கிக்கொண்டு தங்கள் காரியாலயத்திற்கு அழகான "கார்" களிலே சென்று கொண்டிருந்த மேன்மை பொருந்திய டைரக்டர்கள், மானேஜர்கள், பொக்கிஷதாரர்கள் முதலிய இன்னும் பல உத்தியோகஸ்தர்களிலே சிலரை இன்றைக்குக் காணேமே! அவர்களிற் பலர் இறந்துவிடவில்லை; நடமாட முடியாத கிழவர்களாகிவிடவில்லை. அப்படியானால் அவர்கள் எங்கே? தலைகால் தெரியாதபடி அவர்கள் செய்த செலவு அவர்களைக் குற்றவாளிகளாக்கிவிட்டது; ஏமாற்றச் செய்தது; கொள்ளை அடிக்கச் செய்தது; இலஞ்சம் வாங்கச் செய்தது -- ஆகவே அவர்கள் மானம் அழிந்து மதி கெட்டுப் போனார்கள்!

இவ்வாறு அவர்கள் ஆனதற்குக் காரணம் என்ன? மரியாதையுள்ள மனிதர்கள் எதற்காக அவமரியாதைக் குள்ளானார்கள்? அவர்களையே கேட்டுப் பாருங்கள். "கடன், கடன், கடன்: அதிலிருந்து மீள்வதற்காக நாங்கள் செய்யத்தகாத செயல்களை யெல்லாம் செய்து விட்டோம். அந்தச் செயல்கள் எங்களை நீதிமன்றத்திலும், சிறைச்சாலையிலும், அவமானத்திலும் சேர்த்துவிட்டன" என்றே அவர்களில் பலர் பதில் சொல்வார்கள்.

கடன் என்பது ஒரு ஜாலவித்தைபோன்றது. ஆகவே,

பலபேர் மயங்கி அதில் மூழ்கிவிடுகிருர்கள். கடனில் சிக்கிக்கொள்ளாமலிருக்கப் பலரால் முடிவதில்லே.

பணவருவாய் உள்ளவர்களுக்கும் சில சமயங்களில் கையில் பணம் இல்லாமற் போகின்றது. ஏன்? நிதானமில்லாத செலவு! கையில் பணமில்லாத போதும் சில வாலிபர்கள் தங்களுக்கு விருப்பமானவற்றை உடனே செய்துவிடவேண்டுமென்று துடிக்கின்ருர்கள்! தாங்கள் விரும்பியது அவசியமா அவசியம் இல்லேயா என்பதைக்கூட அவர்கள் கவனிப்பது இல்லே. கையிலோ பணம் இல்லே. இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் தங்களுக்குப் பணம் வருவதற்கு வழி இருக்கின்றது என்பதை அவர்கள் உணருகின்ருர்கள்! அதுவரையில் அவர்கள் விரும்பிய பொருள் காத்துக்கொண்டிருக்காதே! அப்போது 'கடன்' என்னும் பூனே சந்தடி செய்யாமல் அவர்கள் மனத்திலே நுழைகின்றது. பணம் வரும்வரையில் மூன்று மாதத் தவணையில் எங்கேனும் கடன் கிடைக்குமா என்று அவர்கள் நினேக்கின்ருர்கள். பொறுப்புள்ள உத்தியோகம், சொந்தவீடு இருக்கும்போது பணம் உள்ளவர்கள் கடன் கொடுப்பார்கள் அல்லவா?

இதற்குக் கடன் வாங்கிப் பழகாத மணி என்பவன் யாரைக் கடன் கேட்பது என்று நினேக்கிருன். அப்போது அவன் நண்பன் மாயன் என்பவன் ஒருவன் வருகிருன். அவன் எவ்விதப் பொறுப்பும் இல்லாதவன். கடன் வாங்கும் விதத்தை ஒரு கலே எனக் கற்றவன். அந்தக் கலே எவ்வளவு தூரம் செல்லுமோ அதில் அவ்வளவு தூரம் அவன் சென்றுவிட்டவன்! இப்போது அவன் கலேக்கு மதிப்பில்லே. ஆனல் அவனுக்குப் பணம் வேண்டும். அவன் மணியை நெருங்குகின்ருன். மணி மாயனிடம் தன் எண்ணத்தைக் கூறுகின்ருன். மாயன் கடன் வாங்குவதற்கு ஒரு வழியைக் காட்டுகின்ருன். பிறகு இருவரும்

ஒரு மார்வாரியினிடம் செல்கிறார்கள். அந்த மார்வாரி இவர்களை மறுநாள் வரச் சொல்லிவிட்டு அதற்குள் அவன் மணியின் நிலையை அறிந்துகொண்டு அவனுக்குக் கடன் கொடுக்கலாமென்று தீர்மானித்துக்கொள்கிறான்.

மறுநாள் மாயன் தானே மணியின் வீட்டுக்குச்சென்று மணியை அழைத்துக்கொண்டு மார்வாரியினிடம் செல்கின்றான். செல்லும்போது மாயன் தனக்கும் கொஞ்சம் பணம் தேவை என்றும், ஒரே மாதத்தில் திருப்பிக் கொடுத்துவிடத் தன்னால் முடியும் என்றும் கூறுகிறான். ஆகவே, மாயனுக்கும் சேர்த்துக் கடன் வாங்கலாம் என்று மணி தீர்மானிக்கின்றான்! பிறகு இருவரும் மார்வாரியினிடம் செல்லுகிறார்கள். "ஆயிரம் ரூபாய் தேவை" என்று மணி கூறுகிறான்.

உடனே மார்வாரி, "உங்களை நம்பி எவ்வளவு தொகை வேண்டுமானாலும் கொடுக்கிறேன். ஆனால், ஆயிரம் ரூபாய் வேண்டுமென்றால் இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டதாக நீங்கள் கடன் பத்திரம் எழுதித் தர வேண்டும். நீங்கள் சொல்லியதுபோல மூன்று மாதங்களில் பணம் திரும்பிவிடவேண்டும். மூன்று மாதத்திற்குரிய வட்டியையும் இப்போதே நான் எடுத்துக் கொள்ளுவேன். நீங்கள் மூன்று மாத காலத்திற்குள் பணத்தைக் கொடுத்துவிட்டால் நான் ஆயிரம் ரூபாயுடன் நின்றுவிடுவேன். இல்லாவிட்டால் நீங்கள் எனக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும். நன்றாக நான் சொல்லியதைக் கவனித்துக்கொண்டு கடன் வாங்குங்கள்' நான் உங்களைக் கடன் என்னிடம் வாங்கும்படி கட்டாயப் படுத்தவில்லை. பிறகு 'மார்வாரி கெடுத்து விட்டான்' என்று சொல்லாதீர்கள்." என்று கூறினான்.

இவர்களுக்குப் பணம் வேண்டும். இருந்தாலும் மணி மயங்கினான். மாயன் அவனைத் தூண்டினான். பிறகு

இரண்டாயிரத்திற்குக் கடன்பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டு, ஆயிரம் ரூபாயில் வட்டிப் போக இருந்த தொகையை மணி வாங்கிக் கொள்ளுகிருன். பிறகு அதில் பாதியை, மணிக்குக் கடன்பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டு மாயன் வாங்கிக் கொள்ளுகிருன். மணியைப் போன்றவர்களைக் கொண்டுபோய் மார்வாரியினிடம் விடுவதே மாயன் வேலையாதலால் மாயனின் செய்கையை மார்வாடி காணுதவன்போ லிருந்துவிடுகின்ருன். மார்வாரியின் கடையிலிருந்து வெளியில் வந்தவுடன் மாயன் மணியினிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தன் வழியில் செல்கின்ருன்.

மணி, தன் கையிலிருந்த பணத்தைக் கொண்டு தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிருன்.

மெள்ள மெள்ள மூன்று மாதம் சென்றது. மாயன் போன வழிதெரியவில்லை. மணிக்கு மூன்று மாதத்திற்குள் வரக்கூடிய பணம் வரவில்லை. ஆகவே மணியினுல் மார்வாரியினிடம் தன் நாணயத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. மணி இரண்டாயிரம் ரூபாய் வாங்கியதாகவே மார்வாரி வழக்குத் தொடுத்துவிட்டான்; தீர்ப்பாயிற்று! தன் வீட்டை மணி மார்வாரிக்கு அடகுவைத்தான்! மேலும் கடன்! பிறகு, அந்த வீடு மணியினிடம் திரும்பவே இல்லை!

இவ்வாறு எத்தனையோ நிகழ்ச்சிகள் நாடெங்கும் நடைபெறுகின்றன. பொறுப்பற்றவர்கள் இவ்வாறு நடந்தால் துன்பம் அவர்களுடன் தொலைகின்றது. கலியாணம் செய்துகொண்டு குடும்பத்தை நடத்துகிறவர்கள் இவ்வாறெல்லாம் நடந்தால் துன்பம் அவர்களோடுமட்டும் தொலைந்து விடுவதில்லையே! அந்தத் துன்பம் அவர்களுடைய மனைவி, மக்கள், மனைவியின் கர்ப்பத்திலுள்ள குழந்தை ஆகிய இவர்களையும் தொடருமே! ஒருவருடைய தீய நடத்தையினுல் இவ்வளவுபேர் துன்பப்படலாமா?

நம்முடைய நன்மையில் அக்கறையில்லாதவர்கள் நம் பணத்தைக் கொண்டு இன்பம் அனுபவிப்பதும், அவர்களுக்காகக் கடன்பத்திரங்களில் நாம் கையெழுத்து போடுவதும், அந்தப் பணத்தை நாம் கொடுப்பதும், அதனுல் நம்மிடத்தில் அக்கரை உள்ள நமது மனைவி மக்கள் துன்பப்படுவதும் நல்லதா? கண்டபடி செலவு செய்கிறவர்கள் இதைக் கவனிக்க வேண்டும்.

ஆகவே, வாழ்க்கையின் அடிப்படையிலேயே ஒவ்வொருவரும் சில செய்திகளைக் கவனிக்கவேண்டும்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் கடன் வாங்கவே கூடாது.

கொடுப்பதற்குக் கொஞ்சமும் வழி இல்லாதபோது முக்கியமான காரணத்திற்காகப் பணம் தேவையாய் இருந்தாலும் கடன் வாங்குவது தவறுதான்!

தவறிக் கடன் வாங்கிவிட்டால் எப்பாடுபட்டாவது அந்தக் கடனைத் தீர்த்துவிட வேண்டும்.

தகுந்த பொறுப்பு இல்லாமல் யாருக்கும் கடன் கொடுக்காதீர்கள். கொஞ்சம் சந்தேகம் தோன்றினுலும் கடன் கொடுக்காதீர்கள்.

எவ்விதப் பொறுப்பும் இல்லாதவர்களுக்குக் கடன் கொடுக்கவே கூடாது. கொடுக்க வேண்டுமென்று உங்கள் மனத்தில் இரக்கந் தோன்றினுல் உங்களால் முடிந்த அளவுக்கு இனமாகக் கொடுத்து விடுங்கள். அதனுல், அவர்கள் திருப்பிக் கொடுக்கவில்லையே என்ற வருத்தம் ஏற்படாது அல்லவா?

எவருக்காகவும் பணப் பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ளாதீர்கள். ஏற்றுக் கொண்டால் அவர்கள் தவறிய போது அந்தப் பொறுப்பு உங்கள் தலையில் விழும்!

எதைச் செய்தாலும் நீங்கள் கடன்படாமல் உங்களுக்குள்ள சக்தியைக் கொண்டு செய்ய வேண்டும்.

இதனுல் உங்கள் செயல் கவலை இல்லாத செயலாய் இருக்கும்.

கடன் வாங்குதல் என்னும் பழக்கமே ஒருவருக்குள்ள விரோதிகளில் கொடிய விரோதியாகும். "கடன் வாங்கப் போகின்றவர் துன்பத்தை வாங்கப்போகின்ருர்" என்பது ஓர் ஆங்கிலப் பழமொழியாகும். துன்பத்தை மட்டுமல்ல, அவர் சில சமயங்களில் அவமானம், மரியாதை குறைவு, அலட்சியம் ஆகிய இவைகளையும் வாங்கப் போகின்ருர் என்றும் சொல்லலாம்.

நாம் யாருக்கும் கடன்காரராய் இருக்கக் கூடாது. அதுதான் சட்டம். தாய் தந்தையர்களுக்கு மக்களும், முதலாளிகளுக்கு வேலைக்காரர்களும், கணவன் மனைவிக்கும், தந்தை தம் மக்களுக்கும், வாங்குகிறவர் கொடுப்பவருக்கும் நீடித்துக் கடன்காரர்களாய் இருக்கக்கூடாது. இருந்தால் மரியாதை குறையும். கடன் வாங்கியவர் கொடுத்தவருக்குக் கடமைப்பட்டவர் ஆகின்ருர். நீங்கள் எவருக்கும் கடமைப்பட்டவராய் இருத்தல் கூடாது. அப்படியானுல் நீங்கள் கடன்படக்கூடாது.

கடன்படாமல் இருப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? சிக்கனம் என்னும் விதையை நாம் விதைக்க வேண்டும். சிக்கனம் என்னும் விதை முளைத்து 'நாம் எவருக்கும் கடமைப்பட்டவர்களல்ல' என்னும் சுதந்திர எண்ணத்தை நமக்கு உண்டாக்கும். அந்த எண்ணந்தான் உயர்வையும் மகிழ்ச்சியையும் நமக்கு அளிக்கும். சிக்கனத்தினுல் சில சமயங்களில் ஏற்படக்கூடிய குறைபாடுகளைப் பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் கடன் தொல்லையினுல் ஏற்படக்கூடிய பெருந்துன்பத்தை அனுபவிக்க நேரலாம். தினந்தோறும் வருமானம் வரக்கூடிய ஏதாவதொரு வேலையை செய்துகொண்டிருக்கின்றவர், சிக்கனக்காரராய் இருந்தால், ஒருபோதும் அவர் கடன்காரராகமாட்டார்.

"பிசாசு என்ருல் பயப்படுவதுபோல கடன் என்ருல் நீ பயப்படவேண்டும்" என்று "பீச்சர்" என்பவர் தம் மகனுக்குக் கூறுகின்ருர். "பணத்தைக் கடன் வாங்காமல் இருப்பதுமட்டும் போதாது. பண்டங்களையும் கடன் வாங்கக்கூடாது. கடனுக வாங்கும்போது வாங்கும் பண்டம் சிறந்ததாய் இராது. கடைக்காரர் ஏமாந்தவனல்லர்! விலையும் அதிகமாகவே இருக்கும்" என்றும் அவர் கூறுகின்ருர். கடன்காரர் எப்போதும் தமக்குத் தாமே எஜமானராய் இருக்கமுடியாது. கடன் கொடுத்தவர் தயையினுல் அவர் வாழவேண்டும்; சில சமயங்களில் வக்கீல்களின் பின்னுல் ஓடவேண்டும்; வீட்டின் பக்கங்களில் உள்ளவர்களின் தூற்றுதலுக்கு இரையாக வேண்டும். அவர் வீடே சில சமயங்களில் அவருக்குச் சிறைச்சாலையாகும். அவர் பெருமை காற்றில் பறக்கும். அவர் வீட்டிலுள்ளவர்களே அவரிடம் மரியாதைக் குறைவுடன் நடப்பார்கள்.

"புதிதாக வாழ்க்கையைத் தொடங்கும் வாலிபர்கள் கடன்படாமல் வாழப் பழகவேண்டும்" என்று "பி. டி. பார்னம்" என்பவர் கூறுகின்ருர். அவர் மேலும் கூறுகின்ருர்: "கடனைப்போல ஒருவருடைய பெருமையைக் குறைப்பது வேறு ஒன்றும் இல்லை. அதில் மூழ்கியவர்கள் தலைகாட்டுவது கடினந்தான். பத்து வயதிலிருந்தே கடன் வாங்கப் பழகியவர்களின் வாழ்க்கை உருப்படுவதில்லை. கடன்பட்டு மேலும் மேலும் ஆடைகளை வாங்கி உடுத்திக்கொண்டு ஆனந்தப்படுகிறவர்களும் இருக்கிருர்கள். வாங்கிய துணி கிழிந்துவிடும். அதனுல் ஏற்பட்ட கடன் தீருவதில்லை. கடன் ஒருவருக்குள்ள தன் மதிப்பை அழித்துவிடுகிறது. சம்பாதித்த சம்பாதனையைக் கொண்டு உணவும் உடையும் வாங்கவேண்டும். இதுதான் முறை. ஆனுல் சிலர் கட்டிக் கிழித்துவிட்ட துணிக்காகவும்,

உண்டு தீர்த்துவிட்ட உணவுப் பொருளுக்காகவும் கொடுக்கவேண்டிய கடனைத் தீர்ப்பதற்கு உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள், கடனைத் தீர்ப்பதற்காகத் தாங்கள் உழைக்கும்போது தங்களுக்குத் தேவைப்படும் உணவுக்காகவும், உடைக்காவும் என்ன செய்வார்களோ, தெரியவில்லையே! இலாபத்தைக் கருதி, சம்பாதனையைக்கருதி, கடன் வாங்கிக் கடன் கொடுக்கும் வியாபாரிகளை இங்கே நான் குறிப்பிடவில்லை. கடன் வாங்கிப் பணத்தை வீணாகச் செலவிடுகிறார்களே, அவர்களைப்பற்றியே இங்கே நான் பேசுகிறேன். ஐந்து ரூபாய் கடன் வாங்கி அதைக் கொண்டு பத்து ரூபாய் சம்பாதிக்கிறவர்களையும் நான் இங்கே கடன்காரர்களென்று சொல்லமாட்டேன். ஒரு குடியானவன் தன் மகனைப் பார்த்து, 'மகனே, உன்னை நம்புகிறவர்களிடத்தில்கூட நீ கடன் வாங்காதே! நிலத்திலுள்ள பயிருக்குப் போட வேண்டிய "எரு" வாங்குவதற்குப் பணமில்லையானால் கடன்வாங்கு. எரு போட்டதனால் ஏற்பட்ட அதிக விளைச்சலைக்கொண்டு கடனைக் கொடுத்துவிடலாம்' என்றான். இப்படிக் கடன் வாங்குகிறவர்களையும் கடன்காரர்களென்று நான் குறிப்பிடமாட்டேன். வீணாகக் கடன்வாங்கி வீண்வழிகளில் பணத்தை இறைப்பவர்களையே குறிப்பிடுகிறேன். அவர்களே வாழத் தெரியாத கடன்காரர்கள்."

இவ்வாறு "பார்னம்" என்பவர் கூறும் உபதேசம் பொன்போலப் போற்றத்தக்கதல்லவா?

முன்னே ஓரிடத்திலே நான் சொல்லியபடி பணத்தை நாம் அடக்கி ஆளப்பழகவேண்டும். அது நம்மை அடக்கி ஆள விட்டுவிட்டால் அது நம்மைக் கெடுத்துவிடும். 'பணம் நம்மை ஆளுவது, நாம் பணத்தை ஆளுவது' என்றால் என்ன? பேராசைகொண்டு பணத்தைச் சம்பா

திப்பதற்காக நாம் எதைவேண்டுமாலும் செய்யும்போது பணம் நம்மை ஆளுகிறதென்று தெரிந்துகொள்ள வேண்டும். நேர்மையான வழியில் நின்று, அந்த வழியில், முடிந்தவரையில் பொருளைத் தேடும்போது நாம் பொருளை அடக்கி ஆளுகிறோம் என்பது கருத்து. பேராசையில்லாமல், பணத்தை நியாயமான வட்டிக்குத் தகுந்த இடத்தில் தகுந்த பொறுப்புடன் கொடுத்துவையுங்கள். அங்கே அது ஒரு நல்ல வேலைக்காரனைப்போல வட்டி என்னும் பெயரால், உங்கள் நன்மைக்காக, இரவிலும் பகலிலும், மழையிலும், பனியிலும் வளர்ந்துகொண்டே இருக்கும்.

இதனாலும், கடன்கொடுத்தவர்கள் அடையக்கூடிய நன்மையையும், வாங்கியவர்கள் அனுபவிக்கக்கூடிய தீமையையும் நாம் நன்றாகத் தெரிந்து கொள்ளுகிறோம் அல்லவா?

வீண் துதிபாடும் நண்பர்களின் வார்த்தையில் மயங்கிக் கடன்வாங்கிச் செலவு செய்யும் வாலிபர்கள், வாங்கிய கடனைத் தீர்ப்பதற்காகவே உழைக்கத் தொடங்கித் தங்கள் உடம்பிலுள்ள சக்தியை எல்லாம் செலவிடுவது எவ்வளவு வருந்தத்தக்க செயல் என்பதை உணருங்கள்!

"பசி, குளிர், கிழிந்த உடை, கடின உழைப்பு, பிறருடைய சந்தேகத்திற்கு ஆளாதல், அநியாயம், தள்ளப் படவேண்டியதை ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய இவைகளெல்லாம் துன்பத்தைத் தரக்கூடியவைகளே! ஆனால், இவைகளைப் பார்க்கிலும் துன்பத்தைத் தரக்கூடியவை கடன், கடன், கடனே! 'கடன்வாங்கி உயர்ந்த உணவை உண்பதைப் பார்க்கிலும் கடன் வாங்காமலே கஞ்சி குடிப்பது சிறப்பாகும்' என்று "ஒரேஸ்கிரீலி" என்பவர் கூறுகின்றார். உண்மைதானே!

"டோக்ளஸ் டபள்யூ ஜரால்டு" என்பவர் சொல்வதைக் கவனியுங்கள் :

"கடன் என்னும் தகப்பன் பலவிதத் துன்பத்திற்கு இடமாயுள்ள பிள்ளைகளைப் பெற்றுக் கொடுக்கின்றான். அற்பத்தனம், தன்மானம் இல்லாமை, கவலை, உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுதல், இவைகள் கடன் என்னும் தகப்பனுடைய சில பிள்ளைகள். கடனில் சிக்கிக்கொண்டவர்களிடம் இந்தப் பிள்ளைகளைப் பார்க்கலாம். இந்தப்பிள்ளைகள் எவரிடமிருக்கின்றனவோ அவருடைய நல்ல முகத்தில் சீக்கிரத்தில் சுருக்கம் விழும். அவருடைய இருதயத்தில் கத்தியினால் குத்துவதுபோன்ற வேதனை இருக்கும். நல்லவராய் இருந்த மனிதர் நம்ப முடியாத தந்திரக்காரராய் மாறிவிடுவார். இப்படி இன்னும் எத்தனையோ! ஆனால் கடன் இல்லாமல் வாழவேண்டுமென்று தீர்மானித்துச் சிக்கனத்துடன் வாழ்க்கையை நடத்துகிறவர்களுக்குத் தண்ணீரும் இன்பம் உள்ளதாய் இருக்கும்; சாதாரண உணவும் சிறந்த உணவாகத் தோன்றும்; சாதாரண உடைகளே சிறந்த உடைகளாகும். அவர்கள் வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தூரத்தில் எவரோ வந்தால் கடன் கொடுத்தவர்களோ என்று நினைத்து அவர்கள் பயப்படவேண்டியதில்லை; தெருக் கதவை யாரோ தட்டினால் கடன்காரரோ என்று கவலைப் படுவதற்குக் காரணம் இல்லை. அவர்கள் அச்சமில்லாமல் எங்குவேண்டுமானாலும் செல்வார்கள்! அவர்கள் மனத்தில் தாங்கமுடியாத அச்சத்தின் கனம் இருக்காது."

இந்த வார்த்தைகளெல்லாம் இதைப் படிப்பவர்களில் சிலருக்காவது அனுபவமாய் இருக்கலாமே!

"குளம் வெட்ட, ஆஸ்பத்திரிகட்ட, பள்ளிக்கூடம் அமைக்கக் கடன் வாங்கலாம்" என்று சிலர் சொல்வதுண்டு. அரசாங்கம் கடன் வாங்கி இந்த வேலைகளைச்

செய்யலாம். தனிப்பட்ட மனிதர்கள் தங்கள் கையில் பணம் இருந்தால்தான் இந்த வேலைகளை தொடங்கலாம், அல்லது பலரிடமிருந்து இனமாகப் பொருளை வாங்கியும் இதைச் செய்யலாம். தனிப்பட்டவர் எவரும் தனிப்பட்ட முறையில் கடன் வாங்கி இந்த வேலைகளைத் தொடங்கக் கூடாது. கையில் பொருள் இல்லாமல் கடன் வாங்கு கிறவர் பிறகு அதை எப்படித் திருப்பிக் கொடுப்பார்? சிலரைத் தவிர நினைக்கின்றபடி பலருக்குப் பல வேலைகள் நடைபெறுவதில்லையே!

செயின்ட்பால் என்பவர் சிறந்த தீர்க்கதரிசி. அவர், "நீ எந்த மனிதனுக்கும் கடன்காரனாய் இருக்காதே" என்று சொல்லுகிறார். ஆகவே ஒவ்வொருவரும் கடன் படாமல் சிக்கனத்துடன் வாழ்ந்தால்தான் கையில் பொருள் சேரும்.

"பணமுண்டானால் மணமுண்டு" 'கையில் உண்டானால் காத்திருப்பார் ஆயிரம்பேர்.' 'இல்லாதவனே பொல்லாதவனே.' 'ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.' 'கைப் பொருளற்றால் கட்டுக்கழுத்தியும் பாராள்' 'பணம் பந்தியிலே குலம் குப்பையிலே' இன்பமும் அறமும் கீர்த்தியும் உறவும் நினைத்தது முடித்தலும் யாருக்குண்டு? திரளாகப் பணம் குவித்தவர்களுக்கே உண்டு. இல்லாதவர்கள் உலகத்திலே நடைப்பிணம் ஆவார்கள். ஆதலால், யாவரும் செல்வத்தை இடையறா முயற்சியோடு வருந்தித் தேடல் வேண்டும்."

என்று சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலே தலைமைத் தமிழ்ப் பேராசிரியராய் இருந்த திருமணம் செல்வக் கேசவராய முதலியார் எம். ஏ. கூறுகின்றார்கள். அவர்கள் கூறுவது முற்றும் உண்மை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்?

இன்னும் அவர் சொல்வதைக் கவனியுங்கள்.

"நாம் தேடும் பொருள் முழுவதையும் எவ்வாற்ருலும் அழித்தலாகாது. வருவாயின் அளவிலும் செலவின் அளவு சுருங்குதல் வேண்டும். அது இயலாதாயின் வரவுக் கொப்பவாயினும் செலவிடுதல் வேண்டும். எவனிடத்தில் வருவாயிற் செலவு மிகுமோ. அவன் வாழ்க்கை உள்ளது போலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத்தோற்றமும் இல்லாமற் கெடும்,"

இன்னும் கேளுங்கள் அவர் சொல்வதை! "பண்டங்களைப் பாழாக்காமல், வீண் செலவு செய்யாமல், செய்த மட்டில் சீரும் செட்டுமாகச் செய்யும் குடித்தனப் பாங்கைக் கண்டு எல்லோரும் நன்கு மதித்து மெச்சுவர்."

பின்னும் அவர் கூறுகின்ருர்:

"உத்தியோகத்திற்குத் தகுந்த சுகம் தேடாமல், காலத்திற்கேற்ற கோலம் கொள்ளாமல், குடுமிக் கேற்ற கொண்டை போடாமல், வீம்புக்கு வேடங்கொண்டு வீண் விபரீதத்தால் பேதையர் வீண் செலவு செய்ய உடன் படுவர். இங்ஙனம் "டால்டமாரம்' போட்டுக் கொண்டு திரியும் டாம்பிகர்களுடைய கதி கடன்பட்டுக் கடை கெடுவதே ஆகும்"

இன்னும் அவர் எழுதிய ஒரு சில வரிகளைக் கவனிப் போம்!

"வரவுக்கு மேற்பட்ட செலவு செய்யப் புகுவோர், களவு முதலிய பாவச் செயல்களைச் செய்யப் புகுவர்: அல்லது கடன்படத் தலைப்படுவர். கடன்படத் தலைப் பட்டவர், 'கடனேடு கடன், கதம்பப் பொடி காற்பணம்' என்று மேலும் மேலும் கடன் வாங்கி, 'இதை எப்படித் தீர்க்கப் போகிறேம்' என்றெண்ணுமல், கண்ணை மூடிக் கொண்டு செலவிடுவர். வரவு கொஞ்சமும் வலிப்பு மெத்தவுமாய்க் கடன்பட்டவர்கள் பின்னல் கடனைக் கொடுக்க வழி இல்லாமல் கலக்கமடைவர்."

கல்வியும், அறிவும், அனுபவமும் நிறைந்த முதலியாரவர்கள் சொல்லியவைகளைச் செலவாளிகள் கவனிப்பார்களாக.

உலகமுழுவதிலும் உள்ள மக்கள் குலத்தினாலும், நலத்தினாலும், நிலத்தினாலும், நிறத்தினாலும் பலப்பல பெயருடன் பலப்பல விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அந்தப் பிரிவுகளெல்லாம் பொருந்தாப் பிரிவுகள் என்றே சொல்லலாம். "உலகத்திலுள்ள மக்களையெல்லாம் கடன் கொடுக்கின்றவர்; கடன் வாங்குகின்றவர்" என்னும் இரண்டே பிரிவுகளில் அடக்கிவிடலாம். இந்த இரண்டு பிரிவுகள் இல்லாத நாடோ இனமோ இல்லை. இதனால்தான் எந்த நாட்டிலும் கடன் வாங்குவதையே தொழிலாகக் கொண்டவர்களையும், நியாயமற்ற அதிக வட்டிக்காகக் கடன் கொடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்களையும் மக்கள் வெறுக்கின்றார்கள்.

கடன்படுவதைக் குறித்துச் சாத்தூர் வழக்கறிஞரும், தமிழ்ப் புலமையும் தமிழாராய்ச்சிப் புலமையும் நிறைந்தவருமாகிய திரு. கந்தசாமி முதலியாரவர்கள் எம். ஏ. சொல்வதையும் இங்கே கவனிப்போம் :

"பெருந் திரளான நிதியத்தைக் குவியல்போல் சிரட்டல் ஒருவருக்கு இயலாததாய் இருக்கலாம். ஆனால் யாரும் கடன் கொள்ளாது இருக்கலாமே! 'தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்' எனக் கூறினர் ஆன்றோரும். தாளாற்றலால் பெற்ற பொருளைத் துய்த்தல் சரி. அதனை அறவும் செலவிட்டு மேலும் கடன் கோடல் சரியா? சரியன்று, அறமுமன்று"

"தமிழ்நாட்டு மக்கள் பெரும்பாலும் தத்தம் வரவும் செலவும் நோக்காதும், மனம்போம் நெறியில் சென்றும், பொருளைச் செலவிட்டுக் கடன்பட்டு உழலுகின்றார்கள்"

"நம் நாட்டு மக்கள், மணம் என்றால் ஆயிரமும்,

விழவு என்ருல் ஐயாயிரமும் எண்ணுது செலவிட்டு இறுதியில் இடும்பை யிற்படுகின்ருர்கள். சடங்குங்கள் வேண்டும்; ஆனுல், அச்சடங்குகளுக்கு ஓர் எல்லேயும் வேண்டும். சடங்கு, செய்வானது பொருளளவிற்கு ஏற்றபடி செய்யப்படல் வேண்டும்; பயனில் சடங்கு களைப் போக்குதல் வேண்டும்."

"தமிழ் நாட்டு மக்கள் பசித்திருந்தால், அஃது அம்மக்களின் குறை; அது மடிமையின் பிள்ளே."

"இன்பத்தை விரும்புவோர் கடன் வாங்காதிருத்தல் வேண்டும்; பொருளேச் செட்டாகச் செலவு செய்தல் வேண்டும்."

இவ்வாறு பேரறிஞராகிய முதலியாரவர்கள் கூறிய கருத்துரைகள் பொன்னே போலப் போற்றத்தக்கனவே!

திருக்குறள் அறத்துப்பாலுக்கு அரியதொரு விரிவுரை எழுதிய பேரறிவாளர் நாகை. சொ. தண்டபாணி பிள்ளே அவர்கள் சொல்லுகின்ருர்கள் :

"தங்களால் திருப்பிக் கொடுக்க இயலாத அளவில் கடன்படுவோர், பண ஆசை காரணமாக, சூதாட்டத்திலும் அதுபோன்ற பிறவழிகளிலும் செல்கின்றனர்; சென்று துன்புறுகின்றனர்!"

பிள்ளே அவர்களின் இந்தக் கருத்துச் சரிதான் என்பதில் சற்றும் ஐயமில்லே.

வாழ்வதற்கு வழி

* *

13

"பணத்தைச் சேர்ப்பதற்குத் தெளிந்த அறிவு தேவை" என்று பி. டி. பர்னம் என்பவர் கூறுகின்றார். பின்னும் அவர் சொல்லுகின்றார்: "இரண்டும் இரண்டும் நான்கு என்பது உண்மை! நாம் தீர்மானிக்கின்ற எண்ணங்களும் அவ்வளவு உண்மை உள்ளதாய் இருக்கவேண்டும். நமது திட்டங்களெல்லாம் நன்றாக ஆலோசிக்கப் பெற்றதாய் இருக்கவேண்டும். ஒரு செயலைச் செய்யத் தொடங்குவதற்கு முன் நாம் அந்தச் செயலால் உண்டாகக் கூடிய நன்மை தீமைகளை நன்றாய் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆலோசிப்பதற்கு ஏற்ற அறிவில்லாதவர்கள் வியாபாரத் துறையிலோ உத்தியோகத் துறையிலோ மேன்மை பெறமாட்டார்கள். முன்னால் எண்ணிப் பார்க்காமல் போகப்போகப் பார்த்துக்கொள்ளலாம் என்று ஒரு வேலையைத் தொடங்குகிறவர்கள், எவ்வளவு புத்தி சாலிகளாய் இருந்தாலும், அவர்கள் தவறு செய்யக்கூடும். செய்யவேண்டிய வேலை நெருங்குகிறவரையில் சும்மா இருந்துவிட்டு வேலை நெருங்கியவுடன் அவசரம் அவசரமாக அதைப்பற்றி நினைக்கத் தொடங்குகிறவர்களும் சரியான தீர்மானத்திற்கு வரமுடியாமற்போகலாம்."

நாம் எந்த வேலையைச் செய்யத் தொடங்கினாலும் அந்த வேலை சிக்கனத்தை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்க வேண்டும். சிலர் ஒரு வேலையைச் சிக்கனத்துடன் நன்றாகச் செய்யக் கற்றிருக்கின்றார்கள். அதிகப் பொருளைச் செலவழித்தும் சிலர் செய்யும் வேலைகள் சிறப்படைவதில்லை. அந்தப் பொருளில் பாதி அளவே

செலவிட்டுச் சிலர் செய்யும் வேலைகள் மிகவும் சிறப்புள்ள தாய் இருக்கின்றன! ஒவ்வொரு செயலையும் கவனித்துச் செய்யக்கூடியவர்கள் செய்யும் செயல் மேன்மை உள்ள தாகவே இருக்கும். சிக்கனத்துடன் வாழவேண்டுமென்று நினைக்கின்றவர்களே தாங்கள் செய்யும் ஒவ்வொரு செயலை யும் கவனித்துச் செய்வார்கள். அதனால் அவர்களுக்குப் பொருளை நல்லவழியில் சேர்க்கவும் செலவிடவும் தெரியும்.

"இவ்வளவு அருமையான புத்தகங்களையெல்லாம் நீ எவ்வாறு வாங்கினாய்?" என்று கருணாகரன் தன் நண்பன் ஆனந்தனைக் கேட்டான்.

"நீ, ஆறு ஆண்டுகளுக்குமுன்னால் 'தினந்தோறும் இரண்டு முறையாவது காப்பி ஒட்டலுக்குப் போக வேண்டும்; வாரத்தில் ஒரு முறையேனும் 'சினிமா' பார்க்கவேண்டும்' என்று எனக்குச் சொன்னாய். அன்று முதல் நான் சேர்த்த பணத்தைக் கொண்டு இந்தப் புத்தகங் களை வாங்கினேன்" என்றான் ஆனந்தன்.

அதைக் கேட்டவுடன் கருணாகரன், "உன் கருத்து எனக்கு விளங்கவில்லை. சினிமாவும், காபி ஒட்டலும் உன்னிடம் எப்படிப் பணத்தைச் சேர்த்திருக்க முடியும்!" என்றான்.

உடனே ஆனந்தன், "ஏன் சேர்த்திருக்க முடியாது? நீ இரண்டு வேளையும் என்னைக் காபிஒட்டலுக்குப்போகச் சொன்னாய்; நான் ஒரு வேளைதான் காபி ஒட்டலுக்குச் சென்றேன், மற்றொரு வேளை போகாமையினால் நான்கு அணாவேனும் மிச்சமாய் இருக்கவேண்டுமல்லவா? சினி மாவுக்கு நீ என்னை வாரந்தோறும் போகச் சொன்னாய்! நான் மாதத்தில் ஒரே ஒரு முறைதான் செல்கின்றேன். அதனால் இரண்டு ரூபாயாவது மிச்சப்படவேண்டுமல்லவா? அந்தக் கணக்குப்படி நான் பொருளைச் சேர்த்தேன்" என்றுரைத்தான்.

"இருக்குமா! நீசொல்வது உண்மையாய் இருக்குமா? நீ வாங்கியுள்ள புத்தகங்களெல்லாம் ஐந்நூறு ரூபாய்க்கு மேலும் விலை பெறத்தக்கதாய் இருக்குமே!" என்ருன் கருணுகரன்.

"இருக்கட்டுமே! தினம் ஒரு வேளை காபி ஓட்டலுக்குப் போகாமல் இருப்பதால் நான்கு அணு மிச்சம் என்ருல் மாதம் ஏழரை ரூபாய் மிச்சமாகவில்லையா? அதனுல் ஆண்டு ஒன்றுக்குத் தொண்ணூறு ரூபாய் சேரவில்லையா? ஆறு ஆண்டில் ஐந்நூற்று நாற்பது ரூபாய் மிச்சமாகிறதே! இதனேடு சினிமாவுக்குப் போவதைக் குறைத்துகொண்டதனுல் ஏற்பட்ட மிச்சம் வேறு சேருகிறதே!" என்ருன் ஆனந்தன்.

இதைக் கேட்டவுடன் கருணுகரன் திடுக்கிட்டான்! ஊதாரியாகிய அவனுக்கு ஆனந்தனுடைய செயல் அதிசயமாகத் தோன்றியது வியப்பல்லவே!

இது கதை அல்ல; நடந்ததுதான்! ஏன் எத்தனையோ பேர் வாழ்க்கையில் இவ்வாறு நடந்து பொருளைச் சேர்க்கின்ருர்கள்.

ஒருவர் எண்ணுமல் செலவழிக்கும் சிறுசிறு தொகைகள் வேறு ஒருவரிடம் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்து சேர்ந்து பெருந்தொகைக்குக் காரணமாகின்றன.

சிக்கனக்காரர்கள் காலத்தையும் பணத்தையும் கருத்துடன் கவனிப்பார்கள்.

"காலத்தையும் பணத்தையும் வீணுக்காதிர்கள்.
காலத்தையும் பணத்தையும் தக்க வழியில்
உபயோகப்படுத்துங்கள்."

என்று "பிராங்க்ளின்" என்பவர் கூறுகின்ருர்.

"ஒவ்வொருவரும் தங்கள் சொந்தச் செலவையும் கணக்கு எழுதிச் செலவிட வேண்டும். அதனுல் அவர்களுக்கு வாழ்க்கையில் நல்ல அனுபவம் ஏற்படக் கூடும்."

"இருக்கும் பொருளை வைத்துக் கொண்டு மேலும் பொருள் தேடாமல் தம்மால் கவலை இல்லாமல் வாழமுடியு மென்று நினைக்கின்றவர் தரித்திர நிலையை அடைவதற்கு அதிக காலம்ஆகாது" என்று பேரறிஞராகிய டாக்டர் ஜான்சன் என்பவர் கூறுகின்ருர்.

"அறிவுள்ளவள் ஆடம்பரக்காரியாய் இருக்க மாட்டாள். அவள் சிக்கனத்தையே விரும்புவாள். எந்தப் பொருளையும் வீணக்குவ தென்ருல் அவள் பயப்படுவாள். இருக்கும் உணவுப் பொருள் குறிப்பிட்ட காலம் வரையில் வளர்ந்து வர வேண்டு மென்பதில் அவள் கருத்துள்ள வளாய் இருப்பாள்" என்று "ப்ரைடன்" என்பவர் கூறுகின்ருர்.

எந்த நல்ல பழக்கமும் இளமையிலிருந்தே வளர்ந்து வர வேண்டும்.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' தொடர்ந்து வருமே!

"இளமையில் என்னென்ன குணநலன்கள் நம்மிடம் காணப்படுகின்றனவோ அவற்றிற் கேற்ப நம்முடைய பிற்கால வாழ்வும் அமைகின்றது," என்று வித்துவான் மேரி மாசிலாமணி அம்மையார் பி.ஏ.,எல்.டி., கூறுகின்ருர்.

ஆகவே இளமை முதலே ஒவ்வொருவரும் தம்மக்களைச் சிக்கனத்திற்குரிய வழியில் செல்லும்படி பழக்கவேண்டும். தாய் தந்தையர்களே குழந்தைகளுக்கு முன் மாதிரியாய் இருக்கக் கூடியவர்கள். ஆகவே, அவர்களே முதலில் சிக்கனத்துடன் வாழத் தெரிந்திருக்க வேண்டும். தாய் தந்தையர் ஊதாரிகளாய் இருந்தால் பெரும்பாலும் மக்களும் அவர்களைப் போலவே நடந்து கெட்டுவிடு வார்கள்.

"முன் ஏர் போனவழி பின் ஏர் போகும். ஆகையால் வீட்டில் தாய் தந்தையர் முதலியோர் எந்தப் பழக்க வழக்

கங்களை ஒழுங்காகப் பின்பற்றி வருகிறார்களோ அந்தப் பழக்கவழக்கங்களே அவர்கள் மக்களுக்கும் இயல்பாகப் படிந்துவிடும். 'இளமையிற் பழக்கம் முதுமையில் இயற்கை.' ஒருவர் கல்வியில் சிறந்தவராயினும், நல்ல பழக்க வழக்கங்கள் பதியப் பெருவிடின், அவர் தினைத் துணையும் சீர்படுவது இல்லை. ஆதலால் பெற்றோர்கள் இவ்விஷயத்தில் எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும்'' என்று பேரறிவாளர் செல்வக் கேசவராயர் கூறுகின்றார். ஆகவே, மற்ற பழக்க வழக்கங்களைப் போலவே சிக்கனத்துடன் வாழவேண்டிய பழக்கமும் இளமைதொட்டே குழந்தைகளிடம் ஏற்படவேண்டும். அதற்குத் தாய் தந்தையர்களே வழிகாட்டிகளாய் இருக்கவேண்டும்.

ஒருவருடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவருடைய செயல்களே காரணமாய் இருக்கின்றன. அந்தச் செயல் களிலே ஒருவரை உயர்வடையச் செய்வது சிக்கனம்; தாழ்வடையச் செய்வது ஊதாரித்தனம். இந்த இரண்டு செயல்களும் பழக்கத்தினாலேயே எவரிடத்திலும் அமைகின்றன! ஆகவே, அவரவர்களுடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவரவர்களே காரணமாகின்றனர்.

இந்தக் கருத்தை திருக்குறளோடு ஒன்றாக வைப்பதற்குரிய நாலடியார் என்னும் சிறந்த நூலும் கூறுவதைப் பாருங்கள் :

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்"

இதன் கருத்து: "நல்ல நிலையில் தன்னை வைத்துக்கொள்ளுகிறவனும், தன்னுடைய நல்ல நிலைமையைக் கெடுத்துத் தன்னைக் கீழ்மைப்படுத்திக் கொள்ளுகிறவனும், உள்ள நிலைமையிலிருந்து தன்னை மேலும் மேலும் உயர்த்திக்

கொள்ளுகின்றவனும், சிறந்தவர்களிடையில் தன்னைச் சிறந்தவனாகச் செய்துகொள்ளுகிறவனும் தானே ஆவான்."

உண்மைதான். ஆனால், ஒருவர் தம்மைப் பெருமைப் படுத்திக்கொள்வதற்காகத் தேடிக்கொள்ள வேண்டிய துணைகள் பல இருந்தாலும் அவைகளில் சிறந்தது பணமே ஆகும். அதனால் "பணவிடு தூது" என்னும் நூலில் அதன் ஆசிரியர் என்ன சொல்லுகின்றார் என்பதைக் கவனிப்போம்: அவர்,

"பணமே எனைப்படைத்த பாக்கியவா னேவங்
கணமேஎன் ஆருயிரே கண்ணே-குணநிதியே!"

என்று பணத்தை அழைத்து:

"மேருஅணு வாக்கி விடுவாய் அணுவைஒரு
பாரமக மேருஎனப் பண்ணுவாய்"

"வெட்டுவாய் வெட்டுதலை மீட்பாய் வரிந்திறுகக்
கட்டுவாய் கட்டுங் கயிறவிழ்ப்பாய்"

"உறவில் பகைவிளைப்பாய் உட்பகையாம் பண்டைக்
குறையைத் தவிர்த்துறவு கொள்வாய்"

"காடுநா டாக்குவாய் கண்விழித்து மூடுமுன்னே
நாடுகா டாக்குவாய் நம்பியே"

"தாங்குவார் அற்றுத் தடுமாறி இராப்பகலாய்
ஏங்குவார் ஏக்கமும் உன் ஏக்கமே"

"பணம் என்னும் உன்னைப் படைக்காத சென்மம்
பிணம் என்பர் கண்டாய் பெரியோய்"

"தம்தரத்துக் கொவ்வாது தாழ்ந்தகுடி யானாலும்
வந்தெடுத்துப் பெண்கொடுக்கும் மாமனே"

"ஓதுகலை ஞானம் உள்ளதெலாம் கற்றுநன்றாய்ச்
சாதிக்க வைக்குந் தகப்பனே"

"போய்க்கொடிய கானம் புகுந்தாலும் அவ்வனத்தில்
வாய்க்கினிய சோ*றூ*ட்டும் மாதாவே"

என்று பலவாறு பணத்தின் பெருமையைக் கூறுகின்றார்.

ஆகவே, எல்லோரும் பொருளைத் தேடிச் சிக்கனத்துடன் வாழவேண்டுமென்பது தெளிவாகின்றதே!

இதோ என் அருகில் இருக்கும் நண்பர் ஒருவர் என்னிடம் சொல்லியதை யான் உங்களிடம் சொல்லி அவருக்கு யான் சொல்லிய பதிலையும் இங்கே எழுதுகிறேன்.

"கொடை வள்ளல் தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் "நாட்டுக்கு நன்மை விளைவிப்பவன் செலவாளியா, சிக்கனக்காரனா?" என்னும் வினவை எழுப்பிக்கொண்டு "செலவாளியே நாட்டுக்கு நன்மை செய்பவன்" என்று தம் கருத்தைத் தெரிவிக்கின்றாரே! நீங்கள் சிக்கனமே சிறந்தது என்று கூறுகிறீர்களே!" என்று நண்பர் சொல்லுகின்றார். அவருக்கு நான் சொல்லிய விடை இதுதான்: "முதலியாரவர்கள் ஊதாரியைச் செலவாளி என்று சொல்லவில்லை. தனக்கும் பிறருக்கும் நல்ல பலனைத் தராத வகையில் பணத்தை வாரி இறைப்பவன் ஊதாரியாவான். தனக்கும் பிறருக்கும் நிலையான பயனைத்தரும் வகையில் பணத்தைச் செலவு செய்கிறவர் செலவாளியாவார்! இப்படிப்பட்ட செலவாளியைத்தான் "நாட்டுக்கு நன்மை பயப்பவர்" என்று முதலியார் குறிப்பிடுகின்றார். வேள் பாரிபோன்ற கொடை வள்ளல்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் தங்கள் செல்வத்தை இழந்தாலும் பலராலும் போற்றப் படும் பேரும் புகழும் பெறுகிறார்கள். ஊதாரிகளோ பொருளை இழந்து தமக்கும் பிறருக்கும் பயனின்றி நற்பெயருமின்றி இருக்கின்றார்கள். இவர்களை முதலியார் குறிப்பிடவில்லை. இத்தகைய ஊதாரிகளைப் பார்க்கிலும் சிக்கனக்காரர்கள் சிறந்தவர்கள் என்பதில் தடை என்ன? அன்றியும் சிக்கனத்துடன் பொருளைச் சேர்த்தவர்கள் பிறகு நல்லவழியில் அதைப் பயன் படுத்தும் செலவாளி

களாய் மாறவேண்டுமென்பதுதான் முதலியார் கருத்து! அந்தக் கருத்தை நாமும் தலைவணங்கி ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்! சிக்கனத்துடன் நடந்து இலட்சம் இலட்சமாய்த் தேவைக்கு மேல் பொருளைச் சேர்ப்பது சரியல்ல என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுவர். சிக்கனத்துடன் இருந்து பொருளைச் சேர்த்தவுடன் அவற்றில் வாழ்க்கைக்கு வேண்டியவற்றை ஒதுக்கி வைத்து விட்டு மற்றவைகளை நல்லவழியில் செல விடவேண்டும். அவ்வாறு செலவு செய்கிறவர்களையே "நாட்டுக்கு நன்மை விளைவிக்கிறவர்கள்" என்று முதலி யார் கூறுகின்றார்; ஊதாரிகளை அல்ல. ஆகவே நாட்டுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று விரும்புகின்ற எல்லோ ரும் சிக்கனத் தன்மையுடன் வாழ்ந்தால்தானே பொருள் சேரும்? சிக்கனத்தன்மையுடன் வாழ்ந்து பொருளைச் சேர்க்கா விட்டால் நல்ல வழியில் பொருளைச் செலவழிப் பதற்குப் பொருள் எங்கிருந்துவரும்?"

இதுதான் என் நண்பருக்கு யான் கூறிய விடை.

ஆகவே, வள்ளல்கள் பச்சையப்ப முதலியாரைப் போல, இராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரைப் போல, அழகப்ப செட்டியாரைப் போல அழியாப் புகழ் பெற விரும்புகிறவர்களுக்கும் சிக்கனந் தேவை. இன்றேல், பொருள் சேராது என்று சொல்லவும் வேண்டுமோ?

சிறு தொகையை முதலாக வைத்து இன்றைய உலகத்தில் பெரிய கோடீசுரராக விளங்கும் தேயிலை வியாபாரியான லிப்டன் என்பவர் சொல்வதைக் கவனி யுங்கள்:

"என்னுடைய அமோகமான வெற்றிக்குக் காரணம் என்னவென்று பலர் என்னைக் கேட்கின்றார்கள். இந்தக் கேள்விக்கு எவ்வாறு பதில் சொல்லலா மென்று நான் பல நாள் சிந்தித்தேன். எல்லா வகையிலும் என்னுடைய

வெற்றிக்குக் காரணம் சிக்கனம் சிக்கனம் சிக்கனம் என்றுதான் நான் சொல்ல வேண்டியவனுய் இருக்கின்றேன். சிக்கனந்தான் என்னைப் பொருளைச் சேர்க்கச் செய்தது. சிக்கனந்தான் சேர்த்த பொருளைக் கொண்டு முதலில் தேயிலையை வாங்கி விற்கச் செய்தது. சிக்கனந்தான் வியாபாரத்தில் எனக்குப் பொருளைச் சேர்த்துக் கொடுத்தது. ஒரு வாலிபனுக்குப் பல நண்பர்கள் இருக்கலாம். அவனுக்குப் பணமுடை ஏற்பட்ட போது உதவி செய்யக்கூடியவர்கள் பலர் இருக்கமாட்டார்கள். ஆனுல், சிக்கனத் தன்மையுடன் பொருளைச் சேர்த்துப் பாங்கியில் வைத்திருந்தால் அது ஆபத்துக் காலத்தில் உதவுமல்லவா? எல்லாவித வெற்றிக்கும் சிக்கனந்தான் அடிப்படையாய் இருக்கின்றது. அது சுதந்தர வாழ்க்கையை அளிக்கின்றது. வாலிபர்களுக்கு அது ஓர் ஊன்று கோலாய் இருக்கின்றது; சக்தியையும் சுறுசுறுப்பையும் தருகின்றது. சிக்கனம் வாலிபர்களுக்கு நல்ல வெற்றியை அளிக்கின்றது. ஆகவே நாம் நமது வாலிபர்களுக்கு இளமையிலேயே சிக்கனம் என்னும் "இஞ்சக்ஷ"னைக் கொடுத்து விடுவோமானுல் நாம் எதிர்காலத்தில் இன்னும் பல நல்ல மனிதர்களைக் காணலாம்."

எப்படி இருக்கிறது "லிப்டன்" சொல்வது? லிப்டன் சாதாரண மனிதரல்லர். இரண்டொரு பவுன்களையே முதலாகக் கொண்டு தேயிலை வியாபாரத்தைத் தொடங்கிப் பெரிய கோடீசுரர் ஆனவர்!

"எப்போதும் என்னை என் நண்பர்கள், உறவினர்கள் சுற்றிக் கொண்டே இருக்க வேண்டும் என்பது என் ஆசை! அதற்காக நான் என்ன செய்யலாம்?" என்று ஒருவர் கேட்டார்.

அதற்கு மற்ருெருவர், "பணத்தைச் சேர்த்துக்கொள்" என்று பதில் சொன்னுர்.

சிக்கனத்திற்கு அடிப்படை நாம் செய்யும் ஒவ்வொரு செலவையும் கணக்கு எழுதிப்பார்த்தல். இது முன்னரே சொல்லப்பட்டிருக்கின்றது. தினந்தோறும் நாம் படுக்கைக்குப் போகுமுன்னர் அன்று நாம் செய்த செலவை எழுதிப் பார்க்கவேண்டும். அப்போதுதான் நாம் செய்த செலவில் எது நியாயம் எது அநியாயம் என்று நமக்குத் தெரியும் இதற்காக ஆண்களைப்போலவே. பெண்களும் 'கூட்டல் கழித்தல் வகுத்தல் பெருக்கல்' என்ற அளவிலாவது கணக்கைக் கற்றிருக்கவேண்டும்.

சிக்கனம் என்பதைப்பற்றி எழுதுவதிலே கைதேர்ந்தவராகிய "சாமுவல் ஸ்மைல்ஸ்" என்பவர் கூறுகின்றார்: "தங்கள் வருமானத்திற்குள் வாழவேண்டுமென்று நினைக்கின்றவர்கள் ஒவ்வொருவருக்கும் கணக்குத் தெரிந்திருக்கவேண்டும். பெண்கள் பலருக்குக் கணக்கு என்றாலே தலைவலி! பெண்பள்ளிக்கூடங்களில் சிலர் கணக்கைப்பற்றி அதிகமாகக் கவலைகொள்ளுவதில்லை. அங்கே மொழி, இசை, தேசப்படம், பழகத் தெரிந்து கொள்ளுதல், துணியில் பூவேலை செய்தல், துணி தைத்தல், குழந்தைகளைப் பாதுகாத்தல் ஆகியவைகளே முக்கியமாகச் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. இவைகள் பெண்கள் கற்கவேண்டியவைகளே. ஆனால், கூட்டல் கழித்தல் வகுத்தல் பெருக்கல் ஆகிய இவைகளிலும் பெண்கள் நல்லதேர்ச்சி உள்ளவர்களாய் இருக்க வேண்டாமா? இல்லாவிடில் அவர்களால் எவ்வாறு வரவு செலவுகளைக் கவனிக்க முடியும்? தினந்தோறும் வீட்டில் நடைபெறும் சில்லரைச் செலவுகளையாவது அவர்கள் கவனித்து எழுதவேண்டாமா? அதற்கு வேண்டிய அளவுக்கேனும் ஒவ்வொரு பெண்ணும் கணக்குக் கற்றிருக்கவேண்டுமே! இல்லாவிட்டால் சிக்கனத்துடன் வாழவேண்டும் என்னும் எண்ணம் அவர்களுக்கு ஏற்

படாதே! ஏற்படாதபோது அவர்களிடத்தில் தரித்திரம் குடிகொள்ளலாம் அல்லவா? கணக்கே இல்லாமல் செலவு செய்த எத்தனையோ குடும்பங்கள் கெட்டுவிட்டன."

இப்படிச் "சாமுவல் ஸ்மைல்ஸ்" சொல்வது ஒருபுற மிருக்கட்டும். நமது தமிழ்நாட்டு பெருங் கிழவியாராகிய அவ்வையார் சொல்வதைக் கவனியுங்கள்: "எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" என்று அவர் சொல்லி இருக்கின்றூரே, இதன் பொருளென்ன? இலக்கணமும் கணக்கும் நமது இரண்டுகண்களைப் போன்றவை என்பது தானே பொருள்? இதனுல், ஒவ்வொரு -- ஆணுக்கும் பெண்ணுக்கும் கண்கள் எவ்வளவு சிறந்தனவோ அவ்வளவு மொழியும், கணக்கும் சிறந்தனவாகும் என்று தெரிகின்றதே!

அமெரிக்காவின் முதல் தலைவராயிருந்த "ஜார்ஜ் வாஷிங்டன்" என்பவர் தம் குடும்பத்தில் நடைபெற்ற வரவு செலவுகளைத் தாமே மேற்பார்வை பார்த்துவந்தார். "சிக்கனத்துடன் வாழ்கின்றவர்கள் பணக்காரர் களாவார்கள்; ஆகாவிட்டாலும் அவர்கள் நிச்சயமாக ஏழைகளாகமாட்டார்கள்" என்பது வாஷிங்டனின் எண்ணம். "என்னுடைய சொந்தச் செலவைப்பற்றிய கணக்கை நானே எழுதிவந்தேன்" என்று அவரே சொல்லி இருக்கின்றூர். அதனுல்தான் வீட்டை ஆளத்தெரிந்த அவர் நாட்டையும் நன்றுக ஆளத்தெரிந்தவராய் இருந்தார்.

'இங்கர்சால்' என்னும் பெயரினையுடைய சரித்திர ஆசிரியர் ஒருவர் மகாவீரராகிய நெப்போலியனைபற்றி எழுதும்போது கூறுகின்றூர்: "நெப்போலியனுடைய அதி அற்புதமான செயல்களில் ஒன்று: நெப்போலியன் பலப்பல பெரும்போர்களை நடத்தி இருக்கின்றூர். கடன் வாங்கி அவர் எந்தப்போரையும் நடத்தியதில்லை. அரசாங்கத்தின் பொறுப்பிலோ தம் சொந்தப்பொறுப்பிலோ

எந்த யுத்தத்திற்காகவும் அவர் கடன் வாங்கியதே இல்லை. கடைசியில் அவர் முடி துறந்து சென்றபோதும் அரசாங்கப் பொக்கிஷத்தில் பொருள் குவிந்து கிடந்தது! அவருக்கு முன்னிருந்தவர்கள் எவரும் தக்க வசதி இருந்தும் அவ்வளவு பொருளைச் சேர்க்கவும் இல்லை; மக்களுக்கு நன்மை செய்யவும் இல்லை.''

சிக்கனம் என்பது தனிப்பட்ட மனிதனுக்கும் அரசாங்கத்திற்கும் பொதுவானதுதான்!

வட அமெரிக்காவின் தென் பகுதியிலிருந்தவர்களுடன், அமெரிக்காவின் பிரசித்திபெற்ற தலைவராகிய ஏபரகாம்லிங்கன் என்பவர் போர் செய்ய நேர்ந்தபோது அவரும் அவருடைய சேனதிபதியாகிய 'கிரான்ட்' என்பவரும் எவ்வளவு சிக்கனத்துடன் அந்தப் போரை நடத்தமுடியுமோ அவ்வளவு சிக்கனத்துடன் அந்தப் போரை நடத்தினர்கள். கடைசியில் ஏபரகாம் லிங்கன் வெற்றி பெற்றதற்குச் சிக்கனமும் ஒரு காரணமாகும். லிங்கனுடைய போர் வீரர்கள் ஒவ்வொருவரும் சிக்கனத்துடன் வாழ்வதற்குப் பழக்கப் பெற்றிருந்தார்கள்.

நமது நாட்டில்கூட சிவாஜியின் போர்வீரர்கள் ஒவ்வொருவரும் சிக்கனத்துடன் வாழக்கற்றிருந்தார்கள். அவர்களுக்கோ அவர்களுடைய தலைவராகிய சிவாஜி மன்னருக்கோ ஆடம்பர வாழ்க்கையே தெரியாது. அதனுல்தான் ஆடம்பர வாழ்க்கையில் மூழ்கிக் கிடந்த மொகலாய சேனைகளை அவர்கள் பலப்பல இடங்களில் தோல்வி அடையச் செய்திருக்கிருர்கள்.

மதுரையிலிருந்து தமிழ்நாட்டை அரசாட்சி செய்து வந்த இராணிமங்கம்மாள் சிக்கனத்தன்மை வாய்ந்தவரே! அவர் அரசாட்சியில் பொதுப்பணம் ஆடம்பரத்திற்காகச் செலவழிக்கப்படவில்லை; சத்திரம் கட்டுவதற்கும், குளம் வெட்டுவதற்கும், சாலைகள் அமைப்பதற்கும், இன்னும்

இவ்வாறு பல நல்ல வேலைகளைச் செய்வதற்குமே செல வழிக்கப்பட்டது! சிக்கனக்காரர்களால்தான் எந்த நாட்டிலும் நினைத்தவுடன் நன்மை செய்ய முடியும். கையில் பொருள் இல்லாதவனுடைய தாராள குணத்திஞல் ஒரு நன்மையும் உண்டாகாது.

சிக்கனம் என்பது சில நாட்டினரின் வாழ்க்கையில் படிந்திருக்கின்றது. சில நாட்டினரிடம் அந்தக் குணம் இல்லை. நமது நாட்டிலே "மார்வாரி"களிடம் உள்ள சிக்கனம் பெரும்பாலும் மற்ற இனத்தாரிடம் இல்லை என்றே கூறலாம். வடநாட்டாரிலும் குஜராத்திகள் செலவாளிகளே!

நமது தமிழ் மாகாணத்தில் உள்ளவர்களில் தஞ்சை ஜில்லா வாசிகளைப் பார்க்கிலும் திருநெல்வேலி ஜில்லாக் காரர்கள் சிக்கனக்காரர்களே! தஞ்சை ஜில்லாக்காரர்களில் பலர் தற்காலிகமான இன்பத்திற்காகச் செலவிடும் பொருளைக்கொண்டு திருநெல்வேலி ஜில்லாக்காரர்கள் சிலர் தங்கள் குடும்பத்தையே நடத்திவிடுவார்கள். இயற்கை வளமும், அதிக உடலுழைப்பு இல்லாமல் வாழ்வதற்கு ஏற்ற வழியும் உள்ள இடங்களில் இருப் பவர்கள் பெரும்பாலும் சிக்கனக் காரர்களாய் இருப் பதில்லை. மற்ற ஜில்லாக்களில் இருப்பவர்களைப் பார்க்கிலும் அதிகமாகக் காலத்தையும் பணத்தையும் சீட்டாட்டத் தில் போக்குகிறவர்களைத் தஞ்சை ஜில்லாவில் காணலாம். இந்த ஜில்லாவில் முப்பது ஆண்டுகளுக்குமுன் கலக்டராய் இருந்த 'ஜாக்சன்' என்பவரே இப்படிக் கூறியிருக்கின்ருர். இந்த ஜில்லாவில் பாட்டுக்கச்சேரி நடைபெருவிட்டாலும் சீட்டுக்கச்சேரிகள் கலியாணகாலங்களில் கட்டாயம் நடக்கும்.

"பொதுவாகப் பிரஞ்சுக்காரர்கள் தமாஷ் பேர்வழிகள் என்று சிலர் சொல்லுவார்கள். ஆனுல், பிரஞ்சுக்காரர்

களைப் பார்க்கிலும் ஆங்கிலேயர்களே செலவாளிகள். பிரஞ்சுக்காரர்கள் சம்பாதிப்பதைப்பார்க்கிலும் ஆங்கிலேயர்கள் இரண்டு பங்கு அதிகம் சம்பாதிக்கின்றூர்கள்: ஆனுல் மிச்சம் இருப்பதில்லை. பிரஞ்சுக்காரர்கள் கொஞ்சமாவது சேர்த்து வைக்கிருர்கள். ஆங்கிலேயர்களைப் பார்க்கிலும் அமெரிக்கர்கள் செலவாளிகள். ஓர் அமெரிக்கருடைய மனைவி ஒரு பிரஞ்சுக்காரருடைய மனைவியைப் பார்த்து, 'நாங்கள் ஒதுக்கித் தள்ளி விடக்கூடிய பொருள்களை யெல்லாம் நீங்கள் ஒன்று சேர்த்து அற்புதமாகச் சமைத்து விடுகிறீர்களே' என்று கூறினர்'' என்று "மார்டன்" என்பவர் கூறுகின்றூர்.

நமது தென்னுட்டில் தமிழ்நாட்டுத் தொழிலாளிகளைப் பார்க்கிலும் ஆந்திர நாட்டுத் தொழிலாளிகள் சிக்கனக் காரர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

சிக்கனத் தன்மை இருந்தால் மட்டும் போதாது. தரித்திரர்களிடம் தாராள குணம் பயன் படாததைப் போலப் பொருளைத் தேடும் முயற்சி இல்லாதவர்களுக்குச் சிக்கனத் தன்மை பயன்படாது. அது மட்டுமா?

"முயற்சி இல்லாதவரிடம் யோக்கியதையும் இராது" என்று டாக்டர் ஜான்சன் என்பவர் கூறுகின்றூர். முயற்சி இல்லாதவர்களிடம் நிச்சயமாக வருமானம் குறையும். வருமானம் குறையும்போது சிக்கனத்துடன் செலவு செய்தாலும் அந்தச் செலவு வருமானத்தைப் பார்க்கிலும் பெரும்பாலும் அதிகமாய்த் தானிருக்கும். "ஆண்டு தோறும் எனக்கு ஆயிரம் பவுன் வரும்படி வருகிறது. அதைக் கொண்டு நான் இன்பத்துடன் வாழ்கின்றேன்" என்று ஒருவர் சொல்கின்றூர். "ஆண்டுதோறும் எனக்கு ஐயாயிரம் பவுன் வருமானம் வருகிறது. இருந்தாலும் நான் எனக்குக் கடன் கொடுத்தவர்களை எண்ணிப் பயந்து கொண்டிருக்கின்றேன். எப்போதாவது நான் நீதி மன்றத்

திற்கு, வாங்கியுள்ள கடனுக்கு வழி சொல்வதற்காகப் போகும்படி நேருமோ என்று அஞ்சுகிறேன் !" என்று மற்றொருவர் சொல்லுகின்றார். ஆயிரம்பவுன் வருமானம் உள்ளவர் இன்பத்துடன் வாழ்வதாகக் கூறுகின்றார். ஐயாயிரம் பவுன் வருமானம் உள்ளவர் கடன்காரர்களை நினைத்து அஞ்சுவதாகக் கூறுகின்றார். இவர்கள் இருவரும் வெவ்வேறு விதமாகக் கூறுவதற்குள்ள காரணம் என்ன? முறையே சிக்கனமும், சிக்கனம் இல்லாமையுந்தான் காரணங்களாகும்" என்று "பல்வர்" என்னும் பொருளாதார நிபுணர் கூறுகின்றார்.

அவர் கூறுவதை வருவாய்க்குமேல் செலவு செய்கிறவர்களாவது கவனிக்க வேண்டாமா ?

சிக்கனத்தைப்பற்றி நாட்டிலே மற்றொரு பேச்சும் பேசப்படுகின்றது. கல்வி அறிவற்றவர்களே அதிகச் செலவாளிகளாய் இருக்கின்றார்களென்று சிலர் கூறுகின்றார்கள். வேறு சிலரோ கற்றவர்களே பெரிதும் செலவாளிகளாய் இருக்கிறார்களென்று கூறுகின்றார்கள். ஆனால், "செல்வர்களும் சிக்கனக்காரர்களும் கற்றவர் கல்லாதவர் என்று சொல்லப்படும் இருபிரிவினரிலும் இருக்கின்றார்கள்" என்று அனுபவமுள்ளவர்கள் கூறுகின்றார்கள். இது உண்மைதானே ?

கல்லாதவர்கள் செயல் ஒருபுறமிருக்கட்டும். 'எல்லாம் அறிந்தவர்கள்' என்று சொல்லப்படும்-கல்லாதவர்களிலும் மேலானவர்கள் என்று தங்களை நினைத்துக் கொண்டிருக்கும்–கற்றவர்களில் சிலராவது ஊதாரிகளாய் இருக்கலாமா ? அறிவுபெற்று நல்வழியில் சென்று பிழைப்பதற்காகத்தானே ஒவ்வொருவரும் கல்வியைக் கற்கின்றார்கள் ? கல்வியைக் கற்றும் ஊதாரிகளாய்த் திரிகின்றவர்கள் தாங்கள் கற்றதனால் அடைந்த பலன் என்ன ?

அமெரிக்க நாட்டிலே பென்சில்வேனியாவிலே

இருந்த பேர் பெற்ற கல்வி அதிகாரி யாகிய 'ஸ்காபர்' என்பவர்சொல்வதைக் கவனியுங்கள் :

"கல்வி கற்றவர் என்று சொல்லப் படுகின்றவர், மற்றவர்களால், எங்கே தள்ளப் பட்டாலும் அங்கே உள்ள சூழ்நிலையைத் தமக்காகவும், பிறருக்காகவும் பயன் படுத்திக் கொண்டு சிக்கனத்துடன் வாழத் தெரிந்திருக்க வேண்டும். இதற்காகத்தான் கல்வி கற்பது ; கல்வியின் பயனும் இது தான். நான் மேலே சொல்லியபடி வாழத் தெரியாதவர்கள் பலஉள்நாட்டு வெளிநாட்டு மொழிகளைக் கற்றுக்கொள்வதாலும், இறந்தகாலச்சரித்திர வரலாறுகளைத் தெரிந்து கொண்டிருப்பதனுலும், வாழ்க்கைக்குப் பயன் படாத, அரிய பெரிய செய்திகள் என்று பிறரால் சொல்லப் படும், கருத்துக்களை எண்ணத்தில் புகுத்திக் கொள்வதனுலும் எவ்விதப் பயனையும் அடைய மாட்டார்கள் ! கற்றவர்களின் முதல் வேலை வாழத்தெரிந்துகொள்வது ! வாழத் தெரியாதவர்கள் ஏட்டுக் கல்வியிலே எவ்வளவு தேர்ந்திருந்தாலும் அதனுல் பயன் பெற மாட்டார்கள் !"

இவ்வாறு "ஸ்காபர்" என்னும் கல்விமான் கூறிய கருத்து எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடியது தானே ?

வாழத் தெரிந்த கல்லாத ஒரு தொழிலாளியைப் பார்க்கிலும் வாழத் தெரியாத கற்றவரைச் சிறந்தவர் என்று உலகம் ஒப்புக்கொள்ளுமா ? ஒப்புக்கொள்ளாது.

கல்விக்காகத் தங்கள் பணத்தைச் செலவிடும் தாய் தந்தையர்கள் தங்கள் மக்கள் வாழத் தெரிந்து கொள்வார்களா, வாழத்தெரிந்து கொள்கிருர்களா, வாழத் தெரிந்து கொண்டார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். வாழ வழிகாட்டும் கல்விக்காகச் செலவிடப் படும் பணந்தான் சிக்கன வழியில் செலவிடப்பட்டதாகும்.

"சில நாடுகள் பெரிய யுத்தத்தை நடத்தும் போதும் சிக்கனத்தைக் கையாளுகின்றன ! வெற்றி தோல்வி

என்பதுடன் நாட்டின் பொருளாதாரச் சம்பந்தமான சிக்கனத்தையும் எதிர் நோக்கியே பல நாடுகள் போரில் இறங்குவதற்கு அஞ்சுகின்றன!" என்று 'ஜான்அபாட்' என்னும் நூலாசிரியர் கூறுகின்ருர்.

இவ்வாறு அரசாங்கங்களே எந்த நிலையிலும் சிக்கனத்தைக் கவனிக்கும்போது தனிப்பட்டவர்கள் சிக்கன வாழ்க்கையைக் கைவிடலாமா?

சிக்கனத் தன்மையுடன் வாழ விரும்புகிறவர்கள் கவனிக்க வேண்டிய இன்னும் சில முக்கியமான செய்திகள் இருக்கின்றன. அவைகளையும் கவனிப்போம்: சிக்கனமாக வாழ விரும்புகிறவர்கள் கோபம் துக்கம் முதலியவைகளுக்குக் கூடியவரையில் தமது மனத்தில் இடம் கொடாமல் இருப்பதே நல்லது. இவைகளுக்கு இடங்கொடுத்தால் நம் மனம் வேறு நல்ல வேலைகளில் செல்லாது. செல்லாதபோது நாம் செய்ய வேண்டிய வேலைகள் கெடும். கெட்டால் நமது வருமானம் குறையும். செலவு மட்டும் குறையாது. அதிகச் செலவுக்கு என்ன செய்வது? கடன் வாங்க வேண்டும்.

கோபம் பல வகையில் மனிதனைக் கெடுத்துவிடும். துக்கமோ மனிதனுடைய ஊக்கத்தை அழித்துவிடும். பேராசை, பொருமை ஆகியவைகளையும் விட்டொழிக்க வேண்டும். அவைகளும் மனத்தின் பரிசுத்தமான தன்மையைக் கெடுக்கக்கூடியவைகளே! திருவள்ளுவர் போன்ற உலகப் பேரறிஞர்கள் இவைகளை விட்டு விடுவதே சிறந்த அறமாகும் என்று கூறி இருக்கின்ருர்கள்!

அடிக்கடி கோபித்துக் கொள்ளக் கூடியவர்கள், காரணமில்லாமல் கோபித்துக் கொள்ளுவார்கள்; தங்களுக்குப் பல விரோதிகளைத் தேடிக் கொள்ளுவார்கள். பல விரோதிகள் இருப்பவர்களுக்கு மனம் அமைதியாய் இராது. இராதபோது அவர்களால் அமைதியாக எப்படி வாழ்க்

9

கையை நடத்த முடியும்? முடியாது. கோபக்காரர்கள், அந்தக் கோபம் காரணமாகப் பலவித வழக்குகளில் ஈடுபட நேரலாம். நேர்ந்தால் பணம் செலவாகும். அப்போது அவர்களிடம் சிக்கனத்தன்மை இருக்கமுடியுமா? முடியாதே! பொருமை பேராசை ஆகிய இரண்டும் சிக்கனத்திற்குக் கொடிய விரோதிகளாம். பொருமை என்பது ஒருவரிடம் இருந்தால் அது அவரிடம் இருக்கும் செல்வத்தையும் அழித்துவிடும். பேராசையைப்பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை! எத்தனையோ குடும்பத்தினர் பேராசை காரணமாக இருந்த செல்வத்தையும் இழந்திருக்கின்றனர். செல்வத்தினுல் சிறப்படைய வேண்டுமென்று நினைக்கின்ற ஒவ்வொருவரும் மன அமைதி உள்ளவர்களாய் எல்லோரிடத்திலும் இனிய வார்த்தை பேசுகின்றவர்களாய் இருத்தல் வேண்டும். அப்போதுதான் மன நிம்மதி உண்டாகும். பொருமை கோபம் முதலிய துர்க்குணங்கள் மனத்தின் நிம்மதியைக் கெடுத்துப் பொருளையும் அழித்துவிடும். 'பொறுமைக் குணம் பொன்னிலும் மேலானது.'

சாந்த குணமும் நல்ல வார்த்தைகளையே பேசும் தன்மையும் உள்ளவர்கள் எல்லோராலும் விரைவில் நேசிக்கப்படுவார்கள். அவர்களுடைய முயற்சிகளை எவரும் தடுக்க மாட்டார். அப்போது அவர்களுக்குப் பொருள் தேடுவதென்பது எளிதான செயலாய் இருக்கலாம். பொருள் நடமாடும்போதுதானே சிக்கனத்தைப்பற்றி நாம் கவனிக்க வேண்டும்! பலவிதத் துன்பங்களால் மனத்தை விகாரப்படுத்திக் கொள்ளாமலிருப் பவர்களால்தான் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க முடியும். அதனுல்தான் நமது நாட்டில் இருந்த ஞானிகள் பலர் மனஅமைதியை நாடி காடு, மலை முதலியவைகளைத் தேடிச் சென்று தனியே இருந்து வாழ்ந்தனர்.

கிரேக்க நாட்டிலே சாக்ரடீஸ் என்ற சிறந்த தத்துவ ஞானி ஒருவர் இருந்தார். மக்களின் மனத்தில் "நினைக்கும் சக்தி"யைத் தூண்டிவிட்டவர்களில் அவரும் ஒருவர்; பலப்பல புதிய கருத்துக்களை வெளியிட்டவர்! எப்போதும் எதைப்பற்றியாவது நினைத்துக் கொண்டே இருப்பார்! அவர் மனைவியோ அவருக்கு நேர்விரோதமான ஒரு முரடி! கணவனுக்கும் அடங்காதவள்!

ஞானியாகிய சாக்ரட்டீஸ் ஒருநாள் வழக்கம்போல எதைப்பற்றியோ சிந்தித்துக் கொண்டிருந்தார். சமையல் அறையிலிருந்தபடி அவரைப்பற்றி அவர் மனைவி பல வாறு குறைசொல்லிக் கொண்டிருந்தாள். இவ்வாறு அரைமணி நேரம் வரையில் அவள் குறைகூறிக்கொண்டிருந்தாள். "வாயைக் கொஞ்சம் மூடக்கூடாதா!" என்றார் சாக்ரடீஸ்! உடனே அந்த 'மாதரசி' ஒரு குடம் அளவு தண்ணீரைக் கொண்டுவந்து அவர் தலையிலே ஊற்றினாள். அப்போதும் அந்த மகான் பொறுமையுடன், "இவ்வளவு நேரம் இடி இடித்தது: இப்போது மழை பெய்தது" என்றார்! அதற்குமேல் அவர் ஒன்றும் சொல்லவில்லை; செய்யவில்லை.

எவ்வளவு பொறுமை பாருங்கள்! இந்த மன நிலை எவருக்கு வரும்! தம்முடைய மனத்தைக் கோபத்தில் செலுத்தி விகாரப்படுத்திக் கொள்ளாமை யினால்தான் அவரால் பல உண்மைகளைக் கண்டறிய முடிந்தது! மன அமைதியுள்ளவர்களால்தான் எதையும் சாதிக்கமுடியும். தந்தி, டெலிபோன், இரயில், மின்சாரசக்தி, பேசும்படம் ஆகிய இவைகளைக் கண்டுபிடித்தவர்களும் மன அமைதியுடன் வாழ்ந்தவர்களே ஆவர்.

இப்போது கூறப்பட்ட பலகாரணங்களினால், "பொருளைத் தேடவேண்டும். சிக்கனத்துடன் வாழவேண்டும்" என்று நினைக்கின்றவர்கள் எல்லோரும் இன்சொல், அடக்

கம் முதலியன உள்ளவர்களாய் வாழவேண்டுமென்று தெரிகிறதே!

வாழ்வதற்கு வழி

14

சிக்கனத்துடன் வாழவேண்டுமென்பதற்காகச் சந்தர்ப்பம் நேர்ந்தால் பலவிதக் கேவலமான வழிகளிலும் பணத்தைச் சம்பாதிக்கலாமென்று நினைத்து விடக்கூடாது. அவ்வழிகளில் வரும் பொருள் வரும்போதே மறைந்து கொண்டிருக்கும். 'பணம் வந்த வழியே செல்லும்' என்னும் பழமொழியின் கருத்தென்ன? 'நல்ல வழியிலே சேர்க்கப்பட்ட பணம் நல்ல வழியிலும், தீய வழியிலே சேர்க்கப்பட்ட பணம் தீய வழியிலும் செலவாகும்' என்பதே இந்தப் பழமொழியின் கருத்தாகும். மக்கள் நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் இந்தப் பழமொழிக்கு நாம் கூறிய விளக்கம் உண்மையானதுதான்! அனுபவமுள்ளவர்கள் இதை ஒப்புக் கொள்ளுவார்கள்; அனுபவமில்லாதவர்கள் அனுபவம் வளர்ந்த பிறகு இது 'சரி' என்று சொல்வார்கள்.

பிறர் பொருளை மோசம் செய்யாமல் தங்களுக்கு வருகின்ற வருவாயைக் கொண்டு சிக்கனத்துடன் வாழ்கின்றவர்கள் மனத்தில் எப்போதும் அமைதி நிறைந்திருக்கும். அவர்கள் பிறர் தங்களை என்ன சொல்வார்களோ என்று நினைத்து அஞ்சவேண்டியதில்லை. அவர்கள் மனசாட்சி அவர்களைக் 'கொடியவனே!' என்று அழைத்துக் குறை கூறாது. அவர்கள் ஏழைகளாய் இருந்தாலும் அறிவுள்ளவர்கள் குறை சொல்ல மாட்டார்கள்.

"கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு"

என்று நாயனர் கூறுவதையும் கவனியுங்கள். "நடுநிலை தவருமல் நல்ல வழியில் வாழ்கின்றவனுடைய ஏழ்மைத் தன்மையைப்பற்றி உலகம் குறைகூருது" என்பதே இதன் கருத்து. நல்வாழ்வு பெறுவதற்காக, அதனுல்மன அமைதி அடைவதற்காக, சிக்கனத்துடன் நடந்து பொருளைத் தேடுகிருேம். தீய வழியினுல் வரும் பொருளால் இந்த நன்மைகள் உண்டாகா! அப்படியானுல் அந்தப் பொருளினுல் அடையக் கூடிய பயன்என்ன?

இனி, 'ஹார்விடே' என்பவர் எழுதியுள்ள மன அமைதிக்குரிய சில வழிகளையும் இங்குக் கவனிப்போம்:

"மனம் அமைதியுடன் இருக்கும் போதுதான் மகிழ்ச்சி தோன்றும். இப்படிப் பட்ட மகிழ்ச்சியை நிலையாக அடைய ஞானிகளும், நல்லவர்களும், அதை அடையக் கூடிய வழியில், உழைக்கின்றனர்.

"சாதாரண மக்கள் அடையக் கூடிய மகிழ்ச்சியோ நிலை அற்றதாய் இருக்கின்றது. அவர்கள் தங்கள் சுயநலம் ஒன்றையே கருதி எதையோ அடைய உழைக்கின்ருர்கள். நினைத்தது கிடைத்துச் சில நாட்களாவதற்குள் அவர்கள் மனத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி குறைந்து விடுகின்றது. பெரும்பாலும் மனிதன் முயற்சிகளில் பல பயனில்லாமற் போகின்றன. அப்போது அவன் மனத்தில் கலக்கமும் துன்பமும் ஏற்படுகின்றன.

"எப்போதும் மனஅமைதி பெற்றிருப்பதே உண்மையான இன்பமாகும். இதற்கும் பணத்திற்கும், வீடுவாசல், காணி பூமிக்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை. ஆனுல் பல மனிதர்கள் தங்கள் மன அமைதி இல்லாமைக்குக் காரணம் 'பணம்' என்று கூறுகின்றனர். "எனக்கு மட்டும் வேண்டிய அளவில் பணம் இருந்தால் வீட்டை அடைமானத்திலிருந்து மீட்பேன்; எங்கே யாவது கொஞ்ச நாள் உல்லாசமாகப் பிரயாணம் செய்வேன்;

மிகவும் மகிழ்ச்சி அடைவேன்'' என்று பலர் கூறுகிறார்கள்.

"இதுபோன்ற வார்த்தைகளைப் பலர் சொல்ல நாம் எத்தனையோ முறை கேட்கவில்லையா ?

"மகிழ்ச்சியைப் பணம் ஒன்றினால் மட்டும் வாங்கிவிட முடியாது. அப்படியானால் கோடீசுரர்கள் எல்லோரும் நாம் பார்த்துப் பொறாமைப்படக்கூடிய அளவில் மகிழ்ச்சி யுடையவர்களாய் இருக்கமாட்டார்களா ? அவர்களில் பலர் நாம் பரிதாபப்படத்தகுந்த அளவில் மகிழ்ச்சி இல்லா மல் இருக்கிறார்களே ! அவர்கள் அறிவுள்ளவர்களாய் இருந்தால் தங்களுக்கு மனஅமைதி ஏற்படுகிறவரையில் தங்களிடம் உள்ள பொருள்களை நல்லவழிகளில், அறவழி களில் செலவிடலாம். இந்த வகையில் உலகிலே சிறந்த பணக்காரர்களில் ஒருவராகிய 'லார்டு நப்பீல்டு' என்பவர் முப்பத்தாறு கோடி ரூபாய்களை இதுவரையில் அறவழி களில் செலவழித்திருக்கின்றார். கார்னகி, ராக்பெல்லர், போர்டு, அன்ரூமெலான், பியர்பான்ட்மார்கன் முதலிய கோடீசுரர்கள் கோடிக்கணக்கான ரூபாய்களை அறவழி களில் செலவிட்டிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ பணக்காரர்கள் தங்கள் மனத்திலுள்ள துன்பத்தை நீக்கி இன்பத்தைப்பெறுவதற்காகத் தங்கள் பணத்தை அறவழி களில் செலவிட்டிருக்கிறார்கள்.

"தேவைக்குமேல் ஆசைகொள்ளாமல் இருப்பது மன அமைதிக்குக் காரணம்'' என்று இந்திய நாட்டு ஞானிகள் கூறுகிறார்கள்.

"உனக்கு உள்ள எல்லாவற்றையும் விற்று ஏழை களுக்குக் கொடுத்துவிடு. உனக்கு மன அமைதி உண்டாகும்'' என்று மன அமைதி பெறுவதற்கு வழிகேட்ட ஓர் இளைஞனுக்கு ஏசுநாதர் கூறினார். இந்த உபதேசத்தை வரிக்கு வரி பின்பற்றியவர் ஞானி யாகிய 'டால்ஸ்டாய்' என்பவராவர்.

"கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னுல் வாழ்ந்திருந்த புத்தர் பெருமான், "நோயாளி களுக்கு உதவி செய்யுங்கள். துன்பத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றுங்கள். உங்களைப்பார்க்கிலும் எளியவர்களாய் உள்ள கோடிக்கணக்கான ஏழை மக்கள் வாழ வழிகாட்டுங்கள்" என்று தம் மாணுக்கர்களிடம் கூறினுர்.

"உலக இன்பத்திலேயே எல்லோரும் மூழ்கி இருந்தால் நீங்கள் அடையவேண்டிய நல்ல பலனை அடைய மாட்டீர்கள். நாம் ஒவ்வொருவரும் பலமுறை தவறு செய்திருக்கின்ருேம். அதை மறந்துவிட்டு நாம் பிறரிடம் காணும் தவறுகளை மட்டும் எடுத்துக்காட்டிப் பிறரைக் கேவலப்படுத்தலாமா ? சில சமயங்களிலாவது நாம் தனித்திருந்து நம்மைப்பற்றியும் உலகத்தைப்பற்றியும் நினைத்துப் பார்க்கவேண்டும். அப்போது மகிழ்ச்சிக்குரிய பல உண்மைகள் நமக்குத் தோன்றும்" என்று பதஞ்சலி முனிவர் கூறுகின்ருர். தொடர்ச்சியாகப் பொருளைப்பற்றி நாம் எச்சரிக்கை செய்யப்பெற்றிருக்கிருேம். "ஏராளமான செல்வம் இன்பத்தைத் தந்துவிடும்" என்பது ஏகதேசந் தான் ! அறிவுடன் பணத்தைச் செலவிட்டால்தான் அதனுல் இன்பத்தைப் பெறலாம். இல்லாவிடில் துன்பம், பொருமை, பகைமை முதலியவைகளே நமக்கு வந்துசேரும். பணத்தைச் செலவிடத் தெரிந்துகொள்வது பணத்தைச் சம்பாதிக்கத் தெரிந்துகொள்வதைப் பார்க்கிலும் கடினமானது.

"தங்களுக்கு இல்லாத செல்வத்தைப்பார்த்து மக்கள் பொருமைப்படுவதுபோலவே பணக்காரர்களைப் பார்த்தும் மக்கள் பலர் பொருமைப்படுகின்றனர். இதை என்னுல் சகிக்கமுடியவில்லை" என்று ஆஸ்ட்டர் என்னும் பிரபு 'ராபர்ட் இச்சன்ஸ்' என்பவரைப் பார்த்துக் கூறுகின்ருர்.

அவரே மறுபடியும், "என்னுடைய செல்வத்தைக் கருதித் தகுதி அற்ற ஆண்களும் பெண்களும் என்னை

வந்துவந்து சுற்றுவது எனக்குத் துன்பத்தைத் தருகிறது. நான் விரும்பும் நல்ல வழியில் நான் என் பணத்தைச் செலவிட விரும்புகிறேன். அதற்காக என்னை விளம்பரப் படுத்திக்கொள்ள நான் விரும்பவில்லை" என்றும் சொல்லுகிறார்.

"பணம் சேர்ந்தவுடன் ஒவ்வொருவரும் மேலும் நல்லவர்களின் கூட்டுறவுகளுடன் வாழ விரும்ப வேண்டும்.

"அயோக்கியகர்களின் மத்தியில் பணம் உள்ளவர்கள் வாழ்ந்தால் பணத்தை, அட்டை இரத்தத்தை நாம் அறியாதபடி உறிஞ்சுவது போலப் பணத்தை அந்த அயோக்கியர்கள் நாம் அறியாத வகையில் கரைத்துவிடுவார்கள்.

"ஒவ்வொரு நாளையும் நீங்கள் உங்களுடைய கடைசி நாளாக எண்ணிக் கொள்ளுங்கள். அப்போதுதான் நீங்கள் ஒவ்வொரு விநாடி நேரத்தையும் வீணாக்கமாட்டீர்கள். இதனால் நீங்கள் வெறுக்கத்தக்க இன்பத்தை அனுபவிக்கும் வழியில் காலத்தைப் போக்கவேண்டுமென்பது என் கருத்தல்ல. இன்றிரவு நீங்கள் இறப்பதானாலும் நீங்களும் பிறரும் கவலைப்படாதவகையில் உங்கள் வேலைகள் நடைபெற்றிருக்க வேண்டும். நாளையதினம் செய்யவேண்டியதை நினைத்துக்கொண்டு இன்றைக்குச் செய்ய வேண்டியதை விட்டுவிடாதீர்கள்" என்று பதஞ்சலி முனிவர் கூறுகின்றார்.

"சிறந்த மனோதத்துவ ஆராய்ச்சியாளராகிய 'மௌல்ட்டன்மார்ஸ்டன்' என்பவர் மூவாயிரம் மக்களைத் தனித்தனியே பலவேறு சந்தர்ப்பங்களில், "நீங்கள் எதற்காக வாழ்கின்*றீர்*கள்?" என்று கேட்டார் அவர்களில் நூற்றில் தொண்ணூற்றுநான்குபேர் சொல்லிய பதில் திருப்தியைத் தரக்கூடியதாக இல்லை.

அவர்களில் பலர், நல்ல காலத்தை எதிர் நோக்கியும், சிலர் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாக வேண்டு

மென்பதற்காகவும், வேறு சிலர் தங்கள் 'இன்ஷ்யூரன்ஸ் எண்டோமெண்டு பாலிஸி' பூர்த்தியாவதற்காகவும், இன்னும் சிலர் உபகாரச் சம்பளம் பெற்று ஓய்வு பெறுவதற்காகவும், மற்றும் சிலர் தங்கள் உறவினர் இறந்தமை காரணமாகத் தங்களுக்கு வரவேண்டிய பணத்திற்காகவும் வாழ்ந்துகொண்டிருப்பதாகக் கூறினார்கள்.

உங்களுக்கு மனஅமைதி வேண்டுமானால், ஒவ்வொரு இரவிலும் நீங்கள் படுப்பதற்கு முன்னால், 'இன்றைக்கு என் வாழ்க்கை நல்லவழியில் சென்றதா?' என்று உங்களை நீங்களே ஒரு கேள்வியைக் கேட்டுக் கொள்ளுங்கள். 'இல்லை' என்றால் 'ஏன் இல்லை' என்று நினைத்துப் பாருங்கள். அப்போது நீங்கள் செய்த நன்மை தீமைகள் உங்களுக்குத் தெரியும். அதனால் நீங்கள் உங்களைத் திருத்திக் கொள்ள முடியும்.

" உங்கள் வேலை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் நீங்கள் அதைச் சரியாய்ச் செய்தீர்களா என்று நினைத்துப் பாருங்கள். நீங்கள் சரியாகச் செய்வதற்கு முயற்சி செய்கிறீர்களா என்றும் எண்ணிப் பாருங்கள். எண்ணவில்லை என்றால், ஏன் எண்ணவில்லை ?

ஒரு லத்தீன் மொழிக் கவிஞர் கூறுகின்றார்: "வாழ வேண்டிய காலத்தை, ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி, வீணாக்கிக் கொண்டிருக்கிறவனை, 'தண்ணீர் வடியாமையினால் ஆற்றைத் தாண்டாமல் இருக்கின்றேன்' என்றவனைப் போன்ற ஒரு மூடன் என்றே சொல்ல வேண்டும்.

"ஹார்விடே" என்னும் பேரறிஞர் செல்வதைக் கவனியுங்கள் :

"மகிழ்ச்சி என்பது மனம் உடல் இரண்டும் இயங்கும் தன்மையைப் பொருத்திருக்கின்றது. திருப்தி இல்லாத சில மக்கள் தங்களைப் பற்றியே எப்போதும் அதிகமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். திருப்தி உள்ளவர்கள்

தங்கள் நலத்துடன் பிறர்நலத்தையும் கவனிக்கின்ருர்கள்.

"மகிழ்ச்சி என்பது எண்ணத்தைப் பொருத்தது! ஒரு செய்தியைச் சரியாக எண்ணிச் சரியாகத் தீர்மானிக்கத் தெரிந்தவர்களுக்கு நிச்சயமாக மகிழ்ச்சி ஏற்படும்; எதைப் பற்றியும் சரியாக நினைக்கத் தெரிந்தவர்களுக்கு நன்மை தீமைகளுக் குரிய காரணங்கள் நன்ருக விளங்கும். அவர் களுக்கு எதிர்காலம் விளக்கமாகத் தோன்றும்.

"தங்கள் எதிர்காலம் இப்படித்தான் இருக்குமென்று உணரக் கூடியவர்களுக்கு அவ்வப்போது வாழ்க்கையில் வரக் கூடிய நன்மை தீமைகள் 'பளிச்'சென்று தெரியும்; அப்போது தீமையிலிருந்து விலகிக்கொள்ள அவர்களால் முடியும். ஆகையினுல் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளிலும் உங்களாலான வரையில் வாழ்வதற்குத் தேவை யான வேலையைச் செய்துகொண்டிருங்கள். தீமை உங்களை நோக்கி வராது.

"செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல் ஒதுக்கிவிடப் பார்க்காதீர்கள். எல்லாக் கடமைகளையும் நினைத்துப் பாருங்கள். பிறகு கட்டாயம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து, அவைகளைச் செய்யாமல் இருந்த மையினுல் உண்டான துன்பத்தைப் போக்கிக் கொள்ளுங் கள். கடமைகளைச் செய்து முடிக்கின்றவர்களுக்கு மேலும் கடமைகளைச் செய்வதற்குத் தைரியம் உண்டா கின்றது. கடமையைச் செய்யத் தயங்குகின்ற கோழைகள் எதற்குப் பயன்படப் போகிருர்கள்? "மரணம் வருவ தற்கு முன்னுலேயே கோழைகள் பல முறை மரணம் அடைகிருர்கள். எதற்கும் அஞ்சாத வீரன் ஒரே முறை தான் மரணத்தை 'ருசி' பார்க்கின்ருன்" என்று பிரசித்தி பெற்ற நாடகாசிரியராகிய ஷேக்ஸ்பியர் கூறுகின்ருர்."

என்று இவ்வாறு 'ஹார்விடே' என்பார் கூறுகின்ருர். இப்படி அவர் கூறிய செய்திகள் கவனிக்கத் தக்கவை.

களே ! 'தேவைக்குமேல் பொருளைக் குவித்துக்கொண்டிருப்பது மனத்தில் மகிழ்ச்சியை உண்டாக்காது' என்னும் பொருள்பட 'ஹார்விடே' என்பவர் கூறியுள்ள வார்த்தைகள் கவனிக்கத் தக்கவைகளே !

பொருள் இல்லாதவர்கள் நல்லவழியில் பொருளைச் சேர்ப்பதும், நியாயமான தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய வரையில் பொருள்சேர்ந்தவுடன், மேலும் சேரும்பொருளை ஏழை எளியவர்களின் நன்மைக்காகச் செலவழிப்பதுமே சிக்கனமாகும். இவ்வாறு நடப்பவர்கள் மனத்தில் எப்போதும் உண்மையான இன்பம் குடிகொண்டிருக்கும்.

"அறம் செய்வதனுல் உண்டாகும் இன்பமே இன்பம். மற்ற வழிகளால்வரும் இன்பம் துன்பம் கலந்தது ; புகழையும் கொடுக்காது" என்னும் கருத்துள்ள,

"அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த ; புகழு மில"

என்னும் திருக்குறளும் இங்கே கவனிக்கத்தக்கதே.

'நாமும் வாழவேண்டும்; பிறரும் வாழவேண்டும்' என்பதே சிக்கனத்தன்மை உள்ளவர்கள் அனுசரிக்க வேண்டிய முறையாகும். அப்படிப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்கு ஒருவரும் தடையாய் இருக்கமாட்டார்கள். சிக்கனக்காரர்களின் தன்மை எப்படி இருக்கும் என்பது இப்புத்தகத்தின் ஆரம்பத்திலேயே கூறப்பட்டிருக்கின்றது. "பொருளைச் சேர்க்காமல் இருப்பவர் சோம்பேறி; பொருளைச் சேர்த்து தாமும் அனுபவியாமல் அனுபவிப்பவர்களுக்கும் கொடுக்காமல் இருப்பவர் கருமி; பொருள் சேரும்போதே செலவிட்டுக் கொண்டிருப்பவர் ஊதாரி; நல்லவழியில் பொருளைச் சேர்த்து, தமக்கு நியாயமாக வேண்டிய அளவு வைத்துக் கொண்டு மற்றதை அறவழியில் செலவிடுகிறவர்களே சிக்கனக்காரர்கள்" என்று பொருள் நூல் கூறுகின்றது.

சிக்கனத் தன்மையுடன் வாழ விரும்புகிறவர்களுக்கு வேண்டிய இன்னும் சில செய்திகளை இங்கே கவனிப்போம்:

" ஊதாரித்தனத்தைப் பார்க்கிலும், பேராசை, சிக்கனத்திற்கு மிகவும் விரோதமானது" என்று 'லாரோச் பக்கௌல்டு' என்பவர் கூறுகின்றார்.

" கருமிகள் சேர்க்கின்ற சிறுகாசும் பிரயோசனமற்றதாகும் " என்று 'நியூ கோம்ப்' என்பவர் கூறுகின்றார்.

" சிக்கனக்காரர்களாய் வாழுங்கள் ; ஆனால், பேராசை கொண்டு பிறர் பொருளை வஞ்சனையால் அபகரிக்காதீர்கள். நண்பர்களுக்கும் பிறருக்கும் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுங்கள்" என்று 'ஜார்ஜ் எர்பர்ட்டு' என்பவர் கூறுகின்றார்.

" சிக்கன மென்பது கருமித்தனமல்ல ; கிடைத்த பொருளில் உயிர் போவதாய் இருந்தாலும் காலணவும் செலவிடாமல் இருப்பதல்ல ; புத்திசாலித்தனத்துடன் பணத்தைக் கையாளக் கற்றுக் கொள்வதே சிக்கனமாகும்."

" சிக்கனம் என்னும் சொல்லுக்கு அகராதிகளில் 'செட்டு' 'பணத்தைச் சேர்த்துப் பிடித்தல்' என்றெல்லாம்பொருள் கூறப்பட்டிருக்கின்றது. அந்த உரை பொருந்தவேபொருந்தாது. சிக்கனமென்றால் எச்சரிக்கையுடன் பொருளைச் சேர்ப்பது என்பதுதான் பலர் கருத்து. செலவு என்ற எண்ணமே இல்லாமல் சேர்ப்பதுதான் சிக்கனம் என்பதும் தவறான கருத்தாகும். சிக்கன மென்பது பொருளைச் சேர்ப்பது மட்டு மல்ல ; வாழ்க்கையின் எந்த நிலையிலும் காலம், பணம் அல்லது இரண்டும் நமக்காவது பிறருக்காவது பயன்படும் வகையில் உழைக்கக் கற்றுக் கொள்ளுவதே சிக்கனமாகும்" என்று பேரறிவாளரான 'ஜான் ரஸ்கின்' என்பவர் கூறுகின்றார்.

சிலர் சிக்கன மென்றால் சிக்கனத்தை அளவு கடந்து

கையாளுவதுதான் என்று நினைக்கிறார்கள். நூற்றுக் கணக்கான மைல் தூரம் இரயிலில் பிரயாணம் செய்ய நினைக்கின்றவர் பொழுது போக்கிற்காக வழியில் இரவல் பத்திரிகைகளையோ புத்தகங்களையோ எதிர் பார்ப்பது சிக்கனம் ஆகுமா? சில இரயில்வே ஜங்ஷன்களில் கிடைக்கக் கூடிய நல்ல சாப்பாட்டைவிட்டுச் சிக்கனத் திற்காக இரண்டணாவுக்கு எதையாவது வாங்கித் தின்பது சிக்கனம் ஆகுமா? காசு கொடுத்து நல்ல இடங்களில் தங்காமல் காசு செலவில்லாத மோசமான இடங்களில் தங்குவது சிக்கனம் ஆகுமா? இத்தகைய சிக்கனத்தினால் தீமையும் உண்டாகலாம் அல்லவா?

கடுகையும் விடாமல் கணக்குப் பார்க்கின்றவர்களும் இருக்கின்றார்கள். அப்படி இருக்க வேண்டியது அவசியந் தான். ஆனால் அதே சமயத்தில் பணத்தைச் செலவிட வேண்டிய நியாயமான வேலைகளுக்குப் பணத்தைச் செல விட்டே தீர வேண்டும். சிலர் ஒரு பொருளை வாங்குவதற் காக, ஐந்து கடைகளில் விலை கேட்டுச் சண்டையும் போட்டு அரைமணி நேரத்தையும் வீணாக்குவார்கள்: இதனால் அரை அணா ஓர் அணா இலாபம் கிடைத்தாலும் அது சிக்கனமாகாது. சண்டை, வீணாகச் சென்ற காலம் ஆகிய இவைகளையும் கவனியுங்கள்!

இந்த இடத்திற்குப் பொருத்தமான பழங்கதை ஒன்று என் நினைவில் வருகிறது. அதையும் கவனிப்போம்:

தேங்காய் வாங்குவதற்காக கருமியாகிய கறுப்பன் என்பவன் ஒருவன் ஒரு நாள் காலையில் கடைத் தெருவுக்குச் சென்று தேங்காய் விற்பவர்களைப் பார்த்து, 'ஒரு தேங்காய் என்ன விலை?' என்று கேட்டான்.

கடைக்காரன், "இரண்டணா" என்றான்

"ஓரணாவுக்குக் கொடுத்தால் என்ன?" என்று கேட்டான் கறுப்பன்.

"பக்கத்து ஊராகிய பார்வதிபுரத்திற்குப் போனால் ஓரணாவுக்குக் கிடைக்கலாம்" என்றான் கடைக்காரன்.

கறுப்பன் பார்வதிபுரத்திற்குச் சென்றான். அங்கே கடைக்காரன், "ஒரு தேங்காயின் விலை ஓரணா" என்றான்.

"அரையணாவுக்குக் கொடுக்கக்கூடாதா?" என்று கேட்டான் கறுப்பன்.

"பக்கத்து ஊராகிய இடையர் நாட்டுக்குப் போனால் அந்த விலைக்குக் கிடைக்கலாம்" என்றான் கடைக்காரன்.

கறுப்பன் இடையர் நாட்டுக்குச் சென்றான். அங்கே கடைக்காரன் "ஒரு தேங்காயின் விலை அரை அணா" என்றான்.

"கும்பல் கும்பலாகக் கொட்டப்பட்டிருக்கின்ற இந்தத் தேங்காய்களில் ஒன்றை இனாமாக எனக்குக் கொடுக்கக்கூடாதா?" என்று கேட்டான் கறுப்பன்.

"ஆகா, அதற்கென்ன, தருகிறேன். என் தோட்டத்தில் தென்னைமரங்கள் ஏராளமாய் இருக்கின்றன; அவைகளில் காய்களும் நிறைய இருக்கின்றன! நீ மரத்தில் ஏறித் தேங்காய்களைப் பறித்துத் தள்ளினால் நீ பறிக்கும் ஐம்பது தேங்காய்களுக்கு ஒரு தேங்காய் வீதம் உனக்கு இனாமாகத் தருகிறேன்" என்றான் கடைக்காரன்.

கடைக்காரன் சொல்லியபடி நடப்பதற்குக் கறுப்பன் ஒப்புக்கொண்டான். பிறகு அவன் கடைக்காரனுடன் தென்னந்தோப்புக்குச் சென்றான். மூன்று மரங்களில் ஏறி அவன் ஐம்பது தேங்காய்களுக்கு மேலும் பறித்துப் போட்டு ஒரு தேங்காயை இனாமாகப் பெற்றுக்கொண்டு தன் வீடுபோய்ச் சேர்ந்தான். அன்று அலைந்த அலைச்சலால் அவன் உடம்பு அலுத்துவிட்டது! ஆகவே, அவனால் அன்று கூலி வேலைக்குப் போக முடியவில்லை.

கறுப்பனுடைய செயலைச் சிக்கனமுள்ளதென்று நாம் சொல்லமுடியுமா? கறுப்பன் அலைந்த அலைச்சல், மூன்று

மரங்களில் ஏறியது, ஒருநாள் கூலி போனது ஆகிய இவைகளை நோக்கும்போது அவன் இறுமாக ஒரு தேங்காயைப் பெற்றது இலாபமாகுமா ?

நாம் ஒரு வேலையைச் சிறப்புள்ளதாகச் செய்து முடிப்பதே முக்கியமாகும். சிறப்பில்லாமல் சிக்கனம் மட்டும் இருந்தால் போதுமா? ஆனால், சிறப்புடன் சிக்கனமும் கலந்திருந்தால் அது புகழத்தகுந்ததே! சிறப்பு, சிக்கனம் ஆகிய இரண்டும் தனித்தனி நிற்குமானால் அப்போது வேண்டியது சிறப்புதான் ; சிக்கனமல்ல!

மூன்றுமாதம் உழைக்கக் கூடிய ஒரு பொருளை மூன்று ரூபாய் கொடுத்து ஒருவர் வாங்குகிறார் ; ஆறு மாதம் உழைக்கக் கூடிய ஒரு பொருளை ஒருவர் நான்கு ரூபாய் கொடுத்து வாங்குகின்றார்! இவர்களில் யார் சிக்கனக்காரர், சொல்ல வேண்டுமா ?

ஒரு பொருளை வாங்கும்போது, அல்லது செய்யும் போது சிக்கனம் மட்டும் முக்கியமானதல்ல! அந்தப் பொருளின் உறுதி, அழகு, தேவைக்கு வேண்டியபடி இருத்தல் இவைகளும் மிகமிக முக்கியமானவைகளே. இவைகள் இல்லாத பொருள்கள் விலைமலிவாக கிடைக்குமானால் அது ஆச்சரியம் அல்லவே!

ஒரு செறுப்பையோ அல்லது வேறு நமக்கு விருப்பமான துணியையோ வாங்கப் போகும்போது அவைகளின் அழகு, விலை மலிவு ஆகிய இவைகளைக் கண்டு நாம் ஏமாந்துவிடக்கூடாது. அவைகளின் உழைக்கும் தன்மையையும் நாம் கவனிக்க வேண்டும். அழகுள்ள பூவைப் பார்க்கிலும் மணம் உள்ள மலர்தானே மேலானது? சில இடங்களில் அழகு முக்கியம்! சிலஇடங்களில் உறுதி முக்கியம். சிலஇடங்களில் குணம் முக்கியம். படம், பொம்மை ஆகிய இவைகளுக்கு அழகு முக்கியம் ; நாம் கையாளும் பொருள்களுக்கு அழகுடன் உறுதிமுக்கியம்; மனைவிக்குக்

குணம் முக்கியம். அறிவைப் புகட்டக் கூடிய தன்மையை உடையதாக இருப்பது புத்தகத்திற்கு முக்கியம். இவைகளை யெல்லாம் கவனித்து ஏற்றவாறு நடந்து பயனடையத் தெரிந்து கொள்ளுதலே சிக்கனக்காரர்களுக்கு முக்கியம்.

சிக்கனக்காரர்கள் எல்லாச் செய்திகளிலும் ஒரே மாதிரியாக நடந்து கொள்ளக்கூடாது. சில விவகாரங்களில் தாராளமாக நடந்து கொள்வதனுல் பின்னுல் இலாபம் உண்டாகலாம். தென்னம் பிள்ளைக்குத் தண்ணீர் ஊற்றியவுடன் அது பலன் கொடுத்து விடுமா? அதனுல் தண்ணீர் ஊற்ருமல் இருந்து விடலாமா? பள்ளிக் கூடத்திற்குச் சென்றவுடனே கல்வியில் தேர்ந்து விட முடியுமா? அதனுல் பள்ளிக்கூடம் போகாமல் இருக்கலாமா? இவைகளையெல்லாம் புத்திசாலிகள் கவனித்துத் தக்கபடி நடந்து கொள்ளவேண்டும்.

சிக்கனம் வேண்டும்: அதேசமயத்தில் பெருந் தன்மையும் வேண்டும். பொருளை எங்கே சேர்த்துப் பிடிக்கவேண்டும்: எங்கேவிடவேண்டும் என்பதைத் தெரிந்திருப்பதே சிக்கனக்காரர்களுக்கு அழகாகும். இவ்வாறு நடக்கத் தெரிந்தவர்களால் எல்லோரையும் தங்கள் வசப்படுத்திவிட முடியும். இவ்வாறு நடக்கத் தெரிந்த டாக்டர்களுக்கும் வியாபாரிகளுக்கும் நல்ல பெயர் சீக்கிரம் கிடைக்கின்றது.

மற்ருெரு செய்தியையும் சிக்கனக்காரர்கள் இங்கே கவனிக்கவேண்டும். தங்கள் வாழ்க்கையை முன்னேற்றக் கூடிய சந்தர்ப்பத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் நழுவ விட்டுவிடக்கூடாது. அநேக அரசியல் வாதிகள் கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தை விட்டுவிடாமல் பயன் படுத்திக்கொண்டமையினுல் இன்று நல்ல நிலைமையில் இருக்கின்ருர்கள். ஆனுல், எல்லாச் சந்தர்ப்பங்களும் நல்லதாய் இருக்கமுடியாது. ஆகவே, ஆராய்ந்து

நல்ல சந்தர்ப்பம் என்று தோன்றினால் ஒவ்வொருவரும் அதை விடாமல் பற்றிக்கொள்ள வேண்டும்.

நல்லவர்களுடன் பழகுவதற்கும், நல்ல தொழிலைச் செய்வதற்கும் சந்தர்ப்பம் வரும். அதை விட்டுவிடக் கூடாது. தாம் பாரிஸ்டர் பரீட்சையில் தேறியவுடன் வடநாட்டில் வக்கீல் தொழிலில் ஈடுபட்டார் காந்தி அடிகள். அப்போது அவருக்குத் தென்னாப்பிரிக்காவுக்குப் போக வாய்ப்புக் கிடைத்தது. அதை விடாமல் அவர் ஏற்றுக்கொண்டார். அந்த அவருடைய செய்கையே அவரை உலகப் பெரிய மனிதராக்கியது! எப்படி? அது ஒரு பெரிய கதை! அவருடைய சரிதத்தில் கண்டு கொள்ளுங்கள்.

"ஆயிரம் ரூபாய்களை அரை நாளில் செலவழித்தாலும் செலவழிப்பேன். நான் என் வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவற்குரிய சந்தர்ப்பங்களை ஒரு போதும் நழுவவிட மாட்டேன்" என்று கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களை யெல்லாம் பயன் படுத்திக் கொண்டு உயர்ந்த நிலையை அடைந்த ஒருவர் கூறுகின்றார். அவர் கூறுவது உண்மை தான்! "நாய்க்கும் ஒரு நல்ல காலம் வரும்" என்னும் ஒரு பழமொழியும் இருக்கின்றதே! தமக்கென்று தனித்திறமை ஒன்றும் இல்லாமல் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்த ஒரே காரணத்தினால் வாழ்க்கையில் உயர்ந்துள்ளவர்களை நாம் காணவில்லையா? ஒவ்வொருவருக்கும் ஒரு வாய்ப்புக் கிடைக்கும். அதைப் பயன் படுத்திக் கொள்ளத் தெரிந்து கொள்வதும்சிக்கனந் தான்.

நம்மை உயர்த்தக் கூடிய நல்ல புத்தகங்களை வாங்குவதற்கும் நல்ல செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளைப் படிப்பதற்கும் செலவு செய்வது சிக்கனத்தான். அவற்றால் பலன் உண்டு.

வாழ்வதற்கு வழி

* *

15

சிலர் சிக்கன மென்றவுடன் சிக்கனத் தன்மையை, நாம் முன்னே ஓரிடத்தில் சொல்லியபடி, எல்லாவகையிலும் கையாளத் தொடங்குகின்றனர். சிலர் தங்களுக்கு வேண்டிய எல்லா வேலேகளேயும் தாங்களே செய்து கொள்ள வேண்டுமென்றும் கூறுவார்கள். இந்த வகையில் ஒருவரால் செய்ய முடிந்தது மற்ருெருவரால் செய்ய முடியாததாக இருக்கலாம். வேறு வேலே இல்லாதவர்கள் காய்கறிகள் வாங்கத் தாங்களே கடைக்குப் போகலாம். அதே நேரத்தில் பெரிய பெரியவேலேகளேக் கவனிக்க வேண்டியவர்கள் கடைக்குப் போய்க் கொண்டிருப்பது சிக்கனமாகுமா? இன்ஞ்சினியருக்கு வீடுகட்டத் தெரியுமென்ருல் அவரே செங்கல்லே அடுக்கிக்கொண்டிருப்பது சிக்கனம் ஆகுமா? இப்படி அவரவர்களுக்குத் தெரிந்த வேலேயை அவரவர்களே செய்துகொண்டிருப்பது என்பது சிலருக்குச் சிக்கனமாய் இருக்கலாம்; சிலருக்குச் சிக்கனமாய் இருக்க முடியாது; நஷ்டமாய் இருக்கும்.

சிக்கனம், சிக்கனம் என்று சொல்லிக் கொண்டே சிலர் வேண்டாத பொருள்களேயெல்லாம், குறைந்த விலேக்குக் கிடைத்த ஒரே காரணத்தினுல், வாங்கி வீட்டில் அடைத்து வைக்கின்றனர். ஒவ்வொருவரும் அவரவர்கள் வீட்டிலுள்ள பெட்டி, 'பீரோவ்' படுக்கைஅறை, இன்னும் பல இடங்கள் ஆகியவற்றைப் பரிசோதனே செய்து பாருங்கள். அங்கெல்லாம் வேண்டாத இரண்டொரு பொருள்களேயாவது காணலாம். மிகமிக அவசியமென்று

சொல்லமுடியாத பொருள்களை எதற்காக வாங்கவேண்டும்? ஆடம்பரத்தைக் கருதியும் அழகைக் கருதியும் சிலர் வேண்டாத பொருள்களை வாங்குகின்றனர். ஆடம்பரமும் அழகும் எல்லா இடங்களிலும் எப்போதும் தேவைதானு? "எப்போது எங்கே எது வேண்டும், எப்போது எங்கே எது தேவை இல்லை" என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? தாராள குணமும் உயர்ந்த எண்ணங்களும் தொழில் செய்வோர், வர்த்தகர் முதலியவர்களுக்கு நிச்சயமாக நன்மையைத் தரும். பேராசைக்காரர்களும், குறுகிய நோக்கம் உள்ளவர்களும் தொழில் துறைகளில் சிறந்து விளங்குவது இல்லை. இத்தகைய காரணங்களினுல் சிக்கனம் என்பது என்ன என்பதை எல்லோரும் கவனிக்க வேண்டும்.

கையில் பணம் இருந்தால் விருப்பமானவைகள் எல்லாவற்றையும் உடனே வாங்கி விடுவதென்பது ஊதாரிகள் செய்யும் வேலையாகும். அறிவு வளரப் பெருத குழந்தை உள்ளம் படைத்தவர்களே விரும்பியவற்றை விரும்பிய போதே வாங்க ஓடுவார்கள்.

சிலர் குறுகிய எண்ணமும், சிக்கனமும் இரட்டைக் குழந்தைகளைப் போன்றவை என்று நினைக்கின்றனர். அதுதான் இல்லை. அவைகள் ஒன்றுக்கு ஒன்று உறவோ தொடர்போ இல்லாதவைகள்! சிக்கனக்காரர்கள் தகுந்த காரணம் இருந்தால்தான் செலவு செய்வார்கள்: அதற்காகத்தான் சேர்த்தும் வைப்பார்கள்! குறுகிய எண்ணம் உள்ளவர்களோ தகுந்த காரணம் நேரும்போதும் செலவு செய்ய மாட்டார்கள். எந்த வழியினுல் பொருள் வந்தாலும் சரிதான்; அதை அவர்கள் சேர்த்து வைப்பார்கள்.

சிலர் தங்களைச் சுற்றிலும் இருப்பவர்களிடம் "தாராளக்காரர்" என்று பெயரெடுத்திருக்கலாம், நல்லது தான்! தேவைக்குமேல் பொருள் இருப்பவர்கள் கேட்ட

வர்களுக்குக் கேட்டபடியே பொருளைக் கொடுத்து அந்தப் பட்டத்தைப் பெறலாம். ஆனால் வரவுக்கு மேல் செலவு செய்து கொண்டு வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வழி இல்லாதவர்கள் "தாராளக்காரர்" என்னும் பெயருக்கு ஆசைப் படலாமா? கடன்காரர்களும், செலவுக்குத் தகுந்த வருமானம் இல்லாதவர்களும் "தாராளக்காரர்" என்னும் பெயருக்கு ஆசைப் பட்டால் இருக்கும் நிலைமை கெட்டுத் துன்பமே உண்டாகும்; கடன் கொடுத்தவர்களின் சாபமும் சேரும்.

ஊதாரித்தனத்திற்கும் கருமித்தனத்திற்கும் நடுவிலுள்ள சிக்கனத்தில் நாம் ஒவ்வொருவரும் நிற்க வேண்டும். நாம் எந்தப் பொருளை அடைவதானாலும் அதற்கு ஓர் உயர்ந்த நோக்கம் இருக்க வேண்டும். அந்த நோக்கத்தில் சிக்கனம் இருக்கும். செய்யும் செலவு உயர்ந்த நோக்கத்திற்காகவே இருக்க வேண்டும். தேக சுகத்திற்காகச் செலவிடுவதைப் பார்க்கிலும் அறிவு வளர்ச்சிக்காகச் செய்யப்படும் செலவே சிக்கனம் உள்ளது. பணம் உள்ளவர்களிலும், பீ. ஏ., எம். ஏ., படித்தவர்களிலும் சிலர் மாதந்தோறும் இரண்டொரு புத்தகங்கள், தினந்தோறும் ஒரு பத்திரிகை காசு கொடுத்து வாங்குவதில்லை. எல்லாம் இரவல் தான்! இரவல் வாங்கிய புத்தகங்களைத் திருப்பிக் கொடுப்பது மில்லை; கொடுக்க மனம் வருவது மில்லை. இவை யெல்லாம் சிக்கனம் ஆகாது. இவ்வாறு நடக்கின்றவர்கள் மன தரித்திரம் பிடித்தவர்களாகவே கருதப் படுவார்கள். தங்கள் நலம், தங்கள் குடும்பத்தினரின் நலம் ஆகியவைகளைக் கெடுத்துக் கொண்டு பொருளைச் சேர்ப்பது எவருக்கும் நல்ல தல்ல.

"ஒருவருடைய மனைவி தன் குழந்தையுடன் தானும் தன் கணவனும் இருந்து புகைப் படம் பிடித்துக்கொள்ள வேண்டு மென்று ஆசைப்பட்டாள். இது குற்றமுள்ளது

மல்ல; அதிகச் செலவாகக் கூடிய வேலையும் அல்ல. இளமையும் அழகும் உள்ள அந்த மனைவி தன்னுடைய உருவப் படத்தைப் பிற்காலத்தில் தன் சந்ததியார் பார்க்க வேண்டு மென்று விரும்பியும் இருக்கலாம்! அதில் குற்றமில்லை. ஆனால் கருமியாகிய கணவன் அவள் பல முறைக் கேட்டும் அவள் விருப்பத்தை நிறைவேற்ற வில்லை. கொஞ்சம் கொஞ்சமாகக் காலஞ் சென்றது! அந்த மனைவியும் இளமைப் பருவத்தைக் கடந்து முதுமைய்யை நெருங்கி விட்டாள்! "ஒரு புகைப் படம் பிடித்துக் கொள்ள வில்லையே" என்ற குறை மட்டும் அந்த நல்ல மனைவியின் மனத்தில் இருந்து கொண்டே இருந்தது. பாவம்! இப்படி அவள் கணவன் நடந்து கொண்டது சிக்கனம் ஆகுமா?" என 'என்றி கிளீவ்ஸ்' என்ற ஒரு சிக்கன நூலாசிரியர் கூறுகின்றார்.

விலை மலிவாய் இருக்கிற தென்று மழைக் காலத்தில் ஈர விறகை வாங்கி வருவது நல்லதா? அது சிக்கனம் ஆகுமா? சிக்கன மென்று சொல்லிக் கொண்டு தகுதியற்ற பொருளை வாங்கித் துன்பப் படுவதைப்பார்க்கிலும் அந்தப் பொருளை வாங்காமலே இருக்கலாம் அல்லவா?

எல்லாவற்றிலும் சிறந்த சிக்கனம் என்ன வென்றால் எந்தப் பொருளிலிருந்தும் அதனால் அடையக்கூடிய முழுப் பயனையும் அடைய முயற்சிப்பதே ஆகும். ஆனால் தீய வழிகளினால் வரக்கூடிய பயன் சிக்கனம் ஆகாது. அது நல்லதைப் போலத் தோற்றித் தீமையை விளைத்து விடும்.

எவ்வளவு ஏழைகளாயினும் சரியே; அவர்கள், தங்கள் அறிவு வளர்ச்சிக்கான புத்தகங்களை வாங்கும் வகையில் பணத்தைச் செலவிடுவது ஊதாரித்தனமாகாது. பணப் பஞ்சம் இருந்தாலும் இருக்கலாம்: அறிவுப் பஞ்சம் இருக்கவே கூடாது. நாடகம், 'சினிமா' ஆகியவைகளை

பார்ப்பதிலும் சிக்கனம் தேவை! நல்ல நாடகங்களையும் சினிமாக்களையும் பார்ப்பதனால் அறிவு வளர்கின்றது! இந்த வகையினால் காசு செலவழிந்தாலும் பெறுவது நன்மை அல்லவா? ஆகவே இவ்வகையில் செலவிடும் பணம் சிக்கனத்தில்தான் சேரும். ஆனால் மனத்தை விகாரப் படுத்தக் கூடிய சினிமாக்களையோ, நாடகங்களையோ பார்ப் பது சிக்கனமாகாது. அவைகளால் மனமும், பணமும், காலமும் வீணாகின்றன! ஆகவே அவ்வகையில் செலவழிக் கும் பணம் சிக்கனத்தில் சேராது.

பெரும்பாலாருக்குப் பணம் எளிதில் கிடைத்து விடுவ தில்லை. அருமையாகக் கிடைக்கும் பணத்தை பாழான வழிகளில் செலவழிப்பது கொடுமையாகும். எவர் ஒருவர் ஒரு பொருளை வாங்கிய பிறகு அதற்காகத் தாம் உண்மை யாகவே அதிக விலை கொடுத்து விட்டதாக நினைக்கின் றாரோ, அவர், தம் பொருளைச் சிக்கனத் தன்மையுடன் செலவழிக்க வில்லை என்றே கூறலாம். வாங்கும் பொரு ளுக்கு ஏற்ற விலையைக் கொடுப்பவரே சிக்கனக்காரர் ஆவார். தாம் தேடாமல் முன்னோர்கள் வைத்துவிட்டுச் சென்ற பொருளினால் காலம் கழிக்கின்றவர் சிக்கனக்காரர் ஆகமாட்டார். தம் முன்னோர்கள் வைத்துச் சென்ற பொருளைத் தொடாமல் தமக்கு வேண்டிய பொருளைத் தாமே தேடிக்கொள்ளுகின் றவரே சிக்கனக்காரராவார்.

பணத்தின் மகிமை மிகவும் உயர்ந்தது. அந்தப் பணத்தை வீண்வழிகளிலே செலவு செய்வது மணலிலே பாலைக் கவிழ்ப்பது போலாகும். பணம் ஒன்றே உங்கள் விருப்பப்படி உலகத்தை ஆட்டிவைக்க வல்லது. பிறரை நமது விருப்பப்படி நடக்கச் செய்வதும் பணந்தான். மக்களை அடிமைப் படுத்துவதும் பணந்தான். மாதந் தோறும் சராசரி நூறு ரூபாய் நம்மால் சம்பளம் கொடுக்க முடியுமானால், கோடிக்கணக்கான மக்கள் அதை ஏற்றுக்

கொண்டு நமது விருப்பப்படி நடக்கக் காத்துக்கொண்டிருப்பார்கள். ஐந்து ரூபாய் கையில் இருந்தால் இரண்டு பேரை, ஏன்! சில சமயங்களில் மூன்று பேரைக்கூட ஒரு நாள் முழுவதும் நாம் நமக்காக உழைக்கச் செய்யலாம். பணத்தின் பெருமை அத்தகையது! அதை நாம் பாழாக்கலாமா? ஐந்து ரூபாயாய் இருந்தாலும் அதை நாம் வீண் வழியில் செலவிடலாமா? பல ஐந்துகள் சேர்ந்தது தான் ஒரு நூறு.

ஒவ்வொருவரும் செலவு செய்வதற்காகவும் மிச்சம் பிடிப்பதற்காகவும் சம்பாதிக்க வேண்டும். செய்துவிட்ட செலவுக்காக, கடனைத் தீர்ப்பதற்காகப் பொருளைத் தேடும் முயற்சியினால் எவருக்கும் இன்பந்தோன்றாது. இதை எல்லோரும் நன்றாகக் கவனிக்க வேண்டும்.

நாம் கூலி கொடுத்து அல்லது சம்பளம் கொடுத்து வேலை வாங்கும் ஒவ்வொருவரும் தாம் வாங்கும் பணத்திற்கு, ஏற்றபடி நமக்கு இலாபம் கிடைக்கும்படி, நமக்காக வேலை செய்கின்றாரா என்பதை நாம் கவனிக்க வேண்டும். இல்லையானால் நாம் படிப்படியாக இருக்கும் பொருளையும் இழந்துவிடுவோம். "**அதிக சம்பளம்: குறைந்த வேலை**" என்பதே அநேகருடைய எண்ணமாய் இருக்கின்றது. அதனால் தான் நமது நாட்டில் அநேகம் தொழில்கள் தலை எடுப்பதில்லை. தானும் வாழ வேண்டும்; தனக்கு உதவி செய்கின்றவரும் வாழவேண்டும் என்னும் எண்ணம் உள்ளவர்களால்தான் நமது நாடு நன்மை பெற முடியும். நாட்டின் பெயரைச் சொல்லிக் கொண்டு வாழ்கின்றவர்களால் நாடு அதிக நன்மை அடைந்து விடாது. நாட்டின் நன்மைக்காக உழைப்பவர்களால்தான் நாடு நலமடையும். நாட்டின் நன்மையைக் கருதுகிறவர்கள் குறைந்த வேலையைச் செய்து விட்டு அதிகசம்பளத்தை எதிர்பார்க்கமாட்டார்கள். ஆனால், "குறைந்த வேலை அதிக சம்பளம்"

என்னும் கொள்கை உள்ளவர்களே எங்கெங்கும் நமது நாட்டில் நிறைந்து இருக்கின்றார்கள். தாங்கள் பெற்றுக் கொள்ளும் பணத்திற்கு ஏற்றபடியும் பணத்தைக்கொடுத் தவர்களுக்கு நன்மை உண்டாகும் படியும் வேலை செய்யா தவர்களை நாட்டின் துரோகிகள் என்றும், கொள்ளைக் காரர்களென்றும், சோம்பேறிகளென்றும் கூறலாம். இப்படிபட்டவர்களை நாம் நாள் தோறும் பார்த்துக் கொண்டுதானிருக்கின்றோம். இப்படிப் பட்டவர்களைத் துணையாக கொண்டு வாழ விரும்புவதும், இவர்களை நம்பு வதும் தீமையைத் தேடிக்கொள்வதாகும்.

சிக்கனத் தன்மையுடன் வாழ்ந்து சிக்கனத் தன்மை உள்ளவர்களுடன் சேர்ந்திருப்பவர்களே நன்மை பெறு வார்கள்.

மீண்டும் சொல்கின்றேன்: பணந்தான் இந்த உல கத்திலே சர்வ சக்தியையும் உடையது! பணம் சேரத்தகா தவர்களைச் சேர்த்து வைக்கின்றது. 'கூடமாட்டேன்' என்பவர்களைக் கூடும்படி செய்கின்றது. உயர்ந்த குடும் பத்தில் பிறந்தவர்களையும், இழிந்த குடும்பத்தில் பிறந்தவர் களுக்கு ஏவலாளராகச் செய்கின்றது; பொய்யை மெய்யாக்குகின்றது; மெய்யைப் பொய்யாக்குகின்றது; அழகியை அழகற்றவனுக்கும், குமரியைக் கிழவனுக்கும் அடிமைப்படுத்துகின்றது; அறிவாளியை அறிவற்றவ னுக்கு அடங்கச் செய்கின்றது; அதிகாரம் இல்லாதவனுக்கு அதிகாரத்தைத் தருகின்றது. முன்பின் பழக்கமில்லாத நாடுகளிலும் பணம் மனைவியாகவும், தோழனாகவும், வேலைக்காரனாகவும் உதவுகின்றது. பணம் ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு இருப்பவர்கள் எல்லாவற்றை யும் வைத்துக் கொண்டிருப்ப வர்களைப்போல விளங்க லாம்! புலவர்கள் கூறும் இலக்கிய நுட்பங்களைக் கேட்டுத் தலையை ஆட்டிவிட்டுக் கொஞ்சம் பணத்தையும்

கொடுத்துவிட்டால் கல்லாதவர்களும் அந்தப் புலவர்களி ஞல் கற்றவர்களென்று புகழப்படுவார்கள்.

எளியவரொருவர் மிகமிக எளிய உடையுடன் அல்லது சிறிது கிழிந்த உடையுடன் ஒரு கலியாண வீட்டிற்கு வந்தால் அவரைப் பார்ப்பவர்களில் இரண்டொருவராவது "தரித்திரம், இங்கேயும் இந்தக் கோலத்துடன் வர வேண்டுமா? ஒரு நல்ல துணியை இரவல் வாங்கியேனும் கட்டிக்கொண்டு வரக்கூடாதா! உம்: புத்தி இருந்தால் தானே" என்று சொல்கின்றனர். ஏழையாய் இருப்பவர் களில் சிலர் நல்லவிதமான உடையுடன் வந்தாலோ அப் போதும் அந்த இரண்டொருவர் "குடிப்பதற்குச் சரியான படி கஞ்சி இல்லை. உடையும் நடையும் ஆடம்பரத்துடன் இருக்கிறதே" என்று சொல்லுகிருர்கள்.

ஒரு பணக்காரர் எளிய உடையுடன் ஒரு கலியா ணத்திற்கு வந்தால் அப்போது அந்த இரண்டொருவர் "அவருக்கு நிறைய பணம் இருக்கின்றது. வீடு வாசல், காணிபூமி எல்லால் இருக்கின்றன. இருந்தும் ஆடம்பரம் இல்லாமல் அடக்கத்துடன் இருக்கின்ருர். இதுதான் அழகு" என்று சொல்கிருர்கள். பணக்காரர்களிற் சிலர் ஆடம்பரத்துடன் வந்தாலோ அப்போதும் அந்த இரண் டொருவர் அவர்களைப் பார்த்து, "அவருக் கென்ன குறைச்சல்! இலட்சுமி தாண்டவமாடுகிருள். கொடுத்து வைத்தவர் அனுபவிக்கிருர்!" என்று பெருமை தோன்றப் பேசுகிருர்கள்.

இதைப் படிப்பவர்கள் இங்கே நன்ருய்க் கவனிக்க வேண்டும். தங்களைச் சுற்றிலும் நிகழும் நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் தன்மை உள்ளவர்கள் நான் மேலே கூறிய நிகழ்ச்சிகளைப் பலவிடங்களில் கண்டிருக்கலாம். அந்த நிகழ்ச்சிகளால் நாம் அறியக் கூடியது என்ன? பணக் காரர்கள் எங்கே எப்படி இருந்தாலும் அவர்களுக்குப்

பெருமையும் புகழும் கிடைக்கின்றன; ஏழைகள் எங்கே எப்படி இருந்தாலும் அவர்களுக்குப் புகழோ பெருமை யோ கிடைப்பதில்லை. இதை ஒவ்வொருவரும் மனத்திலே வைத்துக் கொண்டு திரை கடலோடியும் திரவியம் தேட வேண்டும்.

சர். ஏ. இராமசாமி முதலியார் என்ற பேரறிஞர் முப்பது ஆண்டுகளுக்கு முன்பும் அறிஞராகவே விளங்கினர். ஆனல், இப்போதிருப்பதைப் போல அப்போது அவரிடம் ஏராளமாகச் செல்வம் குவிந்திருக்கவில்லை. அதனல் அப்போது அவரை உள்ளபடியே புகழவோ போற்றவோ பலர் முன் வரவில்லை. சூளைமேடு ஜமீந்தார் உயர்திரு அருணசல முதலியார் அவர்களே இராமசாமி முதலியார் அவர்கள் முதன் முதல் சட்டசபையில் புகுவதற்குத் துணை செய்தவராவர். சட்ட சபையில் இராமசாமி முதலி யார் அறிவு மிக்கவர் என்று பெயர் பெற்றார். இருந்தாலும் அவருடைய திறமைக் கேற்ற இடமும் பெருமையும் அப்போது அவருக்குக் கிடைக்க வில்லை. எவ்வளவுதான் அறிவுத்திறன் இருந்தாலும் கூடவே பணமும் இருந்தால் தான் அந்தத் திறமை நன்ருக மதிக்கப்படும் என்பதை இராமசாமி முதலியார் உணர்ந்தார். பணம் சேர்ப்பதில் அவர் எண்ணம் திரும்பியது. இன்றைக்கு அவர் ஒருபெரும் பணக்காரராகத் திகழ்கின்ருர்; பலப் பல தொழில் துறை களில் ஈடுபட்டிருக்கின்ருர். பெரும் பெரும் பணக்காரர்கள் அவருடைய 'சம்பந்தி'களாய் இருக்கின்ருர்கள். இன்றைக்கு அவருடைய வார்த்தை எங்கெங்கும் செல் கின்றது. அவர் அறிவு மதிக்கப்படுகின்றது! உலக அரசியல் வாதிகளில் அவரைப் போற்ருதவர்கள் இல்லை.

ஆகவே ஒருவருக்கு எவ்வளவு அறிவு ஆற்றல் இருந் தாலும் பணம் சேர்ந்தால்தான் அவைகள் சிறந்த மதிப்பைப் பெறுகின்றன! பணம் இல்லாதவர்கள் எந்தத் துறை

யிலும் விரைவில் முன்னேற முடியாது, அறிவும் முயற்சி யும் பணம் சேர்ந்த பிறகுதான் மதிக்கப் படுகின்றன.

"சிறந்திட வேண்டு மென்னில்
சீர்தரு பணத்தைச் சேர்ப்பாய்
மறந்தவர் நினைந்து சேர
மாண்புறு பொருளே வேண்டும்
துறந்தவர் தமக்கும் வாழத்
துணைஅது புரிந்து நிற்கும்
இறந்தவர் எழுவா ரையா
"பணம் பணம்" என்று சொன்னால்!"

என்ற பாட்டின் கருத்து இந்தக் காலத்திற்கு மட்டுமல்ல, எந்தக் காலத்திற்கும் பொருத்தமானதே!

வாழ்வதற்கு வழி

* *

16

வாழ்க்கையில் நேரக்கூடிய நிகழ்ச்சிகளின் உயர்வு தாழ்வுகளை நன்ருகச் சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ள வேண்டியவைகளைக் கொண்டு தள்ள வேண்டியவைகளைத் தள்ளுகிறவர்களே சிக்கனக்காரர்க ளாவார்கள்! வீண் பேச்சைப் பேசுகிறவர்களும், வீண்வழியில் காலத்தைப் போக்குகிறவர்களும் சிக்கனக்காரர்க ளாகமாட்டார்கள். ஐந்து ரூபாய் பெறக்கூடிய பொருள்களுக்கு ஐந்தரை ரூபாய் கொடுப்பவர்களும் சிக்கனக்காரர்களாக மாட்டார்கள்.

ஐந்துமணி நேரம் உழைத்துவிட்டு இரண்டுமணி நேரக் கூலியைப் பெறுவது கூலி வேலை செய்கிறவர்களுக்குச் சிக்கனம் ஆகாது. தகுதியும் திறமையும் உள்ள ஒருவருக்குக் குறைந்த சம்பளம் கொடுப்பதும் நல்ல சிக்கனக்காரர் செய்யக்கூடிய வேலை அல்ல! ஒருவருடைய திறமையின் உயர்வு தாழ்வுக்கு ஏற்றபடி அவர் மதிக்கப் படவேண்டும். சிக்கனத்தை விரும்புகிறவர்கள் இதைக் கவனிப்பார்களாக!

அறிவு வளர்ச்சி பெற்றவர்களிடத்திலும், பலவிதமான வேலைகளில் ஈடுபட்டவர்களிடத்திலும், சொல்ல வேண்டிய செய்திகளைச் சுருக்கமாகச் சொல்லி நமது கருத்தை விளக்கி விடவேண்டும். எழுதினாலும் நல்ல கடிதத்தில், தெளிவான எழுத்தில், எழுதி விளக்கமாகவும் சுருக்கமாகவும் செய்தியை முடித்துக் கொள்ள வேண்டும். எல்லோரிடத்திலும் இவ்வாறு நடந்துகொள்ளவேண்டியது

அவசியமேயானாலும் நிறைய வேலை உள்ளவர்களிடத்திலும், அறிவாளர்களிடத்திலும் முக்கியமாக நாம் மேற்கூறியவாறு நடந்து கொள்வதே நல்லதாகும்.

வயதானவர்களும், அறிவாளர்களும் அறிவு நிரம்பிய வார்த்தைகள். சிக்கனம், பொருளாதாரம் ஆகிய இவைகளையே விரும்புவார்கள். அறிவு நிரம்பிய வார்த்தைகளானாலும் அதையும் பிறர் விருப்பத்திற்கேற்றபடி பேசுகிறவர்களே காரியத்தில் வெற்றி பெறுகிறார்கள்.

பொதுவாகச் சிக்கனக்காரர்கள் எதையும் அலட்சியம் செய்யமாட்டார்கள் ; எவரையும் இழிவாகக் கருதமாட்டார்கள். சிக்கனக்காரர்கள் "சிறு துரும்பும் பல் குத்த உதவும்" என்னும் பழமொழியை மறக்கவே மாட்டார்கள். முள்ளைக் கொண்டு முள்ளை எடுப்பதைப் போல அயோக்கியர்களை அடக்க அயோக்கியர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் அவர்களுக்குத் தெரியும். 'முள்ளைக் கொண்டு முள்ளை எடுக்கலாம்' என்பதற்காக எவரும் எப்போதும் முள்ளைக் கையில் வைத்திருப்பதில்லை. அயோக்கியர்களும் பயன்படுவார்கள் என்பதற்காகச் சிக்கனக்காரர்கள் அவர்களை எப்போதும் தங்களிடம் சேர்த்து வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். "சிறு துரும்பும் பல் குத்த உதவும்" என்பதற்காக சிக்கனக்காரர்கள் எந்தப் பொருள் எப்போது கிடைத்தாலும் அதை வாங்கி வீட்டில் அடைத்து வைத்துக்கொள்ள மாட்டார்கள். சிறு துரும்புடை வேண்டிய போது பயன் படுத்திக்கொள்ள அவர்களுக்குத் தெரியும்.

ஆனால், பணம் சேர்ப்பதென்ற ஒரேஎண்ணத்துடன் கருமியாக மாறிவிடக் கூடாது. பணம் சேர்ப்பதற்கும் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். யாதொரு நோக்கமும் இல்லாமல் பணத்திற்காகவே பணத்தைச் சேர்ப்பதென்பது கூடாது. நம்முடைய தன்மை தம்முடைய, குடும்பத்தி

ளுள்ளவர்களுடைய நன்மை ஆகிய இவைகளைக் கவனியாமலே பொருள் சேர்க்கிறவர்களும் இருக்கிறார்கள்.

தாமும் அனுபவிக்காமல், பிறருக்கும் உதவி செய்யாமல் பணத்தின் மீது கொண்ட ஆசைக்காகவே பணத்தை வாழ்நாள் முழுவதும் சேர்த்துக் கொண்டே போவதனால ஆகக்கூடிய பயன் யாது? "வாழ்க்கையின் அவசியமான செலவுக்கு ஏராளமான பொருள் தேவைப்படுவதில்லை. வசிப்பதற்கு ஒரு வீடும், செலவுக்குக் கொஞ்சம் பணமும் இருந்தால், அவை, எல்லோருக்கும் போதுமானது. இதை சிக்கனக்காரர்களால் எளிதில் அடைந்துவிட முடியும்" என்று 'ஆன்ரூ கார்னகி' என்பவர் கூறுகின்றார்.

தனிப்பட்ட தகுதி உள்ளவர்களுக்கும் பொது நலத்திற்கும் ஒருதவியும் செய்யாமல் இலட்சம் இலட்சமாகப் பணத்தைச் சேர்த்துக் கொண்டே போகும் கொடியவர்களும் நாட்டில் இருக்கிறார்கள்! அவர்கள் சிக்கனக்காரர்களாக மாட்டார்கள். அவர்களை ஏழைகளின் இரத்தத்தைப் பணமாக மாற்றுகிறவர்களென்றே சொல்ல வேண்டும். இலட்சம், இலட்சம், இலட்சமாகப் பணத்தைச் சேர்த்துக் கொண்டே போவது சிக்கனமும் அல்ல! மனிதத் தன்மையும் அல்ல! புனிதத் தன்மையுமல்ல! தாமும் தம் மக்களும் வாழ்வதற்கு ஏற்ற அளவு பொருள் சேர்ந்தவுடன் மேலும் மேலும் சேரும் பொருளைப் பொது நலத்திற்காகச் செலவிடாமல் தாங்களே வைத்துக் கொள்ளுகிறவர்கள் தேசத் துரோகிகளே ஆவார்கள்! அவர்கள் பேராசைக்காரர்களே அல்லாமல் சிக்கனக்காரர்கள் ஆகமாட்டார்கள்.

இங்கு நாம் மற்றொரு செய்தியையும் கவனிக்கவேண்டும் சிலர் பஞ்சு ஆலை முதலிய கைத்தொழில் மூலமாக ஏராளமாகப் பணத்தைக் குவித்து மீண்டும் அந்தப் பணத்தைத் தொழில் துறைகளில் முதலீடாகப் போட்டு

பல ஆயிரம் மக்களுக்கு வேலை கொடுக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் நாட்டுக்கு நன்மை செய்கிறவர்களே அன்றித் தீமை செய்கிறவர்களாகமாட்டார்கள்.

தாங்களோ தங்கள் முன்னோர்களோ ஆரம்பித்த ஏதோ ஒரு தொழிலினால் சிலரிடம் ஏராளமாகப் பணம் குவிந்து கொண்டே இருக்கின்றது. அந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் உலகத்தினருக்கு ஓர் உதவியும் செய்வதில்லை. அப்படிப்பட்டவர்களால் நாட்டுக்கு என்ன நன்மை? நமது அரசாங்கம் மக்களின் நன்மைக்காக அவ்வப்போது போடும் திட்டங்களுக்காவது இவர்கள் தங்களிடம் மிச்சமாகச் சேர்த்துக்கொண்டிருக்கும் பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கலாமே! ஆனால், அனேகருக்கு மனம் வருவதில்லை. காரணம் என்ன?

சில பழக்க வழக்கங்களைக் காலத்திற் கேற்றபடி இடத்திற் கேற்றபடி மாற்றிக் கொள்வதற்குப் பலரால் முடிய வில்லை.

இளமையில் சிக்கனத் தன்மையுடன் நடந்து பொருளைச் சேர்த்தவர்கள் பலருக்கு, போதுமானபொருள் சேர்ந்த பிறகும், மேலும் மேலும் பொருளைச் சேர்க்க வேண்டும் என்னும் எண்ணமே நிலைத்து நின்றுவிடுகிறது. ஆகவே. அவர்களால் எவருக்கும் நன்மை உண்டாவதில்லை. பணத்தைச் சேர்க்கப் பழகியதைப் போலவே வாழ்க்கைக்கு வேண்டு மளவு பணத்தை வைத்துக் கொண்டு, மிகுந்துள்ள பணத்தை ஏழை எளியவர்களின் நன்மைக்கான வழிகளில் செலவு செய்யவும் பழக வேண்டும். அந்த ஏழை எளியவர்களின் துணைஇல்லாமல் எவரும் பணத்தைச் சேர்த்திருக்க முடியாதே!

ஏழை எளியவர்களின் நன்மையைப்பற்றி நினையாமலே மேலும் மேலும் பணத்தைக் குவித்துக்கொண்டே போவது இக்காலத்தில் நாகரிகமாகக் கருதப்படுகின்றது!

இப்படிப் பொருளைச் சேர்த்துக் கொண்டே போகிறவர்களிடமிருந்தோ அல்லது அவர்களின் சந்ததியார்களிடமிருந்தோ அந்தப்பொருள் என்றேனும் அழிவை நோக்கிச் செல்லும் என்பது உண்மை! நிறைந்துள்ள தண்ணீர் வெளியிலே செல்லாதபடி தடுக்கப்பட்டிருக்கும் ஏரியிலே மேலும் மேலும் தண்ணீர் சேர்ந்து கொண்டே இருக்குமானல், அந்த ஏரியின் கரை உடைந்து தண்ணீர் ஒழுங்கின்றி வெளியில் செல்வது இயற்கைதானே!

தேவைக்கு மேல் சேரும் பொருள், ஏழைகளின் நன்மைக்காக, ஆண்டவனால், நம்மிடம் கொடுக்கப்பட்டதென்று நினைத்து ஏழைகளுக்கு உதவும் வழியில் அதைச் செலவிடப் பழகவேண்டும். இப்படிப்பட்ட எண்ணமுள்ளவர்கள் தங்கள் தேவைக்கு மேலும் வீணுகப் பொருளைக் குவித்துக் கொண்டே போகமாட்டார்கள். தேவைக்குமேல் தங்களிடம் உள்ள பொருளைப் பிறர் நலத்திற்காகச் செலவிடுகிறவர் மனிதர்களில் தெய்வமாவர். பணத்தை அடக்கி ஆளத் தெரிந்தவர்களுக்குத்தான் தேவைக்கு மேல் சேர்ந்த பணத்தைப் பொது நன்மைக்காகச் செலவிடத் தெரியும். பணத்திற்கு அடிமையாய் இருப்பவர்களுக்கு அந்தப் பணத்தைக் கொண்டு எந்த நன்மையும் செய்யத் தெரியாது! தெரிந்தாலும் மனம் வராது.

'இராபர்ட் பர்ன்' என்பவர் சொல்லுகிறுர்: "ஏழைகள் சிக்கனத்தன்மையுடன் வாழ்வது நல்லதுதான். பணம் சேர்ந்தவுடன் அவர்களால் சுதந்திரத்துடன் வாழ முடியும். ஒவ்வொரு தனிமனிதனும் சுதந்திர எண்ணத்துடன் வாழ்வதே வாழ்க்கையின் இலட்சியமாகும். ஆனல், ஏராளமாகப் பணம் சேர்ந்தவுடன் அதைக் கொண்டு மற்றவர்களுக்கு உதவி செய்வது வாழ்க்கையின் மிகவும் உயர்ந்த இலட்சியமாகும்."

'பிலிப்ஸ் டி. ஆர்மர்' என்பவர் சொல்லுகின்ருர்: "திறமை, அறிவு, சிக்கனத்தன்மை, யோக்கியதை ஆகிய இவைகளுடன் வாழ்க்கையைத் தொடங்கும் எந்த வாலிபனும், உலகத்தில் மிகமிக முக்கியமான தென்று கருதப்படுகின்ற பணத்தைச் சேர்த்து விடலாம். சிக்கனத் தன்மையுடன் காலத்திற் கேற்றபடி வாழத் தெரிந்தவன் பொருளைச் சேர்ப்பது கடின மல்ல! யானும் சிக்கனத் தன்மையுடன் இருந்து பொருளைச் சேர்த்தவனே! அந்தச் சிக்கனத் தன்மை என் தாயார் மூலமாக என்னிடம் படிந்தது!"

'இரசல் சேஜ்' என்பவர் சொல்வதைக் கவனியுங்கள்: "சிக்கனந்தான் வாழ்க்கையின் இன்பத்திற்கு முதற்காரண மாய் இருப்பது. அப்படி இருந்தும் சிக்கனத் தன்மை யைப் பலர் கையாளாமல் இருப்பது என்ன காரணம் பற்றியோ? தெரிய வில்லை! சிக்கனத் தன்மையைக் கையாளுவ தென்பது பலருக்கு எளிதாகவே இருக்கும். இருந்தும் அதைப் பற்றிய எண்ணமே இல்லாமல் சிலர் வாழ்வது வருந்தத் தக்கதே! மக்கள் சமூகத்திலே மதிப் பையும், வீட்டில் இன்பத்தையும், தொழிலில் வெற்றி யையும் தருவது சிக்கனமே ஆகும். சிக்கன வாழ்க்கை ஒருவருடைய முயற்சிக்கு உற்சாகத்தை அளிக்கின்றது. 'சிக்கனத்தன்மை உள்ளவன் சோம்பேறியாய் இருந்தான்' என்று நான் கேள்விப் பட்டதே இல்லை. சிக்கனம் சுதந்திரத்தையும் தன் நம்பிக்கையையும் அளிக்கின்றது. சிக்கனத் தன்மை உள்ளவன் தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ளக் கூடியவனுய் இருப்பான்.

"சிக்கனத்தைப் பற்றிப் பள்ளிக்கூடங்களில் மாணவ மாணவிகளுக்குப் போதிக்க வேண்டும். இப்போது அவ்வாறு போதிக்காமல் இருப்பது நமது கல்வி முறையில் உள்ள ஒரு பெரிய குற்றமாகும். சிக்கனத் தன்மையுடன்

பொருளைச் சேர்ப்பதிலுள்ள நன்மையை நமது மாணவர்கள் தங்கள் இளம் பருவ முதலே உணர வேண்டும். பாடத் திட்டங்களிலும் சிக்கனத்தைப் பற்றிய போதனை இடம் பெற வேண்டும். இதனால் பெரும் பயன் உண்டாகும். வாழ்க்கைக்கு உடனடியாகப் பயன் தராத பாடத் திட்டங்களை மிகுதியாகப் பிள்ளைகளின் தலையில் சுமத்துவதனால் உண்டாகக் கூடிய நன்மை ஒன்றுமிராது. சிக்கனத் தன்மை ஒன்றே மாணவர்கள் பல தீய வழிகளில் செல்லாதபடி அவர்களைக் காப்பாற்றக் கூடியது. ஒரு வாலிபன் தன் வாழ்க்கை யாகிய கப்பலை உலகமாகிய கடலில் எவ்வாறு செலுத்தப் போகிருனென்பதை அவனிடம் காணப்படும் சிக்கனம், சிக்கனம் இல்லாமை ஆகிய தன்மையைக் கொண்டு தீர்மானித்து விடலாம்.

"தற்கால உலகம் எதைச் செய்தாலும் அதிலிருந்து உடனே கைமேல் பலனை எதிர்பார்க்கின்றது. இத்தகைய உலகத்தில் கையில் பணம் உள்ளவர்தான் தட்டுத்தடங்கல் இல்லாமல் முன்னேற்ற மடைவார். அதற்காக ஏராளமாகப் பணத்தை மேலும் மேலும் குவித்துக் கொண்டே போக வேண்டு மென்று எண்ணக் கூடாது. பணத்தினால் உண்டாகக் கூடிய பயனைத் தெரிந்து கொள்ளாத கோடீசுவரரைப் பார்க்கிலும் பணத்தினால் உண்டாகக் கூடிய நற்பயனை உணர்ந்த இலட்சாதிபதியே மேலானவர்! உலகம் என்ன சொல்லிய போதிலும் சரியே, பணத்தைச் சேர்த்து அதைப் பயன் படுத்தத் தெரிந்தவரே சிறந்தவராவார். இதையெல்லாம் கவனியாமல் சிக்கனத்தன்மையைக் கைவிட்டுக் கடன்காரர்களாய்த் திரிகின்றவர்களுக்கு இந்த உலகத்தில் எந்த இடத்திலும் நன்மை கிடைக்காது. தரித்திரம் எந்தக் குடும்பத்திலும் தாங்க முடியாத துன்பத்தை உண்டாக்கி விடும். அத்தகைய தரித்திர நிலையிலும் அறிவுள்ளவர்கள்

தங்களுக்குள்ள சூழ்நிலையைச் சிக்கனத்துடன் பயன் படுத்திக் கொண்டு தரித்திரத்தை ஒழித்து வாழ்க்கையில் வெற்றி பெறுகிருர்கள்.

"சிக்கனத்துடன் வாழ விரும்புகிறவர்கள் அனுசரிக்க வேண்டிய ஒரே ஒரு சிறந்த கட்டளை இருக்கின்றது. அந்தக் கட்டளைப்படி நடக்கின்றவர்கள் நன்மை பெறுவார்கள். அந்தக் கட்டளை என்ன ? "வருமானத்தைப் பார்க்கிலும் செலவு குறைவாக இருக்க வேண்டும்," என்பதே அந்தக் கட்டளை. மிகப் பெரிய சம்பளம் வாங்குகின்றவராய் இருந்தாலும் சரி ; பெரும் வியாபாரியாய் இருந்தாலும் சரி ; வருமானத்திற்குமேல் செலவு செய் கின்றவர்கள் இன்பம் உள்ளவர்களாய் வாழமாட்டார்கள் ; தாங்கள் வருந்தும்படியான துன்பத்தில் அவர்கள் சிக்கிக் கொள்ளுவார்கள். வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டு மானல், வருமானம் எவ்வளவு குறைவாய் இருந்தாலும் கொஞ்சம் பொருளையாவது சேர்த்துப் பிடிக்கப் பழக வேண்டும். ஏதோ கொஞ்சமேனும் இன்பமாக வாழ்வதற் கேற்ற வழியில் ஒவ்வொருவரும் செல்ல வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு முன்னுல் இருந்ததைப் பார்க்கிலும் பத்து ஆண்டுகளுக்குப் பின்னுல் ஒருவர் நல்ல நிலையில் இல்லை என்ருல் இனி அவர் நல்ல நிலையை நோக்கிச் செல்வாரென்று அவரை நாம் எவ்வாறு நம்புவது ?

"ஒவ்வொருவரும் சிக்கனத் தன்மையுடன் வாழத்தான் வேண்டும். மன உறுதி உள்ளவர்களால் அவ்வாறு வாழ முடியும். மனமிருந்தால் மார்க்கம் உண்டு. 'சிக்கனத்தன்மையுடன் என்ருல் வாழமுடியவில்லை' என்பது பொருந்தாத வீண் பேச்சு ஆகும். எதிர் பாராத வகையில் நமக்கு நேரக்கூடிய துன்பத்திலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள வேண்டுமானுல் நாம் சிக்கனத்துடன் வாழ்ந்து பணத்தைச் சேர்க்கப் பழகவேண்டும். விலக்க

முடியாத செலவு நேரிடும்போது கையில் பொருள் இல்லாதவர்கள் படுகின்ற துன்பத்தை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றோம். உங்கள் சம்பாதனையில் பத்தில் ஒரு பங்காவது நீங்கள் சேர்த்துவைக்கப் பழக வேண்டும்''

இவ்வாறு 'இரசல் சேஜ்' என்பவர் உரைப்பது நியாயந்தானே!

பொருளாதாரப் பேரறிவாளர் 'பி. டி. பர்னம் என்பவர் சொல்கின்றார்:

"கையில் பொருள் இல்லாதவர்கள் தங்கள் கருத்தைக் காற்றிலே பறக்கவிட்டுப் பணக்காரர் கருத்துக்கு, அது நியாயமானதாக இல்லாவிட்டாலும், அடிமையாகின்றார்கள். இது பரிதாபகரமான செயலல்லவா? செயல், எண்ணம் ஆகிய இவைகளில் சுதந்திரத்தன்மையுடன் வாழவிரும்புகிறவர்கள் சிக்கனத்துடன் வாழ்ந்துவரப் பழக வேண்டும். சிக்கனத்தன்மை உள்ளவர்கள், தங்களிடம் பொருள் இருக்கும் காரணத்தினால், எந்த வேலையையும் எளிதில் முடிக்கக் கூடியவர்களாவார்கள். சிக்கனக் காரர்களுக்குப் பணத்தைச் சேர்ப்பதைப் பார்க்கிலும் அதைச் செலவிடுவது அதிகத் துன்பமாகத் தோன்றும். நல்லவழி எது என்பதை நன்றாகத்தெரிந்து கொண்டுதான் அதில் சிக்கனக்காரர்கள் பணத்தைச் செலவிடுவார்கள். நல்லவழி எது என்று அறிந்துகொள்வது எளிதான வேலை அல்லவே! 'சிக்கனம் என்பது சம்பாதிப்பதைப் பார்க்கிலும் குறைவாகச் செலவு செய்வதாகும். அதுதான் சிக்கனம். நான் அதைத் தெரிந்து கொண்டேன்' என்று பலர் கூறுகிறார்கள். 'உண்மைதான்; அது சிக்கனந்தான். சிக்கனம் என்பது பணத்தைச் சேர்ப்பது. அதை முடிந்தவரையில் சேர்த்து வைப்பதே சிக்கனம்' என்றும் சிலர் சொல்லுகிறார்கள். சிக்கனம் என்னும் வார்த்தைக்குத் தவறான

பொருள் கொள்வதனுல் பல துன்பம் நேரிடுகின்றது. சிக்கனம் என்னும் வார்த்தைக்குப் பொருள் தெரியாமலே பலர் தெரிந்து கொண்டவர்களைப் போலப் பேசுகின்ருர்கள்.

"சிக்கனம் என்னும் சொல்லுக்குத் தவருகப் பொருள் கொண்டு, தவருகவேபலர் நடக்கின்றனர். நிற்க. 'என்னைப் போலவே என் நண்பனும் மாதந் தோறும் நூறு பவுன் சம்பாதிக்கின்ருன். வருடக் கடைசியில் இரு நூறுபவுன் என்னிடம் மிச்சமாய் இருக்கின்றது; என் நண்பனிடம் ஒரு பவுன்கூட மிச்சமாக இருப்பதில்லை. அது மட்டுமா? அவன் கடனும் வாங்குகிருன். ஏன்? அவனுக்குச் சிக்கனம் தெரியாது; எனக்கு அது தெரியும்' என்று சொல்கிறவர்களும் இருக்கிருர்கள். வண்ணுன் கூலியைக் குறைப்பது, க்ஷவரக் கூலியைக் குறைப்பது, கொடுத்த கடனுக்காக வாங்கிய வட்டியை வாங்கவில்லை என்பது, வாங்கிய சில்லரைக் கடன்களைக் கொடுத்துவிட்டேனென்று சாதிப்பது, சாப்பிட வேண்டிய அளவுக்குக் கூடச் சாப்பிடாமல் வயிற்றைக் கட்டுவது ஆகிய காரியங்களைச்செய்து அநேகர் பணத்தைச் சேர்க்கின்ருர்கள். சிலர் பிறர் உழைப்பை நயமாகப் பேசித் தங்களுடையதாக்கிக் கொள்ளுகின்றனர். இந்தவழிகளிலும் பொருள் சேரலாம். இந்த வழிகளில் சேர்ந்த பொருளைச் சிக்கனத்தினுல் சேர்ந்த பொருள் என்று சொல்ல முடியுமா? சிலர் இரண்டு பவுன் கொடுக்கவேண்டிய இடத்தில் அரைப்பவுன் கொடுத்துவிட்டு ஒன்றரைப் பவுனைக் கொடுக்காமல் ஏமாற்றி விட்டதாக எண்ணிக் கொள்வது சிக்கனம் ஆகுமா? சில கிராமமக்கள் செய்வதுபோல விளக்கேற்ருமலே சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொள்வது சிக்கனம் ஆகுமா? பணத்தில் பேராசை கொண்டவர்களே இவ்வாறெல்லாம் செய்வார்கள். இப்படி யெல்லாம்

நடப்பது சிக்கனத்தை ஒட்டிய நடவடிக்கை ஆகாது. இவ்வாறு பணத்தில் பேராசை கொண்டவர்கள் அந்த ஆசையினாலேயே கெட்டுவிடுவார்கள் என்பது திண்ணம். அற்பத்தனத்தை அடிப்படையாகக் கொண்ட சிக்கனக் காரர்கள் பெரும்பாலும் நல்வாழ்வு வாழ்வதில்லை.

"உண்மையான சிக்கனம் என்பது வருவாய்க்கு மேல் செலவு செய்யக்கூடாது என்பதுதான்! ஆனாலும், நம்முடைய சிக்கனத்தன்மை பிறருக்குத் துன்பமாய் இருக்கக் கூடாது; பிறரை ஏமாற்றுவதாய் இருக்கக் கூடாது. அதுதான் உண்மையான சிக்கனமாகும். பிறருக்குத் துன்பமில்லாத வகையில் நம்வரையில் நாம் சிக்கனத்துடன் வாழ வேண்டும். முடியுமானால் நம்முடைய உடைகளை, அவைகள் ஆடம்பரமற்றுவிட்டனவென்று தள்ளி விடாமல், கிழிகிற வரையில் உபயோகிக்கலாம்! அவைகள் கிழிந்த பிறகும், விருப்பமிருந்தால், வெளியில் தெரியாதபடி தைத்து உபயோகப்படுத்தலாம். முடியுமானால் சாதாரண ஆகாரத்தையே சாப்பிடலாம். பணத்தைப் பெட்டியில் பூட்டி வைப்பதைப் பார்க்கிலும் நியாயமான வட்டிக்குத் தகுந்த பொறுப்பின்மீது நல்லவர்களுக்குக் கடன் கொடுக்கலாம். இவற்றிற்கெல்லாம் மனமும் பழக்கமும்வேண்டும். எல்லாவற்றிலும் அளவோடு வாழத் தெரிந்தவர்களுக்குச் சிக்கனத்தைப்பற்றி எவரும் சொல்லவேண்டியதே இல்லை. நிற்க.

"எப்போதும், வருமானத்தில் செலவுபோக மாதக் கடைசியில் காலணாவும் மிச்சப்படுவதில்லை" என்று சொல்லுகிறவர்களே நமது நாட்டில் அதிகமாய் இருக்கின்றனர். செய்யும் செலவை 'எதற்காகச் செய்கின்றோம்' என்று எண்ணாமலே மனம்போனபடி செலவு செய்யும் ஊதாரிகளிடம் பொருள் எப்படி மிச்சப்படும்? அவர்கள், பொருளை மிச்சப்படுத்துவதற்கு ஒரு வழி இருக்கின்றது.

அந்த வழியை இதற்கு முன்னுல் நான் பலருக்குச் சொல்லி இருக்கின்றேன். அதனுல் அவர்கள் நல்ல பலனை அடைந்திருக்கிருர்கள்; நீங்களும் நல்ல பலனை அடைவீர்களென்றே நான் நினைக்கின்றேன். இனி அந்த வழியைக் கவனிப்போம். அது மிகவும் சுலபமான வழிதான்.

"ஒரு குறிப்புப் புத்தகத்தில் அவசியமான செலவு-அநாவசியமான செலவு — என்று இரண்டு தலைப்பைத் தனித்தனியே எழுதிக்கொள்ளுங்கள். தினந்தோறும், இரவில் நீங்கள் படுக்கைக்குச் செல்லுமுன் அன்று நீங்கள் செய்த செலவுகளில் எது எது எந்த எந்தத் தலைப்பின் கீழ் அடங்குமோ அது அதை அந்த அந்தத் தலைப்பின் கீழ் எழுதுங்கள். அந்த மாதக் கடைசியில் எழுதப்பெற்றவைகளைப் பாருங்கள். நீங்கள் செய்த அவசியமான செலவைப் பார்க்கிலும் அநாவசியமான செலவு அதிகமாய் இருந்தாலும் இருக்கலாம். இப்படி நீங்கள் எழுதிக் கவனிப்பதனுல் நீங்கள் செய்த அநாவசியமான செலவுகள் உங்கள் மனத்தை உறுத்தலாம்: அதனுல் நீங்கள், அநாவசியமான செலவு செய்வதிலிருந்து, திருந்தலாம். இதனுல் 'கையில் பணம் மிச்சப்படவில்லையே' என்ற கவலை நீங்கிக் கையில் பணம் மிச்சப்படலாம்."

இவ்வாறு "பர்னம்" என்பவர் கூறியுள்ளதை எல்லோரும் கவனித்து நடந்தால் வீடு, நாடு ஆகிய எல்லாவற்றிற்கும் நன்மை உண்டாகும்.

ஒரு சிலருக்குத் தான் பணத்தை உபயோகிக்கும் வித்தை தெரியும். மற்றவர்களில் சிலர் பணத்தைச் சம்பாதித்துக் கொண்டே இருப்பவர்களாகவும், சிலர் அதைப் பெருக்கிக் கொண்டே இருப்பவர்களாகவும், சிலர் பணத்தை எவரும் அறியாதபடி மறைத்து வைத்துக்

கொண்டே இருப்பவர்களாகவும், வேறு சிலர் இருக்கும் பணத்தை அழித்துக் கொண்டே இருப்பவர்களாகவும் காணப் படுகிறுர்கள். இப்படியே இன்று நாட்டில் நடப்பதை நாம் காண்கின்ரேம்.

வாழ்வதற்கு வழி

17

மனிதர்களில் பாதிப் பேர் ஊதாரிகளாய் இருக்கின்றார்கள்; கால் பங்குப் பேர் கருமிகளாய் இருக்கின்றார்கள்; மற்றுமுள்ள கால் பங்குப் பேர் சிக்கனக்காரர்களாய் இருக்கின்றார்கள். முதல் இரண்டு பிரிவினரும், மக்கள் சமூகத்திற்குப் பயன் படாதவர்கள். மூன்றாவது பிரிவினராகிய சிக்கனக்காரர்களே நாட்டுக்குத் தேவையானவர்கள். இவர்கள் எவ்வாறு தேவையான வர்கள் என்பதற்கு இதற்கு முன் பல இடங்களில் காரணங் காட்டியும் விளக்கியும் இருக்கின்றோம். சிக்கனக்காரர்கள் நியாயமானதும் அவசியமானதுமான வழிகளில் பொருளைச் செலவிடுவார்கள்; மற்ற வழிகளில் பொருளைச் செலவிட மாட்டார்கள்.. காற்று மழை முதலிய இயற்கையின் நிகழ்ச்சிகளைக் கவனியுங்கள். உலகம் முழுவதையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால் மழை வேண்டிய அளவுக்கே பெய்வதையும், காற்று முதலியன வேண்டும் அளவுக்கே நடைபெறுவதையும் உணரலாம்.

ஆகவே, ஒவ்வொருவரும் சிக்கனக்காரர்களாய் நடந்து செல்வத்தைச் சேர்க்க வேண்டும். ஊதாரிகளாய் நடந்து செல்வத்தை இழந்து தரித்திரத்தில் சிக்கிக் கொள்ளுகிறவர்கள் மீண்டும் செல்வத்தைச் சேர்ப்ப தென்பது அபூர்வமான காரியமே ஆகும்.

“தாங்க முடியாத தரித்திரத்தில் சிக்கிக் கொண்டவர் களில் ஆயிரம் பேரில் இரண்டொருவரே, எதிர்பாராத காரணத்தினால், பணக்காரர்களாகலாம்” என்று ‘ட்ரைடன்’ என்பவர் கூறுகின்றார்.

"சிக்கனம்" என்பது முயற்சியின் மகள்; நிதானத்தின் சகோதரி; சுதந்திரத்தின் தாய்! இவற்றை உணராத ஊதாரி வெகு விரைவில் ஏழையாகின்ருன். தரித்திரம் பிறர் தயையினுல் வாழச் செய்யும்; இழிவுள்ள செயல்களிலும் நம்மை இறங்கச் செய்யும்" என்று 'சாமுவேல் ஜான்ஸன்' கூறுகின்ருர்.

"சிறு தொகை சேர்ப்பதில் நீ அக்கரை உள்ளவனுய் இருந்தால் பெருந்தொகை தானே சேர்ந்து விடும்" என்று 'லார்டு செஸ்டர் பீல்டு' என்பவர் கூறுகின்ருர்.

"போனது போகட்டும். நீ கடன்காரனுய் இருந்தால், இனியும் கடன்காரனுகாமல் இருப்பதற்கும், வாங்கிய கடனைத் தீர்ப்பதற்கும் ஒரு வழி சொல்லுகின்றேன், கேள்: அதாவது; "உன் வருமானத்தை அதிகப் படுத்து; அல்லது சிக்கனத்தை அதிகப் படுத்து," என்று 'தாமஸ் கார்லைல்' என்னும் பேரறிவாளர் கூறுகின்ருர்.

"பணம் சம்பாதிக்கத் தொடங்கு முன் கல்வியைக் கற்றுக்கொள். பலருக்கு நேர் வழியில் பொருளைத் தேடுவதற்கு அது சிறந்த வழி காட்டியாய் இருக்கும். ஆனல், கடினமான முயற்சியை மேற்கொள்ளுவதனுலும், பலவித நிலை இல்லாத இன்பங்களை இழப்பதனுலும் கிடைக்கக் கூடியது கல்வி" என்று 'ஜே. ஜி. ஆலண்டு' கூறுகின்ருர்.

"சிக்கனம் என்பது வாழ்க்கையின் வெற்றியில் பாதியாகும்" என்று "ஸ்பர்ஜியான்" என்பவர் சொல்லுகின்ருர்.

நாட்டுக்கு நன்மை பயக்கும் படியான பலப்பல தொழில்களைச் செய்து நாம் பொருளைச் சேர்க்க வேண்டும். நல்ல வேலையைச் செய்து பொருளைச் சேர்ப்பதுதான் நல்லது. ஆனல் நமக்குக் கிடைக்கின்ற பணத்திற்கு நாம் செய்த வேலை மட்டமானதாக இருக்கக் கூடாது.

"உழைப்பு இல்லாமலே கிடைக்கும் பணம் நிலையாக இருக்காது. உழைப்பினால் சேர்ந்த பணம் ஒன்று நூறாக பெருகும்" என்று 'கோதே' என்பவர் கூறுகின்றார்.

"பொருளைச் சேர்ப்பது ஆடம்பரத்திற்காக அல்ல; பலபேர் நம்மைச் சுற்றிக்கொண்டிருப்பதற்காக அல்ல; நம்முடைய கௌரவத்தையும், சுதந்திரத்தையும் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகவே நாம் பொருளைச் சேர்க்கவேண்டும்" என்று 'இராபர்ட் பர்ன்ஸ்' என்னும் கவிஞர் சொல்லுகின்றார்.

நல்ல முயற்சி உள்ளவர்கள்கூட உடம்பில் உறுதி இருக்கும் வரையில்தான் உழைக்கலாம்; வாழலாம். உடல் உறுதி குறைந்து, கிழத்தன்மை காரணமாக, உடல் தளர்ந்து விட்டால் அப்போது உழைக்க முடியுமா? முடியாதே! முடியாவிட்டாலும் வாழப் பொருள் வேண்டுமே! அதற்கு என்ன செய்வது? அதற்காகத்தான் சிக்கனக்காரர்கள் உழைக்க முடிந்தபோதே உழைத்து நல்லவழியில் பொருளைத் தேடிச் சேர்த்து வைத்துக் கொள்ளுவார்கள்.

"காலை வெய்யில் நாள் முழுவதும் காலை வெய்யிலாகவே இருக்காது. ஆகையால் தேவையான செலவுக்காகவும், கிழப்பருவத்திலும் நன்றாக வாழ்வதற்காகவும் முடிந்த போது பொருளைச் சேர்த்துக் கொள்" என்று 'ப்ராங்க்ளின்' என்பவர் கூறுகின்றார்.

இப்படி எத்தனையோ நல்லறிஞர்கள் நாம் சிக்கனத்துடன் வாழவேண்டுமென்பதற்காக நமக்குப் பலப்பல நல்ல வார்த்தைகளைக் கூறி இருக்கின்றார்கள்.

மனிதன் அழிவதற்குப் பலவழிகள் இருக்கின்றன. ஆனால், மனிதன் வாழ்வதற்குச் சில வழிகளே இருக்கின்றன. அந்தச் சில வழிகளையும் மனிதன் அழித்துக் கொண்டால் பிறகு அவனால் எவ்வாறு வாழமுடியும்?

சிக்கனத்தன்மையுடன் நடக்க விரும்புகிறவர்கள் இதை மறக்கக் கூடாது.

வாழ்வதற்கு வழி

18

"ஒருவர் எவ்வளவு படித்திருக்கின்றார்? ஒருவர் என்ன தொழிலைச் செய்கின்றார்? ஒருவர் எந்த உத்தியோகத்திலிருக்கின்றார்?" என்று கேட்பதுடன் மக்கள் நிற்பதில்லை. "அவர் படித்த படிப்பினாலும், செய்த தொழிலினாலும், பார்த்த உத்தியோகத்தினாலும் அடைந்த பலன் என்ன? அதனால் சேர்த்த பொருள் எவ்வளவு?" என்றுதான் முடிவாக எல்லோரும் கேட்கின்றனர். தனிப்பட்ட மனிதனுக்கும், தனிப்பட்ட நாட்டுக்கும் பெரும்பாலும் செல்வத்தினால்தான் சிறப்பு உண்டாகின்றது. அந்தச் செல்வம் தனிப்பட்ட மனிதனிடத்திலும், தனிப்பட்ட நாட்டினிடத்திலும் உழைப்பினால்தான் பெருகுகின்றது. உழைக்காத நாடும் உழைக்காத மனிதனும் உயர்வடைய முடியாது. அதைப் போலவே வருமானத்திற்கு மேல் செலவு செய்யும் மனிதனும் வருமானத்திற்கு மேல் செலவு செய்யும் நாடும் தலை எடுப்பதில்லை.

தினந்தோறும் மாதந்தோறும் அல்லது வருடந்தோறும் பணத்தை ஏராளமாகச் சேர்ப்பதற்குப் பல ஆயிரம்பேரில் சிலருக்குத்தான் வாய்ப்பிருக்கலாம். ஆனால், மனமிருந்தால் கொஞ்சம் வருமானம் உள்ளவர்கள்கூட மாதந்தோறும் கொஞ்சம் பொருளையாவது சேர்த்துவைக்கலாம்.

நாம் பேராசைக்காரர்களாய் இருக்க வேண்டுவதில்லை. ஆகவே, எவரும் கேவலமான வழிகளில் இறங்கிப் பொருளைச் சேர்க்கவேண்டாம். எவரும் தங்கள் பெருமை

கெட்டுப் போகக்கூடிய வழிகளில் சென்று பொருளைத் தேடக்கூடாது. கையை நீட்டிச் செலவு செய்வதற்கும் செலவு செய்யாமல் கையை அழுத்தமாக மூடிக்கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. சிக்கனக்காரர்கள் இடம் அறிந்து ஏற்றவாறு நடந்துகொள்ளுவார்கள். சிலர் தங்களுக்குப் போதுமான செல்வ மிருந்தும் காலணாவும் கையில் இல்லாதவர்களைப் போல வாழ்கின்றார்கள், அப்படி வாழ்வதும் கூடாது. இப்படிச் சொல்வதனால் உடனே எவரும் ஆடம்பரத்துடன் வாழ ஆரம்பித்து விடக்கூடாது. கருமிகள் ஏராளமாகச் செல்வமிருந்தாலும் அழுக்கடைந்த துணியுடன் திரிவர்; நல்லதொரு வேலையாய் இருந்தாலும் நான்கு ரூபாய் கையை விட்டுப் போவதாய் இருந்தால் தலைமறைய இருந்துவிடுவர்; தங்களுக்கு வருவதாய் இருந்தால் எதையும் ஏற்றுக்கொள்வர்; கொடுப்பதாய் இருந்தால் மனம் குன்றிவிடுவர். இப்படி நடப்பவர்கள் சிக்கனக்காரர்கள் அல்லர்! கருமிகள். அரையணா காலணாவில்கூட இப்படி நடக்கின்ற கருமிகள் பணக்காரர்களாய் இருந்தாலும் தாங்கள் அடைய வேண்டிய பெருமையை அடையமாட்டார்கள். பொருளோடு ஒருவருக்கு நல்ல பெயரும் இருக்கவேண்டும். நல்ல பெயரை இழந்து பொருளைத் தேடுவது எவருக்கும் நல்லதல்ல! ஆகவே, கருமித்தனத்துடன் வாழ எவரும் ஆசைப்படக்கூடாது. மனித சமுதாயமே கொடுப்பது–வாங்கிக்கொள்வது–கொடுப்பது என்ற முறையில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த அமைப்பின்படி வாழ்கின்றவர்களே வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள். இதை விடுத்து, "உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொடுப்பாய்? எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருவாய்?" என்ற முறையில் வாழ்வது எவருக்கும் நன்மையை உண்டாக்காது. ஒவ்வொருவரும் அவரவர்கள்

நிலைமைக்கு ஏற்றபடி சிக்கனத் தன்மையுடன் வாழப் பழகவேண்டும்; தகுதியற்ற வழிகளில் பொருளைச் செல விடக்கூடாது. நிற்க.

ஒருவருடைய நிலைமைக்கும் வருமானத்திற்கும் மேற்படாதபடி செலவு செய்யப்பட வேண்டுமென்றே உலகத்திலுள்ள அறிவாளர்கள் எல்லோரும் கூறுகின் றார்கள். நீங்கள் எந்தத் தொழிலைச் செய்தாலும் எந்த உத்தியோகத்திலிருந்தாலும் ஆண்டுதோறும் உங்கள் செல்வநிலை உயர்ந்துகொண்டே போகவேண்டும். தங்கள் செல்வ நிலையை உயர்த்திக் கொள்ளுகின்றவர்கள் தங்கள் சமூகத்திற்கு உயர்வைத் தேடுகின்றவர்களாவார்கள். தங்கள் செல்வ நிலையை உயர்த்தி கொள்ளுகிறவர்களுக்கே வீட்டிலும் நாட்டிலும் நல்ல மதிப்பு உண்டாகின்றது. திடீரென்று எல்லோராலும் செல்வத்தைச் சேர்த்துவிட முடியாது. ஆனால், ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு ஏற்றதொரு வழியை அமைத்துக் கொண்டு அந்த வழியில் விடாமுயற்சியுடன் உழைத்து வந்தால் உழைப்புக்கும், முயற்சிக்கும், எடுத்துக்கொண்ட வேலைக்கும் ஏற்றவாறு படிப்படியாகச் செல்வத்தைச் சேர்க்கலாம். இவ்வாறு செல்வம் சேர்க்கும் முறையை ஒவ்வொருவரும் கைக் கொள்ளல் வேண்டும். சிறு தொகைதானே என்று நினைத்துக் கொண்டே பலர் சிறு சிறு தொகையாகப் பெருந்தொகையைச் செலவு செய்து விடுகின்றனர். எத்தனையோ வாலிபர்கள் தங்கள் சட்டைப் பையில் சில ரூபாய்களை வைத்துக் கொண்டு சில வீணான வழிகளில் சில மணி நேரத்தில் செலவழித்து விடுகின்றனர். பணமும் வீணாகச் செலவழிந்தது; இவர்கள் காலமும் வீணாகப் போயிற்று. இந்த வாலிபர்கள் இவ்வாறு தாங்கள் வீண் வழிகளில் செலவிடும் பணத்தை 'சேவிங்ஸ் பாங்க்' போன்ற சேமிப்பு நிலையங்களில் சேர்த்து வைத்தால்

அந்தப் பணம் பிற்காலத்தில் எத்தனையோ நல்ல வேலைகளுக்கு உபயோகப்படுமே! கையில் பணம் கிடைத்தால் அதைச் சேர்த்து வைக்க வேண்டுமென்ற எண்ணமில்லாமலே வீண்வழிகளில் செலவழிக்கின்றவர்களால் சமூகத்திற்கே தீமை உண்டாகும். கையில் பணமிருந்தால் சில எளியவர்கள் குதிரைப் பந்தயம், போட்டிப் பந்தயம் போன்றவைகளில் கட்டி விட்டுப் பசியைப் போக்கிக் கொள்ளக் காசு இல்லாமல் பட்டினியுடன் திரிகின்றனர். ஏராளமாகப் பொருள் உள்ளவர்களும் இவ்வழிகளில் செல்வது சரியல்ல! இவ்வழிகளில் பொருள் வந்தாலும் அது வந்த வழியே சென்று விடும். பணத்தைச் சிலர் வீண் வழிகளில் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள்; சிலர் செலவு செய்த பழக்கத்தை நிறுத்த முடியாமல் செலவு செய்து கொண்டே இருக்கின்றனர்; சிலர் தற்பெருமைக்காகப் பணத்தைச் செலவழித்துக் கொண்டே இருக்கின்றனர். எப்படிச் செலவு செய்தாலும் செலவு செலவுதானே! போன பொருள் போனதுதானே! அரை ரூபாய் ஒரு ரூபாய்தானே என்று நாம் அலட்சியமாகச் செலவு செய்து கொண்டேபோனால் கடைசியில் நம்மிடம் இருந்த பெருந்தொகை காணுமலே போய்விடும். எத்தனையோ இளைஞர்கள் நமது நாட்டில் துன்பப்பட்டு உழைக்கிறார்கள்; படிக்கிறார்கள்; தொழிலைச் செய்கிறார்கள்; உத்தியோகத்தில் இருக்கிறார்கள்; பணத்தைத் தேடுகிறார்கள்; மாதக் கடைசியில் அவர்களில் பலரிடம் ஒரு ரூபாயும் மிச்சமாய் இருப்பதில்லை. ஏன்? சிக்கனம், இளமையில் அவர்களுக்குக் கற்பிக்கப்படவில்லை; இப்போது சிக்கனத்தினால் உண்டாகக் கூடிய நன்மையை அவர்கள் விளங்கிக் கொள்ள வில்லை. இருந்தாலும் இயற்கை அவர்களைச் சும்மா விடுவதில்லை. தடுக்க முடியாத பெருஞ் செலவுக்கு வழி ஒன்று திடீரென்று அவர்களுக்கு ஏற்படு

கின்றது! அப்போது அவர்கள் என்ன செய்வார்கள்? ஒன்றுந்தோன்ருது விழிக்கின்ருர்கள். பிறகு எப்படியோ முயற்சி செய்து கடன் வாங்குகிருர்கள்! இவர்கள் செலவு செய்யப் பழகியவர்கள்! சேர்க்கப் பழகியவர்கள் அல்லர்! அதனுல் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் விழிக்கின்றனர்! அப்போதுதான் அவர்கள் அது வரையில் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றி நினைக்கத் தொடங்குகின்றனர்; சிலர் திருந்துகின்றனர்; சிலர் திருந்த முடியாமல் வாழ்க்கையில் சிதறிப் போகின்றனர். தாய் தந்தையர்கள் சிக்கனத்தன்மை தங்கள் குழந்தைகளின் மனத்தில் பதியும்படி தங்கள் குழந்தைகளை வளர்க்க வேண்டும். தாய்தந்தையர்களின் வார்த்தைகளைக் கேட்காமல் வளர்ந்து விட்ட வாலிபர்களை இயற்கை சும்மா விடுவதில்லை. செலவாளிகளாகிய அவர்களைக் கடன் படச்செய்தும் திருடச் செய்தும் துன்பப்படுத்துகின்றது. எந்தக் காரியத்திலும் இயற்கையை மீறிப்போனுல் அந்த இயற்கையே தன்னை மீறி நடக்கின்றவர்களைத் தண்டிக்கின்றது; இந்தத் தத்துவத்தைத் திருமூல நாயனுர் போன்ற நமது பெரியவர்கள் நன்ருய் அறிந்திருந்தார்கள்.

முக்கியமாக நமது வாலிபர்களுக்கு நான் கூறுவது இது தான். "நீங்கள் தவருன வழியில் இது வரையில் சென்றிருந்தால் இன்ருேடு அதை மறந்து விடுங்கள்; இனி, பொருள் பாழாகாத புது வழியில் செல்லுங்கள். உங்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்."

மக்கள் வாழ்க்கையில் தோன்றும் துன்பங்கள் எல்லாவற்றிலும் கொடிய துன்பம் கடன் துன்பந்தான். ஆகவே, பொருளைச் சேர்க்கா விட்டாலும் ஒவ்வொருவரும் கடன் படாமலாவது வாழப் பழக வேண்டும். கடன் வாங்கியிருந்தால் அந்தக் கடன் என்னும் பிசாசைப் பணத்தைக் கொடுத்து ஒழித்துக் கட்ட முயற்சி செய்ய வேண்டும்.

நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களும், இயற்கையில் நல்ல குணம் உள்ளவர்களுமான வாலிபர்களில் பலர் செலவாளிகளாயும் கடன் துன்பத்தில் சிச்சியவர்களாயும் திரிகின்றனர். எவ்விதமாகவோ பழகி விட்ட கெட்டவர்களின் போதனையே பல சமயங்களில் இவர்கள் கெடுவதற்குக் காரணமாய் இருக்கின்றது. நாம் எத்தனையோ வாலிபர்களைப் பார்க்கின்றோம். அவர்களில் பலர் ஆடம்பரத்திற்காகவே செலவாளிகளாகின்றனர். எத்தனையோ வாலிபர்கள் உடையாலும் நடையாலும் பெரும் பணக்காரர்களைப் போலக்காணப்படுகின்றனர். உண்மையிலேயே வீட்டில் மொத்தமாக நூறு ரூபாய் இராது. ஆனால் இவர்கள் கையில் ஐந்து ரூபாய் அகப்பட்டாலும் அப்போதே செலவு செய்து விடுவார்கள். ஆனால் ஐந்து நாளானாலும் அந்த ஐந்து ரூபாயைச் சம்பாதிக்க அவர்களில் சிலருக்கு வழி தெரியாது. பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளிலும் பலர் படிப்புமில்லாமல், பணம் சம்பாதிக்க வழியும் தெரியாமல் தங்களிடம் இருக்கும் பணத்தை வாரி இறைப்பதைப் போலச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். தற்பெருமைக்காக மனம்போனவாறு செலவு செய்கின்றவனைப்பார்ப்பவர்கள் 'ஊதாரி, ஆடம்பரக்காரன்' என்று சொல்வார்களே அல்லாமல் புகழமாட்டார்கள். சிக்கனத்துடன் வாழ்வதற்குப் பழகிய வாலிபர்கள் ஆடம்பரமான வழிகளில் மனத்தைச் செலுத்த மாட்டார்கள். அப்படிப்பட்ட வாலிபர்களும் இருக்கின்றார்கள். அவர்களால் அவர்களின் குடும்பம் பெருமை பெறும் என்பது நிச்சயம்.

பெரியவர்கள் ஒருபுற மிருக்கட்டும். வாழ்க்கையைத் தொடங்கும் வாலிபர்கள்! இதைக்கவனிக்கவேண்டும். நீங்கள் சிக்கனத்தன்மையுடன் நடந்து பணத்தைச் சேருங்கள்; சேர்ப்பதற்குப் பலவழிகள் உண்டு. அதில் ஒரு வழியை

இங்கே நன்ருகக் கவனியுங்கள். வாலிபர்கள் பிழைப்பதற் காக எந்த வேலையைச் செய்யத் தொடங்கினாலும் அந்த வேலையில் 'நல்ல திறமை பெறவேண்டும்' என்னும் ஆசையுடன் அந்த வேலையைச் செய்யத் தொடங்க வேண்டும். அந்த வேலையைச் செய்யத் தெரிந்தவர்கள் எல்லோரைப் பார்க்கிலும் நீங்கள் அதிகமாக அந்த வேலை யைப்பற்றிய நுட்பங்களைத் தெரிந்தவர்களாய் இருக்க வேண்டும். 'பலன் தரக்கூடியது; இலாபம் வரக்கூடியது' என்று தெரிந்தால் ஒரு தொழிலைச் செய்யவோ அல்லது கற்றுக்கொள்ளவோ வாலிபர்கள் எங்கு வேண்டுமானாலும் செல்ல ஆயத்தமாய் இருக்க வேண்டும். திறமை உள்ள வர்களாவதற்கும், பணத்தைச் சேர்ப்பதற்கும் வாலிபர்கள் எங்கு வேண்டுமானாலும் செல்வது நல்லதே! இதற்காக அவர்கள் தங்கள் வீடுவாசல், தாய் தந்தையர், உற்ருர் உறவினர் முதலியவர்களை விட்டுப் பிரிய நேர்ந்தாலும் அதற்காகக் கவலைப் படக்கூடாது. இப்படிப்பட்ட வாலிபர்கள் பிற்காலத்தில் சிறந்தவர்களாய் விளங்குவார்கள் என்பது திண்ணம். வாலிபர்கள் கல்வி கற்கவும் அல்லது கைத்தொழில் பழகவும் பணம் தேவைப்படலாம். அதற்கு என்ன செய்வது? பெற்ருேர்கள் சிக்கனத் தன்மையுடன் நடந்து பொருளைச் சேர்த்து வைத்திருக்க வேண்டும். பிள்ளைகளும் பெண்களும் சிக்கனத்தன்மையுடன் நடந்து பெற்ருேர்களின் சிக்கன வாழ்க்கைக்கு உதவியாய் இருக்க வேண்டும். வாலிபர்கள் தங்கள் இளமை முதலே சிக்கனத் துடன் வாழப் பழகினுல்தான் அந்தப் பழக்கம் அவர் களிடம் என்றும் நிலைத்து நிற்கும்.

வாலிபர்கள் சம்பாதிக்கத் தொடங்கும் போதே பணத்தைச் சேர்க்கத் தொடங்க வேண்டும். "என் சம்பாதனை குறைவு; என்னுல் சேர்க்க முடியாது" என்று சொல்லக் கூடாது. வருமானம் எவ்வளவு குறைவாய்

இருந்த போதிலும் மாதந் தோறும் சில ரூபாய்களையாவது சேர்க்கப் பழக வேண்டும். ஆரம்பத்திலேயே அந்தப் பழக்கம் ஏற்படாவிட்டால் பிறகு அந்தப் பழக்கம் உண்டாகு மென்று சொல்ல முடியாது. 'வருமானம் அதிகமாகவரும்போது, சேர்ப்பதைப் பற்றி நினைக்கலாம்' என்று பலர் சொல்வதை நாம் கேட்டிருக்கின்றோம். அது தவறு! ஆரம்ப முதலே சேர்க்கப் பழகாதவர்களுக்கு வருமானம் அதிகமாகும்போது செலவுதான் அதிகமாகுமே அல்லாமல்சேர்க்கும் பழக்கம் வராது. சேர்க்கப் பழகாமல் செலவு செய்யப் பழகியவர்கள் பிற்காலத்தில் பொருளைச் சேர்ப்பார்கள் என்று சொல்ல முடியாது. 'நன்றாக வாழ வேண்டும்; தங்களைப் பிறர் மேன்மையாக நினைக்க வேண்டும்' என்றுநினைக்கும் வாலிபர்கள் பொருளைச் சம்பாதிக்கத் தொடங்கும்போதே சேர்க்கவும் தொடங்க வேண்டும்.

ஆயிரக் கணக்கான மக்கள் தாங்கள் தேடும் பொருளைத் தேடிய போதே தின்று தீர்த்து விடுவதால் என்றும் தாங்க முடியாத தரித்திரத்தினால் துன்பப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் சம்பாதனையில் சிறிதளவேனும் சேர்த்து வைக்கும் பழக்க முள்ளவர்களாய் இருந்தால் என்றும் துன்பமில்லாமல் வாழலாமே! சேர்த்து வைக்கும் பழக்கம் இல்லாதவர்கள் கிடைத்தபோது தின்று விட்டுக் கிடைக்காதபோது எவர் கையையாவது எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் !

கையில் பணம் இல்லை என்று சொல்லுகிறவர்கள் வீடுவாசல் காணிபூமி ஆகிய இவைகளை தங்கள் நிலைமைக்கு ஏற்றபடியாவது வாங்கி இருக்க வேண்டும்; அல்லது தங்கள் மக்களை நன்றாகக் கல்வியிலே தேர்ச்சிபெறச் செய்திருக்க வேண்டும். இவைகளையும் செய்யவில்லை; பணமும் கையில் சேர்ந்திருக்கவில்லை என்று சொல்லுகிறவர்களை வாழ வகை அறியாதவர்களென்றே சொல்ல

வேண்டும். இவர்கள் முப்பது வயதில் கையில் காசு இல்லாமல் இருந்ததைப் போலவே அறுபதாவது வயதிலும் இருப்பார்கள். ஆனால், உடல் சுருங்கி மயிர் நரைத்திருக்கும் மாறுதலை மட்டும் இவர்களிடம் காணலாம். இளமையில் வறுமை கொடிதென்றால், கிழப் பருவத்தில் அது இன்னும் கொடுமை உள்ளதாய் இருக்குமே! கையில் கிடைத்த பொருளைக் கிடைத்த போதே தொலைத்து விடுகிறவர்களின் கதி இதுதான்!

உலகத்திலுள்ள மக்களை இரண்டு பிரிவினர்களாகப் பிரிக்கலாம். கிடைத்த பொருள் எல்லாவற்றையும் கிடைத்தபோதே தின்று தீர்த்து விடுவது என்ற பழக்கம் உள்ளது ஒரு கூட்டம்; கிடைத்த பொருளில், எதிர்பாராமல் நேரிடக்கூடிய செலவுக் கென்றும் தள்ளாத காலத்தில் வாழ்வதற் கென்றும் ஒரு பகுதியை எடுத்துப் பத்திரப் படுத்தி விட்டு மிகுதியைச் செலவிடுவது என்ற கொள்கையை உடையது மற்றொரு கூட்டம். இந்த இரண்டு கூட்டங்களில் எந்தக் கூட்டம் நல்லது என்று நான் சொல்ல வேண்டுமா? உலகத்தில் எந்தத் தேசத்திலும் இந்த இரண்டு கூட்டங்களையும் காணலாம்!

கிடைத்த பொருளைக் கிடைத்தவுடனே செலவழிக்கின்றவர்களைப் பார்த்து, "ஏன் இப்படிச் செய்கின்றீர்கள்? உங்கள் சம்பாதனையில் சிறிதேனும் சேர்த்து வைக்கக் கூடாதா?" என்று கேட்டால் அதற்கு அவர்கள் சொல்லும் பதில் என்ன தெரியுமா?

"ஐம்பது, நூறு நமது வருமானத்தில் மிச்சப்பட்டால் சேர்த்து வைக்கலாம். ஆயிரம் இரண்டாயிரமானால் சேர்த்து வைக்கலாம். ஐந்து ரூபாய் பத்து ரூபாய் மிச்சப் படுத்துவது ஒரு மிச்சமாகுமா? ஏதோ இருக்கிறவரையில் கிடைத்ததைக் கொண்டு சுகமாய் வாழவேண்டும். நாளைக்கு வேண்டுமே என்று சேர்த்து வைத்தால் சேர்த்து வைத்

ததை அனுபவிக்க நாளைய தினம் நாம் இருப்போமென்பது என்ன நிச்சயம்? ஆகவே இருக்கும் வரையில் சுகமாக வாழவேண்டும்'' என்று கூறுவார்கள். நாளையதினம் இவர்கள் இல்லா விட்டால் என்ன? இவர்களை நம்பி வாழ்கின்ற மனைவி மக்கள் இருக்கமாட்டார்களா? வாழ்க்கையைத் தொடங்கும்போதே கிடைத்ததைச் செலவு செய்து விட்டு இவ்வாறு பேசக் கற்றுக் கொள் கின்றவர்களை அறிவுள்ளவர்கள் மதிக்கமாட்டார்கள். கிடைத்ததைச் செலவு செய்து விட்டு மேலே சொல்லிய படி பேசுகிறவர்கள் நமது நாட்டில் ஏராளமாய் இருக் கின்றனர். இப்படிப்பட்டவர்கள் திடீரென்று இறந்து விட்டால் இவர்களை நம்பி வாழ்கின்றவர்களின்கதி என்ன வாகும்? இதையெல்லாம் இவர்கள் கவனியாமல் பேசும் பேச்சு வீண் பேச்சாகும் 'சிறு தொகையைச் சேர்த்து வைப்பதனால் என்ன பலன் உண்டாகப் போகின்றது' என்று சொல்லுகிறவர்கள் ஒரு முக்கியமான செய்தியை மறந்தே பேசுகிறார்கள் என்று தோன்றுகிறது. சிறு சிறு தொகையைச் சேர்த்துவைப்பதனால் பெரிய நன்மை உண்டாகா விட்டாலும் சேர்த்து வைக்கும் வழக்கம் நிச்சயமாக உண்டாகுமே! அந்த வழக்கத்தை உண்டாக்கிக் கொண்டால்தான் நாளைக்குப் பெரிய தொகையைச் சேர்க்க வேண்டும் என்னும் எண்ணந் தோன்றும் என்பது உண்மை தானே?

சிக்கனத் தன்மை உள்ளவர்களால் திடீரென்று வரக் கூடிய சில நன்மைகளை அடைய முடியும்; சிக்கனத் தன்மை இல்லாதவர்கள் அந்த நன்மையை இழந்து விடுவார்கள். சிக்கனத் தன்மை இல்லாமல் வாழ்க்கையை நடத்துகிறவரிடம் உள்ள வீடு நிலம் முதலியவைகள் பல சமயங்களில் சிக்கத்தன்மை உள்ளவரிடம் போய்ச் சேருகின்றன! எப்படி? சிக்கனத் தன்மை இல்லை;

கையில் பொருள் இல்லை. அப்படிப் பட்டவர்களுக்கு அவன் எதிர்பாராத விதத்தினுல் அவசியமான செலவு நேரிடுகின்றது. அப்போது அவருக்குப் பணமுடை ஏற்படுகின்றது. அதற்காக அவர் வந்த விலைக்குத் தம் நிலத்தையோ வீட்டையோ விற்கின்ருர். சிக்கனக்காரர், தாம் சேர்த்து வைத்திருக்கும் பொருளைக் கொண்டு அதைக் குறைந்த விலைக்கு வாங்கி விடுகின்ருர். இதுபோன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நாட்டில் நடை பெறுகின்றன. இதைப்படிப்பவர்கள் சிலருக்கும் இது தெரிந்திருக்கலாம்! இவ்விதமாகச் சிக்கனக்காரர் பலர் வெகு சீக்கிரத்தில் செல்வத்தைச் சேர்த்து விடுகின்றனர். சிக்கனத் தன்மை இல்லாதவர்களோ வெகு சீக்கிரத்தில் தங்களிடம் இருக்கும் செல்வத்தை இழந்து விடுகிருர்கள். இதனுல் சிக்கனத் தன்மை இல்லாதவர்கள் சிக்கனத் தன்மை உள்ளவர்களிடம் சிக்கிக் கொள்ளுகிருர்களென்று தெரிகின்றதே!

சில ஏழைகள் கொஞ்சம் கொஞ்சமாக ஐந்நூறு ரூபாய் சேர்த்துவிட்டேன் என்று ஆனந்தத்துடன் சொல்வதை நாம் கேட்டிருக்கின்ருேம். சேர்த்திருக்கலாம்! ஆனுல், அவர்களுக்கு அதை மேலும் மேலும் விருத்தி செய்யவும் தெரிந்திருக்கவேண்டுமே! இல்லாவிடில் சேர்ந்த தொகை கரைந்து போய் விடலாமல்லவா?

வாழ்வதற்கு வழி

* *

19

வாழத் தெரிந்துகொள்ள வேண்டுமானுல் எந்தக் காலத்திலும் எந்த வேலையிலும் மக்கள் சிக்கனத் தன்மையுடன் இன்னும் சில செய்திகளையும் கவனிக்க வேண்டும்:

சிக்கனத் தன்மையுடன் வாழ விரும்புகின்ற ஒவ்வொருவரும் உழைப்பு, விடாமுயற்சி, சுகபோகங்களில் அதிகப் பற்றில்லாமை முதலிய நல்ல குணங்கள் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். பொருளைச் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம், விடாமுயற்சிக்குரிய தன்மை முதலியவைகள் பலரிடம் இருக்கின்றன. இவர்களில் சிலருக்கு முன்னேற்ற மடைவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. இருந்தும் இவர்கள் எப்போதும் துன்ப நிலையிலேயே இருக்கின்றனர். காரணமென்ன? இருக்கும் நிலைமையைப் பயன்படுத்திக்கொள்ள இவர்களுக்குத் தெரிவதில்லை. தெரிந்திருந்தால் இவர்கள் வாழ்க்கையில் உயர்ந்திருப்பார்களே! ஒவ்வொருவரும் தாங்கள் மேன்மேலும் உயருவதற்குரிய வழிகளிலே தங்களை வைத்துக்கொள்ள வேண்டும். சிலருக்கு அத்தகைய வழிகள் இயற்கையிலேயே இருந்தாலும் அந்த வழிகளில் அவர்கள் நிலைத்து நிற்பதில்லை. இவர்களுக்கு நன்மை எவ்வாறு வரும்? அனுபவமில்லாதவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் நல்ல சந்தர்ப்பங்களை விட்டுவிடுகிருர்கள். அனுபவமுள்ளவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். அநேகர் தாங்கள் முன்னேற்றமடைவதற்கேற்ற நல்ல சந்தர்ப்பங்களைத் தாங்களே உண்டாக்கிக் கொண்டு அந்த வழியில்

முன்னேறுகின்றனர். தங்களுக்கே நம்பிக்கை இல்லாத ஒரு அரசியல் கொள்கையைத் தாங்களே ஏற்படுத்திக் கொண்டு, அதைப்பற்றிப் பிரசாரம் செய்து, அதற்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு அந்தக் கூட்டத்தினரின் பெயரால் தங்கள் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளுகிறவர்களை நாம் பார்க்கவில்லையா? இவர்கள் தங்களுக்கு இயற்கையாக இல்லாத ஒரு நல்ல சந்தர்ப்பத்தைத் தங்கள் செயற்கையினால் தாங்களே ஏற்படுத்திக் கொண்டவர்கள் அல்லவா? அறிவுள்ளவர்கள், எதையாவது விளம்பரப்படுத்தி மக்களை நம்பச் செய்து, தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்ளுகின்றனர். அறிவற்றவர்கள் கிடைக்கும் நல்ல சர்ந்தர்ப்பத்தையும் கைநழுவ விட்டு வீணாகத் திரிகின்றனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் நமது நாட்டில் தங்களுக்குக் கிடைக்கும் நல்ல சந்தர்ப்பங்களை அடிக்கடி கை நழுவவிட்டுப் பிறகு வருத்தப்படுவதை நாம் பார்க்கின்றோம். அறிவை வளர்த்து அதைப் பயன்படுத்தத் தெரியாதவர்களுக்குத் தங்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவும் தெரியாது. சாதாரண மக்களில் பலர் ஏதோ கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் முன்னேறிவிடுகின்றனர். பிறகு அவர்களுக்கு இல்லாத அறிவும் அவர்களுக்கு இருப்பதாக மக்கள் நம்புகின்றார்கள். பணம் சேர்ந்துவிட்டால் 'உயர்ந்தவர்கள்' என்னும் சொல்லுக்குப் பொருள் சொல்லத் தெரியாதவர்களும் உயர்ந்தவர்களாக மதிக்கப் படுகின்றார்கள். ஆகவே, சிக்கன வாழ்க்கையைப் பின் பற்றி, தாங்கள் முன்னேற்றமடைவதற்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகிறவர்கள் மேன்மை அடைகின்றார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

நமது நாட்டில் எல்லாத் தொழில்களிலும், இப்போது

உலகத்திற்குத் தெரிந்தவர்களைப் பார்க்கிலும், தெரியாதவர்களில் பலர் மிகவும் திறமைசாலிகளாய் இருக்கின்றனர். இருந்தும் அவர்களில் சிலர் தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்ளாமையினால் அவர்கள் இருக்கும் இடம் எவர்க்கும் தெரிய வில்லை. ஒவ்வொரு தொழிலிலும் அரைகுறையான திறமை உள்ளவர்கள்கூடத் தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு மேதாவிகளைப் போலத் திரிகின்றார்கள்! மேதாவிகளில் பலர் தாங்கள் முன்னேறுவதற்குரிய சந்தர்ப்பம் தங்கள் காலடியில் இருந்தும் அதைக் கவனியாமையினால் மக்கள் சமுதாயத்தில் சாதாரணமானவர்களைப் போலத் திரிந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களை நான் நேரிலேயே கண்டிருக்கின்றேன். கல்வி, அறிவு, எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும் தன்மை, பணம் ஆகிய எல்லாம் இருந்தும் உலகத்தில் பலர் தாங்கள் இருக்கும் இடம் பிறருக்குத் தெரியாதபடி இருக்கின்றனர். என்ன பயன்? ஒன்றுந் தெரியாத பொதுமக்களில் பலர் இவர்களை மட்டமானவர்களாகவும், தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளும் 'அரைகுறை'களை மேதாவிகளாகவும், பெரிய மனிதர்களாகவும் நினைக்கின்றனர்! ஆகவே, பொருளைத் தேடவும் புகழைத் தேடவுங்கூட விளம்பரந் தேவை! சிக்கன வாழ்க்கையுடன் பொருளைத் தேட விரும்புகின்றவர்கள் அதற்குத் துணையாகத் தங்களைப் பற்றி ஓரளவுக்கேனும் விளம்பரப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். இந்தக் காலமே விளம்பரக் காலந்தான்! சுரங்கத்திற்குள் இருக்கும் பெரிய வைரத்தைப் பார்க்கிலும் கடைகளில் காணப்படும் சிறிய வைரத்தைத் தானே நம்மால் பார்க்க முடிகின்றது!

நம்மைப் பற்றியும், நம்முடைய தொழிலைப் பற்றியும்

ஓரளவுக்கேனும் விளம்பரம் தேவை. அதே சமயத்தில் நாம் நாணயம் உள்ளவர்களாகவும் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமானுல் நாம் ஒவ்வொருவரும் சிக்கனத் தன்மையுடன் சோம்பலே ஒழித்துச் சுறுசுறுப்புடன் நமக்குள்ள தொழிலேச் செய்ய வேண்டும்.

நான் ஒரு நாள் மாலேயில் ஒரு கடைத் தெருவின் வழியே சென்று கொண்டிருந்தேன். அங்கே ஒரு ஜவுளிக் கடையில் இருந்த புடைவை, வேஷ்டி முதலியவைகளேக் கடன்காரர்களின் சார்பில் ஒருவர் ஏலம் போட்டுக் கொண்டிருந்தார். அப்போது அங்கிருந்த ஒரு வாலிபன் தன் அருகிலிருந்த ஒரு பெரியவரைப் பார்த்து, "பாவம், இந்தக் கடைக்காரர் நல்லவர். அவர் என்ன செய்வார்?பாவம்! வருமான வரியும், தொழில் வரியும், விற்பனே வரியும், முனிசிபல் வரியும் சேர்ந்து இவரைக் கடன்காரராக்கிவிட்டது. அப்பப்பா, இந்த அரசாங்கத்தின் வரியைத் தாங்க முடியாமலே அநேகம் தொழில்கள் கெட்டு விடுகின்றன!' என்முன்.

உடனே அந்தப் பெரியவர் அந்த வாலிபனேப் பார்த்து, "தம்பி, நீ சொல்வதை என்னேப் போன்றவர்களால் ஒப்புக் கொள்ள முடியாது. ஓர் அரசாங்கம் நன்முக நடைபெற வேண்டுமானுல் அந்த அரசாங்கம் மக்களுக்கு வரி விதிக்காமல் இருக்க முடியுமா? அப்படித்தான் என்ன! நீ சொல்லுகிற வரியை இந்தக் கடைக்காரருக்கு மட்டுமா அரசாங்கம் விதித்து விட்டது? எல்லாக் கடைக்காரருக்குந்தானே விதித்திருக்கின்றது? அவர்கள் கடைகளெல்லாம் ஏலத்திற்கு வந்து விடவில்லேயே! அப்படியானுல் இந்தக் கடைமட்டும் ஏன் ஏலத்திற்கு வரவேண்டும்? யோசித்து பார்! இந்தக் கடை ஏலத்திற்கு வந்ததற்கு வரி காரணமல்ல வென்று தெரியும். இந்தக் கடையின் முதலாளி

கடைக்கே ஒழுங்காக வருவதில்லை. இருக்கும் 'ஜவுளி' களைத் தங்கள் விருப்பம்போல விற்று வேலை ஆட்கள் தங்கள் விருப்பம் போலக் கணக்கு எழுதுவார்கள். முதலாளி தம் கையில் கிடைக்கும் பணத்தைக் கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுக்காமல் சூதாட்டங்களில் செலவழிப்பார். இப்படிப்பட்டவருடைய கடை ஏலத்திற்கு வந்தது ஆச்சரிய மல்லவே!" என்று சொன்னார்.

பெரியவர் வார்த்தையைக் கேட்ட வாலிபன் அந்த இடத்திலிருந்து பேசாமல் நழுவிவிட்டான்.

"வரி, வரி" என்று வரியைப் பற்றிப் பேசுவதே எங்கும் இந்தக் காலத்தின் வழக்கமாய் விட்டது. வீட்டு வரி முதலிய வேறு பல வரிகளை உயர்த்த வேண்டுமென்று சொல்லுகிறவர்களிலும், அந்த வரியை வசூல் செய்கின்றவர்களிலும் சிலர், தங்களுக்கு ஏதேனும் வரி இருக்குமானால், அதை மறைக்கவோ குறைக்கவோ முயற்சி செய்கின்றனர். சில இடங்களில், சில சமயங்களில், சிலருக்கு விதிக்கப் படும் வரி அதிகமாகவும், நியாயத்திற்கு மேற்பட்டதாகவும் இருக்கலாம். வரியினால் சிலருக்குத் துன்பம் ஏற்படலாம். ஆனால் இந்த வரிகளைப் பார்க்கிலும் பத்துப் பங்கு அதிகமான துன்பத்தைச் சிலர் தங்கள் தகாத செயல்களால் தேடிக் கொள்ளுகின்றனர். அதைப்பற்றி அவர்கள் பேசுவதும் இல்லை; எவரேனும் சொன்னால் கேட்பதும் இல்லை.

வரியைப் பார்க்கிலும் இரண்டு பங்கு அதிகமான துன்பம் சோம்பேறித் தனத்தினால் வருகிறது: மூன்று பங்குத் துன்பம் தற்பெருமையினால் வருகிறது; நான்கு பங்குத் துன்பம் பழகத் தெரியாமையினாலும், பேசத் தெரியாமையினாலும் வருகின்றது. தங்கள் வாழ்க்கையை நன்றாய்க் கவனிக்கின்றவர்களுக்கு இது உண்மை என்பது விளங்கும். நல்ல உபதேசங்களை நாம் கேட்டாலும்

கேட்காவிட்டாலும் அதன் மகிமை குறைவதே இல்லை.

அரசாங்கத்தின் வரியினுல் நமது பணம் போவதைப் பார்க்கிலும் நம்முடைய சோம்பேறித்தனத்தினுல் அழியும் பணம் பல சமயங்களில் அதிகமாய் இருக்கலாம். எத்தனையோ பேர் ஒரு வேலையும் செய்யாமல் சோம்பேறிகளாய் இருந்துகொண்டு கையில் இருப்பதைத் தின்றுகொண்டு காலங் கழிக்கின்றனர். இவர்களுடைய சோம்பேறித்தனம் அரசாங்கத்தினுடைய வரியைப் பார்க்கிலும் அதிகமான பணத்தை இவர்களிடமிருந்து கொண்டுபோய் விடுமே! சோம்பேறிகளின் உடலில் பலவித நோய்கள் குடிகொள்ளுமே! உழைப்பவர்களின் உடலில் அதிகமாக நோய் தோன்ருது. தங்கள் உழைப்பினுல்தான் பழங் காலத்திலிருந்த நமது முன்னேர்களில் பலர் உடல் உறுதியுடன் வெகுகாலம் வரையில் நன்ருக வாழ்ந்திருந்தார்கள். உபயோகப்பட்டுக்கொண்டே இருக்கும் ஊசியில் துரு பிடிப்பதில்லையே! உலகத்தில் வெகுகாலம் வரையில் இருக்க விரும்புகின்றவர்களும், நோய் இல்லாமலும் நன்ருகவும் வாழ விரும்புகிறவர்களும் வீணுகப் பொழுதைப் போக்கும் சோம்பேறிகளாய் இருக்கக் கூடாது. உழைப்பதற்காகவே உயிருக்கு உடம்பு தரப்பட்டிருக்கின்றது.

சிக்கனமென்ருல் பணத்தைச் சேர்ப்பதுமட்டும் சிக்கனம் ஆகாது. பணத்தைச் சேர்ப்பதற்குத் துணையாய் இருக்கும் காலத்தையும் சிக்கனக்காரர்கள் வீணுக்க மாட்டார்கள். எத்தனையோ பேர் எவ்வளவு நேரம் தூங்கிஞல் போதுமோ அவ்வளவு நேரத்தைப் பார்க்கிலும் அதிகமான நேரத்தைத் தூக்கத்தில் கழிக்கின்றனர். தூக்கத்தை அதிகமாக விரும்புகிறவர்கள் குண்டர்களாகவும், முரடர்களாகவும் இருந்தாலும் இருக்கலாம்; பெரும்பாலும் அவர்கள் சுறுசுறுப்புள்ளவர்களாய் இருக்க

மாட்டார்கள். நாம் வீணுகச் செலவழிக்கக் கூடாதது ஒன்று இருக்கிறதென்ருல் அது காலந்தான். சென்ற காலம் திரும்ப வருவதில்லையே! ஆகவே, நாம் எந்த வேலையைச் செய்தாலும் குழப்பமில்லாமல் ஒரு நல்ல நோக்கத்துடன் அதைச் செய்யவேண்டும்; நல்ல நோக்கத்துடன் செய்யப்படும் வேலைக்குச் செலவாகும் காலம் சிறந்த காலமாகும். நல்ல நோக்கத்துடன் செய்யப்படும் வேலையாய் இருந்தாலும் அதுவும் சுறுசுறுப்புடன் செய்யப்படவேண்டும். சுறுசுறுப்பானது வேலையைச் சுலபமாக்கும்; சோம்பேறித்தனம் வேலையைக் கடினமாக்கும். அதிகாலையில் படுக்கைவிட்டு எழுந்திருக்கப் பழகாதவர்கள் பெரும்பாலும் சுறுசுறுப்புள்ளவர்களாய் இருப்பதில்லை. அதுமட்டுமல்ல! நேரங்கழித்துப் படுக்கையைவிட்டு எழுந்திருக்கிறவர்கள் எல்லா வேலைகளையும் நேரங்கழித்தே செய்வார்கள்.

ஒருவரிடத்தில் சோம்பேறித்தனம் சேரச்சேர அவரிடத்தில் தரித்திரமும் சேர்ந்து கொண்டே இருக்கும். மக்கள் சோம்பேறித்தனத்தை விரட்டவேண்டும்; சோம்பேறித்தனம் எப்போதும் மக்களை விரட்டக்கூடாது. தேக சுகம், செல்வம், அறிவு முதலியவைகளைப் பெற விரும்புகிறவர்கள் இரவில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் படுக்கைக்குச் சென்று காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் படுக்கையைவிட்டு எழுந்திருக்க வேண்டும். நல்ல காலத்தை அடைய விரும்புவோர் இப்படியெல்லாம் நடப்பார்கள்.

சிலர் நல்லகாலம் வரும்வரும் என்று நல்ல காலத்திற்காகக் காத்துக்கொண்டு இருக்கின்றனர். சிலர் நல்ல காலத்தைத் தாங்கள் நினைத்தபோதே தேடிக்கொள்ளுகின்றனர். உழைக்காதவர்களுக்குப் பெரும்பாலும் எந்த நல்ல காலமும் வராது. வந்தாலும் பயன்படாது. உழைக்

காமலே நல்ல காலம் வருமென்று நினைக்கின்றவர்களுக்கு வந்தால் மரணந்தான் வரக்கூடும்! எவருக்கும் உழைப் பில்லாமல் நன்மை வருவதில்லை. உழைப்பினுல்தான் வீடுவாசல், காணி பூமி முதலியன உண்டாகின்றன. உழைப்பினுல்தான் தொழில் பெருகுகின்றது; உழைப் பினுல்தான் பொருள் சேருகிறது; உழைப்பினுல்தான் பெருமை உண்டாகிறது. இவ்வளவும் சேர்ந்த பிறகும் அப்போதுள்ள நிலைமைக்கு ஏற்றபடி மீண்டும் மீண்டும் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும். செல்வம் சேர்ந்து விட்டதே என்று உழைக்காமலே இருந்து விட்டால் சேர்ந்த செல்வம் கொஞ்சம் கொஞ்சமாகச் செலவழிந்து குறைந்து விடும். உழைப்பாளிகள், எவ்வளவுதான் ஏழைகளாய் இருந்தபோதிலும், பட்டினி யினுல் துன்பப்படமாட்டார்கள். உழைப்பாளியின் வீட்டில் பசி எட்டிப் பார்க்கும்; ஆனுல், உள்ளே நுழைய அதற்கு மன உறுதி ஏற்படாது. உழைப்பாளி களின் வீட்டில் கடன்காரர்களுக்கு வேலை இல்லை. உழைப்புக் கடனைத் தீர்க்கும்; சோம்பல் கடனை வளர்க்கும். நல்லகாலம் வருமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் எல்லோருக்கும் எவராவது பொருள் சேர்த்துக் கொடுத்துவிடுவாரா? ஆனுல் ஊக்கத்துடன் உழைப்பவர்களுக்குக் கொஞ்சமாவது நல்லகாலம் வரும் என்று நிச்சயமாகச் சொல்லலாம். கடவுள் எல்லா நன்மை களையும் உழைப்பில்தான் அடக்கிவைத்திருக்கின்ருர். நிலத்தை உழுகின்றவர்களும், உத்தியோகம் பார்க்கின்றவர் களும், வியாபாரம் செய்கின்றவர்களும் உழைப்பினுல்தான் முன்னேற்ற மடைகின்றனர். இன்றைய தினம் செய்யப் படவேண்டிய வேலையை 'நாளைக்குச் செய்வோம்' என்று விட்டு வைக்கக்கூடாது. நாளைய தினம் இன்னும் எவ்வளவு வேலை வந்து சேர்ந்துவிடுமோ! நமக்குத்

தெரியாதே! நம்மைப் பிறர் சோம்பேறிகளென்று நினைக்கும்படி நாம் நடந்து கொள்ளக்கூடாது. அது மிகவும் கேவலமாகும்; மதிப்பைக் குறைத்துவிடும். ஒவ்வொருவரும் தங்களுக்காகவும், தங்கள் குடும்பத்தினருக்காகவும், தங்கள் நாட்டுக்காகவும் செய்யவேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. தங்களுக்குள்ள சூழ்நிலையில் தாங்கள் செய்யவேண்டிய வேலையைச் செய்யாமலிருக்கும் சோம்பேறியை எவரும் மதிக்கமாட்டார்கள். காற்றும், நெருப்பும், நீரும், உலகமும், சூரியனும், சந்திரனும் நட்சத்திரங்களும் அதனதன் வேலையைச் சலிப்பின்றிச் செய்துகொண்டு இருக்கின்றன. நாமும் நமக்குரிய வேலையைச் செய்துகொண்டே இருக்க வேண்டும். "அதோ ஒரு சோம்பேறி போகின்றான்" என்று நம்மைப் பார்த்து எவரும் சொல்லும்படி நாம் நடந்துகொள்ளக் கூடாது. தைரியத்துடன் எதையும் செய்யத் தொடங்க வேண்டும். தைரியமில்லாத பூனையும் எலியைப்பிடிக்காது. உங்களால் முடியக்கூடிய வேலையை முடியாது என்று நினைத்துவிடாதீர்கள். பொறுமையுடனும் விடாப்பிடியுடனும் செய்தால் எந்த வேலையிலும் வெற்றிபெறலாம். உறுதியான எண்ணம் உள்ளவர்கள் கடினமான வேலையிலும் வெற்றியைப் பெறுவார்கள்; கோழைகள் சாதாரண வேலையிலும் தோல்வி அடைவார்கள்.

சிலர், "ஓயாமல் உழைத்துக்கொண்டே இருந்தால் ஓய்வு வேண்டாமா?" என்று கேட்கின்றனர். இப்படிக் கேட்பவர்கள் தினந்தோறும் இரவில் தூங்குவதில்லையா? அது ஓய்வுதானே? இன்னும் எதற்காக ஓய்வுவேண்டும்? நன்றாக உழைப்பவர்களுக்குத்தானே நன்றாகத் தூக்கம் வரும்? அதுதானே நல்ல ஓய்வு?

உழைப்பாளிகளில் பலர் எட்டுமணி நேரத்திற்குமேல் வேலை செய்வதில்லை. பாக்கி உள்ள பதினாறு மணிநேரம்

ஓய்வுதானே ? இதற்கு மேலும் ஓய்வு வேண்டுமென்று சொல்லுகிறவர்களிடம் 'சோம்பேறித்தனம் சேர ஆரம்பித்து விட்ட'தென்று சொல்லலாம். சிலர் ஒரு வேலையைச் செய்துவிட்டு மற்ற நேரத்தில் தங்கள் மனத்திற்குப் பிடித்தமான வேறு வேலையைச் செய்வதையே இன்பமாகவும், ஓய்வாகவும் நினைக்கின்றனர்.

உழைப்பில்தான் இன்பம் இருக்கின்றது ! நல்ல ஓய்வும் அதனுல்தான் பெறமுடியும். சோம்பேறிகள் தாங்கள் சுகத்துடன் இருப்பதாக நினைப்பது வெறும் ஏமாற்றந்தான். சோம்பல்தான் துன்பத்தின் விதை என்று சொல்லலாம். நீங்களே தயைசெய்து நன்ருக நினைத்துப் பாருங்கள். உழைப்பில்தான் இன்பம் இருக்கிறதென்று நீங்களே சொல்வீர்கள். சோம்பலினுல் இன்பமில்லை. சோம்பலில் இருந்து எப்போதும் துன்பமே புறப்பட்டுக் கொண்டிருக்கும். அப்போது ஓய்வு என்பது இருக்காதே ! நோயாளிகளைத் தவிர, உழைத்து உழைத்துக் களைத்தவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு ஓய்வு பெற உரிமை கிடையாது. உழைக்காதவர்களால் இன்பத்தைத் தேடிச் செல்ல முடியாது ; உழைத்தால் இன்பம் நம்மைத் தேடி வரும்.

சிலர் உழைக்காமலே, சிக்கனத்தன்மை இல்லாமலே, பிறர் பொருளினுல் வாழ நினைக்கின்றனர். அப்படிப் பட்ட வாழ்க்கை சில காலந்தான் நடை பெறலாம். அந்த வாழ்க்கை எப்போதும் நடைபெருது !

வாழ்வதற்கு வழி

20

எல்லா நன்மைகளுக்கும் அடிப்படையாய் இருப்பது பொருள். இது எல்லோருக்கும் தெரிந்ததே! இதைப் போலவே அந்தப் பொருளைப்பற்றிய புத்தகமும், கடவுளைப்பற்றிக் கூறும் நூலைத் தவிர, மற்றெல்லாப் புத்தகங்களுக்கும் மேலானதாகும். அதில் கூறப்படும் செய்திகளைத் தெரிந்துகொண்டு, தெரிந்துகொண்டபடியே நடக்கின்றவர்கள், சிறந்தவர்களாவார்கள். பொருளைத் தேடுவதைப்பற்றியும் அதற்குத் துணையாக இருக்கும் செயல்களைப்பற்றியும் நாம் எவ்வளவுக் கெவ்வளவு கற்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு நன்மை பெறுவோம்.

சிக்கனத்தன்மையுடன் வாழவிரும்புவோர் நிதானம், உறுதி, எச்சரிக்கை, தங்கள் வேலையில் கண்ணும் கருத்துமாய் இருத்தல், எவரையும் அதிகமாக நம்பாதிருத்தல் ஆகிய இவைகளை அனுசரித்து நடக்கவேண்டும். எப்போதும் "உன் தொழிலை நீ கவனித்துக் கொண்டால் அது உன்னைக் கவனித்துக் கொள்ளும்." "கண்பார்க்காத வேலையைக் கை செய்யாது." ஆகவே, உங்கள், வேலையை நீங்கள் கவனிக்கவேண்டும். "உடையவன் பார்க்காத வேலை ஒரு முழம் கட்டை"தான். ஒரு வேலையை நன்ருய்ச் செய்து முடிக்க அறிவுடன் அக்கறையும் வேண்டும். அக்கறை இல்லாத போது அறிவு பயன் படாது.

வேலைக்காரர்களை அடிக்கடி கவனித்துவேலை வாங்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுடைய சோம்பேறித்

தனம் நம்மிடம் உள்ள பணத்தைக் கரைத்துவிடும். தொழிலில் எவரையும் அதிகமாக நம்பிவிடக் கூடாது. நம்மால் நம்பப்படுகிறவர்களில் பலர் நம்மை ஏமாற்றுகிற வர்களாகவே இருக்கின்றார்கள். நாம் எல்லோரையும் நம்புவதனால் நாம் நன்மை அடைந்து விடமாட்டோம். நாம் நம்பத் தகுந்த மனிதர்கள் இருந்தால்தான் நாம் நன்மை அடைவோம். எல்லாவற்றுக்கும் மேலாக எந்த மனிதன் தன் வேலையைத் தானே நேரில் கவனித்துக் கொள்ளுகிறானோ அந்த மனிதன் நிச்சயமாக நன்மை அடைவான். படித்துக்கொண்டே இருக்கும் பழக்கம் உள்ளவருக்குக் கல்வியும், எல்லா வேலைகளிலும் எச்ச ரிக்கையுடன் நடந்துகொள்ளுகிறவர்களுக்குச் செல்வமும், தைரிய முள்ளவர்களுக்கு அதிகாரமும், நல்லவர்களுக்கு நல்வாழ்க்கையும் கிடைப்பது உண்மையே! சிறு தீமைக் கும் நாம் இடங்கொடுத்து விடக்கூடாது. சிறு தீமையே பெருந் தீமையாய்விடும். சிறு நெருப்பு சில இடங்களில் பெரு நெருப்பாவதை நாம் பார்த்திருக்கின்றோமே! சாவி இல்லாவிடில் பூட்டு பயன்படாது; பூட்டுப் இல்லாவிடில் கதவு பயன்படாது; கதவு இல்லாவிடில் வீடு பயன் படாது. ஆகவே, அற்பமென்று எந்த கெடுதலையும் கவனி யாமல் விட்டுவிடக்கூடாது. இலாடம் இல்லாமையினால் குதிரையின் குளம்பு தேய்ந்தது; குளம்பு தேய்ந்தமையி னால் குதிரைக்கு வேதனை உண்டாயிற்று; வேதனை உண் டானபடியால் குதிரையினால் வேகமாக ஒட முடியவில்லை. அதனால் அதன்மீதிருந்த போர்வீரனை அவனைத் துரத்திக் கொண்டுவந்த போர்வீரன் வெட்டி வீழ்த்திவிட்டான். இந்த நிகழ்ச்சி மொகலாய மன்னர்களின் சரித்திரத்தில் காணப்படுகின்றது. அற்பமான லாடத்தைக் கவனியாமை யினால் போர்வீரனுடைய உயிரே போய்விட்டது. ஆகவே சிக்கனத்தன்மையுடன் வாழவிரும்புகிறவர்கள்

அற்பம் என்று எதையும் அலட்சியமாக நினைக்கக் கூடாது.

சிக்கனத்தன்மையுடன் நடந்து பொருள் சேர்க்க விரும்புகிறவர் எப்போதும் தம்முடைய வேலையில் கண்ணும் கருத்தும் உள்ளவராய் இருப்பார். பொருளைச் சேர்க்க ஏதாவதொரு வழியைத் தெரிந்து கொள்ளாத மனிதன் கடைசி வரையில் துன்பத்திலேயே கிடப்பான். தேவைக்குமேல், தினந்தோறும் ஆடம்பரமாகச் சாப்பிட விரும்புகிறவர்களில் பலர் செல்வத்தைச் சேர்த்துவிட மாட்டார்கள்.

பொருளைச் சம்பாதிப்பதில் இருக்கின்ற அக்கறை அதைச் சேர்த்து வைப்பதிலும் இருக்கவேண்டும். இந்தத் தன்மை எவர்களிடம் இருக்கின்றதோ அவர்கள் நிச்சயமாகப் பணக்காரர்களாவார்கள். எந்தக் குடும்பத் திற்குப் பணம் வெளியிலிருந்து வந்துகொண்டிருக் கின்றதோ அந்தக் குடும்பம் உயரும்; எந்தக் குடும்பத்தி லிருந்து செல்வம் வெளியில் போய்க்கொண்டிருக் கின்றதோ அந்தக் குடும்பம் தாழ்வடையும். நமது நாட்டுப் பணம் பல காரணங்களினால் வெளிநாடு களுக்குப் போய்க்கொண்டிருப்பதால் நம்மால் நம்மைப் ‘பணக்காரத் தேசத்தினர்’ என்று சொல்லிக்கொள்ள முடிய வில்லை.

பணம் கரைந்து போவதற்கு ஏற்ற கெட்ட நடவடிக்கைகள் நம்மிடம் இருந்தால் அதை நாம் நீக்கிக் கொள்ள பாடுபட வேண்டும். ஒரு குற்றத்திற்கு நாம் இடங் கொடுத்தால் அது பின்னும் இரண்டு குற்றங்களைக் கொண்டுவந்து நம்மிடம் சேர்த்துவிடும். சிறுசிறு குற்றந் தானே, சிறுசிறு செலவு தானே என்று நாம் அலட்சியத் துடன் இருக்கக் கூடாது. சிறுசிறு ஓட்டைகள் பெரிய பெரிய கப்பல்களை மூழ்கடித்து விடுமே! அவசியந்தான்

என்று தோன்றினுலல்லது நாம் நமது பொருளேச் செல வழிக்கக் கூடாது! வீண் ஆடம்பரத்திற்காகப் பொருளே எப்போதும் செலவு செய்யவே கூடாது. "முட்டாள்கள் விருந்து நடத்துகிருர்கள்; புத்திசாலிகள் சாப்பிடு கிருர்கள்." இது அயல் நாட்டுப் பழமொழிகளில் ஒன்று!

பட்டுத் துணி, விலே குறைவாய் இருந்தாலும், நமக்கு வேண்டாத போது அது எதற்காக? போதுமான காரணம் இல்லாமல் வாங்கும் பொருளுக்கு நாம் கொடுக்கும் பணம் வீண்தானே! தேவை இல்லாத பொருளே, அது விலே குறைவாய் இருப்பதற்காக, வாங்கக் கூடாது. அந்தப் பழக்கம் ஒருவரிடம் வளர்ந்து கொண்டே போனுல் அதனுல் நாளடைவில் அவருக்குப் பெருந் தீமை உண்டாகும். தேவை இல்லாத பொருளே எத்தனேயோ பேர் ஏலத்தில் எடுத்து விட்டுப் பிறகு வருத்தப் பட்டதை நான் நேரில் பார்த்திருக்கின்றேன். தேவை இல்லாத பொருள்களே வாங்குகிறவர்கள் துன்பத்தைத்தான் அனுபவிப்பார்கள். சாதாரண வருமானம் உள்ளவர்களில் பலர், பருத்தித் துணி வாங்க வேண்டிய இடத்தில், பட்டுத் துணிகளேயே வாங்கு வதையும், அப்படிப் பட்டவர்களின் வீட்டில் சில சமயங் களில் அடுப்புக்கு வேலே இல்லாமல் இருப்பதையும் சிலராவது கண்டிருக்கலாம். ஆடம்பரம் குடும்ப வாழ்க் கையைக் கெடுத்து விடும். பட்டுத்துணி தேவை தான்! அதற்காக இருப்ப தெல்லாம் பட்டுத் துணியாகவே இருக்க வேண்டுமா? பளபளப்புள்ள பட்டுத் துணி யினுல் மட்டும் ஒருவருக்குப் பெருமை வந்து விடாது. பெருமை வருவதற்குரிய மற்ற வழிகளேத் தேடிக் கொள் ளாதவர்களுக்குப் பட்டுத் துணியினுல் மட்டும் பெருமை கிடைத்து விடாது. இந்த ஆடம்பரங்க ளெல்லாம் வாழ்க்கைக்கு இருந்தே தீர வேண்டியவைகளல்ல! இக்

காலத்தில் மக்களில் பலர் தங்கள் முக்கியமான தேவை களுக்கு மேலும் வெகுதூரஞ் சென்று விட்டார்கள். ஓர் ஏழை மனிதனுக்குக் கூட இக்காலத்தில் எத்தனையோ ஆடம்பரச் செயல்கள் அவசியமாய் விட்டன! ஏழை களாகிய கணவனும் மனைவியும் காசு கொடுத்து, 'சினிமா' பார்த்து விட்டு வீட்டில் வந்து உணவில்லாமையினால் பட்டினியுடன் படுத்துத் தூங்கும் அளவுக்கு இக்காலத் தில் ஆடம்பரம் பரவிஇருக்கின்றது. இந்தக் காரணத்தினால் தான் எங்கெங்கும் தரித்திரம் தலைதூக்கி நிற்கின்றது. ஆடம்பரம் வளர வளரத் தரித்திரம் ஓங்குகின்றது. "பணம் இல்லை; பணம் இல்லை" என்று சொல்லும் ஏழைகளைக் கவனியுங்கள். அவர்களில் பலருக்கு உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்கும் பணம் கிடைக்கின்றது; ஆனால் ஆடம்பரத்திற்காகச் செலவிட அவர்களுக்குப் பணம் கிடைக்க வில்லை. சாதாரண மக்களில் ஆடம்பரத்திற் காகச் செலவிடுபவர்களே அடிக்கடி 'பணம் இல்லை; பணம் இல்லை' என்று சொல்லித் துன்பப் படுகிறார்கள். என்ன பயன்! அவரவர்களுடைய வருவாயைக்கொண்டே அவரவர்கள் வாழத் தெரிந்து கொள்ள வேண்டும். கடன் வாங்கி 'மோட்டார் கார்' முதலிய ஆடம்பரப் பொருள்களுடன் வாழும் 'பணக்காரன்' என்று சொல்லப் படுகிறவர்களைப் பார்க்கிலும் காலணாவும் கடன் இல்லாத 'ஏழை' என்று சொல்லப் படுகின்றவரே சிறந்தவர் ஆவார்.

எவரும் தங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாயுள்ள எந்தப் பொருளையும் இழந்துவிடக் கூடாது. 'குழந்தையும் முட்டாளும் ஒன்றே!' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. குழந்தைக்கும் முட்டாளுக்கும் எதிர்காலத்தைப் பற்றிக் கவலை இல்லை. சிறு பொருளைக் கண்டு குழந்தை மகிழ்ச்சி அடையும். முட்டாளும் சிறு

தொகையைப் பெரிதாக எண்ணி ஆனந்தமடைவான்; கர்வமும் கொள்வான். மூடர்களும் செலவாளிகளும் பணத்தின் அருமையை அறியமாட்டார்கள். பணம் இல்லாத போதுதான் பலர் பணத்தின் அருமையை அறிகின்றார்கள். "அப்பன் இல்லாவிட்டால் தெரியும் அப்பன் அருமை; உப்பு இல்லாவிட்டால் தெரியும் உப்பின் பெருமை" "பணம் இல்லாவிட்டால் தெரியும் பணத்தின் மகிமை." "தண்ணீர் இல்லாத போது தெரியும் தண்ணீரின் பெருமை." "கடன் கேட்டுப் பார்; கொடுத்த கடனை வாங்கப் பார்" அப்போதும் தெரியும் பணத்தின் அருமை! பணத்தின் அருமை தெரியாதவர்கள் கடன் வாங்கத் தயங்கமாட்டார்கள். நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அல்லாமல் வாங்கிய கடனைக் கொடுக்க வேண்டுமே என்று நினைக்கவும் மாட்டார்கள். தற்பெருமையும் வீண் ஆடம்பரமும். வேண்டாததேவைகளை நமக்கு உண்டாக்குகின்றன. ஒரு தேவைக்கு இடங்கொடுத்து விட்டால் அதைத் தொடர்ந்து ஒன்பது தேவைகள் தோன்றுகின்றன! முதல் தேவைக்கு இடங்கொடுத்தவர் மற்ற தேவைகளை அடக்க முடியாது. கையில் பணம் இருப்பவர்களைப் போல இல்லாதவர்களும் நடக்கத் தொடங்கி அதனால் பிறகு துன்பப்படுகிறார்கள். "கப்பல் நடுக் கடலில் செல்லும்; ஓடத்தினால் கடலோரத்தில் தானே செல்ல முடியும்?" "பூனையினால் புலியைப் போல வேட்டை ஆட முடியுமா?" "ஆடம்பரம் அல்லல் விளைவிக்கும்"

தற்பெருமைக்காரன் ஆடம்பரத்துடன் வாழ்கின்றான்: ஆனால் பிறகு அவன் அறிவுள்ளவர்களால் வெறுக்கப்படுகின்றான். ஆடம்பரக்காரன் முதலில் இன்பத்தில் வாழ்ந்து, பிறகு தரித்திரத்தில் புரண்டு, கடைசியில் புகழ் இல்லாமல் இறக்கின்றான். ஆடம்பரத்தை விரும்பிப்

பணத்தை ஒழிக்கின்றவர்களுக்கு அதனால் ஏதாவது நன்மை உண்டாகின்றதா ? இல்லவே இல்லை. ஆடம்பரம் பிறர் மனத்தில்பொறாமையை உண்டாக்குகின்றது. ஆடம்பரக்காரன் நாளடைவில் தன் உடல் நலத்தை யும் இழக்கின்றான் ; அதனால் துன்பப்படுகின்றான் ; அவன் பெருமை குறைகிறது ; அவனிடம் தரித்திரம் வளர்கின்றது.

வண்ணாத்திப்பூச்சி காலையில் பளபளப்புடன் பறந்து திரிந்து வெய்யில் அதிகரிக்க அதிகரிக்கச் சுருண்டு விழுந்து மாலையில் மடிகின்றது. ஆடம்பர வாழ்க்கை வாழும் மக்களின் கதியும் இப்படித்தான் ஆகின்றது. ஆடம்பரத் தன்மையில் ஆசை உள்ளவர்களை ஒருவிதமான பைத்தியக்காரர்கள் என்றே சொல்ல வேண்டும். இந்தப் பைத்தியம் தனிப்பட்ட மனிதர்களையும், ஊர்களையும், நாடுகளையும் அழித்துக் கொண்டிருக்கின்றது ; அழித்தும் இருக்கின்றது.

"இரண்டு மாதம், மூன்றுமாதம், ஆறுமாதம் ; தவணைகளில் நாங்கள் பணம் கடன் கொடுக்கிறோம் என்று சில பணக்காரர்கள் சொல்லுகிறார்கள். ஊதாரிகளும், ஆடம்பரக்காரர்களும் அது தங்களுக்கு நல்லது என்று கருதுகிறார்கள். உடனே அவர்களில் சிலரேனும் தங்களுக்கு அப்போது பொருள் தேவை இல்லாமல் இருந்தும் 'கையில் இருக்கட்டுமே' என்று கடன்வாங்கித் தவணைக் கடைக்காரரிடம் தங்கள் சுதந்திரத்தை இழக்கின்றனர். கடன் வாங்கிய பொருள் எப்படியோ கரைந்துவிடுகிறது. தவணையின்படி கடனைக் கொடுக்க முடியாதபோது பெருமை குறைகின்றது : கடன் கொடுத்தவரிடம் பேசும் போது அச்சம் ஏற்படுகின்றது ; ஏழ்மைத்தன்மை வெளியாகின்றது. பரிதாபம் ! கடன் கொடுத்தவரிடம் ஏதோ சில பொய் வார்த்தைகளைச் சொல்லவும் நேரலாம். கடைசியில்

மான மழிந்து மதிகெட்டுப் போகக் கூடிய நிலைவந்தாலும் வரலாம். "முதல் தீமை கடன்படுவது; இரண்டாவது தீமை துன்பப்படுவது." "கடன்படுவதின் மறுபக்கம் துன்பப்படுவது" என்பது ஓர் அயல்நாட்டுப் பழமொழி. கடன் இல்லாத குடும்பத்தில் பிறந்து கடன்படாமல் வாழ்கின்றவர் எங்கும் சிறந்த மனிதராய் இருக்க முடியும். ஆனால், தரித்திரத்தில் தங்களைச் சிக்கவைத்துக் கொள்ளுகிறவர்கள் சில சமயங்களில் தைரியத்தையும், நியாயத்தையும், ஒழுக்கத்தையும்கூட இழக்கலாம். அப்போது நல்லவர்கள் முன்னால் நிமிர்ந்து நடக்கமுடியாது.

"ஆடம்பரம் தோன்ற எவரும் உடை உடுத்தக் கூடாது" என்று அரசாங்கம் ஓர் உத்தரவை வெளியிட்டால் அப்போது அதை எதிர்க்கச் சில பணக்காரர்கள் புறப்படுவார்கள். அது ஆச்சரியமாகாது. ஆனால், அந்தப் பணக்காரர்களுக்குத் துணையாக ஆடம்பரத்தில் பிரியமுள்ள சிலஏழைகளும் சேருவார்கள். இதுதான் ஆச்சரியம்!

"இந்தக் காலத்தில் கடன்வாங்கியவன்தான் பெரியவன்; கடன் கொடுத்தவன் சிறியவன்" என்று சிலர் சொல்ல நான் கேட்டிருக்கின்றேன். எங்கேயோ அபூர்வமாக இரண்டோரிடங்களில் இந்த வார்த்தை உண்மையாய் இருக்கலாம். ஆனால், பத்தில் ஒன்பது பங்கு, கடன் வாங்கியவரில் பலர் கொடுத்தவருக்கு அடக்கந்தான். கடன் வாங்கியவர்களில் சிலர் தாங்கள் வாங்கிய கடனை மறந்துவிடலாம்; கொடுத்தவர்கள் மறக்கமாட்டார்கள்; அவர்கள் கொடுத்த பணம் அவர்களுடைய உழைப்பினால் அவர்களுக்கு வந்தது; கடன் வாங்கியவர்களுக்கோ, அவர்கள் அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் வரையில், அந்தப் பணம் இனாமாகக் கிடைத்ததுபோல் இருக்கலாம். ஆகவே, அதை அவர்கள் மறந்துவிடலாம்; அல்லது மறந்துவிட்டவர்களைப் போல நடந்து கொள்ளலாம்.

ஆனால், கடன் வாங்கும் கூட்டத்தாரைப் பார்க்கிலும் கடன் கொடுக்கும் கூட்டத்தினர் மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாய் இருப்பார்கள் என்பதை கடன்வாங்குகிறவர்கள் மறந்துவிடக் கூடாது.

சிலரிடத்தில் சில தீய குணங்கள் இருக்கலாம். அவைகளை அவர்கள் தங்கள் மக்களிடத்திலும் வளரவிடக் கூடாது. சிலர் குழந்தைகளை அனுப்பி அந்தக் குழந்தைகளின்மூலமாகக் கடன்கேட்கின்றனர்! இவர்கள் தங்களுடைய கடன் வாங்கும் பழக்கத்தைத் தங்கள் குழந்தைகளினிடத்திலும் படிய விடுகின்றனர்! இது நல்லதல்ல!

நல்ல வருமானம் வரும்போது பலர் நன்றாகச் செலவு செய்கின்றனர். எந்தக் காலத்திலும் எல்லோருக்கும் வருமானம் வந்து கொண்டே இருக்காதே! எல்லா ஆறுகளிலும் எப்போதும் தண்ணீர் ஓடிக் கொண்டே இருப்ப தில்லையே! சில ஆற்றுத் தண்ணீரை ஏரியிலோ அணைகட்டி அந்த அணையிலோ தேக்கிவைப்பதுபோலவே வருமானம் வரும்போது எல்லோரும் பணத்தைத் தகுந்த இடத்தில் சேர்த்து வைக்க வேண்டும். தேக்கி வைக்காத தண்ணீர் பாழாவதைப் போலச் சேர்த்து வைக்காத பொருளும் அழிந்து விடும்.

சிக்கனத் தன்மையுடன் வாழ விரும்புகிறவர்கள் எல்லோரும், தங்களுக்குத் தெரிந்தவர்கள் எல்லோரிடத்திலும் பழகத் தெரிந்து கொள்ள வேண்டும். பழகத் தெரியாதவர்கள் வாழத் தெரியாதவர்களே! பழகுவது என்பது ஒரு. கலை! அந்தக் கலையில் தேர்ந்து அவரவர்களுக்கு ஏற்றபடி நடந்து விட்டால் 'அரை குறைகள் கூட' நல்ல இடங்களில் இருந்து நன்றாக வாழலாம். இதைச் சிக்கனத் தன்மையுடன் வாழ விரும்புகிறவர்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும்.

வாழ்வதற்கு வழி

* *

21

'சிக்கனம்' என்பதைப்பற்றி, "வாழ்வதற்கு வழி" என்னும் தலைப்பின் கீழ், இதுவரையில் இந்தப் புத்தகத்தில் எவ்வளவோ செய்திகள் சொல்லப் பட்டிருக்கின்றன! என்னென்ன சொல்லப்பட வேண்டுமோ அவைகளெல்லாம் சொல்லப் பட்டிருக்கின்றன! இந்தப் இந்தப் புத்தகம் "சும்மா" பொழுதைப் போக்குவதற்காகப் படிக்கும் நாடகம் போன்றதல்ல; கதை போன்றதல்ல.

இதில் வாழ்க்கைக்குத் தேவையான செய்திகளே கூறப்பட்டிருக்கின்றன என்பதை இதுவரையில் இதைப் படித்த நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். பின்னும் சொல்ல வேண்டிய சில செய்திகளைமட்டும் சொல்லி இதை முடிக்கின்றேன்:

நாம் வாழவேண்டுமானால் முயற்சி, உழைப்பு, சிக்கனம் ஆகிய இவைகளை என்றும் துணையாகக் கொள்ள வேண்டும். 'அனுபவம்' என்பது ஓர் அருமையான பள்ளிக்கூடம். அந்தப் பள்ளிக்கூடத்தில்கூட அறிவில்லாதவர்கள் எந்தப் பாடத்தையும் கற்றுக் கொள்வதில்லை. அனுபவமுள்ளவர்கள் வாழ்வதற்கு ஏற்ற வழியைக் காட்டுவார்கள். அந்த வழியில் செல்லும்படி எவரையும் கட்டாயப்படுத்த அவர்களால் முடியாதே! கேட்காதவர்களுக்கு உதவி கிடைக்காது; கேட்டபடி நடக்காதவர்களுக்குப் பலன் கிடைக்காது.

எவர் நியாயத்தை அறிந்தும் அதன்படி நடக்கவில்லையோ அவர் அநியாயத்தில் சிக்கி அவதிப்படுவார் என்பது திண்ணம்.

எவ்வளவு காலம் தண்ணீரில் இருந்தாலும் கருங்கல் கடினமாகவே இருக்கும். வளைந்துள்ள நாய் வாலை நேராக்க எவராலும் இயலாது. வளைந்து வளர்ந்த மரத்தை நேராக்க எவராலாகும்? சிலர் நல்ல சொற்களைக் கேட்கின்றார்கள்; அவற்றை நல்லவை என்றும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்; நடவடிக்கையிலோ நேர்மாறாகச் செல்கின்றனர். சந்தர்ப்பம் வரும்போது பலர் தாங்கள் கற்றதையும் கேட்டதையும் காற்றில் பறக்கவிட்டுத் தங்கள் இயற்கை வழியே செல்கின்றனர்; ஊதாரிகள் ஊதாரிகளாகவே இருக்கின்றனர். ஆனால், அப்படிப்பட்டவர்கள் எந்தக் காலத்திலும் நல்வாழ்வு பெறமாட்டார்கள். இயற்கை அவர்களைச் "சும்மா" விடாது.

எல்லா நன்மைகளுக்கும் அடிப்படையாய் இருப்பது சிக்கனந்தான். இது உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் தேவையானதே! ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இது தேவை. சிக்கனம், பணக்காரர்களிடத்தில் உள்ள பணத்தை வளர்க்கும்; ஏழைகளிடத்சில் உள்ள தரித்திரத்தை நீக்கிச் செல்வத்தைச் சேர்க்கும்.

"மீண்டும் கூறுறேன்: எந்தப்பொருள் இல்லாமல் உங்களால் வாழமுடியும் என்று தோன்றுகிறதோ அந்தப் பொருளை நீங்கள் வாங்காதீர்கள். இருக்கும் எந்தப் பொருளையும் எவ்வளவுநாள் உபயோகப் படுத்த முடியுமோ அவ்வளவு நாள்வரையில் அந்தப் பொருளை உபயோகப்படுத்துங்கள். ஒரு பொருள் உபயோகப்பட்டுக் கொண்டிருக்கும் போதே அதற்குப் பதிலாக வேறு ஒருபொருளை வாங்காதீர்கள்"

"ஊக்கமும், உழைப்பும், சிக்கனத்தன்மையும் உள்ளவர்களால்தான் எந்தச் செயலையும் வெற்றிபெறச் செய்ய முடியும்" இந்தக் கருத்தை எந்தக்காலத்திலும் மறவாமல்

மனத்தில் வைத்துக் கொள்ளுகிறவர்கள் நல்வாழ்வைப் பெறுவார்கள் என்பதுடன் இதை முடிக்கின்றேன்.

இதுவரையில் இதைப் படித்த நல்லவர்களாகிய நீங்கள் மேலும் மேலும் பலப்பல நன்மைகள் வளரப் பெற்று வாழ்வீர்களாக.

சண்பக வடிவாம்பிகை அச்சகம்,
23, புளியங்தோப்பு ஜரோடு – சென்னை-12.